
# இஸ்லாமியரின் கேள்விகள்

## (வேதமும் – குரானும்)




Rev.Dr. A.சேவியர் B.Sc.,M.A (Theo).,DD.,

(விசுவாச முழக்கம் ஆசிரியர்)

# இஸ்லாமியரின் கேள்விகள்

## (வேதமும் குரானும்)


Rev. **Dr. A. சேவியர்** B.Sc., M.A, (Theology), D.D.

( "விசுவாச முழக்கம்" ஆசிரியர் )


**2017**

**வெளியீடு**


**"கடைசிகால விடுதலை ஊழியம் டிரஸ்ட்"**

எண். 3, 27வது தெரு, சிவசக்தி நகர்,

சி-பிரிவு, அண்ணனூர், சென்னை - 600 109.

போன்: 044-26375758, 26841363

செல் : 9444979822, 9444873848, 9444184648

facebook:- endtimedeliveranceministry; youtube:- endtimetrust

www.endtimedeliverance.com; e-mail:-info@deliverance.com

“இஸ்லாமியரின் கேள்விகள்”

(வேதமும் குரானும்)

First Edition : 2015
Second Edition : 2017
Total Copies : 1000
Book Serial No : 08/16

காணிக்கை : ₹ 80/-

Copy right :

**End Time Deliverance Ministry Trust**

Printed by :

**Saravan Printers**

New 91, Old 44, V.M. Street (Near BSNL Quarters)
Royapettah, Chennai - 600 014.
Email : saravanprinters@gmail.com

# முன்னுரை

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

நீண்ட நாட்களாக, பல ஊடகங்கள் வழியாய், நம்முடைய பரிசுத்த வேதாகமம் பற்றியும், இரட்சகர் இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், இஸ்லாம் சகோதரர்கள் எழுப்பிய பல கேள்விகளுக்கான பதிலை, புத்தக வடிவில் வெளியிட அடியேனை அபிஷேகித்த தேவாதி தேவனுக்கு தோத்திரம்.

தங்களின் சிந்தனைக் கருத்துக்களை, உள்ளபடியே கேள்விக் கணைகளாக்கி, என்னைப் போன்ற வசனதாகமுள்ள ஊழியர்கள், வேத வாக்கியங்களை ஆராய்ந்தறிய ஒரு தருணத்தை உருவாக்கிக் கொடுத்த, இஸ்லாமிய சகோதரர்களுக்கு மிக்க நன்றி. இது கர்த்தரால் உண்டான ஈவு.

இதிலே தொடுக்கப்பட்ட கேள்விகளும், அளிக்கப்பட்ட பதில்களும், கருத்துக்களும், யாருக்கும், எந்த விதத்திலும், எந்தவொரு மனக்கசப்பையும் ஏற்படுத்தாதபடிக்கு, கர்த்தர்தாமே கிருபை செய்வாராக!

**“ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்”** (யோ 17:3) என்ற சத்தியத்திற்கு அடித்தளமாயிருக்கும் இந்த நூல்,

முஸ்லீம் சகோதரர்களுக்குள்ளே ஒரு பெரிய மாற்றத்தையும் கிறிஸ்தவர்களுக்குள்ளே ஒரு மாபெரும் எழுப்புதலையும் உருவாக்கும் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

இந்த நூல் வெளிவர ஜெபித்த, பிரயாசப்பட்ட, அனைத்து சகோதரர்களுக்கும் மிக்க நன்றி.

கர்த்தர்தாமே, இதை உலகத்துக்கு வெளிச்சமாயிருக்க செய்வாராக! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!

சென்னை **– ஆசிரியர்**

மே, 2017

<u>குறிப்பு</u> :

இது குறித்த எந்த சந்தேகங்கள், கேள்விகள் எழுந்தாலும் உடனே ஆசிரியரை தொடர்பு கொள்ளவும்.

# உள்ளே ...


| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | நுழைவாயில் ........................................................ | 5 |
| 2. | பைபிள் பற்றி குரான் சொல்வதென்ன? ............ | 7 |
| 3. | முஸ்லீம்களின் மூலக் கேள்விகள் ...................... | 10 |
| 4. | வேதம் பற்றி முஸ்லீம்களின் கேள்விகள் ............ | 16 |
| 5. | இயேசுபற்றி குரான் சொல்வது என்ன? .............. | 64 |
| 6. | இயேசுபற்றி முஸ்லீம்களின் கேள்விகள் ........... | 68 |
| 7. | வேதத்தில் குளறுபடிகளா? முரண்பாடுகளா? பொய்த்தகவல்களா? ............................................ | 117 |
| 8. | குரானில் குளறுபடிகள், முரண்பாடுகள், பொய்த் தகவல்கள் ............................................ | 159 |
| 9. | முஸ்லீம்களின் சிந்தனைக்கு சில கேள்விகள் .... | 176 |



இந்த மாத

"விசுவாச முழக்கம்"

வாசித்தீர்களா?

# 1. நுழைவாயில்

**“தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமென்று வகைதேடி சுற்றித்திரிகிறான்”** (1 பேதுரு 5:8).

இது பேதுரு காலத்தில் ஆரம்பமாகி, இந்த கடைசி நாட்களில், உச்சகட்டத்திற்கு வந்திருப்பதை நாமறிவோம். இதை அறியாத, உணராத, கிறிஸ்தவர்கள் ஏமாந்து போகிறார்கள். இப்படிப்பட்ட பிசாசின் கிரியைகள் சபைக்குள்ளும் நடக்கின்றன; சபைக்கு வெளியேயும் நடக்கின்றன. இயேசுவின் மரணம் - உயிர்த்தெழுதலில் தான் கிறிஸ்தவமே கட்டப்பட்டிருக் கிறது. இந்த அடித்தளத்தை உடைக்கும்படியான கேள்விகள் இன்றைக்கு புற்றீசல் போலக் கிளம்புகின்றன. இதனால், பல கிறிஸ்தவர்கள் - ஊழியர்கள் - தடுமாறி, விழுந்து போவதாகக் கேள்விப்படுகிறோம். இதிலே குறிப்பாக முஸ்லீம் சகோதரர்களின் பங்கு பிரதானமாய் இருப்பதை அறிகிறோம். அவர்கள் நாம் வைத்திருக்கும் வேதம் முழுவதையும் படித்து, ஆராய்ந்து, கேள்விகளையும் பதில்களையும் வைப்பது கண்டு, நம்மவர்கள் அந்த அளவுக்கு சங்.1 : 1, 2ன்படி இல்லையே என்று வருத்தப்பட வேண்டியதா யிருக்கிறது. அவர்களின் கேள்விகளைப் பார்த்துத்தான், இப்படியும் வேதத்தில் இருக்கிறதா என்று ஆச்சரியப்படுகின்ற கிறிஸ்தவர்களும் உண்டு.

**“உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து, உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிறயாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும், உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்”** (1 பேதுரு 3 : 15).

இதற்காய் ஆயத்தப்படுத்தவே ஆவியானவர் இந்த புத்தகத்தை எழுத வைத்திருக்கிறார்.

தாங்கள் கொண்டிருக்கும் கருத்துக்களை வெளிப்படுத்தவோ, உறுதிப்படுத்தவோ, திணிக்கவோ, பல ஊடகங்களை, இந்த விஞ்ஞான யுகத்தில் மக்கள் பயன்படுத்தினாலும், எழுத்து மூலமாய் - புத்தகம் மூலமாய் - நடக்கும் ஊடக ஊழியம் தான் அன்று முதல், இன்று வரை நிலைத்திருப்பது;

அசையாதது; உறுதியானது, உண்மையானது; சாட்சியுடையது, ஆமென். அல்லேலூயா!

இந்த நூலை வாசிக்கிற - தியானிக்கிற - ஒவ்வொரு கிறிஸ்தவனும், சத்தியத்தில் உறுதியாகி, முஸ்லீம் சகோதரர்களின் கேள்விகளுக்கேற்ப பதில்களை சொல்லி, அவர்களை சீஷர்களாக்க, தேவன்தாமே கிருபை செய்வாராக.

❖ ❖ ❖

# வேதப் பொன்மொழிகள்

- ★ ஆட்களைப் பாராதே! ஆண்டவனைப்பார்!
- ★ வசனமுள்ள வாழ்வு வளமான வாழ்வு!
- ★ விசுவாசம் வெற்றியைத் தரும்
- ★ Where there is vision there will be provision
- ★ போதக சிட்சையே ஜீவ வழி
- ★ பரிசுத்தமாக்குவது வசனமே
- ★ கிரியை இல்லாத விசுவாசம் செத்தது
- ★ Have positive confession
- ★ பூமியிலே நூறத்தனை ஆசீர்வாதம் உண்டு
- ★ இரகசிய வருகைக்கு ஆயத்தமா?
- ★ வேதத்தை விதை! விளையச் செய்பவர் தேவன்
- ★ பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு
- ★ திக்கற்றவர்களையும், விதவைகளையும் விசாரிப்பதே மாசற்ற பக்தி
- ★ ஆசீர்வாதமும் சாபமும் மனிதனே சுதந்தரிக்க வேண்டும்
- ★ வாக்குத்தத்தம் ஒன்றல்ல; இரண்டல்ல; ஏராளம்
- ★ மூல உபதேசம் இல்லாத சபை கிறிஸ்தவ சபையல்ல
- ★ பரிசுத்த ஆவி பெற்றதற்கு அடையாளம் அந்நிய பாஷை

# 2. பைபிள் பற்றி குரான் சொல்வதென்ன?

முஸ்லீம்களின் குரான் கி.பி. 6ம் நூற்றாண்டில் வெளியானது. முகமது அவர்கள், ஜிப்ரியேல் என்ற தூதன் மூலமாக, தன்னுடைய 40வது வயதில், மெக்காவிலுள்ள ஹீரா குகையில் முதன்முதலாக இதைப் பெற்றார். இப்படிப் பெற்றதைத்தான், அல்லா, குரானை இறக்கினார் என்று சொல்கிறார்கள். இது ஒரே நாளில் இறக்கப்பட்டது அல்ல. கிட்டத்தட்ட 23 ஆண்டுகளில் சிறிது சிறிதாக கொடுக்கப்பட்டதாகும். முதன்முதலாகப் பெற்றபோது, பயந்து, பைத்தியம் பிடித்தவர்போல் முகமது ஆகிவிட்டார். அவரின் முதல் மனைவி, விதவை கதீஜாவின் சித்தப்பாவான, வராகா என்ற கிறிஸ்தவர் மூலமாய், சற்று ஆறுதலும் தேறுதலும் அடைந்தார். 23 ஆண்டுகளாக அதே குகைக்குச் சென்று, கேள்விப்பட்டதை பேரீச்சப்பட்டை, வெண்மையான கல்பலகை, பதனிடப்பட்ட தோல், கால்நடைகளின் அகலமான எலும்பு போன்றவற்றில், அவரோடுகூட இருந்தவர்கள் எழுதி வைக்கும்படியாய், இவர் மனப்பாடமாய் அரபிமொழியில் ஒப்பிப்பார். இவருக்கு கல்வியறிவு இல்லாததால், அவர்கள் எழுதியதை சரிபார்க்க முடியாது. இவருக்கு கல்வியறிவு இல்லாததால், அவர்கள் வாய்மொழியில் வாசிப்பதை வைத்தே அறிந்து கொள்வார். இப்படி எழுதப்பட்டவை முகமதுவின் வீட்டிலேயே காக்கப்பட்டது. சிலர் அந்த வசனங்களை மனனம் பண்ணி, தாமாகவும் எழுதி வைத்திருந்தனர். முகமதுவின் மரணத்திற்குப்பின், உமர் ரலியின் வற்புறுத்தலால், குரானை ஒரு முழு எழுத்து வடிவ புத்தகமாக, அபூபக்கர் (ரலி) என்ற ராஜா மாற்றினார். அபூபக்கருக்குப்பின் அந்த ஆவணம், உமர் ரலியிடமும், பின் முகமதுவின் ஒரு மனைவி ஹப்ஸாவிடமும் இருந்தது. ராஜா உஸ்மான் ரலி என்பவர்தான் அதை தற்போதுள்ள குரான் வடிவில் மாற்றினார். இந்தப் பிரதிகள் 1. துருக்கு, 2. இஸ்தம்புல் ஆகிய நகர்களின் மியூசியத்தில் உள்ளது. மற்றப்படி, 23 ஆண்டுகளாக அவர் எழுதி வைத்திருந்த பேரீச்சப்பட்டை, வெண்மையான கல்பலகை, பதனிடப்பட்ட தோல், கால்நடைகளின் அகலமான எலும்புகளிலிருந்த **ஒரிஜினல் - மூலம் - தற்போது இல்லை; இல்லவே இல்லை. இப்போது இருப்பது காபி பண்ணப்பட்டதுதான்.**

இந்த குரானில், **"வேதமுடையோர்"** என்ற வார்த்தை அடிக்கடி வரும். வேதமுடையோர் என்றால், பிரதானமாய், தவ்ராத் என்ற மோசேயின் (மூசா) 5 ஆகமங்களையும், ஸபூர் என்ற தாவீதின் (தாவூத்) ஆகமங்களையும் உடைய யூதர்களையும்; இஞ்சில் என்ற இயேசுவின் (ஈசா) ஆகமங்களையும் உடைய கிறிஸ்தவர்களையும் குறிப்பதாகும். இவைகள் எல்லாம், அல்லாவால் அருளப்பட்டவை என்று குரான் 17:2; 3:3; 4:163; 5:46; 57:27 போன்ற வசனங்கள் சொல்கின்றன. **இந்த வேதங்களையும், முஸ்லீம்கள் நம்ப வேண்டுமென்று குரான் 4:136; 4:60 சொல்கின்றது.**

**"இதற்குமுன் அருளிய வேதத்தையும் நம்புங்கள்"** (கு 4:136).

இந்த மோசே எழுதிய தவ்ராத், முகமது மூலம் வந்த குரான் இவைகளுக்கு மேலான வேதமில்லை என்று குரான் 28:49 சொல்கின்றது.

**"நீங்கள் உண்மையாளர்களாயிருந்தால், அவ்விரண்டைவிட நேர்வழி காட்டக்கூடிய வேதத்தை அல்லாவிடமிருந்து கொண்டு வாருங்கள். அதைப் பின்பற்றுகிறேன் என்று கூறுவீராக."**

குரானை சோதித்துப் பார்க்க, நம்முடைய கிறிஸ்தவ வேதமே உரைக்கல்லாகும்.

**"நாம் உமக்கு அருளியதில் நீர் சந்தேகத்தில் இருந்தால், உமக்கு முந்திய வேதத்தை ஓதுவோரிடம் கேட்பாயாக"** (குரான் 10:94).

அப்படியானால், அந்த மூசாவின் தவ்ரத்தும், தாவீதின் ஸபூரும், இயேசுவின் இஞ்சிலும் இப்போது எங்கே? இதுதான் அறிவார்ந்த கேள்வி. இவைகளை அல்லா எடுத்துக் கொண்டார் என்று முஸ்லீம்கள் சொல்கிறார்களே, 6ம் நூற்றாண்டில் வாழ்ந்த முகமது, ஸபூர் வரும்போது எடுத்துக் கொள்ளப்பட்ட தவராத்தையும், இஞ்சில் வரும்போது எடுத்துக் கொள்ளப்பட்ட ஸபூரையும், குரான் வரும்போது எடுத்துக் கொள்ளப்பட்ட இஞ்சிலையும், உரைத்துப்பார்ப்பது - நம்புவது - எப்படி?

அப்படி அவைகள் எடுத்துக் கொள்ளப்பட்டால், அவைகளின் காபி (copy)யாவது முஸ்லீம்களிடம் இல்லையா? இல்லாததை வைத்து, உரைத்துப் பார்த்து குரானை உறுதி செய்வது எப்படி என்று சிந்தியுங்கள். மேலும் நம் வேதத்தை உறுதிப்படுத்தவே குரான் என்றும், முகமதுவின் உரிமை கோரல்களுக்கு நம் வேதமே ஆதாரம் என்றும் குரான் 7:156; 61:6; 3:3 வசனங்கள் கூறுவது பொய்யா?

**"இப்ராஹீம், இஸ்மாயில், இஸ்ஹாக், யஃகூப், சந்ததிகள் ஆகியோரின்பால் இறக்கப்பட்டவற்றையும், மூசாவுக்கும் ஈசாவுக்கும்**

**கொடுக்கப்பட்டவற்றையும், இன்னும் மற்ற நபிமார்களுக்கு அவர்களுடைய இறைவனிடமிருந்து கொடுக்கப்பட்டவற்றையும் நாங்கள் நம்பிக்கை கொண்டோம்."** (குரா. 2:136; 2:4; 4:60) என்று குரானே சொல்லும்போது, அல்லா எடுத்துக் கொண்டதை எப்படி நம்புவது? மேலும் குரா. 5:47ன்படி ஈசா நபியின் இஞ்சிலை உடையோருக்கு அதன்படியே தீர்ப்பாமே! **இஞ்சில், பயபக்தியுடையோருக்கு வழிகாட்டி என்றும் (குரா. 5:46) தவ்ராத் மற்றும் இஞ்சிலை நிலைநாட்டாதவரை, வேதமுடையோராகிய யூதரும், கிறிஸ்தவர்களும் எதிலும் சேர்ந்தவர்களல்ல என்றும் (குரா. 5:68) குரான் சொல்வதால், குரான் கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் தேவையில்லை என்று வெளிப்படையாக அறிய முடிகிறது.**

❖ ❖ ❖


## நமது ஊழியங்கள்

1. "விசுவாச முழக்கம்" பத்திரிக்கை ஊழியம்
2. "விடுதலை கிறிஸ்துவின் சபைகள்"
3. "சேவியர் இறையியல் பயிலகம்" – பைபிள் காலேஜ் ஊழியம்
4. விசுவாசக் கருத்தரங்கு ஊழியம்
5. வசன விளக்கம் எப்போதும்
6. வெப்சைட், சி.டி. ஆராய்ச்சி புத்தகங்கள் ஊழியம்
7. கஸ்தூரிபாய் ஆசிரமம்.

இன்னும் பல .......

# 3. முஸ்லீம்களின் மூலக் கேள்விகள்

**கேள்வி எண். 1 :** பைபிளின் மூல மொழி எது? அதிலே எழுதப்பட்ட மூல வேதம் எங்கே?

**கேள்வி எண். 2 :** கிறிஸ்தவர்களின் வேதம் குறைக்கப்பட்டது - கூட்டப்பட்டது - கெடுக்கப்பட்டது. கிறிஸ்தவர்களிட மிருப்பது ஒரிஜினல் வேதம் அல்ல. இதில் குளறுபடிகளும், பொய்த்தகவல்களும் இருக்கின்றன.

**கேள்வி எண். 3 :** இயேசுவின் காலத்தில் பழைய ஏற்பாடு புத்தகங்கள் 80-க்கும் மேற்பட்டவை. கி.பி. 4ம் நூற்றாண்டு வரை, புதிய ஏற்பாடு புத்தகங்கள் 75-க்கும் மேற்பட்டவை. அதன்பின் எல்லாவற்றையும் கெனான் - CANON என்ற தொகுப்பாக்கி, பழைய ஏற்பாட்டில் 46-யும், புதிய ஏற்பாட்டில் 27-யும் வைத்துக் கொண்டு, மீதி புத்தகங்களை ரோமன் கத்தோலிக்கர் மறைத்து விட்டனர். புராட்டஸ்டண்டு மார்க்கத்தாரோ, பழைய ஏற்பாட்டில் 7-ஐ ஒதுக்கிவிட்டு, 39-ஐ வைத்துள்ளனர். எனவே கிறிஸ்தவர்களின் வேதம் குறைக்கப்பட்ட சுருக்கப்பட்ட வேதமாகும்.

"நான் உனக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி கவனமாயிரு. நீ அதினோடே ஒன்றும் கூட்டவும் வேண்டாம். அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்" (உபா. 12:32)..

"ஒருவன் இந்த தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து, எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும், இந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும் அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார்" (வெளி. 22:19).

மற்றும் உபா. 4:2; நீதி. 30:6 போன்ற வசனங்களின்படி ஒரு வார்த்தைகூட வேதத்தில் கூட்டினால், குறைத்தால் பரலோகம் இல்லை அல்லவா! மேலும் புராட்டஸ்டண்ட் வேதத்தில் தானி. 13,14 வது அதிகாரமும் (107 வசனங்கள்) இல்லை; எஸ்தர் 10வது அதிகாரத்தில் 10 வசனங்கள்

இல்லை; 11 முதல் 16 அதிகாரங்கள் (98 வசனங்கள்) இல்லை. புராட்டஸ்டண்ட் தள்ளுபடி செய்த ஆகமங்களில் உள்ள வசனங்கள் 4370. இவ்வளவு செய்தவர்களுக்கு பரலோகம் உண்டா? அப்படி நீக்கப்பட்டது வேதமாயிருக்க முடியுமா?

## பதில்கள்

இம்மூன்று கேள்விகளுக்கும் மொத்தமாய் பதில் தெரிய வேண்டுமானால் நம் வேதம் பற்றி முழுமையாய் தெரிந்திருக்க வேண்டும்.

உலகில் உள்ள முக்கிய வேதங்களான சொராஸ்டரின் Zend Abesta வேதம் கி.மு. 1200லும், இந்துக்களின் ஆரியவேதம் கி.மு. 1100லும், சீனர்களின் Five Kings கி.மு. 1100லும், புத்த வேதம் கி.மு. 600லும், குரான் கி.பி. 600லும் எழுதப்பட்டது. மோசே எழுதிய நம்முடைய வேதம் கி.மு. 1600- ல் எழுதப்பட்டது

வேதத்தை, பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று அழைக்கும் வழக்கம் கி.பி. 2ம் நூற்றாண்டில்தான் வந்தது.

பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் எல்லாமே இஸ்ரவேலரின் தாய்மொழியாம் எபிரெய மொழியில் தான். எஸ்றா 4:8 - 6:18; 7:12-26; எரே.10, 11; தானி. 2:4 - 7:28 போன்றவைகள் மட்டும் அராமிக் மொழியில் உள்ளன. புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் எல்லாமே எபிரேயம் கலந்த கிரேக்க பாஷைதான்.

ஆரம்பம் முதல், இஸ்ரவேலர்கள் பாலஸ்தீனாவில் குடியிருக்க முடியாமல் சிதறடிக்கப்பட்டதால், தங்கள் தாய் பாஷையாகிய எபிரெய மொழியை மறந்து, கிரேக்க பாஷை பேசினர். அலெக்சாண்டருக்குப்பின், தங்கள் தாய்மொழியை முழுமையாய் மறந்ததால், பிலடெல்பஸ் என்ற எகிப்து ராஜா, கி.மு. 285-247ல் 72 அறிஞர்களைக் கொண்டு, 72 நாட்களில், பழைய ஏற்பாட்டு புத்தகங்களை கிரேக்க மொழியில் மாற்றினார். அதை "செப்டு வாஜிந்" என்று அழைத்தனர். பவுல் இதைத்தான் உபயோகித்தான். இந்த மொழி பெயர்ப்பு, அபிஷேகம் பண்ணப்பட்ட தேவ மனிதர்களால் இல்லாமல், இஸ்ரவேலர்களின் வாசிப்புக்கு தேவைக்காக செய்யப்பட்டதால், ஒரு சில மொழி பெயர்ப்பு தவறுகள், வசன கூடுதல் - குறைவுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

கி.பி. 70ல் எருசலேம் அழிவுக்குப்பின், வேதத்திற்கு உரிமையாளரான சனகெரீம் மன்றத்தார், திபெரியா மற்றும் ஜமீயா பகுதிக்கு குடிபெயர்ந்து போயினர். கி.பி. 90ல் அவர்கள் திரும்பி வந்து சேகரித்த எபிரெய பாஷை

பழைய ஏற்பாடு புத்தகங்கள்தான், இப்போது நாம் வைத்துள்ள 39 புத்தகங்கள். இன்னும் இருந்த புத்தகங்களெல்லாம் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த 39 புத்தகங்கள்தான் இன்றைக்கும் இங்கிலாந்து மியூசியத்தில் உள்ளன. யூதர்களும் இதைத்தான் வைத்துள்ளனர்.

கிட்டத்தட்ட கி.மு. 500 முதல் (மல்கியா முதல்) யோவான் ஸ்நானன் வரை தேவனால் அங்கீகரிக்கப்பட்ட தீர்க்கதரிசிகள் யாரும் இஸ்ரேலில் எழும்பவில்லை. அந்த காலகட்டத்தில் கள்ளத்தீர்க்கரிசிகளால் எழுதப்பட்ட எந்த புத்தகங்களையும்,

❶ சனகெரீம் மன்றத்தாரும்

❷ முதலாம் நூற்றாண்டு வேத ஆராய்ச்சியாளர் ஜோசப்பஸ்ம் (Josephus)

❸ லவோதிக்கிய சங்கங்களும் (கி.பி. 363ல்)

ஏற்றுக்கொள்ளவில்லை. ஒருவேளை இப்படி எழுந்த கள்ள எழுத்தாணிப் புத்தகங்களோடு சனகெரீம் மன்றம் வைத்துள்ள 39 புத்தகங்களுடன் சரித்திர ஆராய்ச்சியாளர்களால், கணக்கிடப்பட்டு, முஸ்லீம் சகோதரர்கள் சொன்ன அந்த தொகையான புத்தகங்கள் காணப்பட்டிருக்கலாம்.

சனகெரீம் மன்றத்தாரின் 39 புத்தகங்களோடு தள்ளுபடி ஆகம புத்தகங்கள்7ஐயும் சேர்த்து, கி.பி. 4ம் நூற்றாண்டில், கத்தோலிக்க வத்திக்கான் மொழி பெயர்ப்பில் இணைக்கப்பட்டது என்பதே உண்மை. ஆனால், நாமோ சனகெரீம் வைத்துள்ளதை மட்டுமே வைத்திருக்கிறோம்.

சத்தியத்திற்கு மாறான - தள்ளுபடி செய்யப்பட்ட ஆகமங்களை நாம் நமது பைபிளில் சேர்க்காதது கூட்டலுமில்லை; குறைத்தலுமில்லை; தவறுமில்லை.

கீழ்க்கண்ட கத்தோலிக்கரின் குழுகூடி, 27 புதிய ஏற்பாடு தொகுப்புகளை ஏற்றுக்கொண்டது. இது கி.பி. 4ம் நூற்றாண்டில் நடந்தது.

❶ நைஸ்குழு (கி.பி. 325)

❷ ஹிப்போகுழு (கி.பி. 394)

❸ காரீத்தேஜ் குழு (கி.பி. 397)

ஆக, இயேசுவை ஏற்றுக் கொள்ளாத யூதர் தொகுத்த பழைய ஏற்பாட்டையும் (39 புத்தகங்கள்) ஆவிக்குரியவர்களல்லாத ஆர்.சி. சபையார் தொகுத்த புதிய ஏற்பாட்டையும் (27 புத்தகம்) இணைத்து, உலகமே அங்கீகரிக்கும்படி பைபிளாக, ஆங்கிலத்தில் உருவாக்கியவர் முதலாம் கிங் ஜேம்ஸ். இதை அப்படியே புராட்டஸ்டண்டு மார்க்கத்தார் ஏற்றுக் கொண்டு,

பிரிண்ட் செய்கின்றனர். அந்தப் புத்தகந்தான் ஆவிக்குரிய சபையாராகிய நாம் வைத்திருக்கும் வேதம். எப்படியோ, யார் மூலமாகவோ தேவன் நமக்கு சத்தியத்தை தந்துள்ளார். அல்லேலூயா (ரோமர் 9:17; யாத். 9:16). இந்த 66 புத்தகங்களும் ஆவிக்குரிய சபையார் தொகுத்ததல்ல என்று முந்தி அறிக. பழைய ஏற்பாட்டின் 39 புத்தகங்கள் இங்கிலாந்து மியூசியத்தில் இருப்பது போல, புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களும் ரோமன் கத்தோலிக்க சபையாரிடம் உள்ளது.

**இந்த வேத புத்தகங்கள் மூலபாஷைகளில் எழுதப்பட்டது எப்படி?** பைபிளின் ஆசிரியர் பரிசுத்த ஆவியானவரல்ல.

**"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது."** 2 தீமோ. 3:16, 17ன்படி வேதம் written by inspiration not on dictation; முஸ்லீம்கள் சொல்வது போல் தூக்கிக் கொடுக்கப்படவு மில்லை; தேவனால் இறக்கப்படவுமில்லை. கிட்டத்தட்ட 40 எழுத்தாளர்கள், தங்கள் அறிவுக்கும், சிந்தனைக்கும், ஞானத்திற்கும், வாழ்ந்த காலம் , சூழல், பண்பாடு, நாகரீகம், மொழி இவைகளுக்கு ஏற்பவும் எழுதியிருக்கிறார்கள். குரானைப் போல ஒருவரால் உருவாக்கப்பட்டது அல்ல நம் வேதம்.

## 4 விதமாய் வேத வார்த்தைகள் கொடுக்கப்பட்டன

❶ தேவனே நேரிடையாய் சொன்ன வார்த்தை (யாத். 32:16; உபா. 5:4; மத். 3:17).

❷ பேசுகிறவர்கள் - எழுதுகிறவர்கள் வாயிலே தேவன் வார்த்தைகளைப் போட்டு, ஆவியானவரின் உள்ளுணர்வுடன் வருகின்ற வார்த்தை. (யாத். 4:12; எண். 23:5; எசே. 2:7; 3:10, 11; அப். 3:21)

❸ ஆவியானவரின் அசைவாடுதலால் அப்போதைக்கப்போது வரும் வார்த்தை. (யாத். 34:27; 2 பேதுரு 1:21)

❹ எழுத்தாளர் தாம் கேள்விப்பட்டதை சொந்தமாய் எழுதுவது (தானி. 12:8, 9; லூக். 1:1-4; யோ. 20:30,31)

**"மறைவானவைகள், நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்."** (உபாகமம் 29:29) என்ற நிலை மாறி, இயேசுவுக்குப்பின் வேத சத்தியங்கள், 100க்கு 100 வெளியரங்கமானது.

**"வெளியாக்கப்படாத மறை பொருளுமில்லை; அறியப்படாத இரகசியமுமில்லை."** (லூக்கா 12:2; யோ. 1:17)

அப்படியிருந்தும், பவுலின் சில வெளிப்பாடுகள் பேதுருவுக்குப் புரியவில்லை:

**"நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்திலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான். அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது."** (2 பேதுரு 3:15, 16)

புதிய ஏற்பாட்டிலேயே - அதுவும் கிருபையும் சத்தியமும் நூற்றுக்கு நூறு வந்தபிறகே - இப்படி என்றால், பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கு சொல்ல வேண்டுமோ!

தேவனின் சித்தமும், தீர்மானமும், தீர்க்கதரிசனமும் இன்னதென்று தெரிந்தவன் தான் சத்தியத்தை முழுமையாக அறிந்தவன்.

நம் தேவன், பழைய ஏற்பாட்டு மக்களை, சீயோன் குமாரத்தி, மனைவி என்றெல்லாம் அழைத்துப் பார்த்தார். அவர்களோ, சிநேகிதர், தாசர், அடிமை என்ற நிலையிலேயே இருந்தனர். இதனால், மோசே, தாவீது, ஏசாயா, எரேமியா போன்ற பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கு, தேவனின் முழு சித்தத்தை முழுமையாக புரிந்து எழுத முடியவில்லை. இதனால், கஷ்டங்கள் வரும்போது,

"தேவன் வாதிக்கிறார்; தண்டிக்கிறார்; சிட்சிக்கிறார்; தோல்வி, தரித்திரம், அகால மரணம் எல்லாம் தருகின்றார்" என்று எழுதுகின்றனர். இடையிடையே அவர்கள் செய்த பாவங்களையும் அறிக்கையிடுகின்றனர். முடிவில் "தேவன் நன்மையைத் தருவார்" என்று விசுவாச அறிக்கையிடுகின்றனர். இது முன்னுக்குப் பின் முரணல்லவா!

## உதாரணத்திற்கு ஒன்றிரண்டு

❶ "உம்முடைய நியாயப் பிரமாணத்தை, தங்களுக்குப் புறம்பே எறிந்துவிட்டு... கோபமூட்டுகிற பெரிய அக்கிரமங்களைச் செய்தார்கள். ஆகையால், அவர்களை நெருக்குகிற அவர்கள் சத்துருக்களின் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்தீர். அவர்கள் நெருக்கம் அனுபவிக்கிற காலத்தில், அவர்கள் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறபோதோ, நீர் பரலோகத்திலிருந்து கேட்டு, உம்முடைய மிகுந்த இரக்கத்தினால், அவர்களை அவர்களின் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி..." (நெகேமியா 9:26, 27)

இதைப் படிக்கும்போது, அவரே பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டிவிடுகிற நாரதர் போல காணப்படுகிறார் அல்லவா! உபா. 11:26-28; 30:15, 19 போன்ற வசனங்களின்படி, ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் மனிதனே சுதந்தரித்துக்

கொள்கிறான்; தேவன் கொடுப்பதில்லை - அனுமதிப்பதுமில்லை என்ற சத்தியத்தைப் புரியாமல் இப்படி எழுதுகிறார்கள்.

❷ சங். 83ஐ வாசித்தால், "எதிரிகளைக் கொல்லும், மடங்கடியும்..." என்றெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு, சத்துருக்களை சிநேகியுங்கள். (மத். 5:44) என்ற தேவனின் பரிபூரண சித்தம் முழுமையாகத் தெரியவில்லை.

❸ "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்தவரமும், பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது." (யாக்கோபு 1:17)

"தேவன் பொல்லாங்கினால் சோதிக்கிறவரல்ல." (யாக். 1:13) போன்ற தேவனின் நன்மையையே தருகிற சித்தம், யோபு போன்ற பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கு புரியவில்லை.. அதனால்தான் "தேவனின் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமா." (யோபு 2:10, 5;18; 1:21; 19:8-13; 10:18,22) என்று எழுதுகிறார்.

இயேசுவுக்குப்பின்போ, ஆவியானவரின் ஒத்தாசையால், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள், தேவனின் சித்தம், தீர்மானம் எல்லாம் அறிந்திருந்தார்கள். எனவே பழைய ஏற்பாட்டை வைத்து எதையுமே முழுமையாய் எடைபோடக் கூடாது. (see எபி. 11:39, 40).

மேலும் ஆரம்பத்தில், ஓலை, தோல் சுருள் போன்றவற்றில் எழுதியவை, நாளாக, நாளாக, எழுத்துக்கள் மங்கி, சீரழிந்து போவதால், அந்த ஒரிஜினல் manuscript-ஐ காபி பண்ணி, காபி பண்ணி, இறுதியில் நாம் வைத்திருக்கும் இந்த பைபிள் கிடைத்திருக்கிறது. இப்படி, மாற்றி, மாற்றி காபி பண்ணும்போது, mistakes/missings may occur especially in "Numbers" - Chronicle Bible scholars say this; மட்டுமல்ல... காபி பண்ணுவது ஒருவரல்ல; பலர். இதனால்தான் சிலர் காபி பண்ணும் manuscriptல் இல்லாத வசனங்கள், நமது பைபிளில் bracketல் போடப்பட்டிருக்கும். (Example: 1 யோ. 5:7; மாற். 16:9-20 in English). இப்படிப்பட்ட காரணங்களால், சில இடங்களில் எண்கள் மாறியிருக்கலாம்; ஆனால் எண்ணங்கள் - கருத்துக்கள் - சத்தியங்கள் மாறவில்லை.

இதை வாசிக்கும் தேவ ஜனமே, வேதம் பற்றிய இன்னும் அநேக, அடிப்படைக் காரியங்களை கற்றுக் கொண்டு, முஸ்லீம் சகோதரர்களின் கேள்விகளை சந்திப்பதுதானே சாலச்சிறந்தது.

# 4. வேதம் பற்றி முஸ்லீம்களின் கேள்விகள்

1. **செக்ஸ் நிறைந்த வசனங்கள் உள்ளது வேதமா? (உன். 4,7,8; எசே. 23). அண்ணன் - தங்கை ஆபாசம் (2 சாமு. 13:1-15); மாமனார் - மருமகள் ஆபாசம் (ஆதி. 36:14-19); கொழுந்தனும் அண்ணியும் ஆபாசம் (ஆதி. 38:8-10); கிழவன் தாவீதும் குமரியும் ஆபாசம் (1 இரா. 1:1-3) போன்றவைகளை சொல்லலாமா? மேலும், இறைவாக்கினர்கள் நோவா, சாலமோன், லோத், தாவீது பற்றி கேவலப்படுத்தும் வாக்கியங்கள் உள்ள பைபிள் கர்த்தர் அருளியதா? (ஆதி. 19:38; 2 சாமு. 11:3-5).**

★ உன்னதப்பாட்டு, எசே. 23 போன்றவற்றிலும், தாவீது, லோத், யூதா, ஓனான் காரியங்களிலும் பயங்கர செக்ஸ் இருப்பதாக முஸ்லீம்கள் சொல்கிறார்கள். எந்த பைபிள் எழுத்தாளரும், ஏன் இயேசு கூட இந்த வசனங்களை எந்த இடத்திலும் மேற்கோள் காட்டவே இல்லை. இந்த பழைய ஏற்பாட்டு வசனங்களெல்லாம் இயேசு காலத்திலும் ஏன் இன்றும் கூட யூதர்கள் கையில் இருக்கின்றனவே. ஒருவேளை இவைகள் எல்லாம் ஆபாசமென்றால், இயேசுவோ, மற்ற பிரமாண எழுத்தாளர்களோ, தற்கால யூதர்களோ, கண்டித்திருக்கலாமல்லவா! முஸ்லீம்களுக்கு மட்டும் தான் இப்படிக் கண்டிக்கத்தக்கதான தேவ ஞானம் உண்டா? தற்கால முஸ்லீம்களுக்கு வந்த ஞானம் அன்றைய முகமதுக்கு ஏன் வரவில்லை? அந்தக் காலகட்ட நாகரீகம், பண்பாடு எல்லாம் தெரிந்திருந்தால் இப்படிக் கேள்விகளே வராது. உள்ளதை உள்ளபடி எழுதி உத்தமத்தை வெளிக்காட்டும் வேதம் நம் வேதம். மற்றப்படி, பாவங்களை மறைத்து எழுதி ஏமாற்றுகிறதல்ல நம் வேதம்.

முதலாம் நூற்றாண்டிலேயே, லூக். 11:27ல் செக்ஸ்சாக சொல்லப்பட்டதைப் பாருங்கள்; **“ஒரு ஸ்திரி அவரை நோக்கி, உம்மைச் சுமந்த கர்ப்பமும், நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்று சத்தமிட்டுச் சொன்னாள்.”** (see also லூக். 23:29).

இதை இன்றைக்கு சொல்ல முடியுமா?

**“விபச்சாரரே, விபச்சாரிகளே” என்று இயேசுவே சொல்லியிருக்கிறாரே. அதை இன்றைக்கு யாராலும் பகிங்கரமாய் சொல்வது தகுமா?** முதலாம் நூற்றாண்டு நாகரீகம், பண்பாடே, இப்படி என்றால், கி.மு. 1753 யூதா, கி.மு. 1085 தாவீது, கி.மு. 2948 நோவா கால காலாச்சாரம், பண்பாடு எப்படி இருந்திருக்கும் என்று யோசியுங்கள்.

மேலும், அந்த வசனங்களெல்லாம் தற்கால நாகரிகத்திற்கு ஒத்து வரவில்லை என்று எண்ணுகிற ஆவிக்குரியவன் - தேவமனுஷன் - தேவன் தந்த வார்த்தைகளை, ஆவிக்குரிய ரீதியில் சிந்திக்கலாமல்லவா! இவைகளை public ஆகப் பேசாமல், தியானக் கூட்டங்களில், கருத்தரங்குகளில் தற்காலத்துக்கு ஏற்றபடி சிந்தித்து செயல்படலாமல்லவா!

அன்றைக்கு 6015 ஆண்டுகளுக்குமுன் ஆதாமும் ஏவாளும் நிர்வாணமாயிருந்தது ஏதேனுக்கு ஒத்துவரும். இன்றைக்கு ஒத்துவருமா? சிந்தியுங்கள்.

இன்றும்கூட சமண முனிவர்களின் நிர்வாணம் ஆபசமாய் - செக்ஸாக இருந்தாலும், அரசாங்கமோ, பொது ஜனமோ அதை எப்படி ஏற்றுக் கொள்கிறது? நேரில் காணும் ஆபாசத்தை பொறுத்து கொள்ள முடிகிறது; எப்போதோ நடந்தவைகளை, படிப்பினைக்காய், எழுத்துக்களில் எழுதியிருப்பதை பொறுத்துக் கொள்ள முடியவில்லையா?

தேவ சித்தத்தை முதலில் அறிந்து, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் சத்தியத்தை இயேசு மூலம் முழுவதுமாய் உணர்ந்து எழுதியிருப்பதால் (யோ. 1:17) இந்தப் புதிய ஏற்பாட்டு வசனங்களை வைத்து, அந்த பழைய ஏற்பாட்டு காரியங்களை அறிந்து கொள்ளலாம். (ஏசாயா 8:20) அப்போது இப்படிப்பட்ட செக்ஸ் பிரச்சனை வராது. ஆமென்.

கம்பராமாயணத்தில் செக்ஸ் இருப்பதாக **“கம்பரசம்”** என்று அறிஞர் அண்ணா எழுதினார். அது அவர் பார்வை. அதற்காக, அது செக்ஸ் புத்தகம் என்று சொல்லி அரசாங்கம் கூட விலக்கிவிட்டதா? இல்லையே. சிந்தியுங்கள். அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய்தானே! 1ம் வகுப்பிலிருந்தே செக்ஸ் படிப்பு வரப்பேகிற இந்த கால கட்டத்தில், இப்படிப்பட்ட அவதூறுப் பேச்சுகளும், பிரச்சாரங்களும்

தேவையில்லாதது; சிந்தனையற்றது; வீணானது; ஆவிக்குரிய வளர்ச்சிக்கு முரணானது.

6ம் நூற்றாண்டில் வந்த குரானிலேயே செக்ஸ் வெளிப்பட்டிருந்தும் நாங்கள் கண்டிக்கவில்லையே. முஸ்லீம்கள் விரும்பினால் கண்டிக்கவும் நாம் தயார்தான்.

2. **உபா. 18:18ல் சொல்லப்பட்டவர் முகமதுதான்; இயேசு அல்ல; "உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக, அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்."**

★ இங்கே சொல்லப்பட்டவர் இயேசுதான் (அப். 3:22; 23:15, 16; 7:37) குரானில் தான் தேவனை "அவன் இவன்" என்று சொல்வார்கள். நம் வேதத்தில் உலக மனுஷர்களை மட்டுமே அப்படி அழைப்பதுண்டு. தேவனை "அவர் இவர்" என்று தான் சொல்வார்கள். அப்படிப் பார்த்தால், அவர் வாயில் அருளுவேன் என்று உள்ளதால், இந்த அவர் என்பது மனுஷனல்ல; மனுஷனாய் வந்த தேவகுமாரானாகிய இயேசுவாகும். மேலும் மோசேக்குப்பின்பு எத்தனையோ தீர்க்கதிரிசிகள் இஸ்ரேலிலே எழும்பியும், இஸ்ரேல் சமுதாயமல்லாத, இஸ்மவேல் சந்ததியாம் முகமதுவைத்தான் இங்கே தேவன் சொன்னார் என்பதற்கு ஆதாரம் என்ன?

## முஸ்லீம்களின் வாதம் :-

1. அவர் மோசே போல ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறந்திருக்க வேண்டும்.
2. மோசே போல திருமணம் முடித்திருக்க வேண்டும்.
3. எல்லோரும் தீர்க்கதரிசி என்று ஏற்றுக் கொள்ள வேண்டும்.
4. மோசே போல் இஸ்ரேலரை ஆள வேண்டும்.
5. இயற்கை மரணம் அடைய வேண்டும்.
6. மோசே போல மண்ணோடு மண்ணாய் இருக்க வேண்டும். உயிர்தெழக்கூடாது.
7. மோசே போல எதிரிகளை ஒழிக்க வேண்டும்.
8. ஆயுதந்தரித்து போரிட வேண்டும்.
9. மோசே போல் குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும்
10. ஆடு மேய்ப்பவராக இருக்க வேண்டும்.

11. மோசே தனக்குப் பின் யோசுவாவை ஏற்படுத்தியது போல, வேறொருவரை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

12. மோசே போல் வெளிநாடுகளுக்கு சென்றிருக்க வேண்டும். **இப்படிப்பட்டவர் முகமதுதான்.**

**நாம் பேருக்கு வாதம் வைப்போம்:**

1. மோசேயைப் போல் எழும்பும் தீர்க்கதரிசி, அவர்கள் கருத்துப்படி முகமதுவாக இருந்தால் அவர் எகிப்தியனை கொன்றுவிட்டு நாட்டை விட்டு ஓடியிருக்க வேண்டும்.
2. குழந்தையாயிருக்கும் போது ஆற்று நீரில் மிதக்க விட்டிருக்க வேண்டும்.
3. குழந்தை பருவத்திலிருந்து பார்வோனின் அரண்மனையில் வளர்ந்திருக்க வேண்டும்.
4. பெற்ற தாயே, தாதியாய் இருந்திருக்க வேண்டும்.
5. ஒரு மனைவி தான் கட்டியிருக்க வேண்டும்.
6. செங்கடலைப் பிளந்திருக்க வேண்டும்.
7. அற்புதம் அடையாளங்கள் செய்திருக்க வேண்டும்.
8. மோசே போல திக்குவாயும், மந்தநாக்கும் உடையவராயிருக்க வேண்டும்.
9. எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
10. அவருடைய சகோதரனும் சகோதரியும் ஊழியத்திற்கு வந்திருக்க வேண்டும்.
11. மோசே போல் லேவி கோத்திரத்தில் பிறந்திருக்க வேண்டும்.
12. ஐந்து ஆகமங்களை எழுதியிருக்க வேண்டும்.
13. 40 வருடங்கள் வானத்து மன்னாவை தானும் தன்னுடைய மக்களும் சாப்பிட்டிருக்க வேண்டும்.
14. தேவனே எழுதிக் கொடுத்த கற்பனைகளை வாங்கி வந்து உடைத்திருக்க வேண்டும்.
15. இஸ்ரேல் மக்களை கானான் தேசத்தை நோக்கியே நடத்தியிருக்க வேண்டும். **இப்படிப்பட்டவரா முகமது?**

இப்படியாய் சொந்த அறிவைக் கொண்டு, வாதமிட்டு, மோசேயைப் போல எழும்பிய தீர்க்கதரிசி யார் என்று கண்டுபிடிப்பது சரியல்ல; அது வீண்.

மோசேயின் குணாதிசயங்களை எண். 12:6-8; எபி.11:24-29, போன்ற வசனங்களில் வாசித்தால், இப்படிப்பட்ட குணாதிசயமுள்ள தீர்க்கதரிசி எழும்புவார் என்று பொருள். அந்த குணாதிசயம் முகமதுக்கு உண்டா?

அவர், "உங்களுக்காக" எழும்புவார். யாருக்காக? இஸ்ரேலருக்காக. இஸ்ரேலருக்காக எழும்பியவர் யார்? (see மத். 15:24). அவர் "உங்கள் சகோதரருக்குள்ளே"யிருந்து எழும்புவார். எங்கிருந்து? இஸ்ரேல் சகோதரர்களாகிய 12 கோத்திரத்திக்குள்ளிருந்து; யாக்கோபின் கோத்திரத்திலிருந்து. முகமதுவோ, ஆபிரகாமுக்கும் அடிமை ஆகாருக்கும் தேவ வாக்குத்தத்தம் இல்லாமல் (ஆதி. 15:4; 17:15-19; 22:18; கலா. 3:16; 4:22; 5:1) பிறந்த இஸ்மவேலின் கோத்திரத்திலிருந்து வந்தவர்.

இந்த உபா. 18:18ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசி, வருவார் என்று இஸ்ரவேலர்கள் இயேசுவின் காலத்தில் தேடி அலைந்தார்கள் என்று அறிகிறோம். (யோ. 1:21; 6:14; 17:40; மத். 21:11; லூக். 24:19; யோ. 1:45; லூக். 7:16 etc)

முஸ்லீம்கள் வெறுக்கும் பவுல் மட்டுல்ல; பேதுருவும், ஸ்தேவானுமே, இந்த தீர்க்கதரிசி இயேசுதான் என்று சொல்லியிருக்கிறார்களே! (அப். 3:32, 33; 7:37) ஆக, உபா. 18:18ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசி முகமது அல்ல; இயேசு தான்.

3. **மத்தேயு 21:33-34ல் வரும் வேறே தோட்டக்காரர் முகமது. "ஆகையால் தேவனுடைய ராஜ்யம் உங்களிடமிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்கு கொடுக்கப்படும்." (மத். 21:43).**

தள்ளப்பட்ட கல் இஸ்மவேலர்கள்; முகமதுக்குப்பின் தாவீதின் ராஜ்யம் இஸ்மவேலரின் கீழ்தான் வந்தது.

★ "வேறே தோட்டக்காரர்" என்பது ஒருமையில் அல்ல. ஜனங்கள் என்று பன்மையில் போடப்பட்டிருக்கிறது. அந்த ஜனங்கள் புறஜாதியாராகிய நாம். இயேசு கூட பரலோகம் போகும்போது, இஸ்மவேலர் வசம் மட்டும் போகச் சொல்லாமல், அகில உலகமெங்கும் போகத்தான் கட்டளை கொடுத்தார். (மத். 28:18-20)

உதவாத கல் - தள்ளப்பட்ட கல் இஸ்மவேலர்கள் அல்ல. இங்கே கல் என்று ஒருமையில் தான் உள்ளது. இஸ்மவேலை,

இஸ்ரவேல் சமுதாயமே உருவாகும் முன்னே, ஆபிரகாமால் விலக்கி வைக்கப்பட்டதைத்தான், தள்ளப்பட்ட கல் என்று முஸ்லீம்கள் கூறுகிறார்கள். சாராள் சொன்னாள்: "இந்த அடிமைப் பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்திரவாளியாயிருப்ப தில்லை" (ஆதி. 21:10). தேவனும் இதை அங்கீகரித்து, ஆபிரகாமின் சந்ததி ஈசாக்கு வழியில் தான் என்றார் (ஆதி. 21:12). இன்றுவரைக்கும் அவர்களை ஆபிரகாமின் சந்ததி என்று அங்கீகரிக்காத தேவன், இஸ்மவேலரை தள்ளப்பட்ட கல் என்று சொல்வாரா?

"வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று. அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது" (சங்கீதம் 118:22-24).

"மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில்" (1 பேதுரு 2:4).

மற்றும் எபே. 2:20 போன்ற பல வசனங்களின்படி, உதவாத-இஸ்ரேலர்களால் தள்ளப்பட்டு சிலுவையிலறையப்பட்ட கல் - இயேசுவே என்று அறிகிறோம். அதே கல் தான், மூலைக்கல்லாய் மாறிற்று. அதாவது, ஆவிக்குரிய தேவனுடைய ராஜ்யத்தில், கிறிஸ்தவ சபை கட்ட ஏதுவாயிருந்தது.

முதலாம் வருகையில் தள்ளப்பட்ட இந்தக்கல், வீழ்ந்துபோன தாவீதின் ராஜ்யத்தை திரும்பக் கட்ட மூலைக்கல்லாய் பயன்பட வில்லை. அது 2ம் வருகையில் தான் நடக்கும். (அப். 15:16, 17). முஸ்லீம்கள் சொல்லுகிறபடி முகமதுக்குப்பின், தாவீதின் ராஜ்யம் இஸ்மவேலரின் கீழ் வந்தது என்பது மகாதவறு. ஆபிரகாமுக்குச் சொல்லப்பட்டதான ஆதி 15:18-21 வரையிலான தேசத்தை - கானான் தேசத்தை - இஸ்ரேலரின் ஆளுகைக்கு, தாவீதின் சந்ததிக்கு மறுபடியும் கொடுப்பது தான் (அப். 1:6,7) தேவனுடைய திட்டம்; அதுதான் 1000 வருட அரசாட்சியில் நடக்கும். அதிலே ஆளுகை இஸ்ரவேலருக்குத்தானே ஒழிய இஸ்மவேலருக்கு அல்ல. இஸ்மவேலர் - மூஸ்லீம்கள் - எருசலேமை கி.பி. 637 முதல் ஆண்டது தேவனின் தீர்க்கதரிசன நிறைவேறுதல் அல்ல; அப்போது அவர்கள், இடிந்து போன ஆலயம் இருந்த இடத்தில் Doom of the Rock என்று மசூதி கட்டியதும் எந்த தீர்க்கதரிசன நிறைவேறுதலும் அல்ல. பல ராஜாக்கள் யூதர்களை ஆண்டதுபோல, முஸ்லீம்களும் ஆண்டார்கள். அவ்வளவுதான்.

ஆக, தேவனுடைய ராஜ்யம் என்பது - ஆவிக்குரிய தேவ ஆசாரியத்துவம், பாறையாகிய (கல்) இயேசுவின் மேல் கட்டப்பட்ட புறஜாதிகள் நிறைந்த கிறிஸ்தவ சபையில் அரங்கேறுவதாகும். அது இப்போதே நடந்து கொண்டிருக்கிறது.

**4. சங். 45ல் வருபவர் முகமதுதான்.**

★ அல்ல... அல்ல... அது இயேசுவைப் பற்றி சொல்லப்பட்ட தீர்க்கதரிசன மாகும். அவரின் 2ம் வருகையில் ராஜாதி ராஜாவாய், கர்த்தாதி கர்த்தாவாய், பூமியில் செய்யப் போகும் ஆளுகை பற்றியதாகும்.

இதிலே வச-1 வரப்போகிற இயேசு ராஜாவையும், வச. 2 அவரின் ஆளுகையும் (ஏசா. 53:2) குறிக்கிறது. வச-3, வசனம் - சத்தியம் ஆகிய பட்டயத்தை உடையவரென்றும், வச-4, வரப்போகும் ராஜா பற்றியது என்றும் அறியலாம். வெளி. 19:11-21 வசனங்களை வாசித்தால் புரியும். வச-6, 7ஐ வாசித்தால், "தேவனே" என்று இயேசு கிறிஸ்துவை, தேவனே அழைப்பதை அறிந்தோமானால் (ஏசாயா 11:1-5) இது முகமதுவைப் பற்றியது அல்ல என்றும், முடிந்த போன முகமதுவின் ஆட்சி பற்றியது அல்ல என்றும் அறிவோம்.

வச-7ல் சொல்லப்பட்ட தோழர் - Fellows, அவரின் அப்போஸ்தலர்கள், சீஷர்களைக் குறிக்கிறது. பூமிக்குரிய ஆளுகையிலே, ராஜாவீட்டுப் பிள்ளைகளாய் மணவாட்டியாகிய சபை இருக்கப் போகிறது (வ.9) தேவனின் குமாரத்தியாகிய அவருடைய பிள்ளைகளிடம் சொல்லுகிற புத்திமதிதான் வச. 10. குமாரத்தி உலகப்பிரகாரமான காரியங்களையும், ஜனங்களையும் விட்டுவிட வேண்டும். அப்படி இருக்கும் விசுவாசிகளின் பரிசுத்த அலங்காரத்தில் ராஜா பிரியப்படுவார். அப்படிப்பட்டவர்கள்தான் அந்த ஆளுகையில் இணைவார்கள். அவர்கள் அவரை எப்போதும் பணிந்து கொள்வார்கள். அவர் என்பது முகமது என்றால், முகமதுவை துதிக்க வேண்டுமா? சிந்தியுங்கள். முகமதுவை ஆண்டவர் என்று எழுதக்கூடுமோ? அவருடைய ராஜாத்தியும், ராஜாத்தியின் தோழிகளும் வருவார்களாமே யார் அவர்கள்? ரோமர் 11:5ன்படி மீதமான இஸ்ரேலரோடு, சபையாகிய மணவாட்டியையும் இது குறிக்கிறது. வச-16ன்படி முகமதுவா பூமியெங்கும் பிரபுக்களாக இஸ்ரேலரை ஏற்படுத்தினார்? இந்த முகமது, முஸ்லீம்கள் எருசலேமை கைப்பற்றி ஆளும் கி.பி. 637க்கு முன்னால், கி.பி. 632லேயே மரித்துப் போயிருக்கும்போது, சங். 45 எப்படி முகமதுவைப் பற்றியதாகும்? வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்.

**5. யோ. 14:16, 17ல் சொல்லப்பட்ட தேற்றரவாளன் முகமது. அது, பரிசுத்த ஆவியானவர் என்றால், படைப்பிலிருந்தே அந்த ஆவியானவர் இருந்தாரே; பலர் பெற்றும், அறிந்தும் இருந்தார்களே!**

★ "நான் பிதாவை வேண்டிக் கொள்வேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே இருக்கும்படிக்கு, சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்த சத்திய ஆவியானவரைக் காணாமலும், அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ளமாட்டாது. But ye know him for he dwelleth with you and shall be in you" (யோ. 14:16, 17)

ஆங்கிலத்தில் படிக்கலாம். அவர் என்றென்றைக்கும் சீஷர்களுடனே (தேவ பிள்ளைகளுடனே) இருப்பாராம். அப்படியானால் 6ம் நூற்றாண்டில் வந்த முகமது, முதலாம் நூற்றாண்டு சீஷர்களோடு எப்படி இருக்க முடியும்? அந்த சீஷர்கள் அந்த தேற்றரவாளனை கண்டிருக்கிறார்களாம்; அவர்களோடு வாசமாயிருக்கிறாராம். 6ம் நூற்றாண்டுக்காரரை எப்படிக் கண்டிருப்பர்? எப்படி அவர் வாசமாயிருப்பார்? சிந்தியுங்கள். முஸ்லீம்கள் சொல்வது போல, ஆவியானவர் ஆதி முதல் இருந்தார் என்பது உண்மைதான். ஆனால் பழைய ஏற்பாட்டு காலத்தில் அவர் அவர்களோடுகூட இருப்பார். புதிய ஏற்பாட்டு சபையின் காலத்திலோ அந்த ஆவியானவர், அவர்களுக்குள் வாசமாயிருப்பாராம் (1 கொரி. 6:19). அவர்களுக்குள் இருக்கும் ஆவியானவர் என்றென்றும் அவர்களோடு இருப்பாராம். ஆவியானவர் தேவன் என்பதால் என்றென்றும் இருக்க முடியும்; முகமது மனிதன் என்பதால் என்றென்றும் சீஷர்களாகிய நமக்குள் இருக்க முடியுமா? சிந்தியுங்கள். எனவே யோ. 14:16, 17ல் சொல்லப்பட்ட வேறொரு தேற்றரவாளன் பரிசுத்த ஆவியானவரே தவிர, முகமது அல்ல.

**6. ஆதி. 49:10ல் சொல்லப்படும் சமாதான கர்த்தர் முகமதுவே.**

★ "சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதுமில்லை... ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்." (ஆதி. 49:10) அவன் என்று போட்டால்தான், தேவனைக் குறிக்கும் குரானில். வேதத்தில் **"அவர்"** என்றாலே பெரும்பாலும் தேவனைத் தான் குறிக்கும். அப்படிப் பார்த்தால், அவரிடத்தில் சேருவார்கள் என்று

உள்ளதால், இந்த அவர் மனிதனல்ல, முகமதுவுமல்ல, நம் தேவனாகிய கிறிஸ்துதான்.

ஆளுகைக்கான சிரேஷ்ட புத்திரபாகமுடைய கோத்திரம் யூதா. இவர்களுக்கு ஆளுகை இருந்தாலும் இல்லாவிட்டாலும், சமாதான கர்த்தராகிய இயேசு பூமிக்கு வந்து ஆட்சி நடத்தும் வரை, ராஜரீகம் யூதாவை விட்டு நீங்கவே நீங்காது; யூதர்கள் தான் ஆள்வார்கள். உண்மை இப்படியிருக்க, இந்த சமாதான கர்த்தர் முகமது என்றால், அவரது 6ம் நூற்றாண்டிற்குப் பின் யூதர்களுக்கா செங்கோல் - ஆளுகை கிடைத்தது? இல்லையே. அப்படியென்றால் அந்த சமாதான கர்த்தர் யார்? ஏசாயா 9:6ஐ வாசித்தால், இவர் இயேசுதான் என்று அறியலாம். ஏசாயா 9:7ன்படி ஆளுகை 2ம் வருகையில் தான் என்று அறியலாம். (லூக்கா 1:32, 33) “அவர் நாமம் சமாதானப் பிரபு...” (ஏசாயா 9:6)

**7. உபா. 33:2 - பாரான் மலையில் பிரகாசிக்கிறவர் முகமதுதான்.**

★ “கர்த்தர் சீனாயிலிருந்து எழுந்தருளி, சேயீரிலிருந்து அவர்களுக்கு உதயமானார். பாரான் மலையிலிருந்து பிரகாசித்து.... (உபா. 33:2)

சீனாய் மலையில் எழுந்தருளி 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் கொடுத்த அதே தேவன் தான், பாரான் மலையிலும் பிரகாசமானார் என்று வசனம் திட்டமாய் சொல்லியிருக்க, அது எப்படி முகமதுவாகும்? மோசேயின் (கி.மு. 1571) காலத்தில் முகமது இல்லையே.

ஆதி. 21:21 - “அவன் பாரான் வனாந்திரத்தில் குடியிருக்கையில் அவனுடைய தாய் எகிப்து தேசத்தாளாகிய ஒரு பெண்ணை விவாகம் பண்ணுவித்தாள்.” இதன்படி இஸ்மவேல் பாரானில் வசித்தானாம்; அவன் வழியில் முகமது வந்தாராம்; இந்த பாரான் பகுதிதான் மெக்காவாம்; மெக்காவில் தான் முகமது பிறப்பு; அந்த மெக்காவிலிருந்துதான், முகமது மூலமாய், குரான் பிரகாசித்ததாம் - இப்படித்தான் முஸ்லீம்கள் சொல்கின்றனர்.

இப்படி அவர்கள் கொள்கையிருந்தாலும், உபா. 33:2ன் படியான பாரான்மலை பிரகாசம் எப்படி முகமதுவாகும்?

“அப்பொழுது இஸ்ரேல் புத்திரர் சீனாய் வனாந்திரத்திலிருந்து தங்கள் பிரயாண வரிசைகளாய்ப் புறப்பட்டார்கள். மேகம் பாரான் வனாந்திரத்தில் தங்கிற்று” (எண். 10:12). இந்த தேவனின் மேகம் - மகிமை தான் பாரானில் பிரகாசித்ததே ஒழிய வேறல்ல.

**8. ஏசாயா 28:2ல் சொல்லப்பட்ட "திராணியும் வல்லமையும் உள்ள ஒருவன்" என்பது முகமதுவை குறிக்கிறது.**

★ இல்லை - இவன் அசீரியன். எப்பிராயீம் மக்களுக்கு அசீரியர்களால் வரும் அழிவை பற்றி இங்கே சொல்லப்பட்டுள்ளது. இது முடிந்த போன தீர்க்கதரிசனம். முகமதுதான், தன் ராஜ்ய பாரத்தில் இஸ்ரேலை - எருசலேமை - பாலஸ்தீனாவை - கொண்டு வரும் முன்பே மரித்துப் போய்விட்டாரே, பின் எப்படி இது பொருந்தும்.

**9. ஏசாயா 42:1ன்படி தேவன் ஆதரிக்கிற தேவ தாசன் முகமதுதான்.**

★ "ஏசாயா 42:1ல் சொல்லப்பட்டபடி, புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்தியவர் இயேசு அல்ல; முகமது தான். வச. 10, 11ன்படி, எல்லா புறஜாதிகளும், கேதாரியர் உட்பட முகமதுக்கு முன்பு கெம்பீரிப்பார்களாம். இந்த கேதார் என்பவர், இஸ்மவேலின் 2வது மகன்; இவன் வழி வந்த முகமதுவைப் பற்றியதே ஏசாயா 42" என்று முஸ்லீம்கள் வாதிடுகின்றனர்.

ஏசாயா 42 முழுவதும், இயேசுவின் முதலாம் மற்றும் 2ம் வருகை பற்றியது. வச. 1-9, இயேசுவைப் பற்றியதுதான் என்று, மத். 12:18, சகரியா 3:8 போன்ற வசனங்கள் சொல்கின்றன. "இதோ நான் தெரிந்து கொண்ட தாசன். என் ஆத்துமாவிற்குப் பிரியமாயிருக்கிற என் நேசன்" - மத். 12:18.

வச-13, 2ம் வருகையை சொல்கிறது. இயேசு தன் முதல் வருகையிலேயே புறஜாதிகளுக்குப் போதித்தார். சமாரிய ஸ்திரி, நூற்றுக்கதிபதி, கானானிய ஸ்திரி போன்ற எல்லோருமே புறஜாதியார் தானே. மட்டுமல்ல... புறஜாதியாருக்கு போதிக்க என்றே பவுலையும் நம்மையும் தெரிந்து கொண்டாரே. (அப். 9:15; மத். 28:18-20) ஆக, இயேசுவின் 2ம் வருகையின் போது, புறஜாதிகளாகிய நாமெல்லாரும், இரட்சிக்கப்பட்ட கேதாரியர் உட்பட அத்தனை பேரும் கெம்பீரித்து, அவரைத் துதித்துக் கொண்டே ஒலிவமலையில் இறங்குவோம். அல்லேலூயா (சகரியா 14:4; யூதா 14, 15). ஆக, ஏசாயா 42:1ல் உள்ள, தேவன் ஆதரிக்கிற தேவ தாசன் முகமது அல்ல; மனிதனாய் வந்த வார்த்தையாகிய தேவன்.

**10. "கர்த்தருடைய நாமத்தில் வருகிறவர் தோத்தரிக்கப்பட்டவர்." (மத். 23:39) என்பது முகமதுவை குறிக்கிறது.**

★ தோத்தரிக்கப்பட தகுதி உள்ளவர் தேவன் மட்டுமே; மனிதனல்ல. முகமது மனிதரே. முன் நடப்பாரும் பின் நடப்பாருமாகிய திரளான

ஜனங்கள், தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா, கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா, என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். (மத். 21:9).

இது மாம்சத்தில் வெளிப்பட்ட வார்த்தையாகிய தேவனுக்கு நடந்தது. இப்படியாய் முகமதுக்கு எப்போது நடந்தது? அப்படி நடந்திருந்தால் அவர் தேவனா? சிந்தியுங்கள். தாவீதின் குமாரனாம் இயேசுவுக்கு உண்டான தோத்திரம் இது; தாவீதுக்கு ஆண்டவனாயிருந்து (Lord) பின் மனிதகுமாரனாய் வந்த இயேசுவுக்கு உண்டான தோத்திரம் இது (மத். 22:41-46 ஐ தியானியுங்கள்). சங். 118:26-லேயே இது தீர்க்கதரிசனமாய் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை அறியுங்கள்.

11. **வெளி. 2:26-28 - இருப்புக் கோலால் ஆள்பவர் முகமது.**

★ இங்கே சொல்லப்படும் ஆளுகை என்பது உலகம் முழுவதையும் ஆள்வதாகும்; முகமது உலகம் முழுவதும் ஆளவில்லை. 1000 வருட ஆட்சியில் இயேசுதான் உலகம் முழுவதும் ஆளப் போகிறார். அதற்கான தீர்க்கதரிசன வசனங்களாவன: வெளி. 2:26-28; சங். 2:9; வெளி. 12:5.

12. **ஏசாயா 65:1-7; 21: 13-17; ஏசாயா 21:1-10 போன்ற வசனங்களில் சொல்லப்பட்டவர் முகமது.**

★ அல்ல... அல்ல... மீதமான இஸ்ரேலர்களின் (Remnant Israelist) ஜெபத்திற்கான பதில் தான் ஏசா. 65:1-7 (see ஏசா. 63:15-64:12 also). மனந்திரும்புகிறவரைக்கும் பதிலே கிடைக்காது. No return until repentence. ஏசா. 21:13-17 என்பது அரபியாவின் பாரம். இது அசீரியரின் காலத்திலேயே முடிந்துவிட்டது. ஏசாயா 21:1-10 என்பது, மேதிய-பெரிசிய சாம்ராஜ்யத்தால் பாபிலோனுக்கு வந்த அழிவு பற்றிய முன்னறிவிப்பு. இந்த காரியங்கள் எல்லாமே முகமதுக்கு முற்பட்ட காலத்திற்குரியதாய் இருப்பதாக சரித்திரம் சாட்சி பகரும்போது, முகமதுக்குரியது என்று சொல்வது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

13. **யோ. 1:19-22ன்படி, யோவான் ஸ்நானன் எலியா; இயேசு, கிறிஸ்து; தீர்க்கதரிசியாய் முகமது. மேலும் தானி. 2:16-45ல் வரும் கல், முகமதுவே.**

★ யோவான் ஸ்நானனிடம் கேள்விகள் கேட்டபோது, தான் கிறிஸ்துவல்ல; எலியாவுமல்ல; தீர்க்கதரிசியுமல்ல என்று பதில் கூறுகிறார். மத். 17:11-13ல், எலியா வந்தாயிற்று என்று

சொல்லப்பட்டதால், முஸ்லீம்கள், யோவான் ஸ்நானனை எலியா என்கிறார்கள். இவர்கள் மத். 11:14ஐ சிந்திப்பதில்லை. யோவான் ஸ்நானனால் ஆரம்பிக்கப்பட்டு, இயேசுவால் சொல்லப்படும் பரலோக ராஜ்யத்தை இஸ்ரேலர்கள் ஏற்றுக் கொண்டால் மாத்திரமே, யோவான் ஸ்நானனை எலியா என்று சொல்லலாம். அவர்கள் எற்றுக் கொள்ளாததால், அவன் எலியா அல்ல. மல். 4:5ல் சொல்லப்பட்டபடி, 2ம் வருகைக்கு முன்பு தான் எலியா வருவான். முஸ்லீம்கள் சொன்னபடி இயேசுவானவர், கிறிஸ்துவே. கிறிஸ்துவாகிய இயேசு, மூன்று பணிகளைச் செய்கிறார். 1. தீர்க்கதரிசி, 2. ஆசாரியர், 3. ராஜா.

தீர்க்கதரிசியான இயேசு கிறிஸ்து, பிரதான ஆசாரியப்பணி முடிந்து, ராஜாதி ராஜாவாய் பூமிக்கு வந்து ஆளப் போகிறார். இதுதான் தானியேலில் வரும் கல். எனவே இதிலே எந்த மகிமையையும், முகமது எடுத்துக் கொள்ள முடியாது; அதற்கான வசன ஆதாரமுமில்லை. முகமது தீர்க்கதரிசி என்றால், குரானில் அவர் என்ன தீர்க்கதரிசனம் சொன்னார்? என்ன நிறைவேறியது? என்ன நிறைவேறப் போகிறது? குரானில், அல்லாதான் தீர்க்கதரிசினமாய் சிலவற்றைச் சொன்னார், இயேசு சொன்னது போல.

**14. சங். 2:7 – தாவீதைப் பற்றியது.**

★ இது தாவீதைப் பற்றியது என்றால், ❶ தாவீது பிறந்த அன்றைக்கே, குழந்தையிடமா இப்படிச் சொல்லுவது? ❷ இங்கு சொல்லப்பட்ட குமாரன் தாவீது என்றால், தாவீதை முத்தம் செய்யுங்கள்; தாவீதை அண்டிக் கொண்டால் நீங்கள் பாக்கியவான்கள் என்ற தேவனுக்குரிய மகிமையை தாவீதுக்கு கொடுப்பரா? (see சங். 2:12 with ஏசாயா 42:8) இந்த சங். 2:7 என்பது தேவனின் தீர்மான விபரமாகும். இது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியது; அவரது தேவனின் தீர்மானப்படியான உயிர்த்தெழுதலைப் பற்றியது.

"நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று 2ம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறபடியே, இயேசுவை எழுப்பினதினாலே..." (அப். 13:32, 33). Here "begotten", not "born"-see கொலோ. 1:18; மத். 1:2; எபி. 1:5; 5:5.

**15. எந்த நேரத்தில் பிலாத்து முன் விசாரணையோ (யோ. 19:14-16), அதே நேரம் சிலுவையில் தொங்கினார் என்று மத். 27:45, 26; மாற்கு 15:33, 34; லூக்கா 23:44-46 சொல்கின்றதே இது சத்திய வேதமா?**

★ யோவானின் கணக்கு ரோமக் காலண்டர் கணக்கு, அது காலை 6 மணி; அப்போது விசாரணை தான். மற்றவர்கள் கணக்கு யூதக் காலண்டர் கணக்கு. 6ம் மணி முதல் 9ம் மணி நேரம் வரை என்பது, பகல் 12 முதல் 3 மணி வரையிலான ரோமக் காலண்டர் கணக்காகும். அந்த நேரத்தில் தான், சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தார். எனவே எந்த வித்தியாசமுமில்லை; இது சத்திய வேதம் தான்.

**16. மரித்த இயேசுவின் சரீரத்திற்கு நறுமணம் பூசவரும் பெண்கள், நிக்கோதேமு போல அன்றே கல்லறைக்கு வந்து பூசாமல், 3ம் நாள் வருகிறார்களே எப்படி மூடிய கல்லை புரட்டி விட்டுப் பூசமுடியும்? இது பொய்க்கதை தானே.**

★ கலக்கத்திலும் பயத்திலும் இருந்த பெண்கள், இயேசு சாகும் போது தூரத்தில் நின்றனர். (லூக். 23:49). யோசேப்பு தன் கல்லறையில் எப்படி அடக்கம் பண்ணுகிறான் என்பதை கல்லறை வந்தே பார்த்தனர் (லூக். 23:55). அவர்கள் கலக்கத்தோடும், கண்ணீரோடும் இருந்ததால் ஏதும் கொண்டு வரவில்லை. அடக்கம் நல்லபடியாய் முடிந்ததால், கொஞ்சம் தைரியத்தோடு, ஓய்வு நாள் முடிந்து, பரிமள தைலத்துடன் வந்தனர். வரும்போதே, கல்லைப் புரட்டுவது - பூசுவது எப்படி என்று யோசித்துக் கொண்டுதான் வந்தனர்.

"கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித் தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்." (மாற்கு 16:1-3)

அந்த ஸ்திரிகள் ஏறிட்டுப் பார்க்கிற போது, தேவ தூதனால் ஏற்கனவே புரட்டப்பட்டு (மத். 28:2), தள்ளப்பட்டிருக்கக் கண்டார்கள் (மாற்கு 16:4).

எனவே இது பொய்க்கதையல்ல; மனிதாபிமான உண்மை நிகழ்ச்சிகள். வேதபாரகன் நிக்கோதேமு விசுவாசமுள்ள ஆண்மகன் என்பதால், தைரியத்தோடு மரித்த அன்றே நறுமணம் கொண்டு வந்தது கிரகிக்கக் கூடியதுதான்.

**17. புதிய ஏற்பாட்டில் ஒன்றுகூட இயேசுவின் சீடர்களால் எழுதப்படவில்லை.**

★ அநியாயமான குற்றச்சாட்டு. அப்படியே சீடர்கள் எழுதவில்லை என்றால், அந்த புதிய ஏற்பாட்டு வசனங்களை எடுத்து ஏன் முஸ்லீம்கள்

தங்களுக்கு ஆதாரமாக்கிக் கொள்கிறார்கள்? மத்தேயு, யோவான், யாக்கோபு, பேதுரு போன்றோரெல்லாம் இயேசுவின் சீடர்கள் தானே.

18. **காத், யாசேர், கர்த்தரின் யுத்தப் புத்தகம், ஏனோக்கின் புத்தகம் போன்ற பல புத்தகப் பெயர்கள் பைபிளில் இருந்தும், அவைகள் தேவனுடையவைகள் என்றால் அவைகள் எங்கே? இல்லை யென்றால் அவைகளெல்லாம் பொய்யானவைகளா? அவைகளை கர்த்தரால் காக்க முடியவில்லையா?**

★ தேவனுடைய வார்த்தைகளைக் கொடுப்பதுதான் தேவனின் வேலை. அதைப் பாதுகாத்து வைப்பது பெற்றுக் கொண்டவர்களின் பொறுப்பு. அதற்கு தேவனின் உதவியைப் பெறுவதும் அவர்கள் செயல்பாடுதான். உடன்படிக்கைப் பெட்டியையே பல ஆண்டுகளுக்குப் பிறகு தாவீது தேடி கண்டுபிடித்தானல்லவா!

ஆதி முதலே போராட்டம் பிசாசுக்கும், வார்த்தையானவருக்கும் என்பதால் (ஏசாயா 14 : 13, 14 : யாக், 2 : 19; மத். 8 :29; லூக். 8 : 28) இயேசுவின் இரட்சண்யம் பற்றிய வேதங்களை அழிக்க ஆதி முதல் பிசாசு செயல்பட்டான். எனவே தான் பல புத்தகங்கள் காணவில்லை. சில புத்தகங்கள் கிடைத்திருக்கின்றன. கிடைத்தவைகளை சனகரீம் மன்றமே ஏற்றது என்றால், கேள்வி ஏன் வர வேண்டும்? கிடைத்தவைகளை தியானித்து, பாக்கியவானாவதை விட்டு விட்டு, (சங்கீதம் 1:1-3) கிடைக்காதவைகளைப் பற்றி கவலைப்பட்டு, கிடைத்தவைகளையும் விட்டுவிடக் கூடாது. கிடைத்தவைகளாலேயே நமக்கு இவ்வளவு ஆசீர்வாதமும் நித்திய ஜீவனும் கிடைக்கிறது என்றால், அதிலே சந்தோசப்பட வேண்டாமா? சவக்கடலில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட சில புத்தகங்களில், இப்படிக் காணாமல்போன தேவனின் பொக்கிஷங்கள் கிடைத்தால் நமக்கு பெருத்த மகிழ்ச்சி தானே. கிடைத்தவைகளுக்காய் கர்த்தருக்கு நன்றி கூறுவோம்.

19. **சாபங்கள் தண்டனைகள், ஆசீர்வாதங்கள், சோதனைகள் எல்லாம், இந்தப் பூமியிலேயே தேவன் கொடுக்கிறார் என்றால், மனந்திரும்புதல் - இரட்சிப்பு எல்லாம் எதற்கு? நியாயத் தீர்ப்பு எதற்கு?**

★ "இன்று நான் உங்களுக்கு கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்தீர்களானால் ஆசீர்வாதமும்..."

"இதோ உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைக்கிறேன்." (உபா.11:26-28:30:15, 19)

ஆசீர்வாதம், சாபம் எல்லாம் நாம் தான் சுதந்தரிக்கிறோம்; தேவன் கொடுப்பதில்லை.

அப்படியே, தண்டனைகள், சோதனைகள் எல்லாம் நாமே தேவனிடமோ, பிசாசிடமோ பெற்றுக் கொள்கிறோம். (யாக். 1:13; 1 தீமோ. 5:24) நம்மால் - நாமே சுதந்தரித்துக் கொண்ட பொல்லாதவைகளிலிருந்து விடுதலை பெறத்தான், மனந்திரும்புதல் - இரட்சிப்பு எல்லாம் தேவை. விடுதலை பெறாமலே இருப்பவர் களுக்கு, விடுதலை பெற்றும் அதிலே நிலைத்திராதவர்களுக்கு, நியாயத் தீர்ப்பு உண்டு; அது தேவைதான்.

**20. இயேசு பிரசங்கித்த ராஜ்யத்தின் சுவிசேஷம், ஏன் மற்ற சுவிசேஷம் போல சேர்க்கப்படவில்லை?**

★ மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் போன்ற நான்கு தேவ மனுஷர்களால் எழுதப்பட்டது இயேசுவின் சுவிசேஷம் அடங்கியது தான் அந்த 4 புத்தகங்களும். அவைகள் 4 சுவிசேஷங்கள் அல்ல. இந்த 4 புத்தகங்கள் மட்டுமல்ல. மற்ற அப்போஸ்தலர்களின் புத்தகங்களும் எல்லாமே, இயேசு பிரசங்கித்த ஆவிக்குரிய ராஜ்யத்தின் சுவிசேஷம் தான். இந்த இயேசுவின் ஆவிக்குரிய ராஜ்யத்தின் சுவிசேஷம் ஆதியிலிருந்தே சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளாவன. ❶ நித்திய சுவிசேஷம் ❷ இரட்சிப்பின் சுவிசேஷம், ❸ மகிமையின் சுவிசேஷம். வரப்போகும் அந்தி கிறிஸ்துவின் நாட்களில் ஆவிக்குரிய ராஜ்யத்தின் சுவிசேஷம், Actual ராஜ்யத்தின் சுவிசேஷமாய் வெளிப்படுத்தப்படும் (வெளி. 14 : 6; மத். 24 : 14).

**21. ஒரு குறிப்பிட்ட லேவியர் கோத்திரம் தான் ஆசாரிய ஊழியம் செய்ய வேண்டும் என்பது. வர்ணாசிரமத்திற்கு வக்காலத்து அல்லவா!**

★ What is வர்ணாசிரமம்? கடவுளின் நெற்றியிலிருந்து வந்தவர்கள் உயர்ந்தவர்கள்; காலிலிருந்து வந்தவர்கள் சூத்திரர்கள் என 4 வகையாய்ப் பிரித்திருப்பது தான் வர்ணாசிரமம் - மனுதர்மம். அதன்படி, ஜாதிக்கு ஜாதி கொள்வினை கொடுப்பினை கிடையாது; பிராமணர்கள் தான் தேவ ஜாதி. ஆனால் இங்கே, 12 கோத்திரத்தாரும் ஒரே யாக்கோபுக்கு 4 மனைவிகள் மூலம் பிறந்தவர்கள். அவர்களுக்குள் உயர்வு - தாழ்வு இல்லை. கொள்வினை - கொடுப்பினை உண்டு. அதிலே தான் லேவியருக்கு கடவுள்பணி; யூதாவுக்கு ஆட்சிப்பணி என்று பணிகள் தரப்பட்டுள்ளன. அவ்வளவு தான்! இப்படி வர்ணாசிரமம்

என்றெல்லாம் கேள்வி வரும் என்றெண்ணித்தான், இயேசு புதிய ஏற்பாட்டிலே, ஆசாரியத்துவத்தையே மாற்றிவிட்டார் போலிருக்கிறது (1 பேதுரு 2:9); உலக கிறிஸ்தவர்கள் எல்லாரையும் ராஜாக்களும் ஆசாரியர்களுமாய் ஆக்கியிருக்கிறார் போலிருக்கிறது. அல்லேலூயா!

**22. விதவை மறுமணம் கூடாது என்று லேவி 21:13, 14ல் சொல்லும் வேதம் கர்த்தருடையதா?**

★ விதவை மறுமணம் கூடாது என்று வேதம் சொல்லவே இல்லை. ரூத், தாமார், பத்சேபாள் போன்றோர் விதவைகள்தானே! அவர்கள் மறுமணம் செய்ததால் தானே இயேசுவின் வம்சம் வந்தது. லேவி, 21:13, 14ல் சொல்லப்பட்ட சட்டம் ஆசாரியனுக்கு மட்டுமே. வேதத்தில் ஆசாரியத்துவம், எல்லாக் காரியங்களிலும், வித்தியாசமாய் காட்டப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, உடை, திருமணம், நிலப்பரப்பு, தொழில் போன்றவற்றில்கூட.

**23. ஆடைக்கும், வீட்டுக்கும் குஷ்டரோகம் பிடிக்கும் என்று சொல்வது அறிவுடைமையா? (லேவி 13 : 47-53; 14:34-52)**

★ குஷ்டரோகம் மட்டுமல்ல... சாதாரண காய்ச்சலும் சளியும் கூடப் பிடிக்கும். அதாவது, அந்த நோய்க் கிருமிகள் தொற்றிக் கொள்ளும். அதனால் தான், காய்ச்சல்காரன் Dress-ஐ உபயோகிக்கக் கூடாது; அவன் இருந்த இடத்திலே உட்காரக்கூடாது என்று சொல்கிறோம். ஏனெனில் அது infectious. அதனால் தான், தொழுநோயாளிகளை ஊருக்கு வெளியே குடியேற வைக்கிறார்கள் அன்றும் இன்றும். கலைஞர்கூட தொழுநோயாளிகள் இல்லம் என்று அப்படித்தான் கட்டி வைத்தார். பாவக்காரியங்களே ஆவிக்குரிய ரீதியில் infectious என்று சங்கீதம் 1:1 சொல்லும் போது, மாம்சக் காரியங்கள் அதனிலும் தீமையானது தானே.

**24. மதுகுடிக்கச் சொல்வது வேதமா? (உபா. 14:24-26; நீதி 31 : 6) இயேசுவின் முதல் அற்புதமே திராட்சை ரசமாய் மாற்றி மதுக்குடிக்க வைப்பது தானே.**

★ குடிப்பதுவேறு; குடிவெறிவேறு. குடிவெறியில், தரித்திரம், பாவம், சமாதானமின்மை, அகால மரணம், வியாதிகள் போன்ற பிசாசின் செயல்கள் உருவாகும். நீதி. 23 : 2, 20,21 ஐ வாசித்தால் தெரியும்:- சாப்பிடுவது பாவமல்ல; போஜனப்பிரியம் பாவம். உடலுறவு பாவமல்ல; காமவிகாரம் பாவம். நகை போடுவது பாவமல்ல; நகை இச்சை பாவம். ரோமர் 14:21-ஐ தியானியுங்கள்.

"மாம்சம் புசிக்கிறதும் மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது தவறுகிதற்காவது, பலவீனப்படுவதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்." பிலிப்பியர் 4:8-யும் தியானியுங்கள்.

தேவ சித்தம் - "பரிபூரண சித்தம்" (Perfect will), "விட்டுக் கொடுக்கிற சித்தம்" (Permissive will) புரியாவிட்டால் இப்படிக் கேள்விகள் உருவாகிக் கொண்டேயிருக்கும். நோவாவின் குடியை பாவமென்று தேவன் ஏன் தீர்க்கவில்லை? சிந்தியுங்கள். cluster wine; fermented wine என்று மதுவில் இருவகை உண்டு. கானாவூர் கல்யாணத்தில் தேவன் தந்தது cluster wine. இப்படிப்பட்ட மதுக்கலவைகள் நம் அன்றாட உணவிலும், மருந்துகளிலும் இருப்பது நமக்குத் தெரியுமா? நாம், சாட்சிக் கேடின்றி, நாம் வாழும் சமுதாயப் பண்பாட்டுப்படி நடக்க வேண்டும். அவ்வளவுதான்.

பிரச்சனை வந்தால் தான் பாவம் என்ற கணக்கு; சட்டம் என்ற கட்டுப்பாடு; (ரோமர் 5:13). அது இல்லாதவரை No Issue.

**25. இயேசுவுக்கு மனித தகப்பன் இல்லையென்று சொல்லும் போது, யோசேப்பின் வம்ச அட்டவணை மத்.1ல் ஏன்?**

★ Adopted child ஆக இருந்தாலும், தத்தெடுத்த அப்பாவின் வம்சம் தான் அந்த குழந்தை. யூதா கோத்திரம் என்ற ராஜபாரம் பரியத்தில், தாவீதின் வழியில் இயேசு பிறந்தார் என்பதைக் காட்டவே யோசேப்பின் வம்சப்பட்டியல். வேறெதற்கும் அல்ல. அம்மாவை வைத்து கோத்திரம் அல்ல என்பதை முந்தி அறிக.

**26. குழந்தை இயேசு எகிப்தில் உள்ள போதே ஏரோது மரித்தார் (மத்.2:19) அதற்கு 30 ஆண்டுகளுக்கு பின்னும், அவன் உயிரோடிருந்தான் என்று லூக்கா, 23:8 சொல்கிறது இயேசுவை விசாரித்தவனும் அவனாமே, எப்படி இது?**

★ ஏரோது வம்சத்தில் வந்த 6 ஏரோதுகள் வேதத்தில் வருகிறார்கள். இப்படி ஏரோது என்ற பெயரில் வருபவர்கள் வெவ்வேறு நபர்கள். ஒரு ஆள் அல்ல.

**27. உபாகமம் கடைசி அதிகாரம், மோசேயின் மரணம், அடக்கம் பற்றியது. இதை எப்படி மோசே எழுதியிருப்பான்? இந்த அதிகாரம் இடைச்சொருகலா?**

★ இயேசுகிறிஸ்து, உயிரோடிருக்கையிலேயே, தன் மரணம், உயிர்தெழுதல், கலிலேயாவில் காணப்படல் போன்றவை பற்றி யெல்லாம் சொல்லவில்லையா? ஆதியிலே உருவான உலகையும், 2500 வருஷத்துக்கு முன்னான படைப்பின் இரகசியம், நோவா ஜலப்பிரளயம், ஆபிரகாம் வரலாறு போன்றவைகளையும், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதிய மோசே தீர்க்கதரிசி, உபா. 34ஐயும் எழுதியிருக்கலாமே! 5 ஆகமும் மோசேயால் எழுதப்பட்டது என்று இயேசுவே சொல்கிறாரே! ஒருவேளை, முஸ்லீம்கள் சொல்வது போல, யோசுவாவால் எழுதப்பட்டு சொருகியிருந்தாலும், தவறில்லையே, உபா.34ல் சொல்லப்பட்டது உண்மைச் சம்பவம் தானே.

**28. யோ. 20:30; 21:25-ல் பார்த்தால் சுவிசேஷம் முழுமையாய் எழுதப்படவில்லையே.**

★ தன் சுவிசேஷப் புத்தகத்தை முழுமையாய் எழுதவில்லை என்று யோவானே உண்மையை கூறுகின்றான். அவனவனின் தாலந்துகளைப் பொருத்துத் தான் எழுத முடியும். மற்றப்படி, யோவான் விட்டுவிட்டதையும் சேர்த்து, மற்ற 3 சுவிசேஷகர்களும், அப்போஸ்தலர்களும் எழுதியிருக்கிறார்கள் என்பதிலே மகிழ்ச்சியடைகிறோம். இது தேவனின் கிருபை.

**29. "இப்படி நான் சொல்லுகிறது கர்த்தருக்கேற்றபடி சொல்லாமல், மேன்மை பாராட்டும் தைரியத்தினாலே புத்தியீனனைப் போல சொல்லுகிறேன்." (2 கொரி. 11:17) இப்படியாய், கர்த்தருக் கேற்றபடி பேசாத பவுலின் நிரூபங்களை எப்படி வைத்திருக்கிறீர்கள்?**

★ கர்த்தருக்கேற்றபடி பேசவில்லை என்றால், கர்த்தருக்கு விரோதமாய் பேசுகிறார் என்று அர்த்தமல்ல. "I speak not after the Lord." அதாவது கர்த்தர் சொல்லாததை சொல்கிறேன் என்று பொருள். வேதத்தில், தேவன் சொன்னதும், தேவன் சொல்லாமல் நன்மையாய் தேவசித்தத்திற்கு ஒத்து பவுலுக்கு தோன்றியதும் சொல்லப்பட்டுள்ளது.

"இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், யோசனையாகச் சொல்லுகிறேன்." (1 கொரி. 7:6) என்கிறான். இப்படி பவுல் சொல்வது தேவனுக்கு விரோதமானதல்ல; நமக்கு தேவையானது.

**30. வேதம் தேவனுடைய வார்த்தை என்றால், மாற்கு 16:17, 18ல் உள்ள வாக்குத்தத்தங்கள் ஏன் நம் காலத்தில் நிறைவேற வில்லை?**

★ நிறைவேறவில்லை என்று யார் சொன்னது? இன்றும் நிறைவேறிக் கொண்டு தான் இருக்கிறது. இவைகள் வாக்குத்தத்தங்கள் அல்ல. விசுவாசக்கிறவர்களால் நடக்க வேண்டிய அடையாளங்கள். இவைகள் தேவசித்தம். தேவசித்தத்தை விசுவாசிக்கிறவனுக்கு இந்த அடையாளங்கள் எப்போதும் நடக்கும். எங்கள் சபையில் இந்த அடையாளங்களை ஒரு அட்டையிலே பிரிண்ட் பண்ணி சபையிலேயே கொடுத்து விட்டோம். வாராவாரம் இதுபற்றிய சாட்சிகளையும் கேட்கின்றோம்.

**31. உங்களுக்கு விசுவாசம் உண்டென்றால் மாற்கு 16:17ன் படி விஷம்குடித்து அல்லது, விஷப்பாம்பை கையிலெடுத்து அதை நிரூபியுங்கள். நான் வலது கன்னத்தில் அடிக்கிறேன். இடது கன்னத்தை காட்டுங்கள் பார்க்கலாம்.**

★ அப்படி ஒரு சூழ்நிலை வந்தால் நாங்கள் அப்படி செய்யத் தயார். வீண் வாதத்திற்காக செய்வதல்ல அது. இயேசுவை பிசாசு சோதித்த போது, பிசாசின் இப்படிப்பட்டதான வீண்வாதத்திற்கு அவர், செயல் வடிவம் காட்டவில்லை என்பதை உணர வேண்டும். (மத். 4:2-10) மேலும் என்னை வலது கன்னத்தில் அடிக்கிறேன் என்கிறீர்கள். உங்களால் அடிக்கவே முடியாது. நீங்கள் இடதுகை உபயோகிப்பாளராக இல்லாதிருந்தால். நீங்கள் வலது கன்னத்தில் அடித்தால் தானே நாங்கள் காட்டுவதற்கு.

**32. கிறிஸ்துவும், தீமோத்தேயும் விருத்தசேதனம் செய்யப்பட்டனர். அது கிறிஸ்தவர்களுக்கு தேவையில்லை என்று எப்படிச் சொல்லலாம்?**

★ இயேசுகிறிஸ்து நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்ட பழைய ஏற்பாட்டில் இருந்ததால் விருத்தசேதனம் செய்யப்பட்டார். புதிய ஏற்பாட்டில், உலகெங்கிலுமுள்ள பலதரப்பட்ட கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம் உள்ளவர்களுக்கு அது கட்டாயமில்லை. (1 கொரி. 7:19; கலா 6:15) தேவையுமில்லை. ஆதி அப்போஸ்தல கால யூத மக்கள், விருத்தசேதனம் செய்தால் தான் "தேவஜனம்" என்று நம்பியிருந்த காலகட்டம். அப்படியாய் விருத்தசேதனம் செய்தவர்கள் சொல்கிற சத்தியத்தையே கேட்க மனதில்லாமல் இருந்தனர். அந்த நேரத்தில் கிரேக்கனுக்குப் பிறந்த தீமோத்தேயு ஊழியனாக வந்தபோது, அவன் தாய் யூதஸ்திரியாய் இருந்ததால், விருத்ததேசனம் பண்ணிக் கொண்டு, போதனை செய்தால், இஸ்ரேலர்கள் ஏற்பார்கள் என்றெண்ணி, அவனுக்கு

விருத்தசேதனம் பண்ணப்பட்டது. மற்றப்படி விருத்தசேதனம் பண்ணுவதும் பாவமல்ல; பண்ணாதிருப்பதும் பாவமல்ல; இருதய விருத்தசேதனமே தேவன் என்றென்றும் விரும்புவது. (உபா. 10:16, 30; 6, எரே. 4:4, 6; 10:9: 26:1 பேதுரு 3:15).

**33. உங்கள் வேதம் மனிதர்களால் எழுதப்பட்டது; பரலோகிலிருந்து எப்படி இறங்கி வந்திருக்கும்?**

★ எங்கள் வேதம், பரலோகிலிருந்து இறங்கிவரவுமில்லை; ஏறிப்போகவுமில்லை. தேவ மனிதர்களால்தான், ஆவியானவரின் உந்துதலின்படி எழுதப்பட்டது. (2 தீமோ. 3:16). முஸ்லீம்கள் வைத்திருக்கும் குரானும், அல்லாவால் உந்தப்பட்டு, மனிதர்களால் தான் எழுதப்பட்டது. அல்லாவே எழுதிக் கொடுக்கவில்லை.

**34. எங்களுடைய வழி, விசாலமான, எளிதான வழி, ஆனால் உங்களுடைய வழியோ இடுக்கமான, கடினமான வழி.**

★ இடுக்கமான வழி என்றால், கடினமான - கஷ்டமான வழி என்று அர்த்தமில்லை. Not "Straight" but "Narrow". அதாவது சிறிய வழி. ஏன் சிறிய வழி? உலகில் உள்ள மிகச் சிலர் தான் இந்த வழியாய் போவதால் அது சிறிதாயிருக்கிறது. இது சிறியதாய் இருந்தாலும், மத்.7:12, 13ல் சொன்னபடி, செய்யும் அத்தனை பேருக்கும், ஈசியாய், சுமூகமாய் இந்த வழி இருக்கும். இதனால் தான் இயேசு மத்.11:28 - 30ல் சொன்னார்: "இயேசு தரும் நுகம் மெதுவானது; சுமை இலகுவானது." இந்த நுகமும், சுமையும் இன்னதென்று புரிந்து கொள்ளாதவர்களுக்கு, இது இடுக்கமான வழியாகத்தான் தோன்றும், இயேசுவின் இலகுவான - ஈசியான - சுமூகமான இனிய வழியை கண்டு பிடியுங்கள். அதுவே பரலோகத்திற்கு கொண்டு செல்லும் வாசல்.

**35. "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர்காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்."** (ஏசாயா 53:5). **இந்த வசனம் முகமதுவின் தியாகப்பாடுகளை குறிக்கிறது. இது இயேசுவைப் பற்றியது அல்ல.**

★ அப்படியானால் முகமது.

1. தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமானாக்குகிறாரா? (ஏசாயா 53:11)

2. அவர்களுடைய அக்கிரமங்களை தாமே சுமந்து கொண்டாரா? (ஏசாயா 53:11)

3. நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தாரா? (ஏசாயா 53:4 ie griefs and sorrows. அதாவது பலவீனங்களையும், நோய்களையும் - infirmities & sickness.

4. எல்லோருடைய பாவத்தையும் சுமந்து தீர்த்து, மீட்டாரா? (ஏசாயா 53:12)

இல்லை.... இல்லவே இல்லை...

"அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின் மேல் சுமந்தார்." (1 பேதுரு 2:24) எனவே ஏசாயா 53 முழுவதும் இயேசுவைப் பற்றியதே.

இந்த prophecy தீர்க்கதரிசனம் இறந்த காலத்தில் இருப்பதால், ஏசாயாவுக்கு முன் வாழ்ந்த வரைப் பற்றியது என்று ஒரு சில முஸ்லீம்கள் கூறுகிறார்கள். அப்படியானால் அவர் யார்? மேலே சொல்லப்பட்டபடி அவர் செய்தாரா? தீர்க்கதரிசனம், எந்த Tense லும் எழுதலாம். அதற்கு வரைமுறை இல்லை. இது குறித்து ஏசாயா 7:14; 9 : 6 & சங். 2:7 with அப்.13 : 32, 33 போன்றவைகளை வாசியுங்கள்.

**36. யாக்கோபின் ஆண்குறியின் மேல் தேவன் தொட்டாராம் (ஆதி. 32:25) ஆபிரகாமின் ஆண் குறியின் மேல் வேலைக்காரன் தொட்டானாம். (ஆதி.24:4,9). இப்படி எழுதி இருப்பதா வேதம்?**

★ ஆண் குறி என்பது சந்ததி பெருக்கத்திற்கான மூலநாடியாய் தேவன் படைத்திருக்கிறார். எனவே பழங்காலத்தில், இதற்கு ஒரு மிகுந்த மரியாதையும், மகிமையும் இருந்தது. இதனால் தான், இந்துக்களின் கோவில்களில், சிவலிங்கம் என்று வைத்து முக்கியப்படுத்தப்படுகிறது.

பழங்கால பாரம்பரியப்படி, இப்படியாய் ஆண் குறியின்மேல் வைத்து உறுதிப்படுத்துவது, பரிசுத்தமாயும், வாக்குக் கொடுப்பதாயும் எண்ணப்பட்டது. அவர்களுக்கு தேவன் பேரில், வானத்தின் பேரில், தேவாலயத்தின் பேரில் சத்தியம் பண்ணலாமென்றும், இந்த ஆண்குறியின் சிருஷ்டிகரை முக்கியப்படுத்தலாமென்றும் வெளிப்பாடில்லை. அது நியாயப்பிரமாணத்தில் வெளிப்படுத்தப்பட்டது (லேவி 19:12; எண்.30:2; உபா. 23:21-23) அப்படியிருந்தும் அவர்கள் பொய்யாணை இடுவதால், இப்படியும் செய்ய வேண்டாம் என்றும்,

உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள் என்றும் இயேசு கூறினார். (மத். 5:33 - 37, மத். 23:16-22)

பரிசுத்தமானது என்று எண்ணிச் செய்யப்பட்ட இந்த பழங்கால காரியம், ஆண் குறிமூலமாய் வரக்கூடிய - வந்த - பரம்பரைக்கும் அந்த ஒப்பந்தம் பொருந்தும்படி செய்யப்பட்டது. அப்படித்தான் ஆபிரகாமிடம், வேலைக்காரன் தொட்டான். ஆனால், யாக்கோபிடம் தேவன், அப்படி தொடாமல், தொடைச் சந்தை தொட்டு, சுளுக்கு உண்டாக்கி, அவனை அசையவிடாமல் செய்து, அங்கிருந்து போய்விட முனைந்தார். அவர் மனித நிலையில் தான் போராடிக் கொண்டிருந்தார் என்பது புரிய வேண்டும். மேலும், தொடைச் சந்து நரம்பு "கட்" ஆனால். அசைய, அமர, ஒன்றும் செய்ய முடியாது. தேவ கிருபையால் யாக்கோபுக்கு சுளுக்கு தான் உண்டானது. இப்படியாய் நரம்பை "கட்"பண்ணி விடுவது எதிரிகளை நசுக்க செய்யப் படுவதாகும். இதில் ஒன்றும் செக்ஸ் இல்லை.

அன்பைக் காட்ட கைகொடுத்தல் - அது ஒரு கலாச்சாரம்; கிஸ் - அது ஒரு கலாச்சாரம்; வணக்கம் செய்தல் - அது ஒரு கலாச்சாரம்; கட்டிப்பிடித்தல் - அது ஒரு கலாச்சாரம்; காலில் விழுதல் - அது ஒரு கலாச்சாரம்; இரண்டு பேரின் விரல் நுனியிலிருந்து இரத்தச் சொட்டுகளை ஒயினில் கலந்து சாப்பிடுதல் - அது ஒரு கலாச்சாரம்; இரத்தம் சிந்துததல் - அது ஒரு கலாச்சாரம். அப்படியே இதுவும் அந்தக் கால கலாச்சாரம். நம்வேதம் அந்தந்தக் காலக்கட்டத்திற்கேற்ப எதையும் மறைப்பதோ, மறுப்பதோ கிடையாது.

**37. ஏசா 60:22 சின்னவன் ஈசாக்கு ஆயிரமாய் குறைவான்; சிறியவனாக்கப்பட்ட இஸ்மவேல் பலத்த ஜாதியாவான்.**

★ தவறு... இது முஸ்லீம்களின் சொந்த கற்பனை... ஏசாயா 60-ம் அதிகாரம் முழுவதும் 1000 வருட அரசாட்சியில் நடப்பதாகும். இதிலே சின்னவன், சிறிய - சிறுமந்தை இஸ்ரேல் சந்ததியையும், "சிறியவன்", சிறிய இஸ்ரேல் தேசத்தையும் குறிக்கிறது. இந்த வசனத்தை ஆங்கிலத்தில் வாசித்தால் உண்மை புலப்படும்.

"A little one shall become a thousand and a small one strong nation; I, the LORD will faster it in his time"

இங்கே ஆயிரமாய் குறைவான் என்றில்லை; ஆயிரமாய் பெருகுவான் என்றுள்ளது. "in his time" என்பது இஸ்ரேலைத்தான் குறிக்கிறதே ஒழிய, இரண்டு சமுதாயத்தைக் குறிக்கவில்லை.

**38. ஏசாயா 32:1-4ல் சொல்லப்பட்டது முகமதுவின் ஆட்சி; அநீதி மத்தியில் நீதியாய் நடக்கும் ஆட்சியாகும்.**

★ தவறு. இது 2ம் வருகையில் நடக்கும் இயேசு ராஜாவின் ஆயிர வருட ஆட்சியாகும். ஏசாயா 32 முதல் 35ம் அதிகாரம் வரை இந்த ஆட்சி பற்றிய தீர்க்கதரிசனம் தான். இதிலே இஸ்ரேல் மக்களையும், பகுதிகளையும் எருசலேமையும் சொல்லியிருக்கும் போது, முகமது எப்போது இஸ்ரேல் தேசத்தை ஆண்டார்? சரித்திர ஆதாரம் உண்டா? தற்போது அங்கே மட்டுமல்ல.... உலகமெங்கும் அநீதி ஆட்சி; அப்போதோ இயேசுவின் நீதி ஆட்சி.

**39. சங்.110 :4 - மெல்கிசேதேக், முகமதுக்கு ஒப்புமை. அந்த முறைமை முகமதுக்கு வந்துவிட்டது. ஆதி.14:18-20ன்படி மெல்கிசேதேக் இஸ்ரவேலனல்லவே!**

★ தவறு. மெல்கிசேதேக் இயேசுவுக்கு ஒப்புமையானவர் என்று எபி.7:20, 21 சொல்கிறது. சங்.110:4. தேவன் - கர்த்தர், தனது வலது பாரிசத்திலிருக்கும், உயிர்த்தெழுந்த ஆண்டவரை நோக்கி சொல்லப்பட்ட வசனம் (see சங்.110 110:1,5 with 1 யோ.2:1) முகமது தேவனின் வலது பாரிசத்தில் எப்போது அமர்ந்தார்? அவர் மீண்டும் பூமிக்கு வந்து ஆளுகை செய்வார் என்று குரானில் வசனம் உள்ளதா? சிந்தியுங்கள்.

இந்த மெல்கிசேதேக்,நியாயப்பிரமாணம் கொடுக்கப்படாத காலத்தில், உன்னதமான நம் தேவனின் ஆசாரியன் என்பதால், அவர் இஸ்ரேலருமல்ல; லேவி கோத்திரமுமல்ல என்று சொன்னாலும், அவரை தேவன் சாலேமில் ராஜாவாகவும், ஆசாரியனாகவும் அங்கீகரித்திருக்கிறார். அப்படியே தான், இயேசுவும், மோசேயின் பிரமாணம் நிறைவேற்றப்பட்டு முடிவுக்கு வந்த பின்னர், (எபேசியர் 2:14,15; ரோமர் 10:4 : மத் 5:17,18 ; ரோமர் 7) யூதா கோத்திர இயேசுவும், பிரதான ஆசாரியனாக நம் தேவனால் அங்கீகரிக்கப் பட்டார். சங். 110:4ன் படி மெல்கிசேதேக் முறைமை இயேசுவுக்கு சொல்லப்பட்டது.

**40. எசே.21:25-27ல் சொல்லப்பட்ட உரிமைக்காரர் முகமது தான். யூத ஆட்சி மற்றும் இஸ்ரேல் தேசமெல்லாம் முகமதுக்குத்தான் - முஸ்லீம்களுக்குத் தான் வந்தது. ஆசாரியத்துவமும் அவர்களுக்கே தான்.**

"இஸ்ரவேலை ஆளுகிற அவபக்தியுள்ள துன்மார்க்க அதிபதியே, அக்கிரமத்துக்கு முடிவு வருங்காலத்தில் உன் நாள் வந்தது. பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப் போடு. அது இனி முன்போலிராது; தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரரானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்."

★ இந்த தீர்க்கதரிசனம், தேவனால் அங்கீகாரம் பெற்ற யூதாவின் கடைசி ராஜா, யோகாக்கீம்முக்கு பின்னானது. அந்த தீர்க்கதரிசனம் நேபுகாத் நேச்சாரால் நியமிக்கப்பட்ட யோயாக்கீனுடைய சித்தப்பா சிதேக்கியா ராஜா பற்றியது. தீர்க்கதரிசனப்படியே அவன் ராஜரீகம் பிடுங்கப்பட்டது. தீர்க்கதரிசனப்படி, உரிமைக்காரரானவர் வருமட்டும், இஸ்ரேலில் தேவனால் நடத்தும் ஆட்சி இல்லாதே போனது. இன்று வரை தாவீதின் வம்சராஜா யாரும் ஆளவே இல்லை. முஸ்லீம்கள் சொல்லுகிறபடி உரிமைக்காரரானவர் முகமது என்றால் அவர் யூதர்களை ஆண்டாரா? அவர்தான் கி.பி. 622 லேயே மரித்துப் போய் விட்டாரே, அதன்பின் இஸ்லாமியர்கள் அதை ஆண்டாலும், பிரிட்டிஷார் வந்தபின் அவர்கள் எங்கே போயினர்? இன்றைய தேதியிலும் முஸ்லீம்களா ஆளுகிறார்கள்?

உரிமைக்காரரே வந்து ஆளப்போகிறார்: (லூக்கா 1:32, 33; எரே.23:5, ஏசாயா 9:6,7; 2 சாமு 7:14-17; அப். 15:16, 17) இது 1000 வருட ஆட்சியில் நடக்கும். தாவீதின் ராஜ்யம், தேவனால் தாவீதின் சந்ததிக்குத் தானே கிடைக்கும். முகமது தாவீதின் சந்ததி அல்லவே. மற்றப்படி, இந்த தீர்க்கதரிசன வசனம், ராஜரீகம் பற்றித்தானே ஒழிய, ஆசாரியத்துவம் பற்றியது அல்ல. முகமது இஸ்ரேலருக்கு ஆசாரியராக இருந்ததாக சரித்திரமே இல்லை.

**41. இயேசு இஸ்ரேலருக்கு மட்டுமே அனுப்பப்பட்டார்.**

★ இயேசு மனிதனாய் வந்த போது, பிரதானமாய் இஸ்ரேலருக்காகத் தான் வந்தார். அவர்கள், அவரை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என முன்பே அறிந்திருந்ததால் இயேசுவின் முதல் வருகை உலகம் முழுவதுக்கும் என்று தீர்க்கதரிசனமாக யோ.3 : 16ல் சொல்லப்பட்டது. இயேசுவும் இதே அடிப்படையில்தான் சீஷர்களுக்கு கட்டளை கொடுத்தார். (மத். 28 : 18-20 ; அப்.1:8) அப்போஸ்தல நடபடிகளும் உலகமெங்கும் இருந்தன.

**42. இயேசு லேவியரா? யூதரா?**

★ அவர் யூத வம்சத்தில் பிறந்த தாவீதின் ராஜரீக பரம்பரை (மத். 1:1-16; லூக்கா 3:23-38).

**43. பவுல் யூதன் தான்.**

★ இல்லை; பவுல் பெஞ்சமின் கோத்திரத்தை சார்ந்தவன். (பிலிப்பியர் 3:5) யூதாவும் பெஞ்சமினும் இணைந்த யூத ராஜ்யத்தின் மேல், பாபிலோனியர் படையெடுத்த காலகட்டத்தில், இஸ்ரேல் ராஜ்யம் அசீரியரால் சின்னாபின்னமாக்கப்பட்டதினிமித்தம் அங்கிருந்த 10 கோத்திரத்தாரும் இவர்களோடு கலந்திருந்தனர். ஆனாலும் அந்த மக்கள் தொகையில், யூத வம்சத்தாரே அதிகமாய் இருந்ததால் அவர்களெல்லாரும் யூதர்கள் என்று அழைக்கப்பட்டனர். இயேசுவின் காலத்தில் கூட அப்படித்தான் அழைக்கப்பட்டனர். எனவே அந்த கருத்தில் பவுலை யூதர் என்று சொல்லவும் வாய்ப்புண்டு. அந்த வகையில் தான் அப்.22 : 3ல் சொல்லப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வாழும் பூர்வீகரான கலைஞர், வைகோ, விஜயகாந்த், ஜெயலலிதா போன்றோர் தங்களை தமிழர் என்று சொல்வது போல.

**44. ஏசாயா 45 : 13ல் வருவது முகமதுவே.**

★ இல்லை. செரூபாபேல், யோசுவா, எஸ்றா, நெகேமியா மூலமாக, இஸ்ரரேலர் தேவாலயம் திரும்பக்கட்ட உதவி செய்த பெர்சிய சாம்ராஜ்ய ராஜா கோரேஸ் தான் இதில் சொல்லப்பட்டவர். இந்த கோரேஸ், இந்தக் காரியத்துக்காக தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவன். ஏசாயா 45:1; 44:28 போன்ற வசனங்களை வாசியுங்கள். "கர்த்தராகிய நான் அபிஷேகம் பண்ணின கோரேசுக்கு..." (ஏசாயா 45:1).

"... அவன் என் நகரத்தைக் கட்டி, சிறைப்பட்டுப் போன என்னுடையவர்களை கிரயமில்லாமலும், பரிதானமில்லாமலும் விடுதலையாக்குவான்.." (ஏசாயா 45 : 13).

எந்த இஸ்ரேலரின் நகரத்தை முகமது கட்டினார்? எந்த இஸ்ரேலை விடுதலை பண்ணினார்? 6ம் நூற்றாண்டில் வந்த முகமதுக்கும் இந்த தீர்க்கதரிசன வசனத்திற்கும் தொடர்பே இல்லை.

**45. ஏசாயா 49:14, 15 ஐ வைத்து "தாய் தன் பாலகனையே மறப்பினும் நான் மறவேன் என்று சொன்னதால்" என்று வசனத்தை தவறாய் கிறிஸ்தவர்கள் பாடலாமா? அதிலே தாய்**

**மறப்பாள் என்றில்லை; "அவர்கள்" - அதாவது இஸ்ரேலர்கள் மறந்தாலும்" என்று தான் உள்ளது.**

★ என் தகப்பனும் தாயும் என்னைக் கை விட்டாலும் கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்ளுவார். (சங். 27 :10) என்ற வசனத்தை சார்ந்த பாடல் என்று அந்தப் பாடலை எடுத்துக் கொள்ளக் கூடாதா? குற்றம் கண்டுபிடிப்பது வேத வசனத்தில் முடிந்தால் கண்டு பிடியுங்கள்; கிறிஸ்தவர்களின் செயல்பாட்டில் கண்டுபிடிப்பது தேவையில்லாதது.

**46. மெல்கிசேதேக் இஸ்ரேலர் அல்லாதவன்; ஆனாலும் அவன் தேவனின் ஆசாரியன். அதே போல, இஸ்ரேலர் அல்லாத, இஸ்மவேலர் வழி வந்த முகமதுக்கு ஆசாரியத்துவம் மாற்றப்பட்டது.**

★ அப்படியானால், அவர் எந்த எருசலேம் தேவாலயத்தில் இஸ்ரேலருக்கு ஆசாரியராய் கி.பி. 6ம் நூற்றாண்டில் இருந்தார்? எருசலேம் ஆலயம் தான் கி.பி. 70ல் அழிக்கப்பட்டுவிட்டதே. ஏதாவது சரித்திர மற்றும் வசன ஆதாரங்கள் ஏதும் உள்ளனவா?

எபி. 7 ஐ வாசியுங்கள், மெல்கிசேதேக், ஆபிரகாம் காலத்தான், இஸ்ரவேல் சமுதாயம் உருவானதே ஆபிரகாமின் பேரன் யாக்கோபின் மூலம் தான். நியாயப்பிரமாண - லேவி கோத்திர - ஆசாரியத்துவம் மாற்றப்பட்டு, மெல்கிசேதேக் முறையின்படி யூதாகோத்திரத்தை சேர்ந்த இயேசு, பிரதான ஆசாரியரானார். அவர் மூலமாய் நாமெல்லாரும் ஆசாரியர்கள் ஆகிறோம். (1 பேதுரு 2:9; வெளி 1:6) மற்றப்படி இஸ்மவேல் கோத்திரத்திற்கு என்று ஆசாரியத்துவம் மாற்றப்படவில்லை. ஒருவேளை முகமது, ஆசாரியர் என்றால், அவர் இயேசுவை ஆண்டவரும் இரட்சகருமாய் ஏற்றுக் கொண்டகிறிஸ்தவராய் இருந்திருக்க வேண்டும். சரிதானே.

**47. விருந்தசேதனம் வேண்டாமென்று இயேசு சொன்னாரா? பின் ஏன், விருத்தசேதனம் வேண்டாமென்று பவுல் சொல்வதை ஏற்று கிறிஸ்தவர்கள் பின்பற்றுகிறார்கள்?**

★ தேவன் ஆபிரகாமோடு பண்ணிய இரண்டாவது உடன்படிக்கை - சந்ததிப் பெருக்கம் பற்றிய உடன்படிக்கை, சந்ததிப் பெருக்கத்திற்கு மூலமான ஆண்குறியின் விருத்தசேதனத்தால் பண்ணப்பட்டது. ஏன்? விருத்தசேதனம் என்பது சுகாதாரத்திற்கடுத்தது. . ஆபிரகாம் காலத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டது. ஆபிரகாம் வழிவரும் இஸ்ரேல் சந்ததி சுகாதாரமாய் இருக்கவும். அப்படிப்பட்டவர்கள் தான் தேவபிள்ளைகள்

என்பதை உலகிற்கு நிலைநிறுத்திக் காட்டவும் செய்யப்பட்டது. அதுவும் ஆபிரகாமின் பேரன் மூலம் வரப்போகும் இஸ்ரேல் சந்ததிக்கு, தாத்தா காலத்திலிருந்தே சுகாதார அடையாளம் போடப்பட்டிருக்கிறது. இது, நியாயப்பிரமாணத்திலும் இணைக்கப்பட்டது. இயேசுவுக்குப் பின் உலகமெங்கும் சத்தியம் பரவ வேண்டியிருந்ததால், பலதரப்பட்ட கலாச்சாரங்கள், பண்பாடுகள், நாகரிகம் மத்தியில் விருத்தசேதனம் ஒருபிரச்சனையாய் வந்தது. எனவே பவுல், பேதுரு, யாக்கோபு போன்றோர் எருசலேமில் ஒருமித்துக் கூடி எடுத்த முடிவுதான் "விருத்தசேதனத்தை கட்டாயப்படுத்தக் கூடாது" என்பதாகும். (அப். 15) இதைத்தான் பவுல். 1 கொரி, 7:19, கலா.6:15ல் சொல்கிறான். மற்றப்படி விருத்தசேதனம் உள்ளவர்களும் சுகாதாரக் கேடுகளில் ஈடுபட வாய்ப்புண்டே, எனவே தான் ஆதியிலிருந்தே தேவன், இருதய விருத்தசேதனமே தேவை; அது தான் இம்மையிலும் ஆசீர்வாதத்தைத் தரும்; மறுமையிலும் நித்திய ஜீவனைத் தரும், என்பதை வெளிப்படுத்தி இருக்கிறார். (எரே. 9:26; 4:4; 6:10; லேவி. 26:41; எசே. 44:7; உபா. 10:16; 30:6; 1 பேதுரு 3:15) எனவே விருத்தசேதனம் கிறிஸ்தவர்களுக்கு கட்டாயமில்லை என்பது பவுலின் சொந்தக் கருத்தல்ல; தேவசித்தம்.

**48. மோசேயின் ஊழியம் ஒழிந்துபோகிற ஊழியம் என்று பவுல் கூறுவது, அந்த ஊழியத்தை ஆரம்பித்த தேவனுக்கு விரோதமானதல்லவா. (2 கொரி, 3: 7,8)**

★ ஆதாம் முதல் மோசே வரை நியாயப்பிரமாணம் இல்லை. மோசேக்கு கொடுக்கப்பட்ட பிரமாணம் இஸ்ரேல் மக்களுக்குத் தான்; அதுவும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத்தான். (கலா 3: 24, 25; 4:21 ; 5:1; ரோமர் 7: 1 - 4) இயேசு அந்த நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றியதால், அது ஒழிந்து போயிற்று (மத். 5:17, 18; ரோமர் 10:4; கொலோ. 2:16, 17; எபே. 2:14, 15) மோசேயின் ஊழியம் இருக்கும் வரை அது ஆவிக்குரிய ஊழியம் என்று தான் பவுல் கூறுகிறார். அதற்குப் பின், மனிதனாய் வந்த இயேசு ஆரம்பித்த கிறிஸ்தவ ஊழியம் தான் நிலையானது; அதன் படி தான் செயல்பட வேண்டும். (மத்.16 : 18), மத். 28:18-20; ரோமர் 6:17; யூதா 17) இதைத்தான் பவுல் கூறுகிறான்.

**49. பைபிளில் பவுலின் சரித்திரமே ஒருமுடிவு காணாமல் இருக்கிறது.**

★ பைபிள், இயேசுவைப் பற்றி உலகிற்கு ஆதியும் அந்தமாய் சொல்லத் தானே ஒழிய, மற்றவர்களின் சரித்திரத்தை முழுமையாய் சொல்ல

இல்லை. வேதத்தில் எத்தனையோ பேரின் சரித்திரம் ஒரு முடிவு காணாமல் இருக்கிறது. ஆனாலும், 2 தீமோ. 4:6-8 ஐ வாசித்தால் பவுலின் முடிவு தெரிந்து விடும்.

**50. 2 கொரி. 12:11ன் படி, பவுல் மகாபிரதான அப்போஸ்தலர்களை எல்லாம் ஓரங்கட்டுகிறார்.**

★ அல்ல... அல்ல... தான் அவர்களுக்கு சமமாயிருப்பதாய்த் தான் சொல்கின்றார். 1 கொரி. 15:9; கலா. 1:18; 2:7; அப்.15 : 2 போன்ற பல வசனங்களை வாசித்தால், அவர் அப்போஸ்தலர்களுக்கு தரும் மரியாதை புரியும். 2 கொரி, 12 : 11ல், மகாபிரதான அப்போஸ் தலருக்கும், நான் எவ்வளவும் குறைந்தவனில்லை என்று சபையாரே மெச்ச வேண்டும் என்று தான் தன்னைப் பற்றி தன்னிலை விளக்கம் பவுல் தருகிறார். மற்றப்படி வேறெதுவும் இல்லை.

**51. பவுல் மரியாளை வைத்தே கிறிஸ்தவ மதத்தை ஸ்தாபித்தார்.**

★ இது சுத்தப் பொய். ஆதாரம் ஏதுமில்லை, அத்தேனே பட்டண புறஜாதி ஞானிகள், இவன் அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாக காண்கிறது என்று (அப்.17:18) சொன்னதற்குக் கூட ஆதாரமில்லாத போது, இயேசுவின் தாய் மரியாளை வைத்து மதம் ஸ்தாபித்தார் என்பது பொய். கிறிஸ்தவ மதத்தை ஸ்தாபித்தவர் இயேசு (மத்.16:18; எபே. 2:14,15) வளர்த்தவர்கள் பவுல், பேதுரு, யோவான், யாக்கோபு போன்றோர். இன்று நாம்.

**52. பவுல் ரோ, 2 : 16ல் சொன்னபடி, தன் சுவிசேஷத்தைத் தான் போதித்தார். அது கிறிஸ்துவின் சுவிசேஷமல்ல.**

★ பவுல், தான் போதித்த சுவிசேஷத்தைத் தான் சுவிசேஷம் என்கிறார். அவர் போதித்தது என்ன சுவிசேஷம்? அது 1 கொரி. 15:1-5ல் உள்ளது தானே. அது தானே இயேசுவைப் பற்றிய நற்செய்தி (2 தீமோ. 2:8,9)

**53. தேவனுடைய ராஜ்யம் சம்பந்தப்பட்ட இயேசுவின் வேதத்தை சுவிசேஷமாய் சொல்லாமல் சிலுவையை வைத்தே சொல்லுவது சரியா?**

★ தேவனுடைய ராஜ்யம் பற்றித்தான் இயேசு போதிக்க ஆரம்பித்தார் (மத்.4:17) அவரின் போதனையை இஸ்ரேலர் ஏற்றிருந்தால், மல்கியா 4:5ல் சொன்னபடி வருகிறவனாகிய எலியா, யோவான் ஸ்நானனாயிருப்பான்; இஸ்ரேலருக்கும் ராஜ்யமும் ஆளுகையும் கிடைத்திருக்கும். ஆனால் அவர்களோ morally as well as officially rejected Jesus. (மத். 11:14) எனவே அவர் அது முதல் தன் சிலுவை

மரணம், உயிர்த்தெழுதல் சம்பந்தப்பட்ட சுவிசேஷத்தையே போதிக்க தொடங்கினார். (மத். 16:21) தான் பரலோகம் போகும் போது கூட இயேசு மரித்தார் - உயிர்த்தார் - வருவார் என்று சாட்சியாக உலகமெங்கும் போய் ஆத்ம ஆதாயம் செய்ய கட்டளையிட்டார். (அப்.1; 8; மத். 28 - 20) இந்த நற்செய்தி - சிலுவையை பற்றிய உபதேசம் (1கொரி. 1:18) இயேசு வரும் வரை தொடரும். அதன்பின் அந்தி கிறிஸ்துவின் காலத்தில், தேவனுடைய ராஜ்யம் இஸ்ரேலருக்கு பிரசங்கிக்கப்படும் (வெளி. 14). இப்போது கிறிஸ்தவர்கள் சொல்லும் உபதேசம். ஆவிக்குரிய நிழலாட்டமான - ராஜ்யத்தின் சுவிசேஷம் சம்பந்தப்பட்டது தான்.

**54. சங். 16 : 10ல் தாவீது, தான் அழிவை காண்பதில்லை என்று சொல்லியிருக்கிறான். தாவீதின் பிதாக்கள் எல்லாம், மத். 22:31, 32ன் படி அழிவை காணவில்லை என்று இயேசுவும் சொல்கிறார். பவுலோ, இயேசு மட்டும் தான் அழிவை காணவில்லை; மற்றவர்கள் அழிவைக் கண்டார்கள் என்கிறானே (அப். 13:36) அது தவறு தானே.**

★ இங்கே சொல்லப்படுகிற அழிவெல்லாம், சரீரம் சம்பந்தப்பட்ட அழிவு. சங்.16:10ஐ எடுத்துக் காட்டித்தான் பேதுருவே, அப். 2:3-ல் இயேசுவைப் பற்றி சொல்கிறான். சங்.16:10ல் தாவீது சொல்லியது தன்னைப் பற்றியது அல்ல; அது இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசனம். மத். 22 ; 31, 32ல் இயேசு கூறியது, மரித்த பிதாக்கள், தங்கள் ஆவி - ஆத்மாவோடு உயிரோடிக்கிறார்கள் என்பது தானே ஒழிய, சரீரம், அழியாமல் இருக்கிறார்கள் என்றல்ல. ஆனால் பவுல் சொல்வதோ, தாவீது போன்ற பிதாக்கள் சரீரத்தில் மண்ணோடு மண்ணாய்ப் போய் விட்டார்கள்; இயேசு மட்டுமே சரீரம் அழியாமல் உயிர்த்தெழுந்தார் என்பது தான். இது தானே வேத சத்தியம்.

**55. 1 கொரி 8:6ன் படி இரண்டு இறைவனா?**

★ இல்லை. ஒரே இறைவன் தான். அவரைத்தான், தாய் - தந்தை அன்பு நிறைந்த பிதா என்று வேதம் அழைக்கிறது. அவரிலிருந்து பூமிக்கு வந்தவர் தான் இயேசு (யோவான் 1:1, 14) இவர் மாம்சத்தில் வந்த வார்த்தையாகிய தேவன் (1தீமோ, 3:16). ஒரு சூரியனிலிருந்து பூமிக்கு ஒளிவந்தது போல வந்தார். ஒளி பூமியில் வீசினாலும், சூரியனிலும் ஒளி உண்டல்லவா! அப்படித்தான் பிதாவாகிய தேவனின் நிலையும்; அது ஒரு அட்சயப் பாத்திரம் போல, குறையவே குறையாது. 5 அப்பம்

2 மீன் போல; ஆமென். பிதாவாகிய ஒரு தங்கக்கட்டியிலிருந்து ஒரு துகள், இயேசு என்ற பெயரில் மனிதனாக வந்தாலும், தங்கத்தின் தரம் குறையாது. வந்த தங்கத்துகள், தங்கம் தான்.

"பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு; அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது. அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்."

இயேசு - குமாரன் - கிறிஸ்து என்று வெளிப்படுத்தப்பட்ட பிறகுதான், இரண்டு இறைவனா என்ற கேள்வியே எழுந்தது. பரலோகிலேயே, இரத்தம் சிந்த ஒப்புக்கொடுத்த அன்றே, வார்த்தையாகிய தேவன், குமாரன் என்றழைக்கப்பட்டதை நாம் உணர வேண்டும். இந்த இரட்சிப்பின் பணி முழுமையாய் இந்த பூமியில் முடிந்ததும், குமாரனாகிய இயேசு கிறிஸ்து பழைய நிலையில் - ஓரிறைவன் நிலையில் - வெளிப்படையாக இணைந்து விடுவார். (1 கொரி. 15:24; வெளி. 21:22; 22:1) அப்போது தேவனும் ஆட்டுக் குட்டியானவரும் ஒன்றே; ஒரே சிங்காசனமே.

**56. பரிசுத்த ஆவி என்பது தேவனிடத்திலிருந்து புறப்படும் வார்த்தைகளாகும். "நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது." (யோவான் 6:63)**

★ தவறு. ஆவி என்றால் தேவ வல்லமை, மகிமை (see மல். 2:15). ஆவியானவர் என்றால் இயேசு சொன்ன வார்த்தைகளை சொல்லி, நம்மை வழிநடத்த, தேவனிடமிருந்து வந்த இரண்டாவது தேற்றரவாளனாகிய தேவன் (யோவான் 14:16, 26; யோவான் 16:13). சில இடங்களில் தமிழ் மொழி பெயர்ப்பில், ஆவி, ஆவியானவர் என்பது மாறி மொழி பெயர்க்கப்பட்டிருக்கும். ஆக பரிசுத்த ஆவி என்பது தேவ வார்த்தை அல்ல; இயேசுவே வார்த்தை (யோவான் 1:1). "என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்." (யோவான் 14:26).

**57. அப். 2:16, 17ல் சொன்னது போல, யோவேலில் "கடைசி நாட்கள்" என்று இல்லை; "அந்நாட்களில்" என்று தான் உள்ளது. அப்படியானால் முதலாம் நூற்றாண்டு தான் கடைசி நாட்களா?**

★ யோவேல் 2:28-32 முழுவதும் வாசித்தால், அது கடைசி நாட்கள் என்றே புரியும். அந்நாட்கள் என்றால், எந்நாட்கள்? அதற்கு முன்னுள்ள வசனமே அதற்கு விடையாகும். இந்த தீர்க்கதரிசனம் இஸ்ரேலருக்கு, அந்தி கிறிஸ்துவின் கடைசி நாட்களில் ஆரம்பமாகும். ஆனால், இஸ்ரேலருக்குண்டான ஆசீர்வாதமும், வாக்குத்தத்தமும் இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு உண்டு என்பதால், (ஆதி. 12:3, கலா.3:7-14) சபை ஆரம்ப முதல் இது சபைக்குள் நடப்பது என பேதுரு சொல்கிறான் (அப். 2:39). எனவே முதலாம் நூற்றாண்டு, சபைக்கு பின்மாரிக்காலம்; எனவே அதுமுதல் கடைசிகாலம்தான்.

**58. இயேசு எனக்காக சிலுவையில் அறையப்பட்டார் என்றாலே பரலோகம் நிச்சயம் என்பதால் இனி எதற்கு சபை, ஆராதனை, தசமபாகம், காணிக்கை?**

★ ரோமர் 4:5, எபே. 2:18; ரோமர் 10:9, 10ன்படி விசுவாசித்தால் இரட்சிப்பு; அறிக்கையிட்டால் நீதிமான். ஆனால், அதை கடைசி வரை காத்து நடந்தால் தான் பரலோகம் (மத். 24:13; 1தெச. 5:23). அதற்குத் தான் வசன விசுவாசக் கிரியை தேவை (யாக். 2:19; வெளி. 22:12). அதில், விசுவாசிகளை நடத்தத்தான் சபையும், சபை ஊழியங்களும், வேதமும் (எபேசி. 4:11-13; 2 தீமோ. 3:16, 17).

**59. பரலோகம் செல்ல இயேசுவின் பல நிபந்தனைகள் : யோ. 3:5; மத். 19:17; 7:21; 4:17; 25:32-40. இவைகளில், சிலுவையோ இயேசுவின் இரத்தத்தைப் பற்றியோ ஒன்றுமே இல்லையே ஏன்?**

★ இரட்சிக்கப்பட்டவனுக்குத் தான் பரலோகம் உண்டு என்பதை முதலில் உணர வேண்டும். ஜலமாகிய வசனத்தினால், பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு, நம்முடைய ஆவியில் பிறக்க வேண்டும் என்பது இரட்சிப்புக்கான நிபந்தனை (யோ. 3:5). see 1 பேதுரு 1:23; யாக். 1:18; 1 கொரி. 6:11; ரோமர் 10:9,10. மேலே முஸ்லீம்கள் சொல்லுகிற மற்ற வசனங்கள் எல்லாம், இரட்சிக்கப்பட்ட இஸ்ரலேருக்கு பரலோகம் செல்வதற்கான நிபந்தனைகள். சிலுவை மரணம், இயேசுவின் இரத்தம் எல்லாமே ஆரம்ப இரட்சிப்புக்கு மிகவும் தேவை (ரோமர் 10:9, 10). மேலே கேள்வியில் சொன்ன வசனங்கள் எல்லாமே இயேசுவின் இரத்தத்திற்கு அடையாளமாய் பலி செலுத்தும் விசுவாச இஸ்ரேலருக்குத்தான். மற்றப்படி அந்த காளை, வெள்ளாட்டுக்கிடா பலியை அறியாத புறஜாதியாருக்கு, நிஜமான இயேசுவின் இரத்தம் தான் ஜெயம். (1 யோ. 1:7). எனவேதான், இது இயேசுவுக்குப்பின் வந்த ஊழியர்களால் விசேஷமாய் புறஜாதிகளுக்கு போதிக்கப்பட்டது.

**60. ஏசாயா 63:16 - இஸ்மவேலர்களின் முறையீடு. இந்த இஸ்மவேலர்கள் ஏசாயா 43:21, 22-ன்படி தேவன் தனக்கென்று ஏற்படுத்திய ஜனம்.**

★ முழங்காலுக்கும், மொட்டைத்தலைக்கும் முடிச்சுப்போட முனையலாமா? ஏசாயா 63:16 என்பது கடைசி நாட்களில் மனந்திரும்பும் இஸ்ரேலர்களின் வார்த்தை. ஆபிரகாமின் தேவனையும், ஈசாக்கின் தேவனையும், யாக்கோபின் தேவனையும் மறந்து, அந்நிய தெய்வத்தோடு இணைந்துவிட்ட இஸ்ரேலர்கள் மனம் மாறிய வார்த்தை இது (ஏசாயா 1:2; 64:8). பரிசுத்தமான ஆபிரகாமின் சந்ததி முன்னிலையில், அறியப்படாதவர்களாய்ப் போனவர்களின், ஒப்புரவாகும் வார்த்தை இது. அந்த அதிகாரம் முழுவதும் வாசித்தால், இது இஸ்ரேலர்களைப் பற்றியது தான் என்று அறியலாம் (ஏசாயா 63:11, 18). ஆபிரகாம் காலம் முதல், தனித்து வாழ்ந்த இஸ்மவேலர், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஈசாக்கின் சந்ததியைப் பற்றியும், ஈசாக்கின் தேவன் பற்றியும், கிட்டத்தட்ட 600 ஆண்டுகளுக்கு மேலாக கொஞ்சம் கூட சிந்தனை - விசுவாசம் இல்லாத இஸ்மவேலர் திடீரென்று இப்படி முறையிடுவார்கள் என்று ஏசாயாவால் எழுதப்பட்டு, முகமது காலத்தில் நிறைவேறியது என்று சொன்னால் அதை எப்படி நம்புவது? அதற்கு ஆதாரம் என்ன? இந்த ஏசாயா 63:16 கடைசி நாட்களில், இயேசுவின் 2ம் வருகை கால கட்டத்தில், நடப்பதாகும். ஏசாயா 43:21, 22 எல்லாம், இஸ்ரவேலரைப் பார்த்து சொல்லப்பட்ட வார்த்தை என்று ஒரு சாதாரண மனுஷன் கூட புரிந்து கொள்வான். உலகத்திலுள்ள சகல ஜனங்களிலும் ஆதி முதல் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்த ஜாதி இஸ்ரவேலரே (உபா. 7:6; 2:21). உண்மை இப்படியிருக்க, இஸ்மவேலரைத் தான் தெரிந்து கொண்டார் என்று, இல்லாத ஒன்றை இட்டுக்கட்டி, அந்த இஸ்மவேலர் தான், ஏசாயா 63:16ல் பேசுகிறார்கள் என்று சொல்வது, உண்மைக்கு மாறானது.

**61. ஏசாயா 46:11-13 மற்றும் 41:27ல் வரும் ஊழியக்காரர் முகமது.**

★ இதற்கு ஆதாரம் ஏது? ஏசாயா 46:11-13ல் சொன்னது, இடிந்து போன எருசலேம் தேவாலயம் கட்ட உதவப் போகும் பெர்சிய கோரேஸ் ராஜா பற்றியது (ஏசாயா 45:1; 44:28). ஏசாயா 41:27ல் சொல்லப்பட்டது, ஏசாயா முதல் வரப்போகும் தேவனுடைய ஊழியக்காரர்கள் பற்றியது. இப்படிப்பட்ட ஊழியர்களைப் பற்றித்தான் ஏசாயா 52:7 உரைக்கிறது. பூர்வகாலம் முதல் பங்குபங்காவும், வகை வகையாகவும், ஊழியர்கள்

மூலமாய் இயேசு வரை திருவுளம் பண்ணப்பட்டதே. அந்த ஊழியர்களைப் பற்றியது இது. (எபி. 1:2; அப்.3:21). இப்படி வந்த ஊழியர்களிலும் உத்தமர்கள் இல்லை என்று தேவன் வருந்துவதை ஏசாயா 41:28, 29ல் காணலாம். இதனால் தான் அடுத்த வசனத்தில் (ஏசாயா 42:1) இயேசு வருவதைப் பற்றி எழுதப்பட்டுள்ளது.

**62. ஈசாயின் அடிமரத்துவேர் இஸ்மவேல் தான்; அதிலே வந்த கிளை தான் முகமது.**

★ அடி என்றால் ராஜ்யம் (ஏசாயா 11:1) ஆகும். ஈசாயின் அடிமரம் என்றால், தாவீதின் ராஜ்யமாகும் - kingdom. இந்த வீழ்ந்து போன தாவீதின் ராஜ்யம், 1000 வருட ஆட்சியில் மீண்டும் உருவாகி, நடக்கப் போவதாகும். இந்த தாவீது ராஜ்ய வேரிலிருந்து, ஒரு கிளை எழும்புமாம். வேரில் இருந்து எழும்புகிற கிளை மேல் நோக்கித் தான் வளரும். பூமிக்குள் வளருவதில்லை. அந்த கிளை ஆயிர வருட ஆட்சியில் ஆளப்போகும் இயேசு தான் என்று ஏராளமான வசனங்கள் சொல்கின்றன. (ஏசாயா 4:2; சகரியா 3:8; 6:12). ஈசாயின் அடிமரத்து வேர் என்பதை, தாவீதின் ராஜ்யம் என்று எடுக்காமல், ஈசாயை மட்டும் வேர் என்று எடுத்துக் கொண்டு அந்த வேருக்கு பின்னால் உள்ள ஓபேத், போவாஸ்... ஆபிரகாம் என்று கணக்கிட்டு இஸ்மவேல் தான் அந்த கடைசி வேர் என்று இஸ்லாமியர் கூறுகிறார்கள். இது தவறு.

ஆபிரகாம் மற்றும் ஈசாக்கிலிருந்து வந்தவர் தானே ஈசாய். அவர்கள் கணிப்பது போல் பின் நோக்கிக் போனால், யாக்கோபு, ஈசாக்கு, ஆபிரகாம், தேராகு, நாகோர், சேரூக் என்று தானே போக வேண்டும். (லூக்கா 3:34, 35). அதிலே இஸ்மவேல் கணக்கு எங்கே உள்ளது. இஸ்மவேல் தான், ஆபிரகாமின் வாக்குத்தத்தமுள்ள சந்ததி இல்லை என்கிறபோது, அவர்களின் இந்த வேர் கணக்கு எப்படி சாத்தியமாகும். ஒரு வேளை இஸ்மவேலர்களும் - இஸ்லாமியர் களும் - கிறிஸ்தவர்களாய் மாறினால், புறஜாதிகளாகிய நாம் ஆவிக்குரிய இஸ்ரேலர்களாய் இருப்பது போல அவர்களும் இருக்கலாம். மற்றபடி மாம்சப் பிரகாரமான இஸ்ரேலரின் - தெரிந்து கொள்ளப்பட்ட ஜாதியின் - வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஈசாக்கின் சந்ததியின் அதிகாரத்தையும், ஆளுகையையும், ஆசாரியத்துவத் தையும் இஸ்மவேலர்கள் பெறவே முடியாது; வேதத்தில் எந்த ஆதாரமுமில்லை.

அவர்கள் கூற்றுப்படி, இஸ்மவேல் வழிவந்த கிளை முகமதுதான் என்றாலும், அவர் வாழ்நாளில் என்றாவது, இஸ்ரேலரை

ஆண்டிருக்கிறாரா? இஸ்லாமியர் எருசலேமை பிடித்து ஆளுமுன்னேயே தான் முகமது இறந்து விட்டாரே. ஆனால் ஈசாயின் அடிமரத்து வேராகிய தாவீதின் ராஜ்யத்திலிருந்து கிளம்பும் கிளையாகிய இயேசு கிறிஸ்து இஸ்ரேலை ஆளுவார் 1000 வருடம். அல்லேலூயா!

**63. முதலாம் உடன்படிக்கை ஆதி. 17:13. இது இஸ்மவேல் சந்ததிக்குரியது. ஆதி. 17:19 என்பது தேவனின் 2ம் உடன்படிக்கை. இதுதான் ஈசாக்கின் சந்ததிக்கு வழங்கப்பட்டது. ஈசாக்கின் சந்ததிக்கு அது முதலாம் உடன்படிக்கை தான்.**

★ இது மகா தவறு. ஆதி. 17ஐ முழுவதுமாய் வாசித்தால், அங்கே பண்ணப்பட்ட உடன்படிக்கை ஒன்றே ஒன்றுதான்; இரண்டல்ல (ஆதி. 17:2-8). இதுவும் இஸ்மவேல் சந்ததிக்கு என்று எங்கும் சொல்லப்படவில்லை. இது ஈசாக்கின் சந்ததிக்கு மட்டுமே. (ஆதி. 17:19) மற்றப்படி, ஆபிரகாமின் வேண்டுதலின்படி, இஸ்மவேலுக்கு, ஆசீர்வாதத்தை சொல்கிறார். (ஆதி. 17:18, 20). உடன்படிக்கை இஸ்மவேலுக்கு ஏதுமில்லை. இந்த உடன்படிக்கை இஸ்ரவேல் சந்ததி உருவாகு முன்னே தேவன் ஆபிரகாமோடு பண்ணியது. இதற்கு அடையாளமாய்த் தான் விருத்தசேதனம் செய்யப்பட்டது. அப்படி விருத்தசேதனம் பண்ணப்பட்ட போது, இஸ்மவேலும் இருந்தான் என்பதால், இந்த உடன்படிக்கை இஸ்மவேலின் சந்ததிக்குரியது என்று சொல்ல முடியாது. அந்த நாளில் ஆபிரகாம், அனைத்து ஆண்களுக்கும் பண்ணினான் என்பதால் (ஆதி. 17:23) இந்த உடன்படிக்கை அந்த அனைத்து ஆண்களின் சந்ததிக்குரியது என்று சொல்ல முடியுமா?

இந்த உடன்படிக்கையை வேதம் இஸ்ரேலருக்கான முதலாம் உடன்படிக்கை என்று சொல்லவில்லை. சீனாய் மலையில் மோசேயைக் கொண்டு செய்யப்பட்டது தான் முதலாம் உடன்படிக்கை (யாத். 24:7,8; கலா. 4:24). இயேசு செய்தது 2ம் உடன்படிக்கை. (மத். 26:28; எபி. 8:10; எரே. 31:32-34). இரண்டுமே, ஈசாக்கின் சந்ததியாம் இஸ்ரேலருக்கு உரியது தானே ஒழிய இஸ்மவேல் சந்ததிக்கு அல்ல. இந்த 2ம் உடன்படிக்கையை இஸ்ரேலர் ஏற்றுக் கொள்ளாததினால், அது, அதை ஏற்றுக் கொள்ளுகிற புறஜாதியாராகிய நமக்குரியதாயிருக்கிறது. ஆனாலும், இஸ்ரேல் மக்கள் இந்த 2ம் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு, இயேசுவே மேசியா என்று சொல்லி, எல்லோரும் இரட்சிக்கப்படும் காலம் 2ம் வருகையில் உருவாகும். (ரோமர் 11:25-27).

**64. சகரி. 4:12 - 14ல் சொல்லப்பட்ட இரண்டு கிளைகள், இஸ்ரவேலும், இஸ்மவேலுமாம்.**

★ ஈசாக்கின் வழிவந்த சந்ததி தான் தேவன் தெரிந்து கொண்ட சந்ததி. (ஆதி. 17:16-21; கலா. 5:22-31). சகரியாவில் வரும் இரு ஒலிவ மரக்கிளைகள், இடிந்து போன எருசலேம் ஆலயம் கட்ட நிற்கும் யோசுவாவையும், செரூபாபேலையும் குறிக்கிறது. இவர்கள் இஸ்ரவேல் சந்ததியார் தானே ஒழிய இஸ்மவேலர் அல்ல. வெளி. 11:3-14 வாசித்தால், கடைசி நாட்களிலும், தேவாலயமாகிய இஸ்ரேல் சபையில் எழுப்புதல் உண்டாக இஸ்ரேல் சபையை எடுப்பித்துக் கட்ட - இரண்டு சாட்சிகள் எழும்புவதைப் பார்க்கலாம். ஆவிக்குரிய ரீதியில் எடுத்துக் கொண்டால், இயேசுவின் ஆசாரியத்துவம் மற்றும் ராஜரீகத்தை இரண்டு கிளைகளாகவும் சொல்லலாம் (சங். 110). இரண்டுமே, ஆவிக்குரிய தேவாலயத்தை - சபையை - எடுப்பித்துக் கட்டத்தானே.

**65. சக. 6:12-ன்படி முகமதுதான், இடிந்து போன எருசலேம் ஆலயத்தைக் கட்டினார். "இதோ ஒரு புருஷன், அவருடைய நாமம் கிளை எனப்படும்; அவர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து முளைத் தொழும்பி கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார்."**

★ மகா தவறு. இந்த வசனப்படி கட்டப் போகும் ஆலயம், ஈசாயின் அடிமரத்து வேரிலிருந்து வந்த கிளையாகிய இயேசுவால் 1000 வருட ஆட்சியில் கட்டப்போகும் ஆலயமாகும். (எசேக்கியேல் 40-48). முகமது கட்டினார் என்றால், இஸ்ரேலர் அங்கே தொழுகை நடத்துகிறார்களா? இல்லையே! ஏன் இந்தப் பொய்?

முகமது கி.பி. 632லேயே மரித்து விட்டார். கி.பி. 637-38-ல் தான் எருசலேமில் முஸ்லீம் ஆட்சி வந்தது. அப்படியிருக்க, இடிந்து போன ஆலயத்தை முகமது எப்படி கட்டியிருக்க முடியும்?

இடிக்கப்பட்ட சாலமோன் கட்டிய ஆலயத்திற்குப் பெயர் தான் பைத்துல் முகத்தஸ். அதற்குப் பின், அஸ்ரத் உமர் பாருக் (RA) எருசலேமைப் பிடித்து, சாலமோன் கட்டிய இடத்தில் ஒரு சிறிய மசூதி கட்டினார். அதற்கும் பெயர் பைத்துல் முகத்தஸ். பைத்துல் முகத்தஸ் - Bidul Mugaddas - என்றால் அல் அக்சா மசூதி - Al - Aqsa Mosque - என்று பெயர். இதை மறுபடியும் புதுப்பித்துக் கட்டியவர் Sylalymaan (Sunam al Nasaai (693). Please refer islamga.info/en/2093. இந்த பைத்துல் முகத்தஸை தான், உமையத் காலிப் அப்தால் மாலிக் என்பவர், கி.பி. 689-91ல் Doom of the Rock என்று கட்டினார்.

இப்போதிருக்கும் இந்த Doom of the Rock சாலமோன் ஆலய வடிவத்தில் இல்லையே! அப்படியிருக்க, சாலமோன் கட்டிய ஆலயத்தை அங்கீகரித்த தேவன் இந்த ஆலயத்தை அங்கீகரித்தாரா? அங்கீகரிப்பாரா? தவறான தகவல்களைத் தந்து குழப்புவோரிடம் எச்சரிக்கையாயிருங்கள்.

**66. வனாந்திரம் என்னும் அரபு தேசத்தில் கூப்பிடுகிற சத்தம், முகமது வழியாய் முஸ்லீம்கள் ஓதுகிற சத்தமாகும் (ஏசாயா 40:3; யோ. 1:23).**

★ அந்த சத்தம் அரபு தேசத்திலிருந்து என்று யார் சொன்னது? வனாந்திரம் என்றால் அரபா? இந்த சத்தம் முதலாம் நூற்றாண்டில், யோவான் ஸ்நானனால், இயேசுவுக்கு முதலாம் வருகைக்காக வழியை ஆயத்தம் பண்ணி உண்டான சத்தமாகும் (மத். 3:3; லூக்கா 3:4-6). அப்போது முகமது ஏது? இதே போல ஆயத்தம் பண்ணும் சத்தம் எலியாவால் 2ம் வருகைக்கு முன்பாக கேட்கும் (மல். 4:5; வெளி. 11). அப்போதும் முகமது இல்லை. முகமது இல்லாவிட்டாலும், முஸ்லீம்களின் அரபி தேச ஓதும் சத்தத்தில், இயேசு வருகைக்காய் ஆயத்தம் பண்ணும் காரியங்கள் காணப்படுமா? சிந்தியுங்கள்.

**67. பவுல், இயேசுவை இறைவனாகவும், அவரின் தாயாரை கடவுளாகவும் ஆக்கினார்.**

★ இறைவனும், கடவுளும் ஒன்றுதான். பவுல், இயேசுவை மட்டுமே மனிதனாய் வந்த தேவ குமாரன் - கர்த்தர் என்றார். மற்றப்படி எங்குமே மேரியை அப்படி சொல்லவே இல்லை.

**68. ரோமர் 3:7- என் பொய்யினாலே தேவனுடைய சத்தியம் அவருக்கு மகிமையுண்டாக விளங்கினதுண்டானால், இனி நான் பாவியென்று தீர்க்கப்படுவானேன். இதன்படி பவுல் பொய்யன்.**

★ ரோமர் 3:8-ஐயும் வாசித்தால் உண்மை புரியும்.

"நன்மை வரும்படிக்குத் தீமை செய்வோமாக என்றும் சொல்லலாமல்லவா? நாங்கள் அப்படிப் போதிக்கிறவர்களென்றும் சிலர் எங்களை தூஷித்துச் சொல்கிறார்களே; அப்படிப் போதிக்கிறவர்கள் மேல் வரும் ஆக்கினை நீதியாயிருக்கும்."

நன்மை வரவேண்டும் என்பதற்காய் பொய் சொல்லுகிற கூட்டமல்ல பவுலைப் போன்ற கிறிஸ்தவக் கூட்டம்.

**69. ஆட்களைப் பிடிக்க அரசியல்வாதி போல செயல்படும் பவுல், தேவமனுஷனா? (1 கொரி. 9:20, 21).**

★ 1 கொரி. 9:21-ன் கடைசி வரியை வாசிக்கலாம் - "அப்படியிருந்தும், நான் தேவனுக்கு முன்பாக நியாயப் பிரமாணமில்லாதவனாய் இராமல், கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள்ளவனாயிருக்கிறேன்." ஆத்ம ஆதாயம் செய்வதே எங்கள் பணி (மத். 28:18-20). அதற்காய் யாரோடு - பாவிகள், நீதிமான்கள் - ஏழை, பணக்காரன் - பழகினாலும் கீழ்மட்டத்திற்கு போனாலும், மேல் மட்டத்திற்கு போனாலும், பிரமாணம் இல்லாதவராய் அல்ல; கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு உட்பட்டவராகத்தான் செயல்படுவாராம். இப்படிப்பட்டவர் தேவமனுஷன் தானே.

**70. நான் இடித்துப் போட்டவைகளையே மறுபடியும் கட்டினால், பிரமாணத்தை மீறுகிறவன் என்று காணப்படுவேன் (கலா. 2:18). இப்படி சொல்கிற பவுல் ஊழியரா?**

★ இப்படி சொல்வது சரிதானே. பேதுரு, புறஜாதிகள் மத்தியில் மாய்மாலம் செய்ததை பவுல் கண்டிக்கும்போது, இப்படிச் சொல்கிறான். "இஸ்ரேலருக்கும் புறஜாதிகளுக்கும் இடையிலுள்ள தடை இயேசுவால் இடிந்தது என்று நாம் சொல்லி, நாமும் இடித்துப் போடும் போது, அதையே மாற்றிச் செயல்படுத்தலாமா?" என்று தான் பவுல் கேட்கிறான். கலாத்தியர் 2:19ஐ வாசித்தால் உண்மை புரியும்.

**71. பிரதான ஆசாரியனென்று தெரிந்தே, அவனை பார்த்து வெள்ளையடிக்கப்பட்ட சுவரே என்று பவுல் கூறுகிறார். பிற்பாடு ஆசாரியனென்று எனக்குத் தெரியாது என்று பொய் சொல்லிவிட்டு தப்பிப்பதற்காய், நியாயப்பிரமாணம் வேண்டாம் என்றவர், அந்த கட்டளை தனக்குத் தெரியும் என்று சொல்கிறார். (அப். 23:1-5). ஏன் ஊழியருக்கு இந்த நிலை?**

★ "இந்நாள் வரைக்கும் நல் மனச்சாட்சியோடு எல்லாக் காரியங்களிலும், தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன்" என்று பவுல் தன்னை "வெள்ளை மனிதன்" என்று சொன்னதற்காக அடிக்கச் செய்த விசாரணைக்கு வந்த தலைவனைப் பார்த்து, "நீ வெள்ளையாய் காட்சிதர இப்படி செய்கிறாயோ?" என்ற அர்த்தத்தில் பவுல் கேட்டான். அந்த தலைவன் பிரதான ஆசாரியன் என்று தெரியாது என பவுல் சொன்னதை அந்த ஆசாரியனே ஏற்றுக் கொண்டு பதிலேதும் பேசவில்லையே. முஸ்லீம்கள் ஏன் இது குறித்து அலப்புகிறார்கள்? அலம்புகிறார்கள்? தான் அவர்களைபோல், பிரதான ஆசாரியனை எதிர்த்துப் பேசக்கூடாது என்ற நியாயப்பிரமாணச் சட்டம் தெரிந்தவன்

(யாத். 22:28); எனவே தவறு செய்ய மாட்டேன் என்று பவுல் உண்மையைச் சொன்னது தவறா? அதுவும் எப்போது சொன்னான்? நியாயப்பிரமாணப்படி நியாயம் விசாரிக்கிற நீ அடிக்கலாமா? என்று பவுல் கேட்டபோது, "பிரதான ஆசாரியனை வைகிறாயா?" என அருகிலிருந்தவர்கள் கேட்டனர். அப்போதுதான், "உங்கள் சட்டப்படி வையக்கூடாது என எனக்குத் தெரியும்" என்று தன் ஞானத்தையும் வெளிப்படுத்துகிறானே ஒழிய, நியாப்பிரமாணம் வேண்டும் என்ற எண்ணத்தில் எதையும் சொல்லவில்லை; தப்பிப்பதற்கான வழியாகவும் இது இல்லை. இதனால் பவுலுக்கு அந்த பிரதான ஆசாரியனால் விடுதலை ஏதும் கிடைக்கவில்லையே!

**72. மத். 2:2ன்படி, நட்சத்திரத்தை கண்டு சாஸ்திரிகள் வந்தார்களாம். யூதருக்கென்று தனி நட்சத்திரமே உருவாக்கப்பட்டிருக்கிறது பைபிளில். காதில் பூ சுத்துகிற விஷயம் இது. ஞானிகளை நடத்திய நட்சத்திரம், ஏன் பாதை மாறி ஏரோது அரண்மனைக்குச் சென்றது? அநேகருக்காக இரத்தம் சிந்தப் பிறந்தவருக்காக, அநேக குழந்தைகள் இரத்தம் சிந்த வேண்டுமா?**

★ தானி. 2:2; 4:9ன்படியான கிழக்கு தேச வானசாஸ்திர ஞானிகளின் நம்பிக்கை தான் நட்சத்திரம் உருவாகும் விஷயம். இதை வேதம் ஏற்றுக் கொள்வதில்லை. எண். 24:15ல் கண் திறக்கப்பட்ட, பிலேயாம் தீர்க்கதரிசி சொல்லுகிறது "இந்த வான நட்சத்திரமல்ல" என்று முந்தி அறிய வேண்டியவர்கள் கிறிஸ்தவர்கள். காதில் பூ சுத்துகிற விஷயம் இது என்று, உண்மைக் கிறிஸ்தவர்களாகிய நாங்களும் உங்களைப் போல் தான் சொல்கின்றோம். ஆனால் இதில் ஒன்றை மட்டும் முஸ்லீம்கள் கவனிக்க வேண்டும். இப்படி நட்சத்திரம் உருவானது என்று சொன்னது ஞானிகள்; கேட்டது ஏரோது. வேதம் அப்படி உறுதிப்படுத்தவில்லை.

மேலும், அநேக குழந்தைகள் இரத்தம் சிந்தியது, இயேசுவுக்காக அல்ல; அது ஏரோதாலும், சரியான தீர்க்கதரிசன விளக்கம் தராத தீர்க்கதரிகளாலும் ஏற்பட்ட கொடுமை. ஏசாயா 7:14ஐ சொல்லியிருந்தால், (மீகா 5:2ஐ சொல்லாமல்), குழந்தைகள் பாதுகாக்கப்பட்டிருக்கும் என்று எண்ணுவோருமுண்டு. அப்படி சொல்லியிருந்தாலும், கன்னியை கண்டுபிடிப்பது எப்படி? கணவனில்லாமலே மேரிக்கு குழந்தை என்று ஊரறிந்தால், தாய்க்கும், சேய்க்கும் மரியாதை இருக்காதல்லவா! எப்படியோ

பொல்லாத செயல்கள் எல்லாம் பிசாசால் உண்டானவை. அவன் இயேசு பிறக்குமுன்னும், பிறந்த போதும், பிறந்த பின்னும் தடை செய்பவன். அவனின் கைப்பாவைகளே இதற்கு முக்கிய பொறுப்பு (யாக். 2:15) மேலும், ஞானிகளை, ஏரோது அரண்மனை வரை கொண்டு சென்றது அந்த நட்சத்திரம் அல்ல என்று முந்தி அறிக.

**73. பலியிடச் சொன்னது ஈசாக்கை அல்ல; இஸ்மவேலைத்தான். இஸ்மவேல் தான் ஆபிரகாமின் ஏகசுதன்; நேசக்குமாரன்.**

★ பலியிட அல்லாவே அழைத்ததாக முஸ்லீம்கள் சொல்வதாலேயே, பலியின் மேன்மையை பலியிலுள்ள தாற்பரியத்தை அல்லாவும் உணர்ந்திருக்கிறார் என்று பொருள். ஆபிரகாமும் பலியிடப் புறப்பட்டதால், அவனுக்குப் பலிபற்றிய சத்தியங்கள் புரிந்திருக்கும். இப்படியாய் சிந்திக்க வைத்த முஸ்லீம்களுக்கு நன்றி.

பலியிடச் சொன்னது இஸ்மவேலைத்தான் என்பதற்கு குரானிலேயே ஆதாரம் இல்லாதபோது, பைபிளில் சொல்லப்படும் ஆதாரத்தை மறுப்பது வீண் காரியமல்லவா! இஸ்மவேலை வெளியேற்றிய பின்பு தானே (ஆதி. 21) "உன் புத்திரனும், ஏக சுதனுமான ஈசாக்கை" பலியிடச் சொல்லி, தேவன் ஆபிரகாமை பரீட்சை பார்த்தார் (ஆதி. 22:1,2). ஈசாக்கும், இஸ்மவேலும் ஆபிரகாமின் வித்துத்தான் (ஆதி. 21:13). ஆனால் ஆதி. 17:16-21; 15:4; கலா. 4:22-31 போன்ற வசனங்களின்படி ஈசாக்கே வாக்குத்தத்த முள்ள மகன்; ஈசாக்கின் சந்ததியில் தான் இயேசு பிறந்தார்; அந்த வழியில் தான் முஸ்லீம்கள் சொல்லும் தீர்க்கதரிசிகள் எழும்பினார். ஆனால், இஸ்மவேல் வழியாய் ஒரு தீர்க்கதரிசியைக்கூட தேவன் எழுப்பவில்லை. முகமது தான் அவர்கள் கருத்துப்படி முதலும் கடைசியுமான நபி. முஸ்லீம்கள் சொல்லும் மோசே, தாவீது, சாலமோன், யோனா, ஏசாயா, யோவான் ஸ்நானன் போன்ற எல்லா தீர்க்கதரிசிகளும், ஏன் இயேசுகூட, ஈசாக்கு வழி வந்தவர்கள் தான்; இஸ்மவேல் வழியல்ல.

**74. குரான் 61:6:-**

**"இஸ்ராயீலின் மக்களே, நான் உங்களுக்கு அனுப்பப்பட்ட அல்லாவின் தூதர், என் முன் சென்ற தவ்ராத்தை உண்மைப் படுத்துபவன். எனக்குப் பின்னர் வரவுள்ள அஹ்மத் என்ற பெயருடைய தூதரைப் பற்றி நற்செய்தி கூறுபவன் என்ற மர்யமின் மகன் ஈஸா கூறியதை நினைவூட்டுவீராக."**

**இதில் முகமது நபி வருவார் என்று இயேசுவே கூறியுள்ளதை, கிறிஸ்தவர்களின் இயேசுவின் வேதமாகிய இஞ்சிலில் இல்லையே.**

★ இப்படி இயேசு சொன்னார் என்று, முகமது, குரானில் தன்னைப் பற்றி எழுத வைத்திருக்கிறார் என்று நாங்கள் சொல்லாமலல்லவா!

மேலும், உங்களிடத்தில் இஞ்சில் என்ற இயேசுவின் வேதம் இல்லை. நாங்கள் வைத்திருப்பது, இயேசுவின் போதனைகளும், அதுகுறித்த அப்போஸ்தலர்களின் போதனைகளும் அடங்கிய புதிய ஏற்பாடுதான். இயேசு இஞ்சில் என்ற வேதத்தை எழுதவே இல்லை.

நீங்கள் சொல்லும் இஞ்சிலில் அப்படி இருந்தால், அதைக் காட்டுங்கள்; நம்புவோம். இதை அல்லா எடுத்துக் கொண்டார் என்றால் காபி கூடவா இல்லை? காபியுமின்றி, எந்த ஆதாரமுமின்றி, இயேசு சொன்னார் என்று நீங்கள் சொல்வதை நாங்கள் எப்படி நம்புவது?

**75. ஓய்வுநாள் தொடங்கப் போவதால், யூதர்கள் இயேசுவை உடனே சிலுவையை விட்டு இறக்கி விடுவார்கள் என்றும், குறைவான தொங்கும் நேரத்தில் இயேசு மரிக்க முடியாது என்றும் அறிந்த பிலாத்து, உண்மையிலேயே சிலுவையில் இயேசு மரிக்க வேண்டுமென்று விரும்பியிருந்தால், வெள்ளிக்கிழமை மாலையை ஏன் தெரிந்தெடுத்தார்?**

★ முதலில், பிலாத்து, இயேசு சிலுவையில் மரிக்க வேண்டும் என்று விரும்பவில்லை. அவன் மனைவியின் விருப்பமும் அதுதான். யூதர்களின் அழுத்தத்தின் காரணமாகவும், தம்முடைய ரோம ஆட்சிப் பொறுப்பு போய்விடக் கூடாது என்பதாலும் மட்டுமே இப்படி தீர்ப்பளித்தான். அவர் சிலுவையில் தொங்கியது ஆறு மணி நேரம். அவர் மனிதனாய் மரித்தால் ஒரு வேளை நேரம் போதாமலிருக் கலாம். அவரோ தானே, “எல்லாம் முடிந்தது” என்று சொல்லி தன் ஜீவனை விட்டார். எனவே இங்கே நேரம் ஒரு criteriaவாக இல்லை.

**76. உயிர் பிரியப் போகும்போது, இயேசு தெளிவான உரத்த குரலில் தாம் தாகமாயிருப்பதாக எவ்வாறு சப்தம் போட முடிந்தது? (யோ. 19:28)**

★ வசனத்தை சரியாய் வாசியுங்கள். தெளிவான உரத்த குரலில் பேசியதாகவோ, சப்தம் போட்டதாகவோ இல்லை. சாகப் போகிறவன் பேசியது போல பேசியிருப்பார். அவர் பேசியது போர்ச்சேவகர்களுக்கு புரிந்தது; காடியை கொடுத்தனர்.

**77. மத். 27:46 - "ஏலி ஏலி லாமா சபக்தானி" என்று இயேசுவின் சொற்கள் அவரது தாய்மொழியான அரமேக் மொழியில் இருப்பது ஏன்?**

★ ஏன் இருக்கக்கூடாது? மரிக்கும் நேரத்தில் தன் தாய்மொழியில் பேசக்கூடாதா? ஏற்கெனவே "எப்பாத்தா", "தலித்தாகூமி" என்றெல்லாம் பேசியிருக்கிறாரே!

**78. விநிகர் (காடி) உடலுக்கு தெம்பளிக்கும் பானம். இயேசுவுக்கு இது வழங்கப்பட்டதும் அவர் மிக விரைவாக மரணமுற்றது ஏன்?**

★ சாதாரண மனிதனின் மரணம் போலல்ல இயேசுவின் மரணம். தானே தன் ஜீவனை விட்டார். யோ. 19:28ஐ வாசித்தால், அவர் உலகுக்கு வந்த எல்லாக் காரியமும் முடிந்தது என்று அறிந்து, யோ. 19:30ல் சொல்லியடி, 'முடிந்தது' என்று அவரே சொல்லி ஜீவனை விட்டார். எனவே அவரது மரணத்தில் களங்கம் கற்பிக்க வழியே இல்லை.

**79. இருள் சூழ்ந்திருந்த நேரத்தில், இயேசு மரித்தார் (மாற். 15:39) என்பதால் அவருடைய மரணம் பற்றிய எதிலுமே சம்பந்தமில்லாத நூற்றுக்கதிபதி யோசேப்பு எவ்வாறு இதை கண்டு கொண்டான்?**

★ இந்த யோசேப்பு யாரோ ஒரு அந்நியன் அல்ல. இயேசுவின் விசுவாசி என்று மாற். 15:43ன் மூலம் அறியலாம். இவர் சனகெரீம் மன்ற உறுப்பினர் என்று சரித்திரம் சொல்கிறது. 3 மணி நேரம் இருள் சூழ்ந்திருந்தபோது, போர்ச்சேவகர்கள் எப்படித் தங்கள் பணிகளை கவனித்தார்கள்? கும் இருட்டா சாதாரண இருட்டா தெரியவில்லை. எப்படியானாலும் அவர்கள் பணிக்காக தீப்பந்தங்கள் வைத்திருக்க வாய்ப்புண்டே! கெத்சமனே தோட்டத்தில் கைது செய்யப் போகும் போதுகூட தீப்பந்தங்கள் வைத்திருந்தனரே! எனவே அவர் மரித்தாரா மயக்கத்திலிருக்கிறாரா என்று கண்டு கொள்ள ஏதுக்கள் நிச்சயம் உண்டு. யோ. 19:33ஐ வாசித்தால், அவர் மரித்திருக்கிறார் என்று கண்டு, காலெலும்புகளை முறிக்கவில்லை என அறிகிறோம். எனவே இங்கே எந்த கண்கட்டி வித்தையும் இல்லை.

**60. மத். 27:52ன்படி, கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களை கண்டு, யூதர்கள் ஏன் உடனடியாக இயேசுவிடம் நம்பிக்கை கொள்ளவில்லை? இந்த பரிசுத்தவான்கள் எங்கே போனார்கள்? யாரைப் பார்த்தார்கள்? இந்தக் கதை மத்தேயுவில் மட்டும்தான் இருக்கிறதே ஏன்?**

★ இது கதையல்ல; சரித்திர நிகழ்ச்சி. இதை 4 சுவிசேஷகர்களும் எழுத வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஒருவர் எழுதினாலும் அது உண்மைதான். உயிர்த்தெழுந்தவர்கள், பரிசுத்த நகரமாம் எருசலேமுக்குள் பிரவேசித்து, பலருக்கு காட்சி கொடுத்தார்கள் என்று மத். 27:53 சொல்கிறதே! அந்த காலம், 144 தடை உத்தரவு மற்றும் எமெர்ஜென்சி போன்ற காலம். 3 $^{1}/_{2}$ ஆண்டுகள் இயேசுவோடு வாழ்ந்து அறிந்து. அனுபவித்த சீஷர்கள்கூட ஒளிந்துகொண்டு இருந்தார்களே! உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்ட அவர்கள்கூட இயேசுவின் ஊழியத்தை தொடராமல், மறுபடியும் மீன் பிடிக்க போய்விட்டார்களே! நிலைமை இப்படியிருக்க, காட்சியை கண்ட மக்கள் இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதலை நம்பியிருந்தாலும் வெளியே சொல்ல தைரியம் வேண்டுமல்லவா! 2015 ஆண்டுகள் ஆகியும்கூட உலகம் முழுவதும் கிறிஸ்தவர்களாகாதபோது, அந்த ஒரு காட்சியில் அந்த நகரமே முழுவதும் விசுவாசிக்கும் என்று சொல்வது ஏற்கத்தக்கதல்ல.

**81. சகரியாவோடு தீர்க்கதரிசிகளை கொல்வது முடிந்துவிட்டது என இயேசு கூறியுள்ளார் (மத். 23:35,36). அப்படியானால் மற்றொரு தீர்க்கதரிசியாம் இயேசுவை சிலுவையில் கொல்லவில்லை என்பதுதானே உண்மை!**

★ இயேசு சொன்ன காலகட்டம் வரை இவ்வளவு தீர்க்கதரிசிகளை தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே இஸ்ரவேலர் கொலை செய்திருக்கிறார்கள் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய, கொல்லப்படப்போகும் இயேசுவைப் பற்றி முன்கூட்டியே, எப்படி சொல்ல முடியும்? இப்படிப்பட்ட இரத்தப் பழிக்கு பங்காளிகளாக மாற வேண்டாம் என்பதற்கான எச்சரிப்பின் தூது என்று இதை எடுத்துக் கொள்ளலாம். இதை வைத்து இயேசு கொல்லப்படவில்லை என்று சொல்லவே முடியாது. இயேசுவின் மரணம் - உயிர்த்தெழுதல் என்பது இல்லையென்றால் கிறிஸ்தவமே பொய்யானதாகும். இயேசுவும் தேவாலயத்திலோ பலிபீடத்திலோ மேலே சொன்னபடி கொல்லப்படவில்லை என்றும் முந்தி அறிக.

**82. யோசேப்பிடம் எந்த ஒரு ஆதாரமுமின்றி, ரோமானியப் போர்வீரன் இயேசுவின் உடலை எப்படி கொடுப்பான்? இயேசு மரித்தார் என்று யோசேப்பும், நிக்கோதேமும் ஏன் சாட்சியாய் சொல்லவில்லை?**

★ யோசேப்பு சனகெரீம் மன்றத்து உறுப்பினர் என்று சரித்திரம் சொல்கின்றது. இவன் ஒரு வி.ஐ.பி. யோசேப்புக்கு உடலை கொடுத்தது போர்வீரனல்ல; பிலாத்துதான். இயேசு மரித்துப் போனார் என்று யோசேப்பிடம் கேட்டு உறுதி பெற்றபின்புதான் பிலாத்து கொடுத்தான் (லூக். 15:43-45). மேலும், நிக்கோதேமு மரித்த சரீரத்திற்குப் போட சுகந்த வர்க்கங்கள் கொண்டு வந்ததும், அதை சடலத்தோடு சீலைகளில் அவர்கள் இருவரும் சுற்றிக் கட்டியதும், புதிய கல்லறையில் அடக்கம் பண்ணியதும் (யோ. 19:39-42), இயேசு மரித்தார் என்பதற்கு இவ்விருவரின் சாட்சியாகும். நிக்கோதேமும் வேதபாரகரான வி.ஐ.பி.யே!

**83. இயேசுவின் சரீரத்தை, நெருங்கிய உறவினர்கள் பெறாமல், யோசேப்பும், நிக்கோதேமும் ஏன் இவ்வளவு சங்கடங்களை அனுபவிக்க வேண்டும்?**

★ நெருங்கிய உறவினர்கள் யாரும் மரணத்தின்போது இல்லை. தாய் மரியாள் பெண் என்பதால் கல்லறையிலே அடக்கத்தை அவர்கள் செய்ய முடியாது. சீஷர்கள் யாரும் உடனிருந்ததாக தெரியவில்லை. யோவானைப் பற்றிக்கூட மரணத்திற்குப்பின் விபரமில்லை. தங்களின் தலைவருக்கு நடந்ததுபோல் தங்களுக்கும் நடக்குமோ என்று சீஷர்கள் பயந்து ஒளிந்து கொண்டிருந்தனர். முதல் நாள் இரவு குளிர்காயும் போதே பேதுரு, வேலைக்காரிக்கே பயந்து மறுதலித்தானே! யோசேப்பும், நிக்கோதேமுவும் இயேசுவின் அந்தரங்க சீஷர்களாயிருந்தவர்கள் (யோ. 19:38). அவர்கள் 3 மணி நேர அந்தகாரம், இயேசுவின் மரணம், விலாவிலிருந்து இரத்தமும் தண்ணீரும் வந்தது, எலும்புகள் முறிக்கப்படாதது போன்றவைகளை எல்லாம் கண்கூடாய்ப் பார்த்தவுடன், அந்த வேத வல்லுநர் இருவருக்கும் வசன விசுவாசம் பெருகியதால்தான், எந்த சங்கடங் களையும் பொருட்படுத்தாமல், அடக்கத்திற்கான காரியங்களை செய்தார்கள்.

**84. கல்லறைக்குச் சென்று யூதர்கள் ஏன் சோதிக்கவில்லை? இதிலிருந்து தெரிகிறது இயேசு மரிக்கவில்லை; வேறொருவர்தான் மரித்தார் என்று.**

★ சாகடிக்க காரியங்களை செய்தவர்கள், மரித்தபின் கல்லறைக்குப் போய் சோதித்துப் பார்க்க வேண்டிய கட்டாயமில்லை. ஈட்டியினால் குத்தி உறுதிப்படுத்தினார்கள்; மரித்ததால் கால்களை முறிக்காமல்

விட்டார்கள். வேறொருவர் மரித்திருந்தாலோ, இயேசு மரிக்காதிருந்தாலோ, யூதர்கள் அதைப் பகிரங்கப்படுத்தியிருக்கலாமே! இன்றுவரை இல்லையே ஏன்? அப்படி பொய்க் கதைகளை பரப்பியிருந்தால், மரண தண்டனை கொடுத்த ஆளும் ரோமர்களால் உபத்திரவப்படுவார்கள் அல்லவா! உண்மையே வெல்லும். ஆமென்!

**85. இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பார்ப்பதற்கு யோசேப்பும், நிக்கோதேமும் ஏன் கல்லறையிலேயே தங்கி இருக்கவில்லை?**

★ மரணத்தைக் கண்டு, அடக்கம் பண்ணிய அந்தரங்க சீஷர்கள், கல்லறையில் தங்கவில்லை என்பதாலேயே இயேசுவின் மரணம், அடக்கம் எல்லாம் பொய்யாகாது. கல்லறையை சீல் பண்ணி காவல் காக்க போர்ச் சேவர்கள் இருக்கும்போது, இவர்கள் எப்படி அங்கே தங்க முடியும்? உயிர்த்தெழுந்த பிறகு - அதாவது கல்லறை, தூதர்களால் திறந்த பிறகுதான் தைரியமாய் அங்கே காவலாளிகள் இல்லை; பயந்து கொண்டு போய்விட்டார்கள். பெண்கள் முதற்கொண்டு எல்லோரும் அதற்குப் பிறகுதான் தைரியமாய் சென்று பார்த்தார்கள். மட்டுமல்ல, நியாயப்பிரமாணச் சட்டப்படி ஓய்வு நாளில் அவர்கள் கல்லறையில் காத்திருக்கும் பணி - வேலை - செய்யக்கூடாது; அது பாவம்; ஆராதனைக்கு போய்விட்டு ஓய்ந்திருக்க வேண்டும். இதையும் அவர்கள் பின்பற்றியிருப்பார்கள். 3ம் நாள் யோசேப்பும், நிக்கோதேமும் வந்து பார்த்திருக்க வாய்ப்புண்டு. ஆனாலும் அவர்களை ஊழியத்திற்கு தேவன் அழைக்காததால் அவர்களைப் பற்றி எழுதாமல், சீஷர்களைப் பற்றியே எழுத வைத்திருக்கிறார் தேவன்.

**86. சீடர்களிடம் உயிர்த்தெழுந்த இயேசுவை காட்டுமாறு ஏன் யூதர்கள் கேட்கவில்லை? அப்படி சீடர்கள் காட்டியிருந்தால் மறுபடியும் யூதர்கள் இயேசுவை சிறைப்பிடிக்க முடியுமல்லவா?**

★ அப்படிக் கேட்டால், உயிர்த்த இயேசுவை காட்டிவிடுவார்களோ என்ற பயம் யூதர்களுக்கே இருந்திருக்கலாம்! இயேசு மரிக்கவில்லை - உயிர்க்கவில்லை என்று எந்த யூதர்களும் செய்திகளை பரப்பியதாக சரித்திரமே இல்லையே! மறுபடியும் சிறைபிடிக்க அவர்களுக்கு தைரியம் வரவே வராது; மட்டுமல்ல... அப்படி கேட்டு, காட்டியிருந்தால், அவர்களது பரிபாலனம், உல்லாச வாழ்க்கை, ஆசாரியம், ராஜரீகம் எல்லாம் போய்விடுமல்லவா!

**87. கல்லறைக்குப் போன பெண்கள் ஏன் பயந்து நடுங்கினர்? (மாற். 16:8)**

★ சுகந்த வர்க்கங்களை கொண்டு வந்தவர்களுக்கு கல்லறை திறந்திருக்கவே ஒரு திகில்; நடுக்கம். உள்ளே போனால், வெள்ளையங்கி தரித்த வாலிபன் உட்கார்ந்திருக்க கண்டு (தேவதூதன்) பயந்தார்கள் (மாற். 16:5). அங்கே பிரேதமும் இல்லை. 'பயப்படாதிருங்கள்' என்று அந்த தூதன் கூறியும், நடுக்கமும் திகிலும் பிடித்திருந்தபடியால், சீக்கிரமாய் கல்லறையை விட்டு வெளியே வந்துவிட்டார்கள். எல்லாப் பெண்களுக்கும் பொதுவாக, கல்லறைக்குள், இப்படிப்பட்ட சூழ்நிலையில், இப்படிப்பட்ட காட்சியை காணும்போது வரும் பயம்தான் இது. வேறொன்றுமில்லை.

**88. இயேசுவின் 12 சீடர்களில் அவரைத் தனிப்பட்ட முறையிலே நன்கறிந்த எவரேனும் எழுதிய இயேசுவின் வாழ்க்கை வரலாறு ஒன்றுகூட இல்லையே ஏன்? இயேசுவை நேரில் கண்டறிய வாய்ப்பில்லாதவர்களும், கண்டறியாதவர்களும் கூறும் சொற்கள், இயேசுவே கூறிய சொற்களுக்கு ஈடாகுமா?**

★ இயேசுவை நேரில் கண்டறிந்தாலும் கண்டறியாவிட்டாலும், வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டன (2 தீமோ. 3:16,17). எனவே அவைகள் சத்தியமானவைகள். மோசே, தேவன் படைத்ததையும், நோவாவையும், ஆபிரகாமையும், யோசேப்பையும் கண்டா எழுதினான்? சிந்தியுங்கள். மேலும், இயேசுவைப்பற்றி 4 சுவிசேஷங்களில் மத்தேயுவும், யோவானும் இயேசுவின் 12 சீடர்களில் இருவர் எழுதியது. அதில் யோவான் என்பவன் இயேசுவுக்கு மிகவும் நெருக்கமாயிருந்தவன் (யோ. 21:20). மட்டுமல்ல... அவர் சிலுவையில் மரிக்கும் போது, தன் தாயை பாதுகாக்கச் சொல்லுமளவுக்கு அன்புள்ளவன் (யோ. 19:27). முகமது, குரானின் நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் நேரில் கண்டா எழுதினார்?

**89. முதன்முதலில் எழுதப்பட்ட மாற்கு சுவிசேஷம் மிகக் குறைந்த விவரம் கொண்டுள்ளது. உண்மையில் முதலில் வந்தது நீண்டதாயிருக்க வேண்டுமல்லவா? பிற்காலத்தில் வந்த யோவான் சுவிசேஷம் பெரியதாய் இருக்கிறதே, காலம் போகப் போக ஞாபக சக்தி கூடுமோ? விந்தைதான்.**

★ 2 தீமோ. 3:16, 17ஐ விசுவாசிப்பவர்களுக்கு இந்த சந்தேகமே வராது. அந்தந்த சுவிசேஷகர் கண்ட, கேட்ட காரியங்களை, அவர்களின் ஞானம், அறிவு, பண்பாடு காலத்திற்கு ஏற்றபடி, ஆவியானவரின் ஒத்தாசையோடு எழுதப்படும் போது, எழுதப்பட்ட quantityயோ,

எழுதப்பட்ட காலமோ கணக்கில் கொள்ள தேவையில்லை. சத்திய சுவிசேஷ கருத்தைத்தான் கணக்கில் கொள்ள வேண்டும்.

**90. இயேசு பரமேறிச் சென்றதை சீஷர்கள் கண்டார்களாம். இந்த அதிசய நிகழ்ச்சி பற்றி கண்ட ஒருவர்கூட ஒரு வார்த்தை எழுதவில்லையே ஏன்? இது உண்மையில்லையா?**

★ மரணத்தை, தானே ஜெயித்து, உயிர்த்ததைக் கண்ட சீஷர்களுக்கு ஒலிவ மலையில் பரலோகம் ஏறிப்போனது பெரிய அதிசய நிகழ்ச்சியாக காணப்பட வாய்ப்பில்லை. அதைக் கண்டவர்கள், பரலோகம் போய் என்ன செய்கிறார் என்று ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டதே, விசுவாசிகளுக்கு தேவையான சத்தியம். 1 பேதுரு 3:22; 2 பேதுரு 3:4-14; 1 யோ. 2: போன்ற பல வசனங்களை வாசிக்கலாம்.

**91. யோ. 21:25ல், இயேசு செய்த அநேக காரியங்களை ஒவ்வொன்றாக எழுதினால், உலகம் கொள்ளாது என்று எழுதப்பட்டது நம்பத்தகுந்ததுதானா? மிகைப்படுத்தல் அல்லவா? இது போல சுவிசேஷத்தில் எவைகளையெல்லாம் இப்படி மிகைப்படுத்தி எழுதப்பட்டுள்ளன?**

★ ஒரு எழுத்தாளனின் உள்ளத்தை - உணர்வை - புரிந்தவர்களுக்கு, இந்த வசனம் தவறாய்த் தெரியாது. இயேசு செய்த காரியங்களின் மேன்மையை, மகிமையை, மகத்துவத்தை, மாட்சிமையை எண்ணி இந்த சுவிசேஷகன் எழுதியிருக்கிறான்; அவ்வளவுதான். நடந்த காரியங்களை உண்மைக்கு புறம்பாய் எழுதுவதுதான் தவறு. அப்படி எதையுமே வேதத்தில் காட்ட முடியாது.

**92. சுவிசேஷ மூல நூல்களுடன் பிற்சேர்க்கைகள், மாற்றங்கள், திருத்தங்கள், சேர்க்கப்பட்டன என்பதை அறிஞர் பெருமக்கள் ஏற்றுக் கொள்வதால் வேதத்தில் இடைச்சொருகல் இல்லை என்பதை எப்படி நம்புவது?**

★ மூல பிரதிகளே இல்லை என்று வாதிடும் நீங்கள் இந்த அளவுக்கு இருக்கின்றன என்று ஒத்துக் கொண்டதற்கே நன்றி. நாங்கள் வைத்திருக்கும் பழைய ஏற்பாடு, இயேசுவை ஏற்றுக் கொள்ளாத, சனகெரீம் மன்றத்தார் கி.பி. 90ல் சேகரித்து வைத்ததுதான். அதின் மூலப்பிரதி இலண்டன் மியூசியத்தில் உள்ளது. அப்படியே, பாரம்பரிய, பெயர்க்கிறிஸ்தவ சபையாரான, ரோமன் கத்தோலிக்க சபையாரின் மூலப்பிரதிகளைத்தான் நாங்கள் புதிய ஏற்பாடாக வைத்திருக்கிறோம்.

எனவே மாற்றப்பட்ட, திருத்தப்பட்ட, இடைச் சொருகல் பண்ணப்பட்ட வேதம் எங்களிடமில்லை. அப்படி சொல்லுவோர் யாராவது இருந்தால் அது அநியாயமானது; உண்மையில்லாதது; போட்டி மனப்பான்மைக் குரியது; பொறாமைக்குரியது.

**93. மன்னித்தல்தான் கிறிஸ்தவத்தின் அச்சாணி என்றால், குற்றவாளிகளை தண்டிப்பதற்கான கிறிஸ்தவ சட்டமே இல்லையா?**

★ ஒருவனின் குற்றம் மன்னிக்கப்பட்டுவிட்டால் அவனுக்கு தண்டனையே இல்லை. மன்னிப்பு பெறாமல், கேட்காமல், ஒருவன் குற்றம் செய்து கொண்டே இருந்தால், அவனைத் தண்டிக்க கிறிஸ்தவ சட்டம் உண்டா? சபைத்தலைவர் சபையைவிட்டு ஒதுக்கி வைக்கலாம்; 2, 3 சாட்சிகளை கொண்டு அபராதம் விதிக்கலாம்; தேவைப்பட்டால் அரசாங்க சட்டத்திற்கு உட்படுத்தலாம். மற்றப்படி மன்னிப்பு பெற்றவனை மறந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். கடைசிவரை அவன் மன்னிப்பு பெறாமல், உலகில் யாருக்கும் தெரியாமல் பாவம் செய்தால், இறுதி நியாயத்தீர்ப்பு தேவனிடம் உண்டே!

**94. இயேசுவின் போதனை யூதர்களுக்கு மட்டுமா? (மத். 10:5-6; 15:24) உலகம் முழுவதுமா?**

★ இயேசு மனிதனாய் இருந்தபோது கொடுத்த போதனைகள் முழுவதும் யூதர்களுக்குத்தான். அவர்கள் ஏற்றுக் கொள்ளாததால், அது தற்போது உலகமெங்கும் போகிறது (மத். 28:18-20). இயேசுவின் பரிபூரண சித்தமே, உலகம் முழுவதும் போதனைகள் போக வேண்டும் என்பதே அவர் அவா. (யோ. 3:16).

**95. இயேசுவின் சிலுவை மரணம்தான் பாவங்களை மன்னிக்கிறது என்றால், ஒருவர் தன் பங்குக்கு எதையும் செய்யாமல் (அதாவது நற்செயல்கள் செய்யாமல், தீயவைகளை விட்டு மீளாமல்), பாவச் செயலையும், தீய நடத்தையையும் தவிர்க்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தை மனித வாழ்வில் கைக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன?**

★ பாவச் செயலையும், தீய நடத்தையையும் தவிர்க்க வேண்டும் என்றால் கண்டிப்பாக அவன் நற்செயல்கள் செய்பவனாகவும், தீயவைகளை விட்டு மீள்பவனாகவும் இருப்பான். இப்படி நடக்க, ஆவியானவர் வேதக் கற்பனைகளை போதித்து நடத்துகிறார்.

இதற்காகவே சபையும், அதிலே 5 வித ஊழியங்களும் உண்டு (எபே. 4:11-13). அப்படியும் ஒருவன் வீழ்ந்து போனால் - பாவம் செய்தால் - அவன்மேல் கிருபையாய் இரங்கி, அவன் பெற்றிருக்கும் இரட்சிப்பை இழந்து போகாதபடி தேவன் அவனை தூக்கி எடுக்கிறார். அவனது பாவங்களை அறிக்கையிடச் செய்து, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சுத்திகரிப்பை தந்து, பழையபடி அவனை கிறிஸ்தவனாய் - கிறிஸ்துவுக்குப் பின்னாலே நடக்க வைக்கிறார் தேவன். "போ, இனி பாவம் செய்யாதே" என்கிறார் (யோ. 8:11 ). மறுபடியும் விழுந்தாலும் (ஏழு தரம் விழுந்தாலும்) தூக்கி எடுத்து மன்னிப்பு கொடுத்து நடத்துகிறவர் நம் தேவன். இதற்கு இரட்சிக்கப்பட்டவன் கொஞ்சமாவது ஒத்துழைத்து முன்வந்தே ஆக வேண்டும்.

**96. மோசேயின் நியாயப்பிரமாணத்தை அழிக்க வரவில்லை, நிறைவேற்ற வந்தேன் என்றார் இயேசு (மத். 5:17). ஆனால் பவுல், இயேசு நிறைவேற்றிய பிரமாண முறைகளை எந்த அதிகாரத்தில் ஒழித்துக் கட்டினார்? தன் மரணத்திற்குப்பின் இவைகள் அவசியமில்லை என்று இயேசு எங்காவது குறிப்பால்கூட உணர்த்தியுள்ளாரா?**

★ மத். 5:17ஐ படித்தவர்கள், 5:18ஐயும் வாசிக்க வேண்டும். "வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும் ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." அப்படியே, நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற வந்த இயேசு, நிறைவேற்றி முடித்தார். அத்தோடு நியாயப்பிரமாணம் ஒழிந்துபோயிற்று. ஆனாலும், பவுல், எதையெல்லாம் கைக்கொள்ள வேண்டாம் என்று தர்க்கம் வந்தபோது, பர்னபாவோடு, எருசலேம் போய், பேதுரு, யோவான், யாக்கோபோடு ஆலோசனை பண்ணி, ஒரு முடிவுக்கு வந்து அதை கடிதமாய் பெற்றுக் கொண்டுதான் தைரியமாய் போதித்தான். பவுல், தான் தோன்றித்தனமாக எதையும் செய்யவில்லை.

❖ ❖ ❖

# 5. இயேசு பற்றி குரான் சொல்வது என்ன?

1. **குரான் 3:39, 45; 4:171; 19:19-21 போன்ற வசனங்கள் இயேசு அல்லாவின் வார்த்தை என்று கூறுகிறது** (see யோ. 1:1, 14)

   **"அல்லாவின் வார்த்தையை யோவான் ஸ்நானன் உண்மைப்படுத்துவார்"** (குரா. 3:39)

   **"அல்லாவின் வார்த்தையை (கட்டளை - word - Law) அவன் மர்யமிடம் போட்டான்"** (குரா. 4:71).

2. **அல்லாவின் ஜீவன் - உயிர் இயேசு என்று குரான் (4:17; 21:91; 66:12 சொல்கின்றது.**

   "மர்யமிடம் நமது ஜீவனை (உயிரை) ஊதினோம்" (குரா. 66:12) (see யோ. 14:6).

3. **அல்லாவின் தூதர் இயேசு.**

4. **ஆதாமை உருவாக்கியது மண்ணிலிருந்து; ஆனால் அல்லாவின் வார்த்தையே இயேசுவானது. ஆதாமுக்குள் அல்லா சுவாசத்தை ஊதினான். அவன் ஜீவாத்மாவானான். (ஆதி. 2:7; யோபு 33:4; with குரான் 15:28, 29; 38:72). ஆனால் அல்லாவின் ஜீவனே மரியாளுக்குள் இயேசுவானது.**

   **இரண்டு (ஆதாம் மற்றும் இயேசு) உருவாக்குதலும் ஒன்றென்றால்:**

1. ஈசா பாவமே செய்யாதது போல, ஆதாமும் பாவம் செய்யக்கூடாதே!
2. இயேசு மரணத்தை ஜெயித்தது போல, (குரா. 3:45,46; 19:19) ஆதாமும் மரணத்தை ஜெயிக்கணுமே!
3. இயேசு பாவமன்னிப்பளித்தது போல ஆதாமும் செய்யணுமே! ஆதாமுக்கே பாவ மன்னிப்பு கிடைக்கவில்லையே!
4. ஆதாம் - son of God; இயேசு - Son of God.

5. குரா. 4:171 சொல்கின்றது இயேசுவை "ஈஸா ரூவல்லா" என்று. அதாவது தேவனுடைய ஆவி - வல்லமை உள்ளவர் என்று (யோ. 3:34).

6. குரா. 3:45 சொல்கிறது, "ஈஸா கலிமத்துல்லா" என்று. அதாவது அல்லாவுக்கு சமமானவர்.

7. "அல்லாவின் அருள் - மகிமை, ஈசா **(ரஹ்மான்)**" - குரா. 9:21

8. கன்னியிடமிருந்து அல்லாவின் வார்த்தை வந்ததால் இவர் ஜென்மப் பாவம் இல்லாதவர். (குரா. 3:47; 19:20, 21)

9. மனிதனாய் இருக்கும் போதே களிமண்ணால் பறவையை உருவாக்கியவர். எனவே இவர் சிருஷ்டிகர் (குரா. 3:49; 5:110) தேவன் ஒருக்காலும் தன் சிருஷ்டிப்பின் அதிகாரம் - வல்லமையை யாருக்கும் கொடுக்க மாட்டார்.

10. இயேசு "மேசியா" (ஈசா அல் மஸீ ஹ் - குரான் 3:45)

11. குரா. 3:55ன்படி இயேசு அல்லாவால் கைப்பற்றப்பட்டார்; உயர்த்தப்பட்டார்; மரித்தார்; உயிர்த்தார்; (கைப்பற்றுதல் = தேவஃப்பா = மரணம்)

குரா. 3:144-ன்படி முகமதுக்கு முன் வந்த தூதர்கள் (including Jesus) மரித்தனர்.

குரா. 5:117ல் அல்லா தன்னை கைப்பற்றியதை இயேசுவே சொல்கிறார்.

(குரா. 43:41ல் முகமது கைப்பற்றப்பட்டார் - அதாவது மரித்தார் என்று உள்ளதை கவனியுங்கள்)

"O Jesus, I will cause you to die, and exalt you to my presence and clear you of those who believe and make those who follow you above those who disbelieve till the day of judgement" - குரா. 3:54, 55 - **Edited** Zahid Aziz English translation Moulana Md Ali - originally)

**12. a)** குரான் 3:54ன்படி அல்லாவின் சூழ்ச்சியால், யூதர்களின் திட்டம் நிறைவேறவில்லை (குரா. 4:157). ஆனாலும் சாப்பிடுகிறவர்கள் எல்லாம் மரித்தே ஆக வேண்டும் என்று (குரா. 5:7 with 25:20) குரான் சொல்வதால், இயேசு மரித்தார் என்று ஆகிறது.

**b)** இயேசுவை, "நம்(அல்லாவின்) அருளாகவும் ஆக்குவோம்" (குரா.19:21).

13. **"இன்று வரை, மனிதனாய் பூமிக்கு வந்த ஈசா விண்ணுலகில் உயிரோடு இருக்கிறாராம். மீண்டும் பூமிக்கு நியாயந்தீர்க்க வருவாராம்"** அப்படியானால் இயேசு மனிதன் மட்டுமல்ல. மனிதனாய் வந்த தேவன். **முஸ்லீம்கள் கருத்துப்படி பூமிக்கு வரும் கடைசி நபி இயேசுவே!**

14. **நான் பிறந்த நாளிலும், நான் மரணிக்கும் நாளிலும், நான் உயிருடன் எழுப்பப்படும் நாளிலும் என் மீது ஸலாம் இருக்கிறது."** - குரான் 19:33. ஆக, ஈசா பிறந்தார்; மரித்தார்; உயிர்த்தார்.

15. **"வேதமுடையோரில், ஒவ்வொரு வரும், ஈசா மரணிப்பதற்கு முன் அவரை நம்பாமல் இருக்க மாட்டார்கள்." (குரா. 4:159)**

    இந்த வசனப்படி, இயேசு மீண்டும் வந்து மரணிப்பார் என்றும், அப்போது மரணிப்பின் முன், எல்லோரும் நம்புவார்கள் என்றும் முஸ்லீம்கள் சொல்கின்றனர். அவர் மீண்டும் எப்படி வருவார்; வந்து எப்படி மரணிப்பார்; எப்படி உயிர்ப்பார்; என்று குரானில் விளக்க மில்லையே!

    எனவே இந்த வசனம், முதல் முறை நடந்த மரணம் என்றும், அப்போதே பலர் அவரை நம்பினார்கள் என்றும் அறிவோம். உதாரணத்திற்கு நிக்கோதேமு, யோசேப்பு, சீஷர்கள், ஒலிவமலையில் நின்றோர், பிலாத்தின் மனைவி, கண்ட 500 பேர், விசுவாசித்து நன்மையைப் பெற்றோர், புறஜாதிகள் என்று சொல்லிக் கொண்டே போகலாம். இனிமேல் வரும்போது நம்புவார்கள் என்றாலும், அந்த நம்பிக்கை இயேசுவே "தேவன்" என்றுதானே.

16. **நியாயத்தீர்ப்பு கொடுப்பவர் இயேசுவே (குரா. 43:61; 4:159)**

17. **"உமக்குமுன் தூதர்களை அனுப்பினோம். அவர்களுக்கு மனைவியரையும் மக்களையும் ஏற்படுத்தினோம்."** (குரான் 13:38).

    இந்த வசனத்தை வைத்துக் கொண்டு, முஸ்லீம்கள் இயேசுவை திருமணமானவர் என்கிறார்கள். அப்படியானால், யஹ்யா, இல்யாஸ், யூனூஸ் போன்றோர் திருமணமானவர்களா? இல்லையே! எனவே இந்த வசனத்திலிருந்து விதிவிலக்கான இவர்களில் இயேசுவும் ஒருவரே!

18. **“நான் உயிருடன் இருந்து என் தாயாருக்கு நன்மை செய்பவனாகவும், இருக்கும் காலமெல்லாம் தொழுமாறும், ஸகாத் கொடுக்குமாறும் எனக்குக் கட்டளையிட்டான்.”** (குரா. 19:31, 32) இதன்படி, இயேசு சாகாமல் உயிருடன் இருக்கிறா ரென்றால், அவர் ஸகாத் கொடுக்க வேண்டுமல்லவா? ஏன் கொடுக்கவில்லை. அவர் மரித்து, உயிர்த்து, பரலோகம் போய்விட்டார். அல்லேலூயா!

19. **குரா. 4:157ன்படி, இயேசு மரிக்கவில்லையாம்; சிலுவையில் ஆள்மாறாட்டம் செய்யப்பட்டதாம், அப்படியானால்,**

அ. இந்த ஆள்மாறாட்டம் செய்யும் பொல்லாத காரியம் தான் குரா. 3:54, 55ன்-படியான அல்லாவின் சூழ்ச்சியா?

ஆ. அவர் மரித்தார் என்று சரித்திரம் சொல்வது பொய்யா?

இ. ரோம சர்க்கார் செய்தது தான் தவறா? ரோம போலீஸ் துறை பேர் பெற்றதல்லவா!

ஈ. இன்னொருவரை, யோசேப்பு (நூற்றுக்கதிபதி) தனது புதிய கல்லறையில் புதைப்பானா?

உ. இன்னொருவருக்காக வேதபாரகன் நிக்கோதேமு, கல்லறைக்கு பரிமளதைலம் பூச வருவானா? இன்னொருவரின் அடக்கத்திற்கு விசுவாசமுள்ள ஸ்திரிகள் கல்லறைக்கு வருவார்களா?

ஊ. இன்னொருவர் சாகடிக்கப்பட்டிருந்தால் கல்லறையை ஏன் காவல் பண்ண வேண்டும்?

எ. எழுதப் படிக்க தெரியாத முகமது சொல்ல, அதை மற்றவர்கள் எழுத, பின் அது குரானாக வெளிவந்திருக்கிறதே. அது சொல்வது மட்டும் உண்மை; கிட்டத்தட்ட 40 வேத எழுத்தாளர்களால் பலகால கட்டங்களில் எழுதப்பட்ட பைபிள் கூறுவது பொய்யா?

❖ ❖ ❖

**இயேசு சீக்கிரம் வருகிறார்!**
**ஆயத்தமாவோம்!!**
**ஆயத்தமாக்குவோம்!!!**

# 6. இயேசு பற்றி முஸ்லீம்களின் கேள்விகள்

1. **பாவ நிவர்த்தி இல்லாமலே அல்லாவால் மன்னிக்க முடியும். எனவே பாவநிவர்த்தி தேவையில்லை. ஒரு மனிதனுடைய மரணம் எப்படி பலருடைய பாவங்களை நிவர்த்தி செய்ய முடியும்?**

**"பாவம் செய்கிற ஆத்மா சாகும். குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தை சுமப்பதுமில்லை. தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தை சுமப்பதுமில்லை."** (எசேக்கியேல் 18:20) **என்ற வசனத்திற்கு விரோதமான செயல்பாடுதானே இயேசுவின் பாவநிவாரணம். பாவ மன்னிப்பு இயேசுவின் மரணத்தை சார்ந்ததானால், அவர் மரிக்குமுன்னும் பிறப்புக்கு முன்னும் பாவமன்னிப்பு அருளியது எப்படி? எல்லாருக்காகவும் பாவ நிவர்த்தி செய்தாரானால் அது, சங். 49:8க்கு விரோதமானது.**

★ குரா. 5:27-ன்படி ஆபேல், காயீன் பலி செலுத்தினார்களே ஏன்?

குரா. 23:102-107ன்படி, "ஆபிரகாமின் மகனுக்குப் பதிலாக, ஒரு மகத்தான பலியை - ஆட்டைநாம் பகரமாக்கினோம்" என்று உள்ளதே ஏன் அந்தப் பலி?

குரா. 2:196-ன்படி பலி எதற்காய் செலுத்த வேண்டும்?

குரா. 5:3 (6:143)ன் படி ஏன் அறுத்துப் பலியிட வேண்டும்? **இவைகளெல்லாம் சிந்தனைக்குரியவை.**

ஒரு கொலைக்கே, நஷ்ட ஈடுகொடுத்து அல்லது நோன்பு நோற்று, அல்லாவிடம் மன்னிப்பு பெற வேண்டும் என்று குரா. 4:92ல் சொல்லப்பட்டுள்ளது. நஸயீ 4719ன்படி, 100 ஒட்டகங்கள் அல்லது 200 மாடுகள் அல்லது 2000 ஆடுகள் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று முகமது சொல்கிறார். அப்படியானால் பாவமன்னிப்புக்கு, பாவ நிவர்த்தி தேவைப்படுகிறதல்லவா! பாவநிவர்த்தி இல்லாமல் அல்லாவாலும் மன்னிக்க முடியாது அல்லவா! 2 மாத நோன்போ, 100 ஒட்டகமோ

ஒரு கொலைக்கு நிவர்த்தியானால் தேவ குமாரனாம் இயேசுவின் மரணம் - இரத்தம், பலருடைய பாவங்களுக்கு நிவர்த்தியாகாதா?

மரணம் என்றாலே உயிரை விடுதல். மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. (லேவி. 17:11) இரத்தம் சிந்தினால் உயிர் போய்விடுகிறது. இயேசுவின் மரணத்தில் சிந்தப்பட்ட இரத்தம் மனித இரத்தமா? இவர் ஆணின் வித்தினால் பிறக்கவில்லை; தேவனால், கன்னியின் வயிற்றில் பிறந்தார் என்று இஸ்லாமும் சொல்கின்றது. அப்படியானால் இவரது இரத்தம் மனித இரத்தமல்ல; பரலோகத்திலிருந்தே வந்த சரீரத்தின் விலையேறப் பெற்ற ஜீவ இரத்தம் - தேவ இரத்தம் (சங். 40:6-8 in செப்டு வாஜிந்; யோ. 6:51; 8:23; 1 கொரி. 15:47)

மத். 26:28: ஏசாயா 53:12 போன்ற வசனங்களின்படி இயேசுவின் ஜீவன் - இரத்தம் - உலகிலுள்ள எல்லா மனிதர்களுக் காகவும் கொடுக்கப்பட்டது என்று அறிகிறோம். மனுஷன் தேவனுடைய சாயலின்படி படைக்கப்பட்டிருக்கிறான் (ஆதி. 1:26). எனவே இந்த மனிதனின் இரத்தத்தை ஒருவன் சிந்தினால் - அதாவது அவனது உயிரை ஒருவன் எடுத்துவிட்டால் - அது படைத்த தேவனையே கொல்லுவது போலாகும். தேவனுக்கு விரோதமான பயங்காரச் செயலாகும். இப்படியாய் கொஞ்சம் செய்தாலும், அதிகம் செய்தாலும் அதற்குப் பெயர் தான் பாவம். கொலை மட்டுமல்ல. தேவன் தன் சாயலாய்ப் படைத்த மனித ஜீவன்களுக்கு எதிராக நடக்கும் அத்தனை செயல்பாடுகளும் பாவம்தான். இப்படியாய் நடக்கும் பாவத்தின் உச்சகட்ட முடிவு - பலன் தான், மரணம் (ரோமர் 5:12: 6:23, யாக். 1:15). இப்படியாய் உச்சகட்ட காரியத்தை செய்பவனுக்கு அதே போன்ற உச்சகட்ட பலன் - முடிவுதான் சம்பவிக்கும் (ஆதி. 9:6). உலக நீதிமன்றங்களும் இதைத்தான் கைக்கொண்டு, ஜெயில், மரணம் போன்ற தண்டனைகளைத் தந்து இரத்தம் சிந்த வைக்கிறது. ஆக, பாவநிவர்த்தி இல்லாமல் மன்னிப்பு எங்குமே கிடையாது என்று அறிகிறோம். (லேவி. 17:11, 4, 6; 19:22; யாத். 29:36; எபி. 9:22)

இப்படியாய் ஒவ்வொரு உச்சகட்ட பாவம் செய்பவனுக்கும், பாவநிவர்த்தி இப்படியாய் இரத்தம் சிந்தி உயிரை விடுவது என்றால், உலகில் மனித இனமே இல்லாமல் போய்விட வாய்ப்பு உண்டல்லவா! மட்டுமல்ல, உச்சகட்ட பாவம் செய்தவன் திருந்தி வாழ வழியும்

இல்லை அல்லவா! அவன் செய்த பாவத்திற்கான தண்டனை அப்படியே இருக்கின்றதல்லவா! இது போன்ற உச்சகட்ட பாவம் பல செய்தால், அதற்காக பலமுறை இரத்தம் சிந்தி மனிதன் பலமுறை உயிரை விட முடியாதல்லவா! பக்தியுள்ள சந்ததி உருவாக விரும்பி மனிதனைப் படைத்த தேவன் (மல். 2:15) அந்த சந்ததி அழிந்து போக விரும்பாமல், அந்த மனிதனின் மனம்மாற - பாவம் செய்யாதிருக்க - உச்சகட்ட மனித இரத்தம் சிந்தாதபடிக்கு, அதற்கு ஒப்புமையாய், காளை - வெள்ளாட்டுக்கிடா போன்ற பலிமுறைகளை உருவாக்கி, அவைகள் இரத்தம் சிந்தி மரிக்கும்போது ஒரு மாற்றத்தை மனிதனுக்குள்ளே உண்டாக்க விரும்பி, ஒவ்வொருவனின் இதயத்திலும் ஆதியிலேயே இக்கருத்தை சொல்லி வைத்து, பின் நியாயப்பிரமாணமாய் கொடுத்தார். எவ்வளவு பலி செலுத்தினாலும், தேவனின் தீர்மானத்தின்படி பாவம் செய்த மனித இரத்தம் சிந்துதல் தானே பாவத்திற்கான முழுபரிகாரம்! (ஆதி. 9:6). எனவே தான், இந்த நிழலான மிருகபலிக்கு முடிவாக நிஜமான பலியாக, தேவ இரத்தத்தால் மனிதனாய்ப் பிறந்த இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தம் சிந்தப்பட்டது. குரானில் சொன்னபடி 100 ஒட்டகங்களின் விலையா இந்த தேவனின் இரத்தம்? சிந்தியுங்கள்.

இயேசுவின் இரத்தம் சிந்தும் முன்னே பாவமன்னிப்பு அருளப்பட்டது. யாருக்கு? “இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை” என்ற விசுவாசம் உள்ள சந்ததிக்கு மட்டுமே. என்ன மன்னிப்பு எப்போது பெற்றாலும், அந்த விசுவாச சந்ததி (இஸ்ரேலர்) கண்டிப்பாக பாவத்திற்கான பரிகாரம் நிழலாட்டமாய் செலுத்தியே இருக்கிறது. நிஜம் வந்தது; நிழலாட்டப்பலி முடிந்துவிட்டது. இனி பாவ நிவாரணமாகிய இயேசுவின் இரத்தத்தை விசுவாசிப்பதால் பாவமன்னிப்பு வந்துவிடுகிறது.

“தனது செல்வத்தை நம்பி பெருமை பாராட்டுகிற எவனும் பாவ நிவர்த்தி செய்யலாகாது” என்று சங்கீதம் 49:6-8 சொல்கின்றது. நம் இயேசுவோ, தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷசாயலானார் (பிலி. 2:6). எனவே இவரது பாவநிவர்த்தி எல்லோருக்காகவும் செய்யப்பட்டது என்பது மிகவும் உறுதியாகிறது (யோ. 3:16; 1:29).

இயேசு மாம்சத்தில் வந்த தேவன் (1 தீமோ. 3:16; கொலோ. 2:9); வெறும் நம்மை போன்ற மனிதரல்ல. பாவமன்னிப்புக்கென்று சிந்தப்பட்ட அவருயை இரத்தமும் மனித இரத்தமல்ல; அவரும் பாவமற்றவர் என்று குரானும் ஒத்துக் கொள்கின்றது. எனவே எசே. 18:20ன்படி இது நடக்கவில்லை.

2. **தந்தையில்லாமல் இயேசு கன்னியிடம் பிறந்ததால் அவர் கடவுளா? ஆதாமுக்கு தந்தை இல்லையே! மெல்கிசேதேக்குக்கும் தாய் - தகப்பன் இல்லையே! "ஸ்திரியினிடத்தில் பிறந்தவன் சுத்தமாயிருப்பதில்லை." (யோபு 25:4) உபா. 28:20; 13:5; எரே. 14:14,15; சக. 13:3ன்படி ஈனச்சிலுவையில் அறையப்பட்டார் என்றால் இயேசு ஒரு பாவிதானே?**

**"அதற்கு இயேசு, நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே." (லூக்கா 18:19) என்ற வசனப்படி இயேசு தன்னை பாவமற்றவர் என்று குறிப்பிடவில்லையே, பைபிள்படி அவர் பாவிதானே! அவர் எப்படி பாவநிவர்த்தி தரமுடியும்?**

★ இப்படி கேள்வி கேட்கும் சகோதரனே! உங்கள் குரானே அவர் பாவமற்றவர் என்று சொல்லும்போது, அதற்கு விரோதமாய் பேசுவது **உங்கள் அல்லா பார்வையிலே அது பாவமல்லவா.**

கன்னியிடம் பிறந்தார் என்று கூறும் குரான், ஏன் அப்படி பிறந்தாரென்று எங்காவது விளக்கியிருக்கிறதா? முஸ்லீம்களாவது நியாயமான பதில் கூறமுடியுமா? தேவனிடத்திலிருந்த தேவனுடைய வார்த்தை மாம்சமாகி தேவ இரத்தத்தால் பிறந்தார். குரானும் அப்படியே சொல்கின்றது. (குர். 3:39, 45; 4:171; 19:19-21). அப்படி அவர் பாவமில்லாதவராய் வந்து, நமக்காய் பாவமாக்கப்பட்டு (2 கொரி. 5:21; ஏசாயா 53) இரட்சிப்பைத் தந்தார். மண்ணால் உருவாக்கப்பட்ட ஆதாம், இரட்சிப்பைத் தரவில்லை; அவன் பாவியானான்; பாவசந்ததியை உற்பவித்தான். அப்படியே மெல்கிசேதேக்கும் தாய்-தந்தை யாரென்ற ரிக்கார்டே இல்லையே ஒழிய அவனும் மனிதன்தான். சாலேமின் ராஜாவும், ஆசாரியனும் அவனே (எபி 7).

யோபு 25:4ல், ஸ்திரியிடம் பிறப்பது என்பது ஆணில்லாமல், இயேசுவைப் போல் பிறப்பதல்ல; நாம் பிறப்பது போன்றது (மத். 11:11ல் "ஸ்திரியிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனை பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை.")

ஆதாமின் பாவசந்ததியில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இயேசு பிறக்காததால் இவர் பாவ ஜாதி அல்ல. தேவ இரத்தத்தால் பிறந்ததால் இவர் பரிசுத்தரே. (அப். 20:28; எபி. 10:5; சங்கீதம் 40:6-8; யோ. 6:51; 1 கொரி. 15:47).

இயேசு பாவியல்ல என்று காட்டிக் கொடுத்த யூதாசும், நீதிபதி பிலாத்தும், பிலாத்தின் மனைவியும், நூற்றுக்கு அதிபதியும், பரலோக சத்தமும், ஏன் இயேசுவின் வார்த்தையும் சாட்சியிடுகின்றன. அவர் பிதாவாகிய தேவனால், நமக்காய் - நம் இரட்சிப்புக்காய் - பாவநிவர்த்திக்காய் - பாவமாக்கப்பட்டார். அவ்வளவுதான்; அதுவும் நம்முடைய பாவத்தை சுமந்ததால் தான் (2 கொரி. 5:21; யோவான் 3:16; 1:29; மத். 26:28; ஏசாயா 53:12). எனக்குள் பாவம் உண்டென்று யாரென்னைக் குற்றப்படுத்தக் கூடும் என்று சொன்ன ஒரே சரித்திரப் புருஷர் அவர் (யோ. 8:46).

இப்போது லூக்கா 18:19ஐ வாசியுங்கள். தன்னை நல்லவர் என்று அந்தத் தலைவன் சொன்னதால் நல்லவர் தேவன் மட்டும் தானே என்று விளக்கி, அந்த நல்ல தேவன், "நானே" என மறைமுகமாக ஏற்றுக் கொண்டு, இயேசு அப்படியாய் பதில் கூறினார். மற்றப்படி தன்னைப் பாவியென்று, இங்கோ, வேறு எங்குமோ அவர் சொல்லவே இல்லை.

3. **ஆதாமின் பாவத்தால் அவன் பிள்ளைகள் எப்படி பாவியாக கருதப்படுவார்கள்? (see உபா. 24:16; எசே. 18:20; எரே. 31:29,30). ஆதாமின் பாவந்தான் மன்னிக்கப்பட்டாயிற்றே! (see குரான் 20:122.) இதைத்தான் சாலமோன் ஞானம் என்ற புத்தகத்தில் 10:1லும், ஆதி. 3:22, 23லும் சொல்லப்பட்டுள்ளதே.**

மனிதன் பிறக்கும் போதே பாவியாகப் பிறக்கிறான் என்றோ, அந்த பாவங்களைத் தான் சுமந்து கொண்டு என் உயிரைப் பலி கொடுக்கிறேன் என்றோ, இயேசு கூறவே இல்லையே! இயேசுவுக்கு முன் வாழ்ந்த நீதிமான்கள், கிறிஸ்தவர்களைப் போல, சிலுவைப்பலி கொள்கையை நம்பவில்லை. அவர்கள் நீதிமான்கள் என்பதால் பிறவிப்பாவம் ஒன்றும் அவர்களிடம் இல்லை;

★ முஸ்லீம்கள் கருத்துப்படியே, ஆதாமின் பாவம் மன்னிக்கப்பட்டது என்றால், அது அவன் சந்ததியை தொடராது. அது மன்னிக்கப்பட வில்லையெனில் தொடருந்தானே! ஆதாம் மூலமாய் வாழ்வும் வளமும் அவனது பரம்பரையைத் தொடர்கிறது என்றால், பாவமும்,

சாபமும், தண்டனையும் தொடர வேண்டுமல்லவா? ரோ. 5:4-ன்படி ஆதாமால் மரணம்; இயேசுவால் ஜீவன் மனிதனுக்கு வருகிறது.

**பாவங்களிலே,**

1. ஆதாமால் நம்மைத் தொடர்கிற **ஜென்மபாவம்.**

2. நம்முடைய கிரியைகளால் வரும் **கர்மப் பாவம்** என இருவகை உண்டு. இயேசுவின் மரணத்தை - பாவ நிவர்த்தியை விசுவாசிப்பவர் களுக்கு இவைகள் நீங்குகின்றன. விசுவாசிக்காத நிலையில், ஜென்ம பாவமும், அதற்கான சாபமும் இறுதிவரை தொடரும்.

## கர்ம பாவத்தில்:

1. தேவனுக்கு மட்டுமே தெரிந்த பாவம்.

2. மனிதன் நியாயப் பிரமாணப்படி கண்டுபிடித்த பாவம் என இரண்டு வகை உண்டு. தேவனுக்கு மட்டும் தெரிந்த பாவமும் அதற்கான சாபமும், இயேசுவின் மரணத்தை - பாவ நிவர்த்தியை விசுவாசிக்காத நிலையில், 3ம், 4ம் தலைமுறை மட்டும் தொடரும் (யாத். 20:5) ஆனால், நியாயப்பிரமாணப்படி மனிதர்கள் கண்டுபிடித்த பாவமோ, அதற்கான சாபமோ, லேவி 23:1-3ன்படி 10ம் தலைமுறையும், அதற்கு மேலும் வரும். (see எரேமியா 23:32 also). ஆனால் அந்தந்த மனிதனின் பாவத்தின் உடனடி பலன் - அதாவது தண்டனை, விசுவாசியாயிருக்கிற அவன் பிள்ளைக்குப் போகாது. (சாபம், நாம் பாவத்தால் சுதந்தரிப்பது; தண்டனையோ தேவன் கொடுப்பது - see 1தீமோ. 5:24). எனவே, பாவமுள்ள ஆத்மா தான், நரகம் - 2ம் மரணமாகிய தண்டனையை அடையும். இதைத்தான் உபா. 24:18; எசே. 18:20; எரே. 31:29, 30 மற்றும் வெளி. 22:12; 2 கொரி. 5:10ல் சொல்லப்பட்டுள்ளது.

ஆதாமின் பாவம் சொர்க்கத்திலேயே மன்னிக்கப்பட்டது என்று குரான் 20:122ல் சொல்வது உண்மையானால், மன்னிக்கப் பட்டவனை அங்கேயே வைத்திருக்க வேண்டியது தானே! ஏன் குரான் 20:123ல் அவனை அல்லா பூமிக்குத் தள்ளினார்? **"அவரை (ஆதாமை) மன்னித்து நேர்வழி காட்டினான். இருவரும் ஒட்டுமொத்தமாக இங்கிருந்து இறங்குங்கள்."** குரான் முன்னுக்குப்பின் முரணாய் பேசுகிறதா? அவர்கள் சொல்லும் "சாலமோனின் ஞானம்" என்ற புத்தகம், நமது பைபிளில் இல்லை. அது தள்ளப்பட்ட ஒன்று. அதிலிருந்து வசனத்தைக் காட்டி, ஆதாமின் பாவம் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதை நம்பமுடியாது.

தேவன், நன்மை தீமை அறிந்தவர். ஆதாமும் பாவம் செய்த பின் தான் அப்படியே ஆகிவிட்டான். அதற்குமுன் நன்மை மட்டுமே அவனுக்குத் தெரியும். இந்த நிலையில், பாவம் செய்த பின் அவன் மன்னிப்பு கேட்பதும், கேட்காதிருப்பதும் அவனது சுயாதீனம். நன்மை அறிந்த மனிதர்கள் பாவம் செய்வதில்லையா? அல்லது பாவம் செய்துவிட்டு மறைப்பதில்லையா? அல்லது பாவத்திற்கு மன்னிப்பு பெறாமல் இருப்பதில்லையா? அப்படித்தான் ஆதாமும் ஏவாளும். ஆதி. 3:22, 23ஐ வைத்து அவன் மன்னிப்பு கேட்டானென்றால், அவனை ஏன் ஏதேனுக்கு திரும்பி வராதபடி துரத்திவிட்டார்? சிந்தியுங்கள். (ஆதி. 3:24) ஆதி.4-ல் பாவம் செய்யாத ஆபேலும், காயீனும் ஏன் பலி செலுத்தினார்கள்? ஆபேலின் பலி மட்டும் மேன்மையானது எப்படி? அவனுக்கு நீதிமானென்ற சாட்சி கிடைத்து, பாவ ஜாதியிலிருந்து, தேவ ஜாதியில் சேர்ந்தது எப்படி? (எபி. 11:14). சிந்தியுங்கள்.

மனிதன் ஆதாமின் பாவ ஜாதியில், பாவியாய் பிறக்கவில்லை என்றால், சங். 51:5ல் "என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்று ஏன் சொல்ல வேண்டும்? தாவீதின் தாய் - தகப்பனிடம் உடலுறவா பாவம்? அல்லது அவன் தாய்க்கு தவறான வழியிலா தாவீது பிறந்தார்? இல்லையே! இது என்ன பாவம்? மேலும் பாவநிவர்த்தி செய்ய, ஒரு ஜோடு காட்டுப் புறாவையும், இரண்டு புறாக்குஞ்சுகளையும் இயேசுவின் காலத்தில் பலி செலுத்தப்பட்டதே. இது எந்த பாவத்திற்காக? (லூக். 2:24 with லேவி. 12:8, 27:26). வலுசர்ப்பமாம் சாத்தானுக்கு தேவன் தண்டனை கொடுக்கும் போது, அது இயேசு வரும்போது நிறைவேறும் என்று ஆதி. 3:15ல் சொல்லப்பட்டிருக்கிறதே அது எந்தப் பாவத்திற்காக? அது எப்படி நிறைவேறியது? ஆபேல் முதற்கொண்டு, பாவம் எண்ணப்படும் நியாயப்பிரமாணம் காலம் வரை, பலி செலுத்தப்பட்டு வந்ததே, அது எந்த பாவத்திற்கு பிராயச்சித்தமாக? (ரோ. 5:13). எல்லாமே ஆதாமின் வழியாய் பூமிக்கு வந்த ஜென்ம பாவத்திற்குத்தான். நியாயப்பிரமாணத்திற்குப் பிறகு தான், கர்மப்பாவம் எண்ணப்பட்டு, அதற்கும் பலிசெலுத்தப்பட்டது. பலிகள் எல்லாமே, வந்து பலியாகப் போகும் மேசியாவை முன் நிறுத்தியே செய்யப்பட்டன. ஆமென். (எபி. 11:4). மேசியா வந்தார்; பாவ நிவாரண பலியானார். அந்த அடையாள மிருகப்பலிகள் நின்று போயின (Refer மத். 5:17, 18; ரோ. 10:4). அதை விசுவாசிக்கிறவன் நீதிமானாக்கப்படுகிறான்.

ஒருமுறை, விபசார ஸ்திரீயை இயேசுவிடம் கொண்டு வந்தபோது, “உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்” என்று சொன்னதும், பெரியோர் முதல் சிறியோர் வரை போய் விட்டார்களே ஏன்? சிறியோரும் பாவிகளா? இங்கே இயேசு கேட்டது - “பாவம் செய்யாதவர்கள்” என்று அல்ல; “பாவமில்லாதவர்கள்” என்று தான் (யோ. 8:7). ஆக, உலகத்திலுள்ள அத்தனை பேரும் பாவமுள்ளவர்கள்தான்; அதாவது ஆதாமின் ஜென்ம பாவம் உள்ளவர்கள்தான். 1 யோ. 1:8-ஐ தியானித்தால் உண்மை புரியும். ஆக, ஆதாமின் பாவம், நாம் இரட்சிக்கப்படும் வரை தொடரும். ஆமென். ஜென்ம பாவம், கர்மபாவம் போன்ற எல்லா பாவத்தையும் சுமந்து தீர்க்கிற நிஜமான ஆட்டுக்குட்டியாய் இயேசு வந்தார்; பலியானார். (யோ. 1:29; மத். 26:28). இதை இயேசு சொன்னார்; அவருக்கு முன் வந்த யோவான் ஸ்நானனும் சொன்னான்.

இயேசுவுக்குமுன் வாழ்ந்த இஸ்ரேலர்கள், சிலுவைப் பலி கொள்கையை நம்பியதால் தான் நிழலாட்டமான பலிகளை ஆதி முதல் செலுத்தினார்கள். அதுவும் அவர்களின் சொந்த பாவத்தை உணர்த்தும் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் முன்பே (ஆதி. 31:54; 46:1) லேவி 23ல் சொல்லப்பட்ட நிழலாட்டமான பண்டிகைகளை, தங்கள் இதயத்தில் தேவன் ஏவப்பட்டபடியே ஆசரித்தார்கள். அவர்கள் விசுவாசத்தில் இவைகளைச் செய்ததால், நீதிமான்களானார்கள். (எபி.11). அதனாலே அவர்களிடத்திலே பிறவிப் பாவம் இல்லை. ஆமென்.

4. **கிறிஸ்துவின் மரணமானது கிறிஸ்தவர்களை சாபத்திலிருந்தும், தண்டனையிலிருந்தும் தப்பிக்கவில்லையே!**

★ சாபம் வேறு; தண்டனை வேறு. இயேசுவின் மரணத்தை - இரத்தம் சிந்துதலை - விசுவாசித்து அறிக்கையிடுகிறவர்களின் சாபங்கள் நீங்குகின்றன (கலா. 3:13). தண்டனை நீங்காது. தண்டனை கொடுத்தவர் தேவன் தான் அவர் வருகையிலே மாற்றுவார். ஆதி. 2:17-சாபம்; ஆதி. 3:14-19 - தண்டனை. சாபங்களும் தண்டனைகளும் ஜென்மப் பாவத்தாலும் வரும்; கர்மப் பாவத்தாலும் வரும். (see 1 தீமோ. 5:24)

5. **லூக்கா 13:33ன்படி, எருசலேமுக்குப் புறம்பே ஒரு தீர்க்கதரிசியும் மடிந்து போகிறது இல்லை என்று இயேசு சொன்னதால், இயேசு மரிக்கவே இல்லை என்று ஆணித்தரமாக நம்பலாம்.**

★ லூக்கா 13:21-33 வரை வாசியுங்கள். இப்படிச் சொன்ன போது, இயேசு கலிலேயாப் பகுதியிலே இருந்தார். கலிலேயாவைத் தலைநகராய்க் கொண்டு, ஏரோது ஆள்கிறான். இஸ்ரேல் தேசம் அப்போது 3 பகுதிகளாய் பிரிக்கப்பட்டு ரோம சர்க்காரின் கீழ் இருந்தது. எருசலேமை தலைநகராகக் கொண்டு பிலாத்து ஆள்கிறான். இரண்டிற்குமுள்ள தூரம் 3 நாள் பிரயாணம். ஏரோது, இயேசுவை கொல்லப் போகிறான் என்று பரிசேயர்கள் அவரிடம் சொல்லுகிறார்கள். அதற்குத்தான் அவர், "எருசலேமுக்குப் புறம்பே கலிலேயா பகுதியில், ஒரு தீர்க்கதரிசியும் மடிவதில்லை. 3ம் நாளில் எருசலேம் போய்விடுவேன். அங்கே தான் என் மரணம் என்று அந்த நரிக்குச் சொல்லுங்கள்" என்கிறார். அப்படியே ஆயிற்று. அல்லேலூயா! தான் மரிப்பேன் என்று பேதுருவிடம் சொன்னபோது, அவன் "கூடாது" என்றதால், "சாத்தானே, அப்பாலேபோ" என்றாரே! ஆக, இயேசுவின் மரணத்தை எதிர்த்துப் பேசுவோர் சாத்தானால் நடத்தப்படுபவர்கள் என்று அர்த்தம் (மத். 16:21-23). இயேசு, தான் மரிப்பேன் என்று பலமுறை சொல்லியிருக்கிறார் (மத். 17:22; 20:18; 16:2) பழைய ஏற்பாட்டிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

6. **யோனாவின் அடையாளம், இயேசுவுக்கு என்பதால், யோனா, 3 நாள் மீன் வயிற்றில் மரிக்காமல் இருந்தபடியே இயேசுவும் மரிக்கவில்லை.** (மத். 12:39, 40).

★ மத். 12:41-ஐ வாசித்தால் "இயேசு யோனாவிலும் பெரியவர்" என்று புரியும். எப்படி? அவன், மீனுக்குள் 3 நாள் மரிக்காமல் உயிரோடிருந்து வெளியே வந்தான். இயேசுவோ, பூமிக்குள் - கல்லறைக்குள் 3 நாள் இருந்து (உயிரோடே பூமியின் இதயத்தில் இருக்க முடியுமா?) மரணத்தை ஜெயித்து, உயிரோடு வந்ததால் தான் பெரியவர். அல்லேலூயா! மரணத்தை ஜெயித்தவர் யோனாவிலும் பெரியவர்தானே! (ஏசாயா 25:8) ஆமென். "பூமியின் இதயத்தில் இருப்பார்" என்று சொல்லியிருப்பதால், அவர் மரிக்காமல் எப்படி இருக்க முடியும்? சிந்தியுங்கள்.

7. **மிருகப் பலி, மேசியாவின் பலிக்கு நிழலாட்டமென்றால், எபி. 13:11-ன்படி இயேசுவின் உடல் சுட்டெரிக்கப்பட்டதா? இல்லையே, எனவே இது நிழலாட்டமல்ல.**

★ இரட்சிப்பு என்பது, பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்று, நீதிமானென்ற பட்டம் பெறுவதாகும். (ரோமர் 10:9, 10). இதற்கு

இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பில்லை (எபி. 9:22; லேவி. 17:11; மத். 26:28; 1 யோ. 1:7). இயேசுவின் மரணம் - உயிர்த்தெழுதலே இதற்கு நிஜம். மற்றப்படி, சுட்டெரிக்கப்படுதல் - அதாவது தேவனுக்குகந்த தகனபலியாதல் எல்லாமே, இரட்சிக்கப்பட்ட பின் நம்மிடத்தில் நிகழ வேண்டிய மாற்றங்களுக்கு நிழலாட்டமாகும். இயேசு கிறிஸ்து, கோர்ட்டில் நிற்கும் குற்றவாளியாகிய நம்மைப் போல், நமது பாவங்களை ஏற்று நிற்கிறார்; நமக்காய் பரிந்து பேசும் வக்கீலாகவும் நிற்கிறார்; நம்மை ஜாமீனில் எடுக்கும் ஜாமீன்தாரராகவும் நிற்கிறார்; தீர்ப்பு வழங்கும் நீதிபதியாகவும் இருக்கிறார். இவ்வளவும் தான் மரணம் - இரத்தம் சிந்துதல். ஜாமீனில் வந்தவன், குற்ற நிவாரண பலி, பாவ நிவாரண பலிக்கான பாவமன்னிப்பை மட்டும் பெற்றிருந்தால் மட்டும் தேவனுக்குப் பிரியமில்லை. பூரண புருஷராக கடந்து போக வேண்டுமானால், இயேசுவின் வருகையில் அவன் இணைய வேண்டுமானால் பிசாசின் கிரியையை சிலுவையிலறைந்து, தேவ கிருபையால் தகனிக்க வேண்டும். இதற்கு அடையாளமாய் தான் சர்வாங்க தகனபலி, போஜன பலி, சமாதான பலி ஆகியவை நிழலாட்டமாய் செய்யப்படுகிறது. பாவநிவாரண நாள் பண்டிகையின்படி, பலியாடாய் இயேசு பலியாகிறார்; நமது பாவங்களை சுமந்து போக்காடாய் விரட்டப்படுகிறார். மற்றபடி பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமாகிறது நம் கையில் தான் இருக்கிறது. அதற்குத் தேவை தேவகிருபை. இதற்கு நிழலாட்டம் தான் தகனபலி. ஆமென்.

**8. எசே. 28:9, அப். 5:30யும் வாசித்தால், இயேசு கொல்லப்பட்டதால் அவர் தேவனா? "உன்னைக் குத்திப் போடுகிறவன் கைக்கு நீ மனுஷனேயல்லாமல் தேவனல்லவே."**

★ இரத்தம் சிந்தவே, வார்த்தையாகிய தேவன் மனிதனாக வந்தார். (யோ. 1:1, 14; 1 தீமோ. 3:16; பிலி. 2:6-8); மரித்தார். மரித்தவர் மனுஷகுமாரன் தானே ஒழிய, தேவனாய் மரிக்கவில்லை. தேவனுக்கு மரணமே இல்லை. அவர் யேகோவா.

**9. இயேசு உயிர்த்தது போலவே, பரிசுத்தவான்களும் கல்லறையிலிருந்து உயிர்த்ததால் (மத். 27:52, 53) இயேசுவின் உயிர்த்தெழுதல் ஒன்றும் பெரிதல்ல; அவர் தேவனுமல்ல.**

★ இயேசு உயிர்த்தார் என்று சொன்னதற்கே கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இயேசு உயிர்த்ததால் தான், மனிதர்களுக்கு உயிர்த்தெழுதல் கிடைக்கிறது. (see 1 கொரி. 15:14). உயிர்த்தெழுதலில் முதற்பலன்

இயேசு (கொலோ. 1:18; வெளி. 1:5). அதன்பின் மற்றவர்கள் வரிசைப்படி உயிர்த்தெழுவர் (1 கொரி. 15:20-23). அப்படி எழுந்தவர்கள் தான் மத். 27:52, 53ல் உள்ளவர்கள். இவர்களும், இயேசு உயிர்த்தபின் தான், கல்லறையை விட்டு வெளியே வந்தார்கள். மனிதனாய் வந்த தேவனின் உயிர்த்தெழுதலே சத்தியத்திற்கு சாட்சி. அதனாலேயே அவர் தேவன் (ரோமர் 1:5)

**10. உயிர்த்தெழுந்த இயேசு, தன்னை சிலுவையிலறைந்த மக்களிடமும், ஆசாரியர்களிடமும் காட்சி தரவில்லை? காட்சி தராததால், அவர் உயிர்த்தெழுந்தது உண்மையல்ல, கட்டுக்கதை.**

★ தனது சீஷரிடம், ஸ்திரிகளிடம், ஏன் தம்முடைய 500 பேர்களிடம் காட்சி தந்ததாக வேதத்தில் உள்ளதே! விசுவாசம் என்பது எபி. 11:1-ன் படியானது.

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப் படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது."

இந்த விசுவாசம் தான் தேவன் எதிர்பார்ப்பது. இந்த விசுவாசம், ஊழியம் செய்ய அழைக்கப்பட்ட சீஷர்களிடமும், அவரது ஸ்திரிகளிடமும், இல்லாததால், அது வரவேண்டும் என்று அவர்களுக்கு காட்சி தந்தார். மற்றப்படி, உயிர்த்தெழுந்ததைக் காட்டி, எதிரிகளை தன்பக்கம் இழுக்க முயற்சிப்பது அல்ல சுவிசேஷம். அப்படியானால், மனிதனாய் வந்து மரித்து உயிர்த்தெழாமல், வானத்திலிருந்தே அவர் குதித்திருக்கலாமே! அவர்களிடம் காட்சி தரவில்லை என்பதால் உயிர்த்தெழுதல் கட்டுக்கதையாகுமா? இயேசு உயிர்த்தெழுவார் என்று பயந்துபோன ஆசாரியர்களே கல்லறையை முத்திரையிட்டனர். சீஷர்கள் இயேசுவை திருடிப் போனார்கள் என்று காவலாளிகள் பொய் சொல்லும்படியாய்த் தானே காசு கொடுத்தனர். இன்றுவரை, இந்தப் பேச்சு யூதருக்குள்ளே இந்நாள் வரைக்கும் பிரசித்தமாயிருக்கிறது. (மத். 28:15) They knew well that Jesus resurrected and hence there is no necessity to show to them. அவர்கள் எங்காவது, இயேசு உயிர்த்தெழவில்லை என்று சொன்னதாக வசனங்கள் உண்டா? அப்படிச் சொல்லியிருந்தால், அதற்குப் பதிலடி அப்போஸ்தலர்கள் கொடுத்திருப்பார்களே!

**11. இறந்துபோன இயேசுவை குத்தியபோது, இரத்தமும் தண்ணீரும் வெளிவந்தது என்பது மரித்தார் என்பதை மறுதலிப்பதாகவே உள்ளது.**

★ மருத்துவ விஞ்ஞானம் சொல்கின்றது: "மாரடைப்பால் இறந்த உடனே குத்திப் பார்த்தால், இரத்தமும் தண்ணீரும் வரும்" என்று. அமெரிக்க, மாசசூஸட்ஸ் பொது மருத்துவமனையில் இதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஜேம்ஸ் சிம்ப்சன் என்ற விஞ்ஞானியும், ஆராய்ச்சியாளர் ஜேம்ஸ் தாம்சன், டாக்டர் சாமுவேல் உஹாவீடன் போன்றோர் இதை ஒத்துக் கொள்கிறார்கள். எனவே இயேசு இருதயம் வெடித்து மரித்தார் என்பது உண்மையிலும் உண்மை.

**12. இயேசுவின் சீடர் பர்னபா எழுதிய சுவிசேஷத்தில், இயேசு தேவனால் பாதுகாப்பாய் எடுத்துக் கொள்ளப்பட்டார் என்றும், யூதாஸ் தான் தேவனால், இயேசுவைப் போல் உருவம் மாற்றி, யூதர்களால் சாகடிக்கப்பட்டான் என்றும் உள்ளது.**

★ பர்னபா எழுதியதாக சொல்லப்படும் சுவிசேஷத்தை நம்புவோர், ஏன் நம் வேதத்தை நம்புவதில்லை? நம் வேதத்தில் கூட, தங்களுக்குப் பிடித்தமான - ஆதரவான வசனங்களை மாத்திரம் எடுத்துக் கொண்டு மற்றதெல்லாம் பொய் - இடைச்சொருகல் என்கிறார்களே ஏன்? பாவி யூதாசை, இயேசுவைப் போலாக்கி, இயேசுவுக்காக அவனை நம் தேவன் சாகடிப்பாரா? குர். 3:54, 55ன் படி சூழ்ச்சி செய்யும் அல்லா வேண்டுமானால் அப்படிச் செய்தார் என்று அவர்கள் நம்பினால்,அப்படிச் செய்பவர் தேவனா? அப்படியானால், இயேசுவை உலகிற்கு அனுப்பியது எதற்கு? முஸ்லீம்கள் சொல்லும் பர்னபாவின் சுவிசேஷம், கிறிஸ்தவர்கள் ஒருவரும் ஏற்றுக் கொள்ளாதது. தள்ளப்பட்டது.

**13. இயேசு மரித்திருந்தால் அந்த 3 நாட்களும் உலகம் எப்படி இயங்கியது?**

★ தேவரகசியம் - திரித்துவம் - புரிந்தால் தான் இது புரியும். தேவன் ஒருவர் உண்டு. அவரிலிருந்து பூமிக்கு வந்தவர் தான் இயேசு. இயேசு பூமிக்கு வந்து மரித்தாலும், மண்ணோடு மண்ணுக்குள் இருந்தாலும், தேவன் - God - Diety - Godhead - கர்த்தத்துவம் என்றென்றும் உண்டல்லவா! சூரிய ஒளி பூமிக்கு வந்தாலும், சூரியனும் அதன் ஒளியும் அந்த கிரகத்தில் உண்டல்லவா! மட்டுமல்ல... இயேசுவின் சரீரம் தான் மரித்தது, அவரது ஆவியும், ஆத்மாவும் ஜீவனோடு தான் இருந்தது. உலக இயக்கம் தடைபடும் என்ற வாதம் பகுத்தறிவு உள்ளது அல்ல.

**14. இயேசு சிலுவையிலறையப்பட்டார் என்று ஏன் எண்ணுகிறீர்கள்?**

★ இயேசு, தீர்க்கதரிசிகள், ரோம சர்க்கார், யூதாஸ், ஆதி அப்போஸ்தலர்கள், சரித்திர ஆசிரியர்கள் ஆகிய எல்லோரும் சொல்வதால் எங்கள் எண்ணம் - விசுவாசம் - இன்னும் உறுதியாகிறது.

**15. மரணத்திற்கு தப்பும்படி ஜெபித்தவர் (எபி. 5:7) மரிப்பாரா?**

**"அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி..."**

★ கெத்சமனேயில் அப்படி ஜெபித்தார். எந்த மரணத்திற்கு தப்பும்படி? சிலுவை மரணத்திற்கா? இவர் வந்ததே, சிலுவையில் மரித்து இரட்சிப்பு கொடுக்கத்தானே! இந்த மரணம் நடக்கக்கூடாது என்று சொன்ன பேதுருவையே "அப்பாலே போ சாத்தானே" என்று சொன்னவராயிற்றே. இந்த வசனத்தை தியானத்தோடு படித்தால் உண்மை புரியும். எந்த மரணத்திற்கு தப்பும்படி ஜெபித்தார்? கெத்சமனேயில் Heart attack வரப்பண்ணி, இரத்த வியர்வையை உண்டாக்கி, இயேசுவை சிலுவை மரணத்தில் சாகவிட்டு உலகம் முழுவதற்கும் இரட்சகராக ஆக்கவிடாமல், இங்கேயே சாகடிக்க பிசாசு எண்ணினான். அந்த மரணத்தினின்று விடுதலை வேண்டுமென்று தான் இயேசு ஜெபித்தார். ஜெபித்தபடியே, வானத்திலிருந்து தேவதூதன் மூலமாய் பதில் வந்தது. அவர் கல்வாரி சிலுவையில் தான் மரித்தார்; ஒப்புக்கொடுத்து மரித்தார்; கீழ்ப்படிந்து மரித்தார்; எல்லாவற்றையும் நிறைவேற்றிவிட்டு மரித்தார். அல்லேலூயா.

**16. வெகுசிலரே தம்முடைய மரணம், உயிர்த்தெழுதலை விசுவாசிப்பார்கள் என அறிந்து, அந்த கொஞ்ச மக்களுக்காக மட்டும், தேவன் மனிதனாக வந்து மரிக்க மாட்டாரே?**

★ ஒரே ஒரு ஆத்மா இரட்சிக்கப்பட்டாலே பரலோகிலே சந்தோஷம் என்பதால் (லூக். 15:7) அவர் அந்த ஒரு சிலருக்காகவே மரித்தார் என்றாலும், அது மகா சந்தோசம் தான். மேலும் இரட்சிக்கப்படாமல் நரகம் போகிறவன், "இயேசு எனக்காக மரிக்கவில்லை; எனக்கு இரட்சிப்பு சொல்லப்படவில்லை; எனக்குத் தெரியாது" என்றெல்லாம் கியாமத் நாளில் - நியாயத்தீர்ப்பு நாளில் சொல்லாதபடிக்கு, எல்லாருக்காகவும் மரித்தார்.

**17. இயேசு மரிக்காமலே இருந்ததால் தான், தன் காயப்பட்ட சரீரத்தை, தோமாவுக்கு காட்டினார். (யோ. 20:27).**

**உயிர்த்தெழுந்திருந்தால், எப்படி மாம்சமும் எனும்பும் அவரால் சீஷர்களுக்கு காட்ட முடியும்? (லூக்கா 24:39)**

★ இயேசு மாம்சத்தில் கொலையுண்டார்; ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டார். (1 பேதுரு 3:18) அவர் உயிர்த்தபோது, ஒருவரும் அவரைப் பார்க்கவில்லை. ஆவிக்குரிய மேனி (உயிர்த்தெழுந்த) யாருக்கும் தெரியாது; மாம்சக் கண்களால் காணவும் முடியாது (1 யோ. 3:2). ஆவியிலே உயிர்த்தவர், புறம்பான, மனுஷ - பழைய அவரது ரூபத்தையே, சீஷர்களுக்கு காட்டினார் அவர்கள் நம்பும்படியாய். அவர் ஆவியிலே இருக்கும் போது, இப்படியாய் காட்ட வல்லமை உண்டு. ஆதி. 18-ல் கர்த்தரே மனித ரூபத்தில் வெளிப்பட்டார்; தேவ தூதர்கள்கூட - ஆவியாயிருப்போர்கூட - மனிதர்கள் பார்க்கும் ரூபத்தில் வெளிப்பட்டனர். எனவே அவர் எப்படி வேண்டுமானாலும் காட்ட வல்லமை உண்டு. அப்படிக் காட்டிய போதும், அவர் மரித்து உயிர்த்த இயேசு தான்.

18. **கலா. 3:13 (உபா. 21:23)ன்படி சிலுவை, சபிக்கப்பட்டவர்கள் தொங்குவது. அது எப்படி புனிதமாகும்? அதிலே சபிக்கப்பட்ட இயேசு எப்படி கடவுள்?**

★ சிலுவை ஈனச் சிலுவை தான்; ரோம சர்க்காரின் பயங்கர குற்றவாளிகளுக்காக தண்டனை அதில் தான். ஆனால் இயேசு குற்றவாளி அல்ல என்று, நீதிபதி, யூதாஸ், நூற்றுக்கதிபதி போன்ற பலரும், ஏன் இயேசுவும் கூட பறை சாற்றியிருக்கிறார்கள். யூதர்களின் அழுத்தத்தால் பிலாத்தால் கொடுக்கப்பட்ட தண்டனை இது. உலகத் தோற்றத்திற்கு முன்பே இது அறியப்பட்டது (வெளி. 13:8; யோ. 3:14-18) அதற்காகவே தேவனாயிருந்த இயேசு மனித ரூபமெடுத்தார் (ஆதி. 3:15, எபி. 10:5, பிலி. 2:4-6, யோ. 1:1, 14). அதற்காகவே பாவமாக்கப்பட்டார். (2 கொரி. 5:21) மனுக்குலத்தின் பாவம் போக்க இரத்தம் சிந்தினார்; சிலுவையிலறையப்பட்டார். (எபி. 9:22, லேவி. 17:11; மத். 26:28). அவர் பாவியல்ல.

மேலும், உயிரற்ற, உணர்வற்ற, சிலுவை மரக்கட்டையை பரிசுத்தமாக்க இயேசு இரத்தம் சிந்தவில்லை. பாவியாகிய நீயும், நானும் நீதிமானாகவே இரத்தம் சிந்தினர். (ரோமர் 3:23; 1 கொரி. 6:11). சிலுவை புனிதமென்று பிசாசு பலரை சொல்ல வைத்துவிட்டதால் இப்படிப்பட்ட கேள்வி எழும்பியுள்ளது.

**19. இயேசு உணவு உண்டு, மலஜலம் கழித்து, தாய்ப்பால் குடித்து (லூக்கா 11:27) வாழ்ந்ததால் அவர் தேவனா? மரித்தார் என்றால் அவர் தேவனா? இயேசு தேவனின் மகன் என்றால், தேவன் குழந்தையை பிறப்பிப்பாரா? இயேசு படைக்கப்பட்டவரே! வருகையின் நாளையே அறியாத மனிதர்! (மாற்கு 13:32). அவர் மனுஷகுமாரன் என்று தான் பல இடங்களில் அவரே சொல்லியிருக்கிறார். அவர் தேவனானால். தேவனுக்கு பசிக்குமா? (மத். 21:18, 19)**

★ அவர் தேவனாய் பூமிக்கு வரவில்லை; தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார் (1 தீமோ. 3:16) அவர் பூமியில் தேவனாய் வாழவில்லை. மனிதனாய்த் தான் வாழ்ந்தார். எனவே மனிதன் போல உணவு, பால் எல்லாம் உண்டார். ஆபிரகாமை சந்திக்க மனித ரூபத்தில் வந்த கர்த்தர் சாப்பிட்டாரே! (ஆதி. 18)

தேவனின் மகன் என்றால், தேவனுக்குப் பிறந்தவர் என்று அர்த்தமல்ல; தேவனின் மகிமை, மாட்சிமை, வல்லமை, அதிகாரம் எல்லாம் கொண்டவர் என்று பொருள் (மத். 26: 63-65). தாவீதின் குமாரன் (மத். 23:42), அதிகாலையின் மகன் (ஏசாயா 14:12), இடிமுழக்கத்தின் மகன் (மாற்கு 3:17), ஆறுதலின் மகன் (அப். 4:36) என்றால் பொருளென்ன? மகனா? (குரா. 3:7ல் கூட இரண்டு அர்த்தம் உண்டு என்று இருக்கிறதே).

இயேசு படைக்கப்படவில்லை. சங்கீதம் 2:7க்கு விளக்கம் அப். 13:32, 33ல் உள்ளது. வார்த்தையானவர், மாம்சமாகி, மரியாளுக்குள் இருந்து மனிதனாய்ப் பிறந்தார். (யோ. 1:1, 14).

இயேசு என்ற பெயரில் மனிதனாய் பூமியில் வாழ்ந்ததால், அவர் வருகையின் நாளை அவர் அறியவில்லை. But now He knows.

இவர் மனிதனாய் வாழ்ந்ததால் கண்டிப்பாய் பசிக்கும் (see எபி. 2:18).

**20. இயேசு அனுப்பப்பட்ட நபிதான். ஒரே தேவன் பிதா தான். (யோ. 17:3, 4; ஏசாயா 46:9; உபா. 4:35; 6.4-6; யாத். 20:3)**

★ தேவன் ஒருவர்தான். அவரை பிதா என்று அழைக்கிற ஒரே வேதம் நமது வேதம் தான். அதை அதிகம் சொல்லிக் கொடுத்தவர் இயேசு. God-Hebல் ஏலோஹிம் - More than two personalities. அதிலே

ஒன்றுதான், அவரது வார்த்தை மாம்சமாகி, இயேசு என்ற பெயரில் பூமிக்கு வந்தது. இன்றும் அதே separate identityல் தான் இயேசு இருக்கிறார். தம்முடைய ராஜ்யத்தை பிதாவாகிய தேவனிடம் ஒப்படைத்தபின் (1 கொரி. 15:22-24) ஒரே நிலையாகிவிடுவார்கள். யோ. 17:3ன்படி, ஒரே பிதாவாகிய தேவனை, மனிதனாய் வந்த இயேசுவைக் கொண்டுதான் அறிய முடியும். அப்படி அறிந்தால்தான் நித்திய ஜீவன்.

21. **இயேசுவும் பிதாவும் ஒருவரல்ல (யோ. 10:30; 14:10, 20; 17:21, 22). "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்."** (யோ. 10:30)

★ மனுஷகுமாரன் இயேசுவும், பிதாவும் different personality தான். ஆனால் மகிமை, மாட்சிமை, வல்லமை, அன்பு, ஒருமனப்பாடு, எல்லாவற்றிலும் இருவரும் ஒன்றே. அப்படி அவர்கள் தனித்தனி personalityயாக இருந்தாலும், ஒன்றாயிருப்பது போல, தனித்தனி personalityல் உள்ள கிறிஸ்தவர்கள் எல்லாரும், இருக்க வேண்டும் என்பதுதான் இயேசுவின் ஜெபம் (யோ. 17:21, 22). இரண்டு ஆளாயிருக்கும், புருஷனும், மனைவியும் ஆதி. 2:24-ன்படி ஒன்றா யிருப்பது போல. இதைத்தான், நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்று இயேசு சொன்னார். மனிதனாய் வந்தபின்பு இரண்டு personality. ஆதியிலே தேவனுக்குள் வார்த்தை (யோ. 1:1)

22. **அற்புதங்கள் செய்ததால் இயேசு தேவனல்ல; இவர்போல அற்புதம் செய்தோர் உண்டே!**

★ அற்புதம் செய்வதால் மட்டும் இயேசு தேவனல்ல என்று நாங்களும் சொல்கின்றோம். யோ. 14:12ன்படி அவரிலும் மேன்மையான வைகளை நாமும் செய்வோம் என்று அவரே சொல்லியிருக்கிறாரே! சொன்னபடியே பிறந்து, சொன்னபடியே மரித்து, சொன்னபடியே உயிர்த்த சரித்திரப் புருஷன் என்பதால் தான் அவரைத் தேவன் என்கிறோம். (ரோ. 1:5)

23. **உயிர்த்தெழுந்தார் என்று சொன்னாலும் அவர் மனிதரே! அதனால்தான் உயிர்த்தபின் தேவனிடம் போக வேண்டும் என்று மரியாளிடம் கூறுகிறார்: மாம்சமும் எலும்புகளும் உண்டென்கிறார். நம்மைப் போல் புசிக்கிறார் (லூக்கா 24:36-43). அவர் அதரிசமான தேவனாய் இருந்தால் எப்படி காட்சி தருவார்?**

★ உயிர்த்தெழுந்தாலும், இன்று வரை மனிதனாக - மனித ரூபத்திலேயே காணப்படுகிறார். அப். 17:31-ன்படி நியாயத்தீர்ப்பு வரை அப்படித்தான் இருப்பார். ஆவியாலே உயிர்க்கப்பட்டவர், மனிதரூபத்தில் காட்சியளித்தார். மாம்சமும் எலும்பும் உள்ள சரீரமாய் காட்சி தருகிறார். (see ஆதி. 18; 32: 24, 25). பூட்டப்பட்ட வீட்டுக்குள் நம் சரீரம் வருமா? நம் சரீரம் போல் காட்டுகிறார். அவ்வளவுதான். தன்னை பேய், பிசாசு - அசுத்த ஆவி - என்று யாரும் எண்ணிவிட கூடாது என்று (லூக். 24:36-44). உண்மையிலேயே உயிர்த்தெழுந்த மேனி, பழைய அவர் சரீரம் போல் தான் இருக்கும். நம் பூமிக்குரிய சரீரமாயிருந்தால், அது பரலோகம் போகாதே. (1 கொரி. 15:50) அவர் காட்சி தந்த சரீரத்தோடே தானே பரலோகம் போயிருக்கிறார். அப்படியானால் அவர் காட்டிய சரீரம் நம் பூமிக்குரிய சரீர அமைப்பில் இருந்தாலும், அதன் தன்மை - பரலோகிற்கு உரிய நிலையில் இருக்கும் என்று உணர்கிறோம். அவரது சரீரம் பரலோகிலேயே உருவாக்கப்ப்ட்டதாயிற்றே. (எபி.10:5; சங்.40:6-8 in sept.)

மறுரூபமான நாமும் பரலோகில் புசிப்போம்; அவரோடு திராட்சை ரசம் குடிப்போம். (மத். 26:29). தேவ தூதர்கள் கூட பரலோக மன்னாவை சாப்பிடுகிறார்கள். எனவே உயிர்த்தெழுந்த இயேசு சாப்பிட்டது சரியே. நம் சரீரத்தில் விழுதல் உண்டு. அங்கே அப்படி ஏதுமில்லை. மேலும், பாவ மன்னிப்புக்கென்று சிந்தப்பட்ட இரத்தம், பிரதான ஆசாரியனால், மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு கொண்டு போக வேண்டுமென்பதால், பிரதான ஆசாரியராகிய இயேசு, பிதாவிடம் போகிறேன் என்று மரியாளிடம் கூறியிருக்கிறார் (see எபி. 90:22-24). போனதையும், திரும்பி வந்ததையும் யாரும் பார்க்கவில்லை.

**24. மத். 11:11; லூக். மத்.3:15ன்படி இயேசுவைவிட யோவான் ஸ்நானன் பெரியவர் தானே! "ஸ்திரிகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும், பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை." (மத். 11:11)**

★ உலக மனிதர்கள் போல, ஸ்திரி வழியாய் பிறந்தவர்கள் மத்தியில் யோவான் ஸ்நானன் பெரியவன்தான். ஆனால் இயேசு அப்படிப் பிறந்தவரல்ல. மத். 3:11-15ன்படி இயேசுவே பெரியவர். நீதியை நிறைவேற்ற இயேசு சொன்னதால் தான், அவருக்கு யோவான் ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்தான். மற்றப்படி அவனிலும் பெரியவருக்கு ஞானஸ்நானம் கொடுக்க மாட்டானே!

**25. இயேசு கடவுளானால் கடவுளுக்கு துன்பம் ஏன்? (யோ. 12:27; மத். 26:38-45; 27:48; மாற். 14:36; லூக். 22:44)**

★ நம்மைப் போல் மனிதனாய் இயேசு இருந்ததால் தான் துன்பப்பட்டார். ஆனாலும் துன்பத்தை ஜெயித்து நமக்கு விசுவாசத்தை ஊட்டினார். (யோ. 16:33).

**26. மதுபானம் அருந்துபவர் தேவனா? (மத். 11:19). விபச்சாரம் செய்யாதவர் என்றால், இவரே அந்த விபச்சார ஸ்திரியை தண்டித்திருக்கலாமே. (யோ. 8:3-11) கோபக்காரர் தேவனா? (மத். 12:34,39; 15:26; 23:33)**

★ மத். 11:19-ஐ வாசித்தால், இயேசு போஜனம் பண்ணத்தான் வந்தார்; ஆனால் மற்றவர்களோ இவர் போஜனப் பிரியனாகவும், மதுபானப் பிரியனாகவும் வந்தார் என்று எண்ணினார்கள். இயேசு போஜனப்பிரியருமல்லல; மதுபானப் பிரியருமல்ல.

பாவியை தண்டிப்பது - கல்லால் எறிந்து கொல்லுவது - தேவசித்தமல்ல; பாவியைத் திருந்த வைப்பதுதான் தேவசித்தம். அதைத்தான் யோ. 8:3-11ல் செய்து காட்டினார். கோபம் தேவனிடம் இல்லையேல், ஆக்கினை - நியாயத்தீர்ப்பு எப்படி தேவன் செய்வார்? யாராயிருந்தாலும், கோபம் கொண்டாலும் பாவம் செய்யக் கூடாது என்பது தேவ சித்தம். (எபேசி. 4:26)

**27. தனக்கு ஞானஸ்நானம் கொடுத்த குருநாதனை காக்க முயற்சிக்காமல், ஒதுங்கியவர் தேவனா? (மத். 4:12)**

★ தனக்கு ஞானஸ்நானம் கொடுத்தவர், இரத்த சாட்சியாய் மரிப்பார் என்று அறிந்துதான், அதைத் தடுக்க இயேசு முயற்சிக்கவில்லை.

**28. கடவுள், பிசாசினால் சோதிக்கப்படுவாரா? (மத். 4:1; யாக். 1:13)**

★ இல்லை. ஆனால் மனிதனாய் வந்து, மனிதநிலையில் இருந்த இயேசு சோதிக்கப்பட்டது சரிதான்.

“அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு, உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். (எபி. 2:18)

**29. கடவுளுக்கு விருத்தசேதனமா?**

★ இயேசு யூதஜாதியில் மனிதனாய் பிறந்ததால், நியாயப்பிரமாணப்படி மனித நிலையில், விருத்தசேதனம் பண்ணப்பட்டது. தேவனுக்கு அது கிடையாது! அவர்தான் ஆணோ, பெண்ணோ என்ற வெளிப்பாடு

இல்லையே! பரலோகம் போய்த்தான் அறியமுடியும். அப்படியிருக்க கடவுளுக்கு விருத்த சேதனமில்லையே.

**30. இஸ்ரேலருக்காக மட்டும் வந்த நபி இயேசு (மத். 15:22-28)**

**"அதற்கு அவர்: காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனே அன்றி, மற்றப்படியல்ல என்றார்."** (மத். 15:24)

★ இயேசுவின் முதலாம் வருகை பிரதானமாய் யூதர்களுக்காகத்தான். ஆனாலும் புறஜாதிகளுக்கும் விசுவாசம் அவரால் உருவாக்கப்பட்டது. உதாரணம்:- சமாரிய ஸ்திரி (யோ. 4:4-34); புறஜாதிகள் மத். 4:14-16); கானானிய ஸ்திரி (மத். 15:22-28); நூற்றுக்கதிபதி (மத். 8:5-10); உலகம் முழுவதும் (யோ. 3:16).

"தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகால், நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."

இஸ்ரேலர்கள் அவரை ஏற்றுக் கொள்ளாததால், அந்த வருகையின் பலன், யோ.3:16-ன் படி நமக்கு வந்தது. (மத். 28:18-20; அப். 9:15; ரோமர் 11)

**31. குரானில் சொல்லப்பட்டிருக்கிறது:-**

**1. இயேசு தந்தையின்றிப் பிறந்தார்**

**2. அவர் இறைவனின் மகனல்ல; அவர் தூதர்தான்**

**3. இயேசுவை சீடர் காட்டிக் கொடுக்கவில்லை; அவர் கொல்லப்படவுமில்லை.**

**4. அவர் சில அற்புதங்கள் அல்லாவால் செய்தார்.**

**5. இவர் இஸ்ரேலருக்கு மட்டுமே தூதர்.**

**6. இவர் திருமணம் செய்தார். (ஒரு சிலர் இவர் திருமணம் செய்யவில்லை).**

**7. முகமது பற்றி முன்னறிவித்தார்.**

★ நீங்கள் எப்படி எங்கள் வேதத்தில் உங்களுக்கேற்றவைகளை மட்டும் எடுத்துக் கொண்டு, மற்ற வசனங்களை தள்ளி விடுகிறீர்களோ அல்லது தவறாய் கையாள்கிறீர்களோ, அப்படியே உங்கள் குரானிலுள்ள வசனங்களையும், நாங்கள் செய்ய முடியும். ஆனாலும், நாங்கள் குரானை முற்றிலும் நம்புவது இல்லையே! அது தேவனாலல்ல;

ஜிப்ரியேல் தூதனால் தரப்பட்டதாமே! நாங்கள் நம்பும் தூதன் அவன் அல்லவே அல்ல! தேவதூதன், நமக்கு வேலைக்காரன் என்று தான் நாங்கள் விசுவாசிக்கிறோம். (எபி. 1:14) அவனைக் கண்டு, முகமது போல் பயப்படுகிறவர்கள் நாங்களல்ல. மேலே குரானில் சொல்லப்பட்ட 7 காரியங்களில், முதல் காரியம் மட்டுமே சரியானது.

**32. இயேசு தெய்வமானால் அவரிடம் ஜெபிக்காமல் ஏன் பிதாவிடம் ஜெபிக்கிறீர்கள். இயேசுவிடம் ஜெபித்தால் பதில் கிடைக்காதா?**

★ வார்த்தையாயிருந்த தேவன், இயேசு என்ற பெயரில் மனிதனானார். அவர் மரித்து, ஆவியிலே உயிர்த்து, மனித ரூபத்தோடு, பரலோகில் நமக்காய் பரிந்து பேசிக் கொண்டு இருக்கிறார். (1 யோ. 2:1). நியாயத்தீர்ப்பு வரை அவர் மனித ரூபம்தான். (அப். 17:31). எனவே, “அந்நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றும் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ, அதை அவர் உங்களுக்குத் தருவார்.” (யோ. 16:23). மற்றும் யோ. 15:16, 14:13 போன்ற வசனங்களின்படி, அவர் மூலமாய் பிதாவிடம் தான் ஜெபிக்க வேண்டும். After judgement He will be one - in - all. எனவே தான் பிதாவை நோக்கி இயேசுவின் நாமத்தால் ஜெபிக்கிறோம்.

**33. கிறிஸ்துவும், மோசேயும், விவாகரத்து குறித்து முரண்பட்ட கருத்துக்களை தந்துள்ளனர். ஏன்? இதன்மூலம் இயேசு நியாயப்பிரமாணத்தை ரத்து செய்தார் என அறிகிறோம்.**

★ விவாகரத்து கூடாது என்பது தேவசித்தம் (மத். 19:5, 6). நம் இருதயக் கடினத்தினிமித்தம், தேவன் விட்டுக் கொடுத்து (permissive will), தம் சித்தத்தை (perfect will) நிறைவேற்றவே அந்தந்த காலத்திற்கேற்ப, மோசே மூலமும், கிறிஸ்து மூலமும், தருகிறாரே ஒழிய, மற்றப்படி இயேசு நியாயப்பிரமாணத்தை ரத்து செய்ய வரவில்லை; நிறைவேற்றவே வந்தார் (மத். 5:17). அவர் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றிவிட்டதால், மத்.5:18; ரோமர் 10:4; எபி. 8:13; எபே. 2 :14, 15 போன்ற வசனங்களின்படி அவரது மனித சரீர மரணத்தோடு, அது தற்போது இல்லாமல் போய்விட்டது.

**34. தேவனுடைய வார்த்தை எப்படி தேவனாக முடியும்?**

★ “ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது.” (யோ. 1:1)

இந்த வசனப்படி வார்த்தை தேவனே! வெளி. 19:13-ன்படி அவருடைய பெயரே வார்த்தை! போனிலோ, ஒலிநாடாவிலோ ஒருவர் பேசும் வார்த்தையைக் கேட்டாலே, இது இன்னாருடையது, இன்னாரின் வார்த்தை என்று சொல்கின்றோமல்லவா! நமது வார்த்தை, நம்முடையதாய் இருந்தால் மட்டுமே, பிரமாணங்கள், வாக்குமூலங்கள், கோர்ட் காரியங்கள் போன்ற எல்லாமே உறுதிப்படும். அப்படியே, தேவனின் வார்த்தை, தேவன் தான். நமது வார்த்தையை யாராவது மறுதலித்தால் நம்மை மறுதலிப்பது போல; நமது வார்த்தையை புகழ்ந்தால் அது வார்த்தைக்குரிய நம்மை புகழ்வது போல். அப்படியே தான் தேவனுடைய வார்த்தை என்பது. "ஓம்" என்ற ஒலியே "தேவன்" என்று இந்துக்களே கூட நம்பிக்கை வைத்திருக்கிறார்களே! **தேவனுடைய வார்த்தையும், தேவனும் ஒன்று என்ற தாற்பரியம் புரியாத வரைக்கும், உங்கள் குரான் சொல்லும் வசனம் மூலமாகவும், கிறிஸ்தவ வேதம் சொல்லும் வசனம் மூலமாகவும் இயேசுவை தெய்வமென்று ஏற்றுக் கொள்ளவே உங்களால் முடியாது.**

**35. மத். 16:20-ல் தாம் கிறிஸ்து என்று ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்று ஏன் சொன்னார்?**

★ கிறிஸ்து - மேசியா - என்ற ஒருவர் வந்து, யூதர்களுக்கு ஆளுகை தருவார் என்று ஆதிமுதலே யூதர்கள் நம்பிக் காத்திருந்தனர். அதனால் தான், இயேசுவின் செயல்பாடுகளை கவனித்து, "வரப்போகிற கிறிஸ்து நீர்தானா?" என்று யோவான் ஸ்நானன் முதற் கொண்டு, பிரதான ஆசாரியர் வரை கேட்டார்கள். மார்த்தாள் கூட கிறிஸ்து வருவார் என்று அறிவேன் என்கிறாள். ஆக, அத்தனை பேரும், கிறிஸ்துவின் வருகைக்காய் காத்திருந்தார்கள் என்று அறிகிறோம். இந்த நிலையில், உள்ளத்தின் ஆழத்தில் உண்மையாய் விசுவாசித்த சீஷர்கள், வெளியே போய் சொல்லி விட்டால், அப்போதே அவரை ராஜாவாக்கிவிடுவார்கள். குருத்தோலை பிடித்து ஓசன்னா பாடிய கூட்டமல்லவா! அவரை தேவனென்று எண்ணி, சிலைகூட வைத்து வணங்கி விடுவார்கள்! இதனால், இரத்தம் சிந்தி, பாவமன்னிப்பின் நிவாரணம் தந்து இரட்சிக்க வந்த அவருடைய முதலாம் வருகை முழுமையாகாது; இரட்சிப்பின் சுவிசேஷம் புறஜாதியாராகிய நமக்குக் கிடைக்காமல் போயிருக்கும். எனவே தான் இப்போதைக்கு சொல்ல வேண்டாம் என்றார். அவர் மரித்து உயிர்த்தெழுந்த பிறகோ,

அவரைக் குறித்து சாட்சியாய் உலகமெங்கும் இயேசு கிறிஸ்துவாகிய தேவனுடைய குமாரன் என்று சீஷர்கள் தைரியமாய் பிரசங்கித்தார்கள். நாங்களும் பிரசங்கிக்கிறோம். சொல்லவும் சொன்னார் (அப். 1:8; மத். 28:18-20).

36. **இயேசு தேவனென்றால், மத்.20:23; மாற்கு 10:40 போன்ற வார்த்தைகள் ஏன்? "அவர் அவர்களை நோக்கி: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள். நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும் என் வலதுபாரிசத்திலும், என் இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால், எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே யல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார்."** (மத். 20:23)

★ முதலில் இவர் மனிதனாய் வந்த தேவனுடைய வார்த்தை என்று உணர வேண்டும். நூறு சதவீதம் மனிதனாய் செயல்படுகிறார். கொலோ. 2:9-ன்படி 100 சதவீதம் தேவனாகவும், பிதாவினால் தேவைப்பட்ட - முன்குறிக்கப்பட்ட - இடங்களில் செயல்படுகிறார். இந்த நிலையில் அவர் சுயமாய் ஒன்றும் செய்யாமல், பிதா தனக்கு கற்பித்ததையே செயல்படுத்துகிறார். ஆகவே, இயேசு முழுமையாய் 24 மணி நேரமும் தேவனாய் பூமியில் செயல்படவில்லை என்பதை உணர வேண்டும். அப்போது, இந்த வசனம் புரிந்துவிடும்.

37. **ஆதாமும் தேவகுமாரன் (லூக்கா 3:38); இயேசுவும் ஆதாம் போல தேவகுமாரன் தானே? இருவரையும் தேவன் தானே உண்டாக்கினார்?**

★ லூக்கா 3:38-ன்படி ஆதாம் "son of God" (small 's'); இயேசுவோ, "Son of God (Capital 'S'). ஏன் இந்த வித்தியாசம்? ஆதாமோ, மண்ணால் உருவாக்கப்பட்டவன். அதற்குமுன் ஆதாமே இல்லை. புதுசிருஷ்டி அவன். ஆனால் வார்த்தையாகிய தேவனோ ஆதியிலேயே இருந்தவர் (யோ.1;1; வெளி. 1:8). தேவனாயிருந்த வார்த்தையே, மனித மாம்சமாக மாறி, கன்னியின் வயிற்றில் வைக்கப்பட்டு, மனுஷனாய்ப் பிறந்தது. (யோ. 1:14; எபி. 10:5, சங்.40:6-8 - செப்டுவாஜித்; யோ. 6:51; 8:23 1 கொரி. 15:47). இந்த இயேசு என்று பெயரிடப்பட்டு இரட்சிப்பை அருளியவர், ஆதாம் போல சிருஷ்டிக்கப்பட்டவரல்ல. அவர் யேகோவா. (யாத். 3:2, 14; சங். 90:2; with யோ. 18:8-"I am)

**38. உங்கள் பாவங்களுக்கான தண்டனையை இயேசு அனுபவித்தாரா?**

★ தண்டனையை மட்டுமல்ல... சாபங்களையும் சுமந்து தீர்த்தார் (கலா. 3:13). சாபம் நமக்கு முன்னே வைத்திருப்பதை நாம் தேடிக் கொள்வது (உபா. 11:26-28; 30:15, 19); தண்டனையோ தேவன் கொடுப்பது; சாபத்திற்கும் தண்டனைக்கும் அடிப்படை பாவங்களே;

ஆதாமின் பாவம் வேறு; நம் பாவங்கள் வேறு. ஆதாமின் பாவத்தாலும், நம் பாவத்தாலும் வரும் சாபங்களை இயேசு சுமந்து தீர்த்தார். அதனால் நமக்கு விடுதலை.

ஆனால், ஆதாமின் பாவத்தினாலே வந்த தண்டனையிலேயே மிகவும் பிரதானமானது மரண தண்டனை (ஆதி. 3:19). அதையும் இயேசு ஏற்று ஜெயித்தார். (எபி. 2:14, 15; வெளி. 1:18). ஆனால் அந்த தண்டனைகளிலிருந்து விடுதலை அவர் வருகையிலே தருவார் (1 கொரி. 15:55).

நம் பாவங்களுக்கான பிரதான தண்டனை 2ம் மரணமாகிய நரகம். அதை அவர் அனுபவிக்கவில்லை. ஆனால் அந்த தண்டனை யிலிருந்து நமக்கு பாதுகாப்பை சொல்லிக் கொடுத்தார். அதை விசுவாசிக்காமல் அந்த தண்டனைக்குள்ளாகும் யாவருக்கும் விடுதலை இல்லவே இல்லை; ஏனெனில் அவர் அதை அனுபவிக்கவில்லை.

**39. அநீதியுள்ள ஊழியக்காரனை இயேசு எப்படி பாராட்டலாம்? (லூக்கா 16:8)**

★ இயேசு மெச்சவில்லை; பாராட்டவில்லை. இயேசு சொன்ன அந்த கதையில் வரும் எஜமான் தான் மெச்சுகிறான்; பாராட்டுகிறான். அந்த எஜமான்கூட, ஊழியக்காரன் தவறுதலாய் எழுதியதை மெச்சவில்லை. தனக்கு எதிர்காலத்தில் அடைக்கலம் கிடைப்பதற்கான வழியை கண்டுபிடித்த - (அவனது அறிவுக்கேற்ற வழியை) - அவனது புத்தியைத்தான் மெச்சினான். நம் இயேசுவோ, அதிலும் இன்னும் அதிகமாக, “உங்களிடமுள்ள அழிந்து போகும் உலகப் பொருளால், ஆத்மாக்களை சம்பாதியுங்கள்” என்று தம் பிள்ளைகளுக்கு நீதியாய்த்தான் சொன்னார்: அநீதியான உலகப் பொருள் என்றால் கெட்ட வழியில் சம்பாதித்தது என்று அர்த்தமல்ல; அழிந்து போகிற உலகப் பொருட்கள் என்று பொருள். புத்தியும் வேண்டும்; அதையும் ஞானமாய், நன்மையாய், நமது உலகப் பொருட்களை நீதியாய் செய்ய வேண்டும் என்று தான் இயேசு சொல்கிறார்.

**40. தேவன் தம்மை பரியாசம் பண்ண வொட்டார். (கலா. 6:7) ஆனால், லூக்கா 22:63ன்படி பரியாசம் பண்ணப்பட்ட இயேசு தேவனல்ல.**

★ லூக்கா 22:63ல் பரியாசம் பண்ணப்பட்டவர் மனிதனாகிய இயேசு. அதற்காகவே தேவன் உலகத் தோற்றத்திற்கு முன்பே தீர்மானித்திருந்தார். (வெளி. 13:8). ஆனால் கலா. 6:7 தேவனைப் பற்றியது. இயேசு மனிதனாய் வந்து இரட்சிப்பை மனிதர்களுக்கு தந்தார் என்ற சத்தியம் புரியாத வரை, இப்படிப்பட்ட கேள்விகள் எழும்பிக் கொண்டே இருக்கும்.

**41. தேவாலயத்தில் அடிக்கிறவர்; குடும்பத்தில் பிரிவினையை உண்டாக்குகிறவர்; ஊழியத்திற்கு பட்டயம் கொண்டு போகச் சொல்பவர் சமாதான பிரபுவா?**

★ நீதி, நேர்மையான வழியில் சமாதானத்தை உருவாக்குகிறவர் தான் சமாதான பிரபு. தேவாலயத்தை வியாபார ஸ்தலமாக ஆக்கக்கூடாது என்றே நீதியாய் விரட்டினார். (மத். 21:12). இதை பிரதான ஆசாரியர்களே எதிர்க்க வில்லையே!

இயேசுவை, குடும்பத்திலொருவர் ஏற்றுக் கொண்டாலே, தானாகவே பிசாசானவன் அந்தக் குடும்பத்தில் பிரிவினைகளை உண்டாக்குவான். அது பொல்லாதது. அந்த சமயத்தில், இயேசுவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டவன், அப். 2:40-ன்படி அந்த குடும்பத்தாரை பிரிந்திருப்பான்; அப்போதும் தேவ சமாதானம் நிச்சயம் விசுவாசிப்பவனுக்கு கிடைக்கும். இதைத்தான் லூக்கா 12:51 சொல்கின்றது.

எங்கு போனாலும், பட்டயம் கொண்டு போவது, இஸ்ரேலரின் கலாச்சாரம் (லூக்கா 22:36) இந்தியாவில் பஞ்சாபியர்களுக்குக்கூட இந்த கலாச்சாரம் உண்டே! ஆவிக்குரிய இஸ்ரேலராகிய நாமோ, பட்டயமாகிய தேவ வசனத்தை (எபி. 4:12) எப்போதும் கொண்டு போக வேண்டும். அந்த கால கட்டத்தில், தற்காலம் போல தேசிய நெடுஞ்சாலையோ, போலீஸ் ஸ்டேஷனோ இல்லை. திருடர்கள், மிருகங்கள் பயம் நிறைய உண்டு. அதினால் அவர்கள் இரவில் பிரயாணம் செய்ய மாட்டார்கள். பிரயாணத்தின் போது, இரவு வந்துவிட்டால் அருகிலுள்ள ஊரிலுள்ள தம்முடையவர்களோடு தங்குவார்கள். (யாத். 4)

**42. "நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும். கர்த்தர் அவைகள் எல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்." (சங். 34:19) இதன்படி, இயேசு சிலுவையிலறைந்து கொல்லப் பட்டிருக்க முடியாது.**

★ (2 கொரி. 5:21) இயேசு நமக்காக பாவமாக்கப்பட்டதால், தேவன் தம் சித்தப்படியே - தீர்மானத்தின்படியே - (யோ. 3:16), சிலுவையிலறைய விட்டுக் கொடுத்தார். துன்பங்கள் மரண பரியந்தம் வந்தது; மரித்தும் போனார். மரணத்துக்கு மேலான துன்பங்கள் உலகத்தில் ஒன்றுமில்லை. ஆனாலும் அந்த மரணத்தினின்றும், இயேசு விடுவிக்கப்பட்டார்; உயிர்த்தெழப்பட்டார். அல்லேலூயா.

**43. தந்தையின்றிப் பிறந்த இயேசுவுக்கு, தாயின் கோத்திரந்தான் வரும். தாய் லேவி கோத்திரத்தாள் (லூக்கா 11:36). எனவே இயேசு யூதரல்ல; லேவியரே.**

★ மேரியின் அப்பா ஏலி. தாவீதின் மகன் நாத்தான், யூதா கோத்திரமாயிருக்க, எப்படி மேரி, லேவி கோத்திரராயிருக்க முடியும்? (லூக். 3:23-28). லூக்கா 1:36ல், "உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்..." என்று உள்ளது. இது கோத்திரத்தை குறிக்கவில்லை; இஸ்ரேல் இனத்தைக் குறிக்கிறது. மேலும், நியாயப்பிரமாணப்படி, அம்மாவின் கோத்திரம் பிள்ளைக்கு வராது (see உபா. 36:1-9). அவள் கணவன் யோசேப்பும், சாலமோன் வழிவந்த யூதரே! மட்டுமல்ல, இந்த யோசேப்பு, யூதா கோத்திர ஏலியின் தத்துப்பிள்ளை (லூக். 3:23). எனவே யூத யோசேப்பின், அதிகாரப்பூர்வமான - adopted child போல இயேசு இருப்பதால், இயேசுவும் யூதரே. அம்மா வழியிலும் இவர் யூதர்; அப்பா வழியிலும் இவர் யூதர்.

**44. யோ. 17:3-ன்படி இயேசு எப்படி தேவன்?**

★ பரலோகம் போக வேண்டுமானால், ஒன்றான மெய்த்தேவனை மட்டும் அறிந்தால் போதாது. இயேசுவையும் அறிய வேண்டும். யார் இந்த இயேசு? தேவனின் வார்த்தையாய் - தேவனாய் - தேவனிடத்திலிருந்து மனிதனாய் வந்தவர் (யோ. 1:1, 14) வார்த்தையான தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டு (1 தீமோ. 3:16) பாவ மன்னிப்பைத் தந்தார் என்பதை விசுவாசித்தால் தான் இரட்சிப்பு; நித்திய ஜீவன் (see ரோமர் 10:9, 10; மாற்கு 16:16; யோ. 3:5; 1 கொரி. 6:11; யாக். 1:18) எனவே இயேசு தேவனாயிருந்து, மாம்சத்தில் வெளிப்பட்டவரே.

**45. தேவன் என்றால், அவர் யாராலும் காணக்கூடாதவர்; சாவாமை உள்ளவர் (1 தீமோ. 6:16) என்று வேதம் சொல்லியிருக்க, உலகத்தாரால் காணப்பட்டவர், மரித்தவர் எப்படி தேவனாவார்?**

★ தேவனை யாரும் மனிதக் கண்ணில் பார்க்கவே முடியாது; தேவனுக்கு மரணமே இல்லை. ஆனால், வார்த்தையாகிய தேவனாய் இருந்தவர், மனித ரூபமெடுத்து, அடிமையின் சாயலாய் இயேசு என்ற பெயரில், "மனிதர்கள் காண்பார்கள்; மறுதலிப்பார்கள்; மரணத்துக்கு உட்படுத்துவார்கள்" என்று அறிந்தே வந்தார். (வெளி. 13:8; ஏசா. 53; மத். 16:21 etc)

இவர் ஆதியும் அந்தமும் இல்லாத சர்வ வல்லமையுள்ள தேவன் (வெளி. 1:8). இதனால்தான், தான் மனித குமாரனாய் வந்து தேவகுமாரன் என்பதை ரூபிக்கும்படியாய் மரணத்தை ஜெயித்து உயிர்த்து வந்தார்.

**46. மத். 7:21, 22ல் அவரை நோக்கி, "கர்த்தாவே, கர்த்தாவே" என்று கூப்பிடவே வேண்டாம் என்று இயேசுவே சொல்லியிருக்க, பின்பு எப்படி அவர் தேவன்?**

★ கர்த்தர் என்று சொல்ல வேண்டாம் என்று இயேசு கூறவே இல்லை. கர்த்தர்; கர்த்தர் என்று சொல்லித்தான், இயேசுவின் நாமத்தினாலே தான் அற்புதங்கள் செய்யப்பட்டிருக்கிறது; பிசாசுகள் துரத்தப் பட்டிருக்கிறது. அவர் சொன்னது என்ன? கர்த்தராகிய என் நாமத்தினாலே அற்புதங்கள் செய்தாலும், அப்படிச் செய்தவர்கள், அக்கிரமச் செய்கைக்காரர்களாய் (அதாவது கிரமம் x அக்கிரமம் - Lawlessness - வசனத்தின்படி நடக்காதவர்கள்) இருந்ததால், அவர்களை அறியேன் என்கிறார்.

இன்றைக்கும் கூட பலர் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைக் கொண்டு, அற்புத - அடையாளம் செய்து கொண்டே, வசனத்துக்கு விரோதமான, குழந்தை ஞானஸ்நானம், சிலுவை - புறா - இயேசு படம், போன்ற விக்கிரகங்கள் வைப்பது, ஜெபம் - உபவாசம் - தசமபாகம் எல்லாம் வேண்டாமென்பது போன்ற காரியங்களை செய்வதை நேரிடையாகவே பார்க்கிறோம். இப்படிப்பட்டவர்கள் கர்த்தாவே, கர்த்தாவே என்று கூப்பிடுவது வேஸ்ட் - பிரயோஜனமில்லை.

**47. இயேசு அவனுக்குப் பிரதியுத்திரமாக கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை என்னவென்றால், இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். (மாற்கு 12:19)**

**இதன்படி, இயேசு, நம்முடைய தேவன் என்று சொல்வதால், இவருக்கும் இஸ்ரேலருக்கும் ஒரு தேவன் உண்டென்றும், இவர் தேவனல்ல என்றும் அறிகிறோமல்லவா!**

★ இந்த வசனம் உபா. 6:4ல் மோசே சொல்லியதை அப்படியே இங்கே இயேசு விவரிக்கிறார். மோசே இதைச் சொல்வதால், அவன் தன்னையும் இஸ்ரேலரையும் சேர்த்து, "நம்முடைய தேவனாகிய கர்த்தர்," என்று விவரிக்கிறானே ஒழிய, இயேசு அப்படி விவரிக்கவில்லை. அதை அப்படியே கையாள்கிறார். அவ்வளவுதான்.

மேலும், இயேசு மனிதனாய் வெளிப்பட்டிருப்பதால், மரணபரியந்தம், கர்த்தருக்கு கீழ்ப்படிந்தே இருக்க வேண்டும் என்பது பிரமாணம். எனவே, அவர் தேவனை வணங்குகிறார்; ஆராதிக்கிறார் மனிதனாய் இருந்தபோது.

மட்டுமல்ல... அவர், தாயின் கர்ப்பத்திலிருந்தே நூற்றுக்கு நூறு மனிதனாய் பூமிக்கு வந்து வாழ்ந்தார். கலா. 3:9-ன்படி

"தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம், சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது."

இந்த தேவத்துவம், அவ்வப்போது தேவனால், அவருக்குள் வெளிப்பட்டதை பல இடங்களில் காணலாம். மற்றப்படி, அவர் மனிதனாகவே வாழ்ந்தார்.

இவர் தேவ நிலையில் இருந்த போது, கொடுத்த நியாயப்பிரமாணத்தில் ஒன்றுதான் உபா. 6:4 என்பதை, வேதம் அறிந்தோர் உணர்ந்திருக்கிறார்கள். (அப். 7:53, 38, யாத். 4:12; உபா. 9:10). அவர் தன்னை வணங்க வேண்டும் என்று கொடுத்த அதே பிரமாணத்தை இஸ்ரேலருக்கு எடுத்து வைக்கிறார்.

**48. யோ. 20:17ல், இயேசுவுக்கு மேலே உள்ள தேவனும், இஸ்ரேலின் தேவனும் ஒன்று என்று சொல்லப்பட்டிருப்பதால், இயேசு தேவனல்ல.**

★ அப். 17:31 வரை இயேசு மனித நிலையில் தான் இருப்பார்; இவர் தேவனாயிருந்து மாம்சமானவர் (யோ. 1:1, 14; 1 தீமோ. 3:16). எனவே மனிதநிலையில் உள்ள அத்தனை பேருக்கும் பிதாவே தேவன் என்பதால், இப்படிச் சொல்கிறார் இயேசு.

**49. மத். 26:53ல், தன்னை பாதுகாக்க பிதாவிடம் வேண்டினால், 12 லேகியோனுக்கு மேலான தூதர்களை அனுப்புவார் என்று இயேசு சொல்வதால், இயேசு தேவனல்ல.**

★ மனித நிலையில் வந்திருக்கிற தேவனின் வார்த்தையாகிய இயேசு கிறிஸ்து, உலகில் இருக்கும் வரை தேவனைச் சார்ந்துதான் இருக்க வேண்டும். இது தான் முறைமை, பிரமாணம். எனவே தான் இப்படிச் சொன்னார். மற்றப்படி இவருக்குள்ளிருக்கும் தேவத்துவம், தேவனாலேயே உலகிற்கு காட்டப்படும் தேவைப்படும்போது. ஆமென்.

**50. மத். 22:42-45-ன்படி, தாவீதின் குமாரன் இயேசு அல்ல என்று அவரே சொல்கிறாரே, இவர் எப்படி யூதர்?**

★ இயேசுவை தாவீதின் குமாரன் என்று சொன்ன பரிசேயருக்கு, இவர் ஆண்டவராயிருந்து (Lord) தாவீதின் சந்ததியில் வந்திருக்கிறார் என்பதைக் காட்டவே சங். 110:1-ஐ விவரித்தார். மற்றப்படி, தான் தாவீதின் குமாரன் இல்லை என்று அவரும் சொல்லவில்லை; அங்கிருந்தவர்களும் சொல்லவில்லை. தேவனாயிருந்தவர் யூத மனிதனாய் வந்திருப்பதை பரிசேயருக்கு சொல்லித் தருகிறார். அவ்வளவுதான்.

**51. ஊழியக்காரர்களைக் கொன்ற யூதர்கள் மேலுள்ள இரத்தக்கறை நீங்குவதில்லை என்று சொன்ன இயேசு (மத். 23:29-35) அப். 22:20-ன்படி ஸ்தேவானின் கொலைப்பழிக்குரிய சவுலுக்கு, காட்சி கொடுத்தது எப்படி?**

★ கொலை செய்த மோசேயையும், குடிகார நோவாவையும், தன்னையே மறுதலித்த - சபித்த பேதுருவையும் சேர்த்துக் கொண்டாரே எப்படி? மனந்திரும்பும் மனதுகளின்மேல் கர்த்தர் இரக்கம் வைத்து, பவுலை சந்தித்தார்; அவனும், அவருடைய தீர்மானத்தின்படியே மனந்திரும்பி, அவரை ஏற்றுக் கொண்டான். அவன் மனத்திரும்பாமற் போயிருந்தால், அவனின் இரத்தக்கறை நீங்காது (1 யோ. 1:7). பாவிகளாகிய நாமெல்லாரும் இரட்சிக்கப்படுவதே, அவரது முன் குறித்தல் - முன்னறிவிப்பின்படி தான். (ரோமர் 8:29, 30) அதன்படியே மனந்திரும்புகிறோம்.

**52. கிறிஸ்து என்றால் இயேசு அல்ல; அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று பொருள். எல்லா இறைத்தூதர்களும், கிறிஸ்துதான். வனாந்திரத்தில் கூட சென்றது இயேசு கிறிஸ்து அல்ல: அது மோசேயைக் குறிக்கிறது.** (1 கொரி. 10:4)

★ அப்படியானால் 1 கொரி. 10:4ல் உள்ள கன்மலை யார்? (ஏசாயா 26:4) அந்தக் கன்மலை தானே கூடச் சென்றது! "அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சை பாராதிருப்போமாக" என்று உள்ளதே அது எந்த கிறிஸ்துவை? இஸ்ரேலர் பரீட்சை பார்த்த கிறிஸ்து யார்? எண். 14:22; உபா. 6:16 போன்ற வசனங்களில் தேவனைப் பரீட்சை பார்த்தார்கள் என்று தானே உள்ளது! அப்படியானால் அந்த தேவன் தான் கிறிஸ்து; அந்த கர்த்தர் தான் கிறிஸ்துவாய், இயேசு என்ற பெயரில் மனிதனாய் வந்திருக்கிறார் என்று அறிகிறோம். மோசே தேவனல்லவே.

**53. சிலுவையில் அறையப்பட்டது இயேசு அல்ல. இயேசுவாயிருந்தால், "தேவனே ஏன் என்னை கைவிட்டீர்?" என்று ஒரு குழந்தை போல அழுவாரா?**

★ சிலுவையிலறையப்பட்டது இயேசு அல்ல என்பதற்கு ஆதாரம் என்ன? அந்த சிலுவையிலே நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா என்று பிலாத்து எப்படி எழுதுவான்? அந்த சரீரத்தை நூற்றுக்கதிபதி யோசேப்பு எப்படி கேட்டு வாங்கி, புதிய கல்லறையில் அடக்கம் பண்ணுவான்? அவருடைய அந்தரங்க சீஷன் நிக்கோதேமு, எப்படி பரிமளதைலம் கொண்டு வருவான்? அந்த சரீரம் உயிர்த்தெழக் கூடாது என்று ஏன் சீல் பண்ணினார்கள்? ஏன் காவல் காத்தனர்? சிந்தியுங்கள். நமக்காக - நம் பாவங்களினால் பாவமாக்கப்பட்டு (2 கொரி. 5:21) சிலுவையிலே பாவியாய்த் தொங்கினார். யோ. 3:13ல் வெண்கல சர்ப்பம் போல இயேசு தான் சிலுவையிலே தூக்கப்பட்டார் என்று உள்ளது. அப்போது பாவத்தை பாராத சுத்தக் கண்ணராம் நம் தேவன் (ஆபகூக் 1:13) இமைப்பொழுது அவரைக் கைவிட்டதால் (ஏசா. 54:7) மனித பாவநிலையிலிருந்து, இப்படி ஒருகுரல் விடுத்தார். அவரை "பிதா" என்று அழைத்தவர், "பிதா-மகன்" உறவு அறுந்து போனதால் "தேவனே" என்று அழைப்பதைப் பாருங்கள். இந்த வசனம், பாவிகளாயிருக்கிற நமக்கும் சிந்தனைக் கேற்றவையாய் இருக்கிறது.

**54. இயேசு புதிய ஏற்பாட்டில், பஸ்காவை கொண்டாடினார்; விருத்தசேதனம் பண்ணிக் கொண்டார்; இவைகளை செய்யக்கூடாது என்று இயேசு சொல்லவில்லை; பழைய ஏற்பாட்டைத் தொடர்கிறவனே சத்தியத்தை அறிந்தவன். அவனது தொடர்ச்சி இஸ்லாம் வரை செல்லும்.**

★ பழைய ஏற்பாடு சீனாய் மலையில் உண்டானது; புதிய ஏற்பாடு கல்வாரி சிலுவையில் உருவானது. இயேசு வாழ்ந்தகாலம் பழைய

ஏற்பாடு. அவர் மத். 5:17, 18; ரோமர் 10:4; 7:1-6-ன்படி, நியாயப்பிரமாணம் அடங்கிய அத்தனையையும் நிறைவேற்றி முடித்துவிட்டார்; இனி பண்டிகைகளோ, பலிமுறைகளோ, விருத்தசேதனமோ ஒன்றும் தேவையில்லை; புதிய ஏற்பாடு என்ற ஒன்று வந்ததால், பழைய ஏற்பாடு பழமையாயிற்று (எபி. 8:13) அதை இன்னும் கைக்கொள்பவன், புதிய உடன்படிக்கையை - இயேசுவின் இரத்தத்தை (மத். 26:28) அலட்சியம் செய்பவன்.

**55. இயேசு தன்னை தேவனென்று சொல்லிக் கொண்டதாக வசனமே இல்லையே!**

★ தன்னை தேவனென்று காட்டிக் கொள்ள இயேசு, மனிதனாய் வரவில்லை. இரத்தம் சிந்தி, நமக்கு பாவ மன்னிப்பருளி, நம்மை நரக ஆக்கினையினின்று மீட்டெடுக்கவே வந்தார் (யோ. 3:16). ஆயினும், சில இடங்களில், தேவனென்று வெளிப்படுத்தியிருக்கிறார். **உதாரணத்திற்கு:** யோ. 13:13; மத். 21:3 (Lord = ஆண்டவர் = Heb Adonai) மத்.7:21, 22; 12:6; யோ. 8:24, 28; 18:5, 6; மத். 22:42-45; மத். 16:15-17. மட்டுமல்ல... அவருடைய செயல்பாடுகள் தன்னை தேவனென்றே வெளிப்படுத்தின. **உதாரணத்திற்கு:** தேவ தூதர்கள் வணங்கினார்கள் (மத். 4:10, 11; மாற்கு 1:13; எபி. 1:6). சாஸ்திரிகள் வணங்கினார்கள் (மத். 2:11); தோமா வணங்கினான் தேவனென்று; அதை இயேசு ஏற்றுக் கொண்டார் (யோ. 20:28). பிசாசு இவரை, உன்னதமான தேவனுடைய குமாரனே என்கிறான் (மத். 8:29). பிரதான ஆசாரியன், இவர், தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று தன்னை சொல்லிய உடனே, இவர் தேவதூஷணம் சொல்கிறார் என்று சொல்லி தன் வஸ்திரங்களை கிழித்துக் கொள்கிறான் (மத். 26:63-66). மரியாளை தேவனுடைய தாயென்று எலிசபெத் கூறுகிறாள். (லூக்கா 1:43); ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று பேதுரு சொன்னதை இயேசு ஏற்றுக் கொண்டார். (மத். 16:15-17). இன்னும் ஏராளம் சொல்லலாம்.

**56. இயேசு மட்டுமல்ல... இயேசுவுக்கு முன்பே, மறுரூபமலையில் நின்ற மோசேயும், எலியாவும், உயிர்த்துவிட்டனர். மத். 27: 50-53-ன்படி, அநேக பரிசுத்தவான்கள், இயேசு மரிக்கும்போதே உயிர்த்தனர். அவர்களை எல்லாம் தெய்வமாக்காமல், இயேசுவை மட்டும், பவுல் ஏன் தெய்வமாக்குகிறான்?**

★ எலியா மரிக்கவில்லை; எனவே உயிர்த்தார் என்று சொல்ல முடியாது. மோசே மரித்தாலும் உயிர்த்தார் என்பதற்கு ஆதாரமில்லை.

மட்டுமல்ல; மத். 17-ன் மறுரூபமலைக்காட்சி, வருகைக்கு, தரிசனமாக்கப்பட்டது என்று பேதுருவே 2 பேதுரு 1:16-21ல் சொல்லியிருக்கும் போது, அவர்கள் realஆக உயிர்த்தெழுந்து நின்றார்கள் என்று சொல்லவே முடியாது. அது தரிசனம்தான்.

மத். 27:52, 53-ஐ தியானித்தால், இயேசு உயிர்த்தபின் தான், பரிசுத்தவான்கள் கல்லறைகளை விட்டு உயிர்த்து வெளியே வந்து காட்சி கொடுத்தார்கள் என அறியலாம். இயேசு மரித்தபோது, கல்லறைகள் திறந்தன; சரீரங்கள் உயிர்பெற்றன; ஆனால் யாரும் உயிர்த்தெழவில்லை. கொலோ. 1:18-ன்படி இயேசுவே மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறானவர். அவரால் தான் அனைவருக்கும் உயிர்த்தெழுதல் உண்டு. மரணத்தை ஜெயித்த சரித்திரப் புருஷர் இயேசுதான் என்பதால், அவரே தெய்வம் (ரோமர் 1:5). பவுல் அவரை தெய்வமாக்கவில்லை; தெய்வம் என்று உண்மையைச் சொல்கிறார்.

**57. யோ. 3:26-ல் பாவங்களை மீட்டு இரட்சிக்க, இயேசுவுக்கு அதிகாரம் இல்லையென்று யோவான் ஸ்நானன் சொல்கிறாரே!**

★ மனிதனாய் வாழ்ந்த இயேசுவுக்கு, இரத்தம் சிந்தும் முன்னேயே, இரத்தம் சிந்தி கிடைக்கும், இரட்சிப்புக்கான பாவ மன்னிப்பின் அதிகாரம் உண்டு என்று மாற்கு 2:10 சொல்கின்றது. யோ. 3:26, 27ல் ஞானஸ்நானம் கொடுக்கவும் அதிகாரம் பரலோகிலிருந்து கொடுக்கப்பட்டால் தான், இயேசுவால் ஞானஸ்நானம் கொடுக்க முடிகிறது என்று தான் சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய, இது பாவ மன்னிப்பைப் பற்றியதோ, இரட்சிப்பைப் பற்றியதோ அல்ல. ஆனாலும் இயேசு யாருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. (யோ. 4:3).

**58, மத். 2:6; மீகா 5:2-ன்படி, இயேசு பெத்லேகேமிருந்து தான் வருவாரே ஒழிய, பரலோகிலிருந்து வருவதில்லை.**

★ அந்த வசனங்களை நன்கு வாசியுங்கள். இரட்சகர் இயேசு, இந்த பூமியில் பெத்லேகேமிலிருந்து தான் புறப்படுவார் என்று அறியலாம். இப்படி புறப்படுகிறவர், எங்கிருந்து வந்தார் என்பது தான் கேள்வி. மத். 6:51; 1 கொரி. 15:47; யோ. 3:13; எபி. 10:5; சங். 40:6-8 போன்றவைகளை வாசித்தால், அவர் எங்கிருந்து வந்தார் என புரியும். வானிலிருந்து வந்தவர் மீகா. 5-2ன்படி, பிதாவினிடமே போயிருக்கிறார். ஆமென். திருச்சியிலிருந்து வந்தவர்கள், சென்னை

பாரிமுனையிலிருந்து ஊர்வலமாய்ப் புறப்படுவார்கள் என்றால், புறப்படும் இடம் தான் பாரிமுனை; வந்தது திருச்சியிலிருந்துதான். போராட்டப் பணி முடிந்ததும், திருச்சிக்கே போய் விடுவார்கள். இந்த உண்மை தெரிந்தால் எல்லாம் புரியும்.

**59. பாவத்திற்குப் பரிகாரமாக இயேசுவின் இரத்தம் சிந்துதல் தேவையென்று தேவன் நினைத்து இருந்தால், அதை அவர் வேறு விதமாக நிறைவேற்றியிருப்பார். ஆகவே, கர்த்தர் அவரை நொறுக்க சித்தமாகி இருக்கவில்லை என்பதே உண்மை.**

★ இரத்தம் சிந்துதல் தேவை என்பது தேவசித்தம் (ஆதி. 9:6:4; 4:4; எபி. 11:4; 9:22; 1 யோ. 1:7; 1 பேதுரு 1:18, 19: லேவி. 1:4,5; 4:16; 19:22; 17:11; யாத். 29:36). ஏசாயா 53:10-ன்படி, கர்த்தர் அவரை நொறுக்கச் சித்தமானார் என்பதே உண்மை. ஏசாயா 53:4, 11, 12 வசனங்களின்படி அவர் மரணத்தில், இரத்தம் சிந்தி, பாவ மன்னிப்பைப் தந்தார். ஏசாயா 52:13, 14; 53:2-ன்படி அவர் உயர்த்தப்பட்டு - சிலுவையில் - அந்தக் கேடடைந்தார். உபா. 21:22, 23-ன்படி, சிலுவையில் தூக்கப்பட்டு நமக்காக சாபமாக்கப்பட்டார். (கலா. 3:13). நிழலான காளை, வெள்ளாட்டுக்கிடா பலியை மாற்றி, தன்னுடைய நிஜமான பலியை நிலைநிறுத்தினார். அதனால் பாவம் மூடப்படாமல் (சங். 32:1), மன்னிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. (எபி. 10:9, 16, 17; எரேமியா 31:32-34; சங். 40:6-8).

**60. பாவ மன்னிப்புண்டாக, இயேசு, இரத்தம் சிந்தினது உண்மையானால், அதற்கு காரணமாய் இருந்தவர்களுக்கு "ஐயோ" என்று லூக். 22:22ல் ஏன் சொன்னார்?**

★ காட்டிக் கொடுத்த பாவி யூதாஸ், மனமாற்றமடைந்து, இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டிருந்தால் மாத்திரமே மன்னிப்பு பெற்றிருப்பான். அவன் அப்படிப்பட்ட விசுவாசத்தோடு செயல்படாததால் அவனுக்கு "ஐயோ." ஆனால், பவுலோ மனமாற்றமடைந்து, மன்னிப்புக்குள் வந்தான்; பேதுருவும் அப்படியே. வெறுமனே இயேசு இரத்தம் சிந்திய உடனேயே, உலகிலுள்ள அனைவருக்கும் இரட்சிப்பு கிடைக்காது. (யோ. 3:16). இரட்சிப்பை நாம் தான் விசுவாசித்து (எபே. 2:8) பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், யூதாசுக்கு மட்டுமல்ல; இரட்சிப்பை பெற்றுக் கொள்ளாத எல்லோருக்குமே "ஐயோ" தான். **அப்படிப்பட்டவர்கள்தான் கிறிஸ்தவரல்லாத உலகத்தார்.**

**61. இஸ்ரேலர் இறைவனுக்குப் பயந்து, அவர் கட்டளைப்படி, அவருக்கு பலி செலுத்தினார்கள். அந்த இறைவன், தன் மகனை யாருக்கு பலி செலுத்தினார்?**

★ எப்படியோ, ஈசாக்கு வழி வந்த இஸ்ரேலர் தேவனுக்கு பலி செலுத்தினார்கள் என்பதை முஸ்லீம் சகோதரர்கள் ஒத்துக் கொண்டதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

தேவன், இயேசுவை பலி செலுத்தவில்லை. நிழலாட்டமான காளை, வெள்ளாட்டுக்கிடா இரத்தம் சிந்த வேண்டிய இடத்தில், இயேசுவின் நிஜமான விலையேறப் பெற்ற இரத்தத்தை சிந்த வைத்து, இயேசுவைப் பாவமாக்கி, தமக்கே பலியாய் ஏற்றுக் கொண்டார். இந்த பலி மரணத்தோடு மட்டுமே நின்றிருந்தால், அது சாதாரண பலியாகியிருக்கும்; அல்லது ஊரார் பார்வையில் நரபலியாயிருக்கும். ஆனால், பலியானவரே, சொன்னபடியே 3ம் நாள் உயிர்த்து வந்ததால் இந்த பலி நரபலியுமல்ல; காளை, வெள்ளாட்டுக்கிடா பலி போன்றதுமல்ல; இது ஒரு விசேஷித்த பலி, அல்லேலூயா! அந்த பலிகளின் இரத்தங்கள் அன்றே ஜீவனற்றுப் போகும். ஆனால், இயேசுவின் தேவ இரத்தம் இன்றும் நமக்காய் ஜீவனோடு பரலோகிலே பேசிக் கொண்டிருக்கிறது (எபி. 12:22-24).

இதை விசுவாசிக்கும் இஸ்ரேலர் யாரும், தேவனுக்கு இனி பலி செலுத்தத் தேவையில்லை. (ஏசாயா 53:11, 12; 2 கொரி. 5:21 - ளநந எபி. 10:17; எரேமியா 31:32-34; சங்கீதம் 40:6-8; எபி. 10:9.

**62. ஏசாயா 53:9ல் அவர் மரித்தபோது ஐஸ்வரியவானோடு இருந்தார் என்று உள்ளது. லாசரு - ஐஸ்வரியவான் காரியத்தை சொன்னவர் இயேசு தான். ஐஸ்வர்யவானில், துன்மார்க்கன் இல்லையா? ஐஸ்வர்யவான் பரலோகம் வரமாட்டானாமே! (மத். 19:23, 24) இயேசுவும் அந்த கேட்டகரியா? (Categoryயா?)**

★ இயேசு மரித்தார் என்பதை உணர்ந்து கொண்டு, முஸ்லீம் சகோதரர்கள் கேள்வி கேட்பதற்காய் கர்த்தருக்கு நன்றி.

ஐஸ்வரியத்தில் இரண்டு உண்டு. ஒன்று உலக ஐஸ்வர்யம்; இரண்டு ஆவிக்குரிய ஐஸ்வர்யம். உலக ஐஸ்வர்யம் நல்லதல்ல என்றோ, உலக ஐஸ்வரியவான் பரலோகம் போகமாட்டனென்றோ வேதம் சொல்லவில்லை. அப்படிப் பார்த்தால், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தாவீது போன்றோருக்கு பரலோகம் கிடைக்காதே! ஐஸ்வர்யம் நல்லதுதான். ஐஸ்வர்ய ஆசை தான் நல்லதல்ல (1 தீமோ.

6:10). இயேசு உலக ஐஸ்வர்யத்தில் பிறக்கவில்லை (2 கொரி. 8:9). ஆனால் ஆவிக்குரிய ஐஸ்வரியத்தில் மேலோங்கியிருந்தார்.

ஏசாயா 53:9-ஐ தியானித்தால் "துன்மார்க்கரோடு" என்று சொல்லி, "ஐஸ்வரியவானோடு" என்றும் சொல்லியிருப்பதால், இந்த ஐஸ்வர்யம், துன்மார்க்கத்திற்கு (பாவம், மாமிசம்) எதிரானது ஆகும். அதாவது, ஆவிக்குரிய ஐஸ்வரியமாகும். இவர் அடக்கம் பண்ணப்பட்ட கல்லறை, இயேசுவுக்கு சீஷனும், உலகப்பிரகாரமாய் ஐஸ்வரியவானுமாயிருந்த (மத். 27:57) ஆவிக்குரிய ஐஸ்வரியவான் யோசேப்பின் புதிய கல்லறை. ஆக, ஆவிக்குரிய ஐஸ்வரியவானோடு, அவர் மரித்த போது இருந்தார் என்பது தான் உண்மையான பொருள்.

**63. அநேகருடைய பாவத்தை இயேசு சுமப்பதாயிருந்தால், நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று யோ.8:21ல் ஏன் சொல்கிறார்?**

★ இயேசு சுமந்ததால் மாத்திரம் எல்லோருடைய பாவமும் தீராது (ஏசாயா 53:12); சுமந்து தீர்த்ததை விசுவாசித்து அறிக்கையிட்டால் தான் தீரும். விசுவாசிக்காதவர்கள் தங்கள் பாவத்திலேயே தான் சாவார்கள்; அதாவது 2ம் மரணமாகிய நித்திய மரணம் சம்பவிக்கும்.

**64. இரத்தத்தை புசிக்கக்கூடாது என்று கட்டளையிருக்கும் போது, இயேசு தன் மாம்சத்தையும் இரத்தத்தையும் பானம் பண்ணச் சொன்னது ஆதிவாசிகள் வார்த்தை போலில்லையா? (யோ. 6:55)**

★ வானத்திலிருந்து இறங்கி வந்த ஜீவ அப்பம் இயேசு. அப்பம் என்றால் தேவனுடைய வார்த்தை. இந்த வார்த்தை தான் சரீரமுள்ள மனுஷனாய் பூமியில் இருந்தார். சரீரம் என்பது இரத்தமும் இணைந்தது தான். இந்த வார்த்தையாகிய இரத்தம் நிறைந்த சரீரம், வானத்தில் உருவாகி வந்தது. (எபி. 10:5; சங். 40:6-8; 1 கொரி. 15:51; யோ. 6:57). இந்த மாம்சமும் இரத்தமும் இணைந்தது தான் சரீரமாகிய வார்த்தை; இந்த வார்த்தை தான் ஜீவ அப்பம். அவரின் வார்த்தையைப் புசித்தாலே, அவரது சரீரத்தை - அதாவது அவரது மாம்சத்தையும் இரத்தத்தையும் புசித்ததற்கு அடையாளம். சரீரமாகிய வார்த்ததையைப் புசிப்பவர்கள்தான், பாத்திரமுள்ளவர்களாய், அவரது மாம்சத்திற்கு அடையாளமான அப்பத்தையும், இரத்தத்திற்கு அடையாளமான ரசத்தையும், அவர் செய்து காட்டியபடியே, அவரது மாம்சமும் இரத்தம் மாய்க்கப்பட்டதற்கு நினைவாய், விசுவாசத்தோடு செய்கிறோம். அவ்வளவுதான்; ஆவிக்குரியவர்களால் மட்டுமே இதை

நிதானித்து உணர முடியும்; மற்றப்படி இது காட்டுமிராண்டித்தன மாகத்தான் தோன்றும்.

**65. ஏசாயா முதல் மல்கியா வரை உள்ள எல்லா தீர்க்கதரிசிகளும், இஸ்ரேலரை சபிக்கிறார்கள். அப்படியிருக்க, இயேசுவின் பலி, இவர்களுக்கு பாவப் பரிகாரமாக இருந்திருக்குமா?**

★ இயேசு பலியானார் என்று சொல்லும் முஸ்லீம் சகோதரர்களுக்கு வாழ்த்துக்கள்.

இஸ்ரேல் மக்கள் - யெஷுரன் - பாவியிலும் பெரிய பாவிகள் தான். ஆனால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். அவர்களின் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், நிஜமான விடுதலை இயேசுவால் உண்டு என்பதற்கு அடையாளமான பலிமுறைகளையும், காணிக்கையையும் தேவன் உருவாக்கினார். இஸ்ரேலரோ அதை முழுமையாய் விசுவாசிக்காமல், ஏதோ கடமைக்காய் - நியாயப்பிரமாணப்படி - அதைச் செய்ததால் தான், தீர்க்கதரிசிகள் அவர்களை சபிக்கிறார்கள்.

ஏசாயா 66:3; 1:10-17; மீகா 6:7,8: சங்கீதம் 40:6 றவைா எபி. 10:5 போன்ற வசனங்களை வாசித்தால், அவர்கள் தங்கள் ஆத்ம மறுரூபம் பற்றி கவலையின்றி, நியாயப் பிரமாண பலிமுறைகள், காணிக்கைகள், உபவாசங்களிலேயே ஈடுபட்டிருப்பதால், அவர்களை தேவன் வெறுத்தார்; ஆனால், அவர்களை அரவணைத்து, நல்வழிப்படுத்தி, நிழலான பலியை நிஜமாய்க்காட்ட அவரே பூமிக்கு வந்தார். என்னே அவர்கள் மேலுள்ள தேவ அன்பு! இந்த நிஜமான பரிகாரத்தை விசுவாசித்தவர்கள், இரட்சிக்கப்பட்டு, சீடராகி "கிறிஸ்தவர்கள்" என்று ஆனார்கள். இதை விசுவாசிக்காத இஸ்ரேலர்கள், தீர்க்கதரிசிகள் சொன்னபடி இன்னும் சாபத்தில் தான் இருக்கிறார்கள். ஆனாலும் ரோ. 11-ல் சொல்லியபடி, இயேசு 2ம் முறை பூமிக்கு வரும்போது, அவர்கள் எதிர்பார்த்த மேசியா இவரென்று விசுவாசித்து அவர்கள் எல்லாரும் இரட்சிக்கப்படப் போகிறார்கள். அந்த நாள் மிக சமீபமே.

**66. இயேசு தள்ளப்பட்ட கல்லோ, மூலைக்கல்லோ அல்ல; முகமது தான் மூலைக்கல்.**

★ இதற்கு ஆதாரம் குரானிலிருந்தாவது கொடுக்க முடியுமா?

ஆபிரகாம் வீட்டிலிருந்து தள்ளப்பட்ட ஆகார் தான் தள்ளப்பட்ட கல் என்கின்றனர்; அவள் வழிவந்த இஸ்மவேல் தான் தள்ளப்பட்ட

கல் என்கின்றனர். முகமது தான் தள்ளப்பட்ட கல் வழியாய் வந்த மூலைக்கல் என்கிறார்கள். இப்படி எல்லாம் மாறிமாறி சொல்வது ஹேஷ்யம் தான்.

**"பைபிள் சொல்கிறது:-** தள்ளப்பட்ட அதே கல் தான் மூலைக்கல்லாகிறது" என்று (சங்கீதம் 118:22). அப்படியானால் ஆகார் மூலைக்கல்லா? இஸ்மவேல் மூலைக்கல்லா? முகமது தள்ளப்பட்ட கல்லா? இல்லையே! 1 பேதுரு 2:8; எபே. 2:20; தானி. 2:34 போன்ற வேத வசனப்படி, கல் - தள்ளப்பட்ட கல் - மூலைக்கல் இயேசுவே. கல் என்பது ஒரே ஆளைத்தான் சொல்கின்றது; சமுதாயத்தை சொல்லவில்லை; இரண்டு மூன்று ஆட்களை சொல்லவில்லை; இயேசுவாகிய கல், இஸ்ரேல் சபையால் தள்ளப்பட்டது. (இஸ்ரேல் ராஜ்யத்தால் அல்ல; அவர்களுக்குத்தான் அரசாங்கமே இல்லையே). ஆனால் அவர் மரித்து உயிர்த்தெழுந்து, புதிதும் ஜீவனுமாகிய கிறிஸ்தவ சபை கட்ட (மத். 16:18; எபே. 2:14, 15) மூலைக்கல்லாய் நின்றார். ஆமென். அதன்மேல் கிறிஸ்தவம் என்கிற மாளிகை எழும்பிக் கொண்டிருக்கிறது.

**67. "அதோ உன் மகன்" - யோ. 19:26.**

**சிலுவையில் தொங்குபவர் தன் மகனென்று தவறுதலாக எண்ணி அழுது கொண்டிருந்த மரியாளுக்கு, "நான் உன் மகனில்லை; உன் மகன் அதோ அங்கே இருக்கிறார்" என்று வேறொருவர் சொல்வது போல இருப்பதால், இயேசு சிலுவையில் தொங்கி மரிக்கவில்லை.**

★ 600 ஆண்டுகளாய் எழும்பாத இந்தக் கருத்து, முஸ்லீம்கள் மூலமாய்த் தான் வருமா? இது உண்மையென்றால் இயேசு மரிக்கவில்லை என்று யாராவது சொன்னதாக சரித்திர ஆதாரம் உண்டா? இயேசுவை சிலுவையில் தொங்கவிடாமல், வேறொருவரை சிலுவையில் "அல்லாவே" தொங்க வழி வகுத்தார் என்பது (குரான் 4:157) அல்லாவின் கண்ணியத்திற்கு இழுக்கல்லவா? இது அல்லாவின் சூழ்ச்சியா? (குரா. 3:54).

சிலுவையில் தொங்கியவர் வேறொருவர் என்றால், பெற்ற தாயால் அடையாளம் கண்டு கொள்ள முடியாதா? அந்த வேறொரு ஆள் இப்படி சொல்ல வேண்டிய கட்டாயமில்லையே! "அதோ உன் மகன்" என்று வேறொரு ஆள் சொல்வதானால், அந்த கூட்டத்தில் இயேசு இருந்திருக்க வேண்டுமே! அவரைப் பார்த்து தானே இந்த

வேறொரு ஆள் சொல்லியிருப்பார்! அப்படி இயேசு அங்கே இல்லை என்றால், யாரைப் பார்த்து சொல்லப்பட்டது? உண்மையிலேயே அங்கே இயேசு இருந்திருந்தால் "என்னை ஏன் கொல்கிறீர்கள்? அதோ அங்கே இயேசு இருக்கிறார்" என்று சொல்லப்பட்டிருக்குமே! அப்போது, ரோம சர்க்கார், தவறுதலாய் வேறே ஒரு ஆளை சிலுவை யிலறையாமல், உண்மையான அந்த இயேசுவைப் பிடித்து அறைந்திருப்பார்கள் அல்லவா? இப்படியெல்லாம் அன்று நடக்காததால் சிலுவையில் தொங்கியது இயேசுவே தான் என அறிகிறோம்.

எத்தனை பிள்ளைகள் இருந்தாலும், தன் ஊழியத்தில் கூடவே இருந்து, இறுதியில் கலங்கி நிற்கும் தன் தாயைப் பார்த்து, "இனி நானல்ல மகன்; நான் உயிர்த்தெழுந்து, தெய்வநிலைக்கு முழுமையாக ஆக போகிறேன். இனி மேலும் எனக்கு தாய் என்று உங்களை சொன்னால், தேவனுக்கு மேலே உங்களை உலகத்தார் தெய்வமாக்கி விடுவார்கள். எனவே, ஊழியம் செய்யும் உங்களுக்கு, உங்களோடு ஊழியம் செய்யும் யோவானே மகன் போலிருந்து பணிவிடை செய்வான்" என்று இயேசு தான் சொன்னார் என்பதே மெய். எனவே, இதை வேறொருவர் சொன்னதாக எடுக்கவே முடியாது.

மேலும் தொங்கி மரித்தவர் வேறொருவர் என்றால், ஐஸ்வரியவான் யோசேப்பு எப்படி அந்த சரீரத்தை வாங்குவான்? நிக்கோதேமு எப்படி பரிமளதைலம் கொண்டு வந்திருப்பான். சிலுவையில் இயேசு தொங்கவில்லை என்றால், ஒரு கள்ளன் எப்படி இயேசுவுக்காக மற்றவனை கடிந்து கொண்டிருப்பான்? அவன் எப்படி இரட்சிப்புக்குள் வந்திருப்பான்? தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த பெண்கள் எப்படி கல்லறைக்கு போயிருப்பார்கள்? சிலுவையில் தொங்கிய வேறொருவனைப் பார்த்து, வருகிறவர்களும் போகிறவர்களும் ஏன் நிந்திக்க வேண்டும்? கல்லறையை ஏன் காவல் காக்க வேண்டும்? இப்படி ஏராளம் கேட்கலாம். சிந்தித்தால் உண்மையை தேவன் வெளிப்படுத்துவார்.

6ம் நூற்றாண்டில் உண்டான குரானைத்தவிர, வேறு யாருமே, இயேசு சிலுவையில் மரிக்கவில்லை என்று சொன்னதே இல்லை. இயேசு சிலுவையில் மரித்தார் என்பதற்கு சரித்திரமே சாட்சி. "இவ்வளவு சாட்சிகளும் பொய்; குரானிலுள்ளது தான் மெய்யா?"

**68. இயேசு சிலுவையில் அறையப்படப் போவதாகவும், 3ம் நாளில் உயிர்த்தெழுவார் என்றும், எந்த தீர்க்கதரிசிகளும் பழைய ஏற்பாட்டில் சொல்லவே இல்லை. லூக். 24:27ல் இயேசு சொன்னதாகக் கூறுவது இடைச்சொருகல்; பொய்யானது.**

★ ஆதியாகமம் முதல், எல்லா தீர்க்கதரிசிகளுமே, இயேசுவின் வருகை, மரணம், உயிர்த்தெழுதல் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

**உதாரணத்திற்கு :** ஆதி. 3:15; 22:18; 26:4; 46:10; யாத். 12; எண். 29:9; 24: 17, 18; உபா. 18 : 15-18; ஏசாயா 7:14; 40:10; 53:2-12; 26-7,8; 50; 47; எசே. 34:23; 37:25; தானி. 9:24-26; மல். 3:1; 4:2; ஓசியா 13:14; சங். 22:2; 68:18; 69; 16:10; 118:22-24; 45:40; 110; சகரியா 13:6-7; 6:9-13 போன்ற பல வசனங்களை கூறலாம். எனவே இயேசு, லூக்கா 24:27ல்

"மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேத வாக்கியங்கள் எல்லாவற்றிலும், தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை, அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார் என்று உள்ளது உண்மையே."

லேவி. 23-ல் சொல்லப்பட்ட அத்தனை பண்டிகைகளும் கிறிஸ்துவுக்கு நிழலாட்டமே (கொலோ. 2:16, 17). அதிலே பஸ்கா பண்டிகை ஆபீப் மாதம் 14ம் தேதியும் முதற்பலன் பண்டிகை 16ம் தேதியும் கொண்டாடுவது, இயேசுவின் மரணமும், 3-ம் நாள் உயிர்த்தெழுதலும் தானே! "பாவ நிவாரண நாள்" பண்டிகையில் பலியோடு, போக்காடு இயேசுவுக்கு நிழலாட்டம் தானே! ஆபேல் மூலம் இரத்தப்பலி உருவானதும் அங்கீகரிக்கப்பட்டதும், மேசியாவிற்கு நிழல்தானே. இன்னும் ஏராளம் சொல்லலாம்.

**69. (மத். 7:6: 15:24-26) இஸ்ரவேல் மக்களுக்காக வந்த இயேசு, பாலஸ்தீனாவில் உள்ள இரண்டு கோத்திரத்தாருக்கு மட்டுமே போதித்துவிட்டு மரித்தார் என்றால், அவர் தன் போதிக்கும் கடமையில் தோற்றுவிட்டாரல்லவா!**

★ கேள்வி கேட்பவர்களுக்கு சரித்திரம் தெரியவில்லை. 10 கோத்திரங்கள் இஸ்ரவேல் ராஜ்யம் என்ற பெயரில் இருந்தது. கி.மு. 721 வாக்கில் அசீரிய ராஜா அந்த ஜனங்களை சிறைப்பிடித்து, அந்த ராஜ்யத்தை நிர்மூலமாக்கினான். அதிலே செத்துப் பிழைத்த ஒரு சிலர், 2 கோத்திரங்களடங்கிய யூத ராஜ்யத்துக்கு வந்து வாழ்ந்தனர். ஆக, முஸ்லீம்கள் சொல்கின்ற அந்த பாபிலோன் தேசத்தில் - அதாவது, யூத

ராஜ்யத்தில்தான் அனைத்து இஸ்ரவேல் கோத்திரத்தாரும் வாழ்ந்தனர். அதிலே பெரும்பாலோர் யூத மற்றும் பெஞ்சமின் கோத்திரத்தார்தான். எனவே, அங்கிருந்த 12 கோத்திரத்தாரையும் 'யூதர்' என்றும், 'இஸ்ரவேலர்' என்றும் அழைத்தனர். ஆக, இந்தப் பகுதியிலிருந்த அத்தனை இஸ்ரவேலருக்கும், இயேசு தன் திட்டப்படியே போதிக்கிருக்கிறார் என்பது உண்மை. அசீரியர் தலைமையில் உள்ள பகுதியில் உள்ளவர்கள் எல்லாரும் புறஜாதியாரோடு இணைந்து ஒன்றிவிட்டனர். (There were no Israelists). இப்படிப்பட்டவர் களுக்கும், நம்மைப்போல பலதரப்பட்ட ஜாதியாருக்கும் சத்தியத்தை அறிவிக்க, யூதர்களால் தள்ளப்பட்ட இயேசு கட்டளை கொடுத்துவிட்டுப் போனார் (யோ. 10:16; மத். 28:18-20; அப். 1:8).

**70. புறஜாதியாருக்கு சுவிசேஷத்தைப் போதிக்க ஒருபுறத்தில் தடைவிதித்துவிட்டு, மறுபுறத்தில் உபதேசம் பண்ணுங்கள் என்கிறாரே (மத். 28:19) ஏன்?**

★ அவர் மனிதனாய் வாழ்ந்தபோது, இஸ்ரவேலருக்குத்தான் போதித்தார்; போதிக்கச் சொன்னார் (மத். 10:5). அவரை இஸ்ரவேலர் rejected both officially & morally. (சங் 118:22-24; மத். 21:42,43). எனவே அந்த சுவிசேஷத்தை புறஜாதியாருக்கு பிரசங்கிக்கச் சொல்கிறார். நம் தேவனின் பரிபூரண சித்தமெல்லாம், ஒருவனும் கெட்டுப் போகாமல், அனைவரும் நித்திய ஜீவனை சுதந்தரிக்க வேண்டும் என்பதுதான் (யோ. 3:16). முதலாவது சுவிசேஷம் இஸ்ரவேலருக்கு; அவர்கள் மூலமாய் புறஜாதியாருக்கு (ரோ. 11:11)

**71. பூமியிலுள்ள சகல ஜாதியாருக்கும் பிரசங்கிக்க இயேசு சொல்லியிருந்தால், ஆதி திருச்சபையில், புறஜாதியாருக்கு போதிக்க வேண்டுமா வேண்டாமா என்று வாக்குவாதம் - அதிலும் பேதுருவுக்கும் பவுலுக்குமிடையில் (அப். 15:6-30) - ஏன் வந்தது?**

★ அங்கே நடந்த கருத்துப் பரிமாற்றம், புறஜாதியாருக்கு போதிக்க வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி அல்ல. புறஜாதியாருக்கு எப்படி போதிப்பது என்பதில்தான் வாக்குவாதமே ஒழிய வேறல்ல; இறுதியில் அனைவரும் முடிவெடுத்து, எல்லா சபைகளுக்கும் யாக்கோபு கடிதமே எழுதினார் (அப். 15).

**72. நித்திய ஜீவனில் பிரவேசிக்க கற்பனைகளை கைக்கொள்ள இயேசு சொன்னார். அது ஏகதெய்வ வணக்கத்தை போதிக்கும் மோசேயின் கட்டளை. இறைவன் மூவர் என்ற புதிய கொள்கையை அறிமுகப்படுத்த இயேசு பிறந்திருந்தால், ஏகதெய்வ கொள்கையை ஏன் வலியுறுத்தினார்?**

★ கிறிஸ்தவத்தின் கொள்கை ஏகதெய்வக் கொள்கைதான்; இறைவன் மூவர் அல்ல; இதை அறிமுகப்படுத்த இயேசு வரவில்லை.

**73. இயேசு யூதத் தலைவர்களை விரியன்பாம்புக் குட்டிகள் என்றும், விபச்சார புத்திரர்கள் என்றும் சொல்கிறார். ஆனால், சீடர்களிடம், தம் சகோதரனை மூடர்கள் என்று அழைக்கக்கூடாது என்கிறார். தனக்கொரு சட்டம், பிறருக்கொரு சட்டம் தருபவர் தேவனா?**

★ மத். 5:22ஐ வாசியுங்கள். தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொண்டு, வீணன், மூடன் என்று சொல்லக்கூடாது. மற்றப்படி நியாயமாய் கோபித்துக் கொள்ளலாம். ஆனால், இயேசு சொன்ன, விரியன்பாம்புக்குட்டி, விபச்சார சந்ததி, வெள்ளையடிக்கப் பட்ட கல்லறை என்பதெல்லாம் நியாயமானதுதான்; எனவே நியாயமாய் கோபித்துக் கொண்டார். ஆக, சட்டம் அனைவருக்கும் சமமே.

**74. சங். 89:27ல் தாவீது "முதற்பேறானவன்" என்றும், யாத். 4:22ல் இஸ்ரவேல் "தன்குமாரன்" என்றும், மத். 5:9ல் சமாதானம் பண்ணுவோர் "தேவனுக்கு புத்திரர்கள்" என்றும், வேதத்தில் சொல்லியிருக்க, இயேசு உண்மையிலேயே தம்மைத் தேவகுமாரன் (இறைவனே பெற்றெடுத்த மகன்) என்று கருதினால், தமக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை விளக்கி ஏன் சொல்லவில்லை?**

★ ஒருமுறை பேதுரு இயேசுவை, "ஜீவனுள்ள தேவனுடைய குமானாகிய கிறிஸ்து" என்று சொன்னபோது, இதை பிதா வெளிப்படுத்தினார் என்கிறார் இயேசு (மத். 16:16,17) காலாகாலமாய் இந்த வெளிப்பாடு இல்லையென்றால், இயேசு, தன்னை "தேவனுடைய குமரனாகிய கிறிஸ்துதான்" என்று பிரதான ஆசாரியனிடம் சொன்ன உடனே, அவன் வஸ்திரங்களை கிழித்துக் கொண்டு, இவன் தேவதூஷணம் சொன்னான் என்று எப்படிச் சொல்வான்? (மத். 26:63-66). மட்டுமல்ல... தாவீதின் குமாரனாகிய கிறிஸ்து, ஆண்டவர் (Lord, Adonai Heb) என்று இயேசுவே

விளக்கும்போது, பரிசேயர் மாறுத்தரம் சொல்லவில்லை அல்லவா? (மத். 22:41-46). ஆக, தேவகுமாரன் - மனுஷகுமாரன் என்பதற்கும் மற்றப்படி தேவனுடைய புத்திரர்-மகன்-என்பதற்கும் ஆதியிலிருந்தே தேவனும் விளக்கியிருக்கிறார்; இயேசுவும் விளக்கியிருக்கிறார்; இஸ்ரவேலரும் அறிந்திருக்கிறார்கள். ஒன்றே ஒன்று... தச்சன் மகனாகிய இவர் தேவகுமாரன் என்று அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.

**75. யூதாஸ் காட்டிக் கொடுப்பான் என்று அறிந்திருந்தும் ஏன் சீடனாய் தொடர்ந்து இயேசு வைத்திருந்தார்? மற்ற சீடரிடம் ஏன் அவனைப்பற்றி சொல்லவில்லை? அவர்கள் இவனோடு பழக ஏன் தடுக்கவில்லை?**

★ பாவியையும் ஏற்றுக் கொள்பவரே தேவன். நம்பி வந்தான்; ஏற்றுக் கொண்டார். அவனைப்பற்றிய நடக்கப் போகும் பொல்லாத காரியங்களை அவன் நல்லவனாய் இருக்கும்போதே அவன் தோழர்களிடம் சொல்வது சரியல்லவே! அவர்களைப் பழக வேண்டாமென்றும் தடுப்பதும் ஞாயமல்ல. அவன் மனம் மாற அவனுக்கு வழிவகைகளை உண்டாக்கினார் (யோ. 13:21-28). அவன் மாறமாட்டான் என்றாலும், அவனை சீடராக்காமல் இருந்திருந்தால் மாத்திரம் இந்த தவறு நடக்க வழியில்லையா?

**76. சிலுவையில் அறையுண்டு மரிப்பதே தமது நோக்கம் என இயேசு கருதியிருந்தால், சிலுவையில், "ஏலி ஏலி லாமா சபக்தானி" என்று ஏன் கதறினார்? (மத். 27:46)**

★ அவர் எப்போதும் அப்பா-மகன் உறவோடுதான் தேவனோடு பழகி வந்தார். சிலுவையில் தொங்கியிருக்கும்போதுகூட 'பிதாவே' என்றுதான் அழைக்கிறார். ஆனால் மத். 27:46ல், "தேவனே! தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" என்கிறார். அப்பா உறவு மாறிப்போயிற்று. ஏன்? 2 கொரி. 5:21; யோ 3:14, 15ன்படி நமது பாவங்கள் அவர்மேல் சுமத்தப்பட்டதால், தீமையைக் காணாத சுத்தக் கண்ணராகிய நம் தேவன் (ஆபகூக் 1:13) இமைப்பொழுதில் அவரைக் கைவிட்டார் (ஏசா. 54:7) அதனாலேயே, தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையிலே, இயேசு அன்பாய்க் கூப்பிட்டார். பிதாவின் உறவோடே, பிதாவின் சித்தம் நிறைவேற விரும்புகிறவர் நம் இயேசு. அல்லேலூயா!

**77. சிலுவையில் சாவது ஒரு சபிக்கப்பட்ட மரணம் (உபா. 21:23). இயேசு சிலுவையில் மரணமுற்றார் என்றால் அவரும் சபிக்கப்பட்டவரா?**

★ அவர் பாவம் செய்யவில்லை. நீதிபதி பிலாத்து, காட்டிக் கொடுத்த யூதாஸ், நூற்றுக்கதிபதி யோசேப்பு ஏன் இயேசுவே சாட்சிகள் பகர்ந்திருக்கின்றனர். அவர் சிலுவையிலறையப்பட்டது நமது பாவங்களை ஏற்றுக் கொண்டதால்தான். (2 கொரி. 5:21; ஏசா. 53:4,11,12; யோ. 1:29; ரோ. 4:25) நம் நிமித்தம் சாபமாக்கப்பட்டார் (கலா. 3:13). அப்படி மரித்தவர் நீதிமானாய் உயிர்த்தெழுந்தார்.

**78. இயேசுவின் மரணச் செய்தியை கேட்டு பிலாத்து ஆச்சரியப்பட்டது ஏன்? (மாற். 15:44).**

★ சாதாரணமாக, உலக மனிதர்களின் சிலுவை மரணச் சாவு, இவ்வளவு குறைந்த நேரத்தில் நடக்காது. அதனால் பிலாத்துக்கு ஆச்சரியம். இயேசுவே "எல்லாம் முடிந்தது" என்று சொல்லி தன் ஜீவனை விட்டார் என்பதைக் கண்ட, கேட்ட, யோசேப்பின் சாட்சியைக் கேட்டு, பிலாத்து ஒத்துக் கொண்டான்.

**79. மரணத்தை வென்று உயிர்த்தெழுந்ததால் இயேசு ஏன் யூதர்களைக் கண்டு பயந்தார்? அவர்மேல் மரணத்திற்கு இனி வல்லமை இல்லையென்றால்...**

★ மரித்துயிர்த்த இயேசுவோ, மனிதாய் வந்த இயேசுவோ, ஒருபோதும் யூதர்களைக் கண்டு பயப்படவே இல்லை.

**80. உயிர்த்தெழுந்த இயேசு தமது சீடர்களுக்கு மட்டுமே காட்சி தந்தது ஏன்? உயிர்த்தெழுந்ததை ஏன் இரகசியமாக வைக்க வேண்டும்?**

★ எந்த சீடர்கள் மூலமாய், தனது சத்தியம் உலகமெங்கும் போக சித்தம் கொண்டாரோ அவர்களுக்கு விசுவாசத்தில் பலப்படுத்தி, எழுப்புதலை உருவாக்கவே காட்சி தந்தார்; ஊதினார்; அதிகாரம் வல்லமைகளை தந்து, பயத்தின் ஆவியை போக்க, பரிசுத்த ஆவிக்காய் காத்திருக்க சொன்னார். வசனத்தை அறிந்து, உயிர்த்த காட்சியை காண்பவர் களுக்கு மட்டுமே சத்தியம் புரியும், மற்றவர்களுக்கு புரியாது. பன்றிகளுக்கு முத்துகளை போடலாமா? (மத். 7:6). அவர் உயிர்த்தெழுந்ததை இரகசியமாய் வைத்திருந்தால், அவரோடுகூட உயிர்த்த பரிசுத்தவான்களை ஏன், எருசலேமுக்குள் அனுப்ப வேண்டும்? பரலோகம் போகும்போது ஏராளமான பேர் பார்க்கும்படி போனாரே அதுவா இரகசியம்? 1 கொரி. 15:6ன்படி ஒரே வேளையில்

500 பேருக்கு மேலானவர்களுக்கு காட்சி தந்தாரே அதுவா இரகசியம்? அவருக்கு சீடர்கள் 12 பேர்தானே, அவரை ஒலிவமலையில் கண்டவர்களில் 120 பேர் பரிசுத்த ஆவியைப் பெற காத்திருந்தார்களே எப்படி? பேதுரு, அப்.11:40,41ல் சொன்னதைப் பாருங்கள்.

**81. இயேசு கடவுள் என்றால், 3 நாட்கள் மரணித்தபோது, கடவுளும் செத்துப் போனார் என்று பொருளா?**

★ 1 கொரி. 8:6; யாத். 20:1,2 போன்ற பல வசனங்களின்படி ஒரே தேவன் நமக்குண்டு. அவரை பிதா என்று அழைக்கிறோம். அவருக்குள்ளிருந்த வார்த்தை (யோ. 1:1) மாம்சமாகி, பூமியில் இயேசுவாய் வந்தார். அதைத்தான் தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார் என்கிறோம் (1 தீமோ. 3:16) சூரியனிலிருந்து ஒளி பூமிக்கு வந்ததால் சூரியன் இருளாகுமா? இல்லை, ஒளி அங்குமிருக்கும். அப்படியே வார்த்தை வந்ததால் அங்கே - தேவத்துவத்தில் குறைவு இருக்காது. மாம்சத்தில் வந்தவர் மரித்தாலும், தேவத்துவம் என்றென்றும் இருந்தே தீரும். எந்த மாற்றமும் இல்லை. ஆமென். தேவத்துவத்திற்கு - God Head - Diety - தேவனுக்கு மரணமே இல்லை; அவர் சாவாமை உள்ளவர் (1 தீமோ. 6:16). ஒரு நாள் வரும்; மனித ரூபத்தில் இருக்கும் உயிர்த்தெழுந்த இயேசு, தேவத்துவத்தோடு இரண்டறக் கலந்துவிடுவார். ஆமென்! தேவனின் வார்த்தை மாம்சமாய் - மனித சாயலாய் வந்ததால் மனிதனைப் போல் அவருக்கு உட்பட்டுத்தான் இருக்க வேண்டும். தேவனோ தேவத்துவத்தின் பரிபூரணத்தை தம் சித்தப்படி மனிதரூபத்தில் அவருக்கு தந்திருக்கிறார். ஆமென்.

**82. இயேசுவே கடவுளாக இருந்தால், கடவுளின் ஏகத்துவத்தைப் பற்றி அவர் ஏன் அடிக்கடி வலியுறுத்தினார்? (see மாற். 12:29,32; மத். 22:34-40; யோ. 5:30)**

★ ஏகத்துவத்தைப் பற்றி இயேசு போதித்தார் என்று நீங்கள் ஒத்துக் கொண்டதற்கு நன்றி. யோ. 1:1ன்படி தேவனின் வார்த்தையாயிருந்தவர், இயேசு என்ற பெயரில், மனிதரானார். (யோ. 1:12; பிலி. 2:6-11) தேவனுக்குள் வார்த்தையாயிருந்தவர் மனிதரானார் (1 தீமோ. 3:16). மனிதனானாலும் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் அவருக்குள் இருந்தது (கொலோ. 2:9). ஆனாலும், மனித சாயலில் இருப்பதால், உலக மனிதன் போலவே அவரின் செயல்பாடுகள் இருந்தன; அவைகளில் ஒன்றுதான் ஏக இறைவனைப் புகழுவது; போற்றுவது; வணங்குவது.

**83. பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்ட மேசியா, ஒரு தெய்வீக அந்தஸ்து உடையவராக எந்தக் கட்டத்திலும் காட்டப்படவில்லை. அப்படியானால், இவர் தெய்வீக நிலைக்கு உயர்த்தப்பட்டது எவ்வாறு?**

★ வேதத்தை நன்கு படித்தால் உண்மை புரியும். வரப்போகிற மேசியாவைப்பற்றி ஏசா 9: 6, 7ல் சொல்லும்போது, "வல்லமையுள்ள தேவன்", "நித்திய பிதா" என்று சொல்லப்பட்டிருக்கிறது. சங். 102: 25, 27ஐ தியானித்தால், இவர் "நிலைத்திருப்பவர்" என்றும் "மாறாதவர்" என்றும் (Eternal) தெய்வீக நிலையில் காண்கிறோம். சங். 45: 6, 7; ஏசா. 11:1-5; எபி. 1:8, 9; சங். 110:1; தானி. 7:13, 14 ஐ வாசித்தால் இவர் தெய்வீக நிலையில் உள்ளவர் என அறியலாம். மட்டுமல்ல.. "அவர்கள் அவரை நோக்கி, கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார் என்று வேதத்தில் சொல்லியதை கேட்டிருக்கிறோம்... என்றார்கள்" (யோ. 12:34). அப்படியாய் தெய்வீக நிலையிலிருந்த மேசியா - கிறிஸ்து - தான், அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார். மரணத்தை ஜெயித்து, பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனார் (ரோ. 1:5).

**84. இயேசு தம்மை தெய்வத்தன்மையுடைவராகக் கருதியிருந்தால், மற்ற மனிதர்களையும் தம்மோடு சமநிலையில் வைத்துப் பார்த்தது ஏன்? see யோ. 20:17.**

★ நம் தேவன் எப்போதுமே, தான் படைத்த மனிதர்களோடு வாசமாயிருக்கிறவர்; உயர்வு தாழ்வு பார்க்காதவர்; அப்பா-மகன் உறவைக் காட்டுபவர். இந்தத் தன்மைதான் இயேசுவிடம் இருந்தது; இருக்கிறது. "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும், கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி. 2:4-8) என்ற வசனத்தை தியானித்தால் போதும்.

**85. தம்மை தேவகுமாரன் என்று விளக்குவதற்குப் பதிலாக, யோ. 10:34-36ல், நீதிபதிகள் - தீர்க்கதரிசிகள் போன்றவர்களாக ஒப்பிட்டு, 'தேவர்கள்' என்று அழைக்கப்படும் அவர்களோடு இணைத்துப் பேசியது ஏன்? அதுதான் உண்மையா?**

★ சங். 82:1-6ஐ வாசித்தால், தேவ வசனப்படி தீர்ப்புச் செய்கிற நீதிபதிகள் எல்லாம் "தேவர்கள்" (gods) என்ற நிலைக்கு வருகிறார்கள். வசனப்படி நடப்பவர்களுக்கே இந்த மேன்மை என்றால், பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டும், பிதாவின் கிரியைகளை செய்தும் இருக்கிற நான் என்னை "தேவகுமாரன்" என்று சொல்லக்கூடாதா என்றுதான் இயேசு கேட்டாரே ஒழிய, தானும், "தேவர்கள்" என்பவர்களும் ஒன்று என்று அவர் வாதிடவில்லை.

**86. இயேசு கடவுளாக இருந்தால், தாமே சுயமாக, தன் வலிமையினால் எதையும் செய்ய முடியாது என்று ஏன் கூறவேண்டும்? (யோ. 5:30)**

★ யோ. 5:30ல் நான் சுயமாய் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லவில்லை; "நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்யவில்லை" என்றுதான் சொன்னார். சங். 40:6-8; எபி. 10:5-7ன்படி தேவசித்தத்தின்படி செய்ய மனிதனாய் வந்தவர், அப்படியே செய்தார். அவ்வளவுதான். கொலோ. 2:9ன்படியான தேவத்துவம், தேவசித்தப் படியே வெளிப்படும்.

**87. இயேசு கடவுளாக பூமியில் இருந்திருந்தால், வஸ்திரங்களை தொட்டது யாரென தெரியாதா? (மாற். 5:30); வருகையின் நாள்பற்றி தெரியாதா? (மாற். 13:32); தேவனால் அனுப்பப்பட்டவர் என்று ஏன் கூறவேண்டும்? (யோ. 6:29); பிரார்த்தனை ஏன் செய்ய வேண்டும்? (மாற். 1:35); பழுக்குங்காலம் இல்லாதபோது, பழுக்காத அத்தி மரத்தை ஏன் சபிக்க வேண்டும்? (மாற். 1:12-14); செபதேயுவின் குமாரர்களுக்கு அரியாசனம் கொடுக்க ஏன் வல்லமை இல்லை? (மத். 20:23); மனிதன் என்று தன்னை சொன்னது ஏன்? (யோ. 8:39, 40); யோ. 17:3ல் கடவுளிடமிருந்து தம்மை பிரித்துக் காட்டியது ஏன்? யூதாஸை காட்டிக் கொடுக்க அனுமதித்தது ஏன்? சிலுவையில் அறையப்பட்ட ஒருசில மணிகளிலேயே மரித்தது ஏன்? அவரை அனுப்பியது யார்? (மத். 10:40).**

★ முதலில் இயேசு மனிதனாக பூமிக்கு வந்தார் என்று அறிய வேண்டும். தேவனின் வார்த்தையானவர், மாம்சமாகி மனிதனானார் (யோ 1:1,14; பிலி. 2:6-8). மனுஷீகம் முழுமையாய் அவரிடம் இருந்தது; தேவத்துவத்தின் பரிபூரணம், தேவசித்தப்படி அவரிடமிருந்து வெளிப்பட்டது. ஆமென். மாற். 5:30ன்படி வஸ்திரத்தை தொட்டதால்

வல்லமை புறப்பட்டதை உணர்ந்தார்; ஆனால் இன்னாரென்று அறிந்து, சாட்சியை சீஷர்களுக்கும் மக்களுக்கும் காட்ட விரும்பியே யாரெனக் கேட்டார். மனிதனாய் இருந்தவர்க்கு வருகையின் நாள் தெரியவில்லை. பிதாவினால் அனுப்பப்பட்டவர்தான்; மனிதனாய் வந்ததால் பிரார்த்தனை செய்தே ஆகவேண்டும். பெத்தானியா பகுதியில் ஒரு சில மரங்கள், பழுக்கும் காலம் இல்லாதபோதும் இலை பசுமையாயிருந்தும் பழுக்கும். அப்படியே இந்த மரத்தின் இலைகள் பசுமையாய் இருந்ததால் பழம் இருந்திருக்க வேண்டும். அப்படி இல்லாததால் சபித்தார். இது, கூட வந்த சீஷர்களுக்கு ஒரு பாடமாக்கப் பட்டது. உன் வாழ்க்கை, ஊழியம் எல்லாம் செழிப்பாயிருந்தாலும், ஆவியின் கனி, நீதியின் கனி இல்லாவிட்டால் நீயும் சபிக்கப்படுவாய்; தண்டிக்கப்படுவாய். மனிதனாய் இருப்பவர்க்கு அதிகாரம் கொடுக்க வல்லமை இல்லை என்பது உண்மைதானே! அவரிடமிருந்து தேவத்துவம் வெளிப்படுவது பிதாவின் சித்தப்படிதான். மனிதனாக வந்தவர் மனிதன் என்றுதான் சொல்வார். தேவன் வேறு; தேவனிடமிருந்து வந்த இயேசு வேறுதானே! ஒன்றுக்குள் ஒன்றா யிருந்தவர் மனிதனாய் வந்திருக்கிறார். யூதாசை காட்டிக் கொடுக்க தேவசித்தம் இருந்தது; அதையே இயேசு செய்யச் சொன்னார். தானே தன் ஜீவனை விட அதிகாரம் கொண்டவரென்பதால் (யோ. 10:18) எப்போது வேண்டுமானாலும் மரிக்கலாமல்லவா? வார்த்தையான வரை அனுப்பியது பிதாவாகிய தேவன் தான்.

**88. இயேசு மற்றும் புத்தரின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளில் அநேக ஒற்றுமைகள் இருப்பது ஏன்?**

★ அநேக ஒற்றுமை இருப்பதால் இயேசுவும், புத்தரும் அல்லாவால் அனுப்பப்பட்ட நபி என்று சொல்கிறீர்களா? என்ன ஒற்றுமை வேற்றுமை இருந்தாலும், புத்தர் என்பவர் நம்மைப்போல மனிதன்; இயேசுவோ மனிதனாய் வந்த தேவன் (1 தீமோ. 3:16).

**89. பழைய ஏற்பாட்டில் வரும் மனுஷகுமாரன் தெய்வீகத்தன்மை உள்ளவரல்லர். அப்படியிருக்க, மனுஷகுமாரன் என்ற அந்த சொல்லை ஏன் பலமுறை தமக்காக இயேசு உபயோகித்து தான் மனுஷகுமாரனா தேவகுமாரனா என்று குழப்புகிறார்?**

★ தானி. 7:13, 14ஐ வாசித்தால், மனுஷகுமாரனுக்கு தெய்வீகத்தன்மை உண்டு எனப் புரியும். பரலோகில் தேவகுமாரனாய் ஆக்கப்பட்டவர், பூலோகில் மனுஷகுமாரனாய் வந்தார்.

**90. பாவ பரிகாரக் கொள்கையில் இயேசுவுக்கு நம்பிக்கை இருந்தால், தமது சீடர்களிடம், மற்றவர்களை நீங்கள் மன்னித்தால் பரமபிதா உங்களை மன்னிப்பார் என்று ஏன் கூற வேண்டும்? (மத். 6:14,15). அவரது பாவ பரிகாரக் கொள்கை எல்லாப் பாவங்கயையும் மன்னிக்கத்தக்கதென்றால், மற்றவர்களிடம் மன்னிப்புத் தேட வேண்டிய தேவை என்ன?**

★ இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பில்லை என்பது வேதத்தின் மூலக் கொள்கை. அந்த இரத்தம் சிந்துதல் இயேசுவால் நிறைவேறியது என்று விசுவாசிக்கிற எந்த பாவியின் பாவமும் மன்னிக்கப்படுகிறது என்பது உண்மை. மனிதர் உங்களுக்கு செய்யும் தப்பிதங்களை மன்னிக்கச் சொல்கிறார் இயேசு. மன்னிப்பதும் மறப்பதும் நம் தேவனின் கொள்கை (1 யோ. 1 : 7-9). இந்தக் கொள்கையை நாமும் கைக்கொள்ள வேண்டும். அதுவே தேவ அன்பு. நமக்கு எதிராய் தவறு செய்தவன் நம்மிடம் மன்னிப்பு கேட்டாலும் கேட்காவிட்டாலும், நாம் மறக்க வேண்டும்; மன்னிக்க வேண்டும். இந்த உள்ளம் நமக்கிருந்தால் நம் பாவங்களுக்கும் தேவனிடம் மன்னிப்பு நிச்சயம் உண்டு. மற்றப்படி, இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்டதே பாவ மன்னிப்பிற்குத்தான் என்று விசுவாசிப்பவனுக்கே, விசுவாசித்து அறிக்கையிடுகிறவனுக்கே தேவ மன்னிப்பு உண்டு. மனிதர்களாகிய நாம் மன்னிப்பதால் தேவ அன்பு நம்மிலிருந்து வெளிப்படுவதை எதிராளியே அறிந்து, அவனுக்கு மனமாற்றம் வரவும் வாய்ப்புண்டு; அவன் தேவனிடம் ஒப்புரவாக வழியுண்டு. எனவே பாவப் பரிகாரக் கொள்கையை மற்றவர்களுக்கு உணர்த்த இது ஒரு ஏதுவாக இருக்கிறது. அவ்வளவுதான்.

**91. இயேசு உயிர்த்ததையும், இயேசுவின் பாவ பரிகாரத்தையும் நம்பிக்கை கொள்ளாத விபச்சாரி ஒருத்தியின் பாவங்களை எவ்வாறு இயேசு மன்னித்தார்? (யோ. 8:1-11)**

★ இயேசுவின் மரணம் உயிர்த்தெழுதலுக்கு அடையாளமாய்த்தான் பலிமுறைகள், பண்டிகைகள் எல்லாம் இஸ்ரவேலர்களால் நடத்தப்பட்டன. வரப்போகும் மேசியாவை விசுவாசித்து செயல்பட்ட விசுவாச வீரர்களின் பட்டியல்தான் எபி. 11ல் இருக்கிறது. அப்படிப்பட்ட சந்ததியில் வந்தவளுக்கு, இயேசுவின் பாவ பரிகாரத்தின்மேல் நம்பிக்கை இல்லாதிருந்தால், கல்லால் எறிய வந்தவர்கள் போய்விட்ட உடனே இவளும் ஓடியிருக்கலாமே! இவளுக்கிருந்த விசுவாசம்

இவளை இயேசுவிடம் நிற்க வைத்தது. இவளுடைய விசுவாசத்தாலே இவள் பாவ மன்னிப்பை பெற்றுவிட்டாள். "போ இனி பாவம் செய்யாதே" என்று சொல்லி இயேசு அனுப்புகிறார்.

**92. தமக்குப் பின்னால் வரும் சத்திய ஆவியைப்பற்றியும், மெய்யான, பொய்யான தீர்க்கதரிசிகளையும் பற்றியும் சொன்ன இயேசு, பெரும் போதகராக காட்டப்படும் பவுலைப்பற்றி ஏன் எதுவும் சொல்லவில்லை?**

★ அவருக்குப் பின்னால் வரும் எந்த மனித ஊழியர்களின் பெயரையும் இயேசு சொல்லவே இல்லை. அப்படிச் சொல்ல ஆரம்பித்தால், எழுத இடம் போதாது.

**93. பவுலின் போதனை, இயேசுவின் வார்த்தைப்படியே அமைந்திருந்தால், இயேசுவின் பிரசங்கத்திலிருந்து ஒருவார்த்தைகூட அவரது எழுத்தில் இல்லாதது ஏன்?**

★ **பவுலுடைய ஊழிய அழைப்பு:-** "இயேசுவின் மரணம் - உயிர்த்தெழுதலை விளக்கி பாவமன்னிப்பை போதித்து, புறஜாதியாரை கிறிஸ்தவ சபைக்குள் கொண்டு வருவது." அந்தப் பணியை சிறப்பாக செய்தார். இயேசுவின் பிரசங்கத்திற்கு மாறாய் எதுவும் பேசவில்லை; கிறிஸ்துவை பின்பற்றியே ஊழியம் செய்தார். அதற்காக இயேசுவின் பிரசங்கமே இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை.

**94. வருங்காலத்தில் மெய்த்தீர்க்கதரிசிகள், பொய்த்தீர்க்கதரிசிகள் வருவார்கள் என்று இயேசு சொன்னார் (மத். 7:15-20). ஆனால், பொய்த்தீர்க்கதரிசிகள் வந்துள்ளதாக கிறிஸ்தவ ஏடுகள் கூறுகின்றன. மெய்த்தீர்க்கதரிசிகள் யாருமே வரவில்லையா? இயேசுவின் தீர்க்கதரிசனம் பொய்யா?**

★ ஏராளம் வந்திருக்கிறார்கள். வெளி. 19:10ன்படி "இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது" என்றபடி, இயேசுவைப் பற்றி சொல்லும் அத்தனை இரட்சிக்கப்பட்ட ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் எல்லாருமே மெய்த்தீர்க்கதரிசிகள்தான். இயேசுவின் தீர்க்கதரிசனம் ஒருக்காலும் பொய்யாகாது.

**95. மாற். 16:1ன்படி மரியாள் சுகந்தவர்க்கத்தை 3ம் நாள் கல்லறைக்கு கொண்டு போனது மஸாஜ் செய்யத்தானே! அப்படியானால் அவர் சாகாமல் தானே இருக்கிறார்?**

★ சீல் பண்ணப்பட்ட கல்லறைக்குள் 3ம் நாள் வரை இருப்பவர், எப்படி உயிரோடிருக்க முடியும்! ஒருவேளை இவர்கள் சொல்கிறபடி சிலுவையில் மரிக்காவிட்டாலும், இந்த சீல் பண்ணப்பட்ட கல்லறைக்குள் மரித்திருக்க வேண்டுமே! மேலும், மூடிய கல்லைப் புரட்டி உள்ளே பிரேதத்திற்கு வாசனை திரவியம் பூசுவது அவர்களின் எண்ணம். அடக்கம் பண்ணியதைப் பார்த்தவர்கள் அவர்கள். (see லூக். 23:55, 56; மாற். 16:3). எனவே இயேசு மரித்தார் என்பது உண்மையிலும் உண்மையே!

❖ ❖ ❖


## ஆசிரியர் அழைத்தால் வரத் தயார்

ஞாயிறு ஆராதனைக்கு...
வேதப்பாடம் நடத்த...
வசன விளக்கம் கொடுக்க...
சுவிசேஷக் கூட்டம் நடத்த
கருத்தரங்குகள் வைக்க...
முஸ்லீம்கள், இந்துக்கள், நாத்திகர்கள்
ஆகியோரோடு கலந்துரையாட...
பைபிள் காலேஜில் போதிக்க...
உபவாசம், முழு இரவு ஜெபம்
போன்ற எல்லா கூட்டங்களுக்கும்

# 7. வேதத்தில் குளறுபடிகளா? பொய்த்தகவல்களா? முரண்பாடுகளா?

1. **மத்தேயு, லூக்கா சுவிசேஷங்களில், இயேசுவின் வம்சாவழியில் ஏன் தடுமாற்றம்? 1 நாளாகமம் 3:19ல் உள்ள செரூபாபேலின் குமாரர்களின் 7 பெயர்களில், ஆபியூத்ம் இல்லை; ரோசாவும் இல்லை. இவர்கள் வழியில் இயேசு பிறந்தார் என்றால் (மத். 1:13; லூக். 3:27) அந்த 2 மகன்களுக்கு ஒரே வம்சா வழியா?**

★ இரண்டு சுவிசேஷத்திலும், தாவீது வரை வம்சா வழியில் மாற்றமில்லை. தாவீதுக்குப்பின் சாலமோன் வழியில் மத்தேயுவும், நாத்தான் வழியில் லூக்காவும் எழுதுகின்றனர். சாலமோன் வழி, யோசேப்போடு முடிகிறது. இது ராஜரீகப் பரம்பரை. இந்த பரம்பரையில், சபிக்கப்பட்ட எகோனியா வருவதால் (எரே. 22:30), இயேசு ராஜாவாக முடியாது. இதனால், லூக்கா சுவிசேஷத்தில், மேரியின் அப்பா ஏலி வரை, நாத்தான் வழியில், வந்து, ஏலியின் adopted son ஆன யோசேப்பை காட்டுவதால், எகோனியா வழிவந்த சாபம் நீங்குகிறது. இதனால் தான், இரண்டு சுவிசேஷத்திலும், இருவேறு வம்சாவழி வருகின்றது. (ஏலியின் adopted son யோசேப்பு என்பது வேத ஆராய்ச்சியாளர்களின் கணிப்பு. அதன்படி ஏலியின் வம்சா வழி யோசேப்புக்கும், இயேசுவுக்கும் வருகின்றது. மட்டுமல்ல... ஏலியின் மகள், இயேசுவை பெற்றெடுக்கும் வரை யோசேப்போடு, இணையாததாலும், இயேசுவுக்கு உலகப் பிரகாரமான அப்பா இல்லாததாலும் எண். 27:1-11, 36:1-2-ன்படி இயேசு மரியாளின் வம்சாவழியாகவே - சுதந்திரவாளியாகவே ஆகிறார்).

**அடுத்ததாக செரூபாபேல் பிள்ளைகள் பற்றி:** செரூபாபேலின் பிள்ளைகளின் 7 பேர்களின் பெயர்களும், வேதத்தில் இல்லை. ஒருவேளை பெயர்கள் மாறி இருக்கலாம். அந்த கால கட்டத்தில் ஒரு ஆளுக்கு பல பெயர்கள் இருந்திருக்கிறது! எழுத்தாளர்களும் ஒருவரல்லவே.

தாவீதிலிருந்து இரண்டாய்ப் பிரிந்த வம்சாவழி, செரூபாபேலில் மீண்டும் இணைந்து, பின், மத். 1:13-லிருந்து அபியூத் வழியிலும், லூக்கா 3:27-லிருந்து ரோசாவழியிலும், வெவ்வேறு வழியாய், தனித்தனி வம்சமாய் தொடர்கிறது போல தோன்றலாம். உண்மை என்ன என்று பார்ப்போம்.

1 நாளா. 3:19-ன்படி எகோனியா வழியில், சலாத்தியேல்; சலாத்தியேல் வழி செரூபாபேல். இந்த செரூபாபேலின் மகன் தான் அபியூத் (மத். 1:13). 1 நாளா. 3:19, 20ல் பெயர் மாறி இருப்பவன் இவன்தான். ஆனால், லூக். 3:27ல் சொல்லப்பட்ட சலாத்தியேல் வேறு; இவன் நேரியின் குமாரன் (எகோனியா வழியல்ல); இந்த கலாத்தியேலின் வழிவந்தவர்தான் ரோசா (லூக்கா 3:27). இந்த ரோசாவின் அப்பா செரூபாபேல் வேறு; எகோனியாவின் வழிவந்த செரூபாபேல் வேறு. ரோசாவின் அப்பா செரூபாபேல் நேரியின் பேரன் (லூக்கா 3:27). இந்த நேரி - கலாத்தியேல் - செரூபாபேல் - ரோசா போன்றோரெல்லாம், தாவீதின் மகன் நாத்தான் வழி வருகிறவர்கள் (லூக்கா 3:31). ஆக, அபியூத், ரோசா ஆகியோருக்கு இரண்டு வம்சாவழி என்று அறிகிறோம். ஒரே வம்சாவழி அல்ல.

2. **தாமார், ராகாப், உரியாவின் மனைவி பத்சேபாள் போன்ற விபச்சார ஸ்தீரியின் வழியில் இயேசு பிறந்தார் என்று அவரின் பிறப்பை இழிவுபடுத்தலாமா? அப்படியானால், வேசிப் பிள்ளையும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது." (உபா. 23:2,3)-ன்படி இயேசு சபைக்கு உட்படலாகாதே!**

★ விபச்சார ராகாப் மனந்திரும்பி, சல்மோனை மணந்தாள்; தாமார் விபச்சாரியே அல்ல; நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் முன்பே, தனக்கு, யூதா வம்சம் வேண்டுமென்று யூதாவிடம் போனவள் (யூதா வழியில் வம்சம் இருந்தால் தானே, இயேசு - யூதராஜசிங்கம் வர முடியும்.) இதை ரோ. 5:13-ன்படி பாவமாக தேவனே எண்ணவில்லை. உரியாவின் மனைவியாயிருந்த பத்சேபாள், தாவீதின் மனைவியாகித்தான். சாலமோன் - நாத்தானைப் பெற்றாள். இதிலே யாரும் விபச்சாரியாயிருந்து, அவர்கள் மூலமாய் இயேசுவின் வம்சம் வரவில்லை. அவர்கள் எல்லாம் மனந்திரும்பியவர்கள். மேலும், இயேசு ஆணுக்குப் பிறந்திருந்தால் ஒருவேளை உபா. 23:2,3-ன் சட்டம் பாயலாம். ஆனால் இயேசு தேவனால் பிறந்தார். எனவே இந்த சட்டமும் பாயாது. ஆனாலும் இந்த சட்டம் 10ம்

தலைமுறை வரைக்கும்தான் effect. இயேசு 10 தலைமுறைக்கு மேற்பட்டவராயிற்றே.

3. **இயேசு பிறந்தபின், மத். 2:13-23 மற்றும் லூக். 2:15-52ல் வேறு வேறு விதமாய் அவரது வரலாறு எழுதப்பட்டிருக்கிறதே, ஏன்?**

★ இயேசு பிறந்தபின், அவரின் வளர்ச்சி காலத்தை மத்தேயும், லூக்காவும் தாங்கள் கேட்டறிந்த காரியங்களை எழுதியிருக்கிறார்கள். இருவர் எழுதியதும் நடந்த வரலாறு தான். இருவர் எழுதியதையும், நாம் அறிவது அவசியமே.

4. **யோவான் ஸ்நானனை, எலியா என்று இயேசுவும் (மத். 11:14), இல்லை என்று யோவான் ஸ்நானனும் (யோ. 1:21) ஏன் தடுமாறிச் சொல்கிறார்கள்?**

★ மல். 4:5ன்படி, இந்த யோவான் ஸ்நானன் எலியா என்றால், அந்த இயேசுவின் வருகை 2ம் வருகையாகிவிடும். அது முதலாம் வருகைதான். அதனால் இயேசு கருத்தோடு சொன்னார்:- "இவர்கள் இருவரும் பிரசங்கிக்கும் பரலோக ராஜ்யத்தை இஸ்ரேலர் ஏற்றுக் கொண்டிருந்தால், மல். 4 : 5ன்படியான எலியா, யோவான் ஸ்நானன் தான். இஸ்ரேலர் ஏற்காததால் எலியா இவன் அல்ல. இருவர் சொன்னதும் சரியே.

5. **யூதாசே அநீதத்தின் கூலியினால் நிலம் வாங்கினானாம். "அநீதத்தின் கூலியினால், அவன் ஒரு நிலத்தை சம்பாதித்து..." (அப். 1:18) என்று வேதம் ஒரு இடத்திலும், "பிரதான ஆசாரியர் வாங்கினார்" என்று மத். 27:6-8லும் மாறுபட்டுச் சொல்வது ஏன்?**

★ மத். 27:9-10ல் உள்ள தீர்க்கதரிசனம் நமது எரேமியா (தமிழ்மொழி பெயர்ப்பு) வில் இல்லை. ஆனால் பல manuscriptல் "சகரியா" என்று போடப்பட்டுள்ளது. அதன்படி பார்த்தால் சக. 11:13ல் இது இருக்கிறது. ஒரே ஒரு எரேமியாவில் இருப்பதாக **"டேக்ஸ்"** விளக்கம் தருகிறார். யூதர்களின் தல்மூத்தில், எரேமியா சொன்னதாக உள்ளதாம். எது எப்படியோ, தீர்க்கதரிசனப்படியே காரியம் நடந்திருக்கிறது.

அப். 1:18-ன் தமிழ் மொழி பெயர்ப்பு சரியே. அநீதத்தின் கூலியினால் யூதாஸ், நிலத்திற்கான பணத்தைச் சம்பாதித்தான் என்பது உண்மையே. ஆனால், அந்த சம்பாதித்த பணத்தை கொண்டு நிலம் வாங்கியது யூதாஸ் அல்ல; அது ஆசாரியனே! "சம்பாதித்தல்"

என்பதற்கும் "விலைக்கு வாங்குதல்" என்பதற்கும் வேறுபாடு உண்டல்லவா! அந்த பணத்தால், நிலம் வாங்கப்பட்டதால், அந்த நிலப் பணம் யூதாசால் சம்பாதிக்கப்பட்டது என்ற அர்த்தத்தில் இங்கு எழுதப்பட்டுள்ளது.

மேலும், கொலை செய்பவனும், கொலை செய்ய உதவியனும் இருவருமே கொலை குற்றாளிகள்தான். அந்தப்படியே, நிலம் வாங்கிய ஆசாரியரும், வாங்க சம்பாதித்து கொடுத்த யூதாசும் ஒரே மாதிரியான குற்றவாளிகள் என்ற அர்த்தத்தில் எழுதப்பட்டுள்ளது. மட்டுமல்ல... அந்த பணத்தில் வாங்கப்பட்ட, அந்த நிலத்தில் தான் அவனது body அடக்கம் பண்ணப்பட்டதாம்.

இதை அவனோடிருந்த பேதுருவே சொல்வதால், தமிழ்மொழி பெயர்ப்பு மிகவும் சரியே! மாறுபாடு ஏதுமில்லை.

6. **மத். 27:5ல், "யூதாஸ் நான்று கொண்டு செத்தான்." ஆனால் அப். 1:18ல், "யூதாஸ் தலைகீழாக விழுந்து வயிறு வெடித்து, குடல்களெல்லாம் சரிந்து போயிற்று" என்று உள்ளது. நான்று கொண்டு செத்தவன் இப்படியா சாவான்? ஏன் இப்படி தவறாய் எழுதப்பட்டுள்ளது.**

★ யூதாஸ் நான்றுகொண்டு செத்தது உண்மை. அவன் மரித்து, 50 நாட்களுக்குள்ளேயே அவனது மரணத்தை அறிந்த பேதுரு - அவனோடிருந்த அப்போஸ்தலன் - இப்படிக் கருத்தை சொல்கிறானென்றால் அது ஆராயப்படக்கூடிய ஒன்று. மட்டுமல்ல... புறஜாதியிலிருந்து இரட்சிக்கப்பட்ட ஒரு டாக்டர் லூக்கா, உயர்ந்த உத்தியோகத்திலிருக்கிற தெயோப்பிலியேவுக்கு எழுதுகிறான் என்றால், இதிலே கூட்டல் குறைத்தலுக்கு வாய்ப்பே இல்லை. பிசாசு, அப்போஸ்தலனாகிய யூதாசுக்குள் நுழைந்து விட்டதால், (யோ. 13:27). யூதாஸ் அன்று முதல், பிசாசிற்குள் வந்துவிட்டான். அதன்பின் அவனது செயல்பாடுகள் அப்படித்தான் உள்ளது.

இயேசுவையே, மலை உச்சிக்கும், ஆலய உச்சிக்கும் கொண்டு போனவன் பிசாசு; அவன் இயேசுவுக்குள் நுழைய முடியவில்லை; இயேசுவால் விரட்டப்பட்டான். ஆனால் பன்றிகளுக்குள் புகுந்த பிசாசு, பன்றிகளை கடலுக்குள் கொண்டு போய் கொன்றதல்லவா! பிசாசு நுழைந்திருந்ததால், அடிக்கடி தீயிலும், ஜலத்திலும் ஒருவன் விழுகிறான். (மத். 17:15). பிசாசால் பிடிக்கப்பட்டவர்கள் பிரேதக் கல்லறையிலேயே இருந்தார்களே!

அப்படியாய், பிசாசு பிடித்த யூதாஸ், பிசாசால் நடத்தப்பட்டு நான்று கொண்டு சாகும்போது, அவனது சரீரத்தை இந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டு, பிசாசு ஓடியிருக்கலாமல்லவா! இதை பேதுரு கேள்விப்பட்டிருப்பான். அல்லது நேரிடையாகவே பார்த்திருப்பார். இந்த செய்தி, அந்தப் பகுதிகளில் ஒரு பிரசித்தமானதாக சொல்லப் பட்டிருக்கும். அதனால் தான், லூக்காவும் இதை ஆமோதித்து எழுதியிருக்கிறான்.

இதுகுறித்து, Light Foot என்ற வேதவல்லுநர் சொல்கிறார்... "the devil took Judas up in the air and dashed his body on the ground after strangling him" "பிசாசு யூதாசை தூக்கிக் கொண்டுபோய், அவனது சரீரத்தை தரையில் போட்டு அடித்து பிய்த்திருக்கிறான்." எப்படியோ, அப். 1:18ல் நடந்த யூதாசின் மரணச் சம்பவம் பிசாசினால் உண்டாக்கப்பட்டது என்பதை அறிந்தாலே போதுமானது. மேலும், இயேசுவின் இரத்தத்தின் மேல் கிடைத்த அநீதத்தின் கூலியால் வாங்கப்பட்ட, அநீதமாய் சம்பாதித்து வாங்கப்பட்ட அந்த நிலத்தில் அடக்கம் பண்ணப்படும் பாவியின் உடல் இப்படியாய் பிசாசால் அல்லோல கல்லோலப்பட்டிருப்பதில், தவறு ஏதுமில்லை. உண்மை நிகழ்ச்சியைத்தான் எழுதப்பட்டிருக்கிறது.

**7. பவுல், விசுவாசத்தால் நீதிமான் - இரட்சிப்பு என்கிறார்; யாக்கோபு கிரியையில்லாத விசுவாசம் செத்தது என்கிறார். வேதத்தில் ஏன் இப்படி குளறுபடிகள்?**

★ இரண்டும் சரியே. பவுலின் எபே. 2:8ன்படி, விசுவாசத்தால் - தேவ கிருபையால் இரட்சிக்கப்படுகிறோம்; அதாவது, உலகம் - மாம்சம் - பிசாசு என்ற அந்தகார இருளினின்று ஆச்சரியமான ஒளியாகிய இயேசுவினிடத்தில் வருகிறோம். இயேசு மத். 24:13ல் சொன்னபடி, பெற்ற இந்த ஆரம்ப இரட்சிப்பில் கடைசிவரை நிலைத்திருந்தால் தான் பரலோகம் (1 தெச. 5:23). அப்படி நிலைத்திருக்கத்தான், யாக்கோபு சொல்லும் வசனத்தோடு கூடிய கிரியைகள் (யாக். 2:19, 20). இறுதி நியாயத்தீர்ப்பு, கிரியைகளை வைத்துத்தான் (வெளி. 22:12; 2 கொரி. 5:10).

**8. பவுல் குழப்புவதைப் பாருங்கள்; அப். 22:3ல் தான், யூதன் என்கிறார்; அப். 22:27ல் ரோமர் என்கிறார்; ரோமர் 11:1-ல் பெஞ்சமின் என்கிறார்.**

★ விஷயம் தெரியாதவர்களுக்குத் தான் இது குழப்பம் போல தோன்றும்.

யூதா என்பது (Judah) 12 கோத்திரங்களில் ஒன்று. இந்த கோத்திரங்கள் இரண்டாய் பிரிந்தன. 10 கோத்திரம் கொண்டது இஸ்ரேல் ராஜ்யம் என்றும், யூதா-பெஞ்சமின் கோத்திரங்கள் சேர்ந்தது யூதராஜ்யம் என்றும் ஆயின. இஸ்ரேல் ராஜ்யம் அசீரியர்களால் அழிந்தது. எருசலேமை தலைநகராய்க் கொண்ட யூதராஜ்யம், பாபிலோனியரால் சிறைபிடிக்கப்பட்டது. அப்போது 12 கோத்திரத் திலுள்ளவர்களும் அங்கே வாழ்ந்து வந்தனர். அந்தப்படி வாழ்ந்த அத்தனை பேருக்கும் யூதர் (Jews) என்ற பெயர் அன்று முதல் வழங்கப்பட்டு வந்தது. இன்றும் அது தொடர்கிறது.

இந்த அடிப்படையில் தான், பவுல் தன்னை, யூதன் என்கிறான். மற்றபடி, இஸ்ரேலின் 12 கோத்திரத்தில் பெஞ்சமின் கோத்திரத்தை சேர்ந்தவன் தான் பவுல். இந்த கோத்திரத்தைத்தான் ரோமர் 11:1ல் சொல்கிறான். ரோம சர்க்காரின் குடியுரிமை தன் தகப்பன் மூலம் இருப்பதால், தன்னை ரோமன் என்றான். ரோமன் என்பது குடியுரிமை; பெஞ்சமின் என்பது கோத்திரம், யூதர் என்பது, நாம் தமிழன் என்று சொல்வது போல. ஆக இவைகளில் குழப்பமே இல்லை. எல்லாம் உண்மையே, தேவைக்கேற்ற பதிலை உண்மையாய்ச் சொல்கிறான்.

**9. விவாகம் பண்ண வேண்டாமென்றும், பெண்கள் ஊழியம் செய்ய வேண்டாமென்றும் பவுல் கூறியது சரியா? (1 கொரி. 7:8-34; 1 தீமோ. 21:12)**

★ விவாகம் பண்ண வேண்டாமென்று பவுல் கூறவே இல்லை. விவாகம் பண்ணாமலிருப்பது நல்லது என்று தனது தனிப்பட்ட அனுபவக் கருத்தை கூறுகிறார். இயேசுகூட, "பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக் கொண்டவர்களும் உண்டு." (மத். 19:12) என்று சொல்வதால், திருமணமாகாமல் இருக்க வேண்டும் என்று அர்த்தமா? விவாக மஞ்சம் பரிசுத்தமானது என்று பவுல் கூறவில்லையா (எபி. 13:4)

மேலும் 1 கொரி. 11:3; 14:34, 35; 1 பேதுரு 3:2; வசனங்களின்படி, சபையிலே பெண்கள் ஊழியம் செய்யலாம்; பவுலோடு ஊழியம் செய்த பெண்கள் பட்டியல், வேதத்தில் நிறைய உண்டே! ஆனால், "சபையிலே பெண்கள் கணவனோடு பேசிக் கொண்டிருக்கக் கூடாது. சந்தேகங்களை வீட்டிலே போய் தான் கற்றுக்

கொள்ள வேண்டும்" என்ற அறிவுரையைத்தான் பவுல் சொல்கிறாரே ஒழிய, பெண்களுக்கு ஊழியம் கூடாது என்று சொல்லவே இல்லை. கலா. 3:28ம் பவுலின் வார்த்தை தானே. ளநநரோ. 16:1, 7; அப். 18:26.

**10. யூதாவும், சிமியோனும் செத்து, 500 வருடங்களுக்கு மேலாகிவிட்டதே பின்பு எப்படி நியா. 1:1-3ல் இவர்கள் வந்தார்கள்?**

★ யாக்கோபு மரித்து எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டனவே. ஏசாயா 41:8, 14; 43:1; 44:1ல் யாக்கோபு எங்கிருந்து வந்தான்? இங்கே யாக்கோபு என்றால் யாக்கோபின் சந்ததியார் என்று பொருள். அப்படியே இங்கே யூதா என்றால், யூதா கோத்திர சந்ததியார் என்று பொருள்.

**11. பவுலுக்கு முன்னால் இயேசு தோன்றியது உண்மையானால், இயேசுவின் 2ம் வருகை முடிந்துவிட்டது என்று நம்ப வேண்டும்; இயேசுவின் 2ம் வருகை இன்னும் நடக்கவில்லை என்றால், பவுலின் முன் இயேசு தோன்றியதை மறுக்க வேண்டும். எது சரி?**

★ 2ம் வருகை என்பது முழு உலகிற்கும் தெரியும்படியான பகிரங்க தோற்றம் - (எபி. 9:27, 28; மத். 24: 30, 31; வெளி. 1:7; சக. 14:4). ஆனால் பவுலுக்கு முன் தோன்றியது, (personal appearance) தனிப்பட்ட காட்சி; இதற்கும் 2ம் வருகைக்கும் சம்பந்தமில்லை. தீர்க்கதரிசனப்படி 2ம் வருகை நிச்சயம் நடக்கும்.

**12. பவுலின் இரட்டை வேடத்தைப் பாருங்கள். மார்ஸ் மேடையில் தனக்கு ஆபத்து வரும் என்று எண்ணி, இயேசுவை மனிதன் என்கிறார். (அப். 17:30, 31); பிலிப்பியருக்கோ இயேசுவை கர்த்தர் என்கிறார். (பிலிப்பியர் 2:11).**

★ அந்தந்த இடத்திற்கும், அந்தந்த மக்களின் சிந்தனைக்கும் ஏற்றபடி, இயேசுவைப் பிரசங்கித்து இரட்சிப்புக்கு கொண்டு வருவதுதான் பவுலின் சுவிசேஷப்பணி. மற்றப்படி, பவுல் எப்போதும் இயேசுவை கர்த்தர் என்றே விசுவாசிக்கிறவன்; போதிக்கிறவன். இரட்டை வேடம் போடுபவனல்ல.

**13. சங். 2:7க்கு விளக்கம் கொடுக்கும்போது, அப். 13:32, 33ல் 2ம் சங்கீதம் என்று பவுல் சொல்கிறாரே, அந்த காலக்கட்டத்தில் சங்கீதம் புஸ்தகத்திற்கு யார் அதிகாரமிட்டது? இது இயேசுவை தேவனென்று காட்ட, யாராலோ திணிக்கப்பட்ட வார்த்தைதானே?**

★ சங்கீதம் புத்தகம் என்ற ஒன்று சனகெரீம் மன்றத்தாரிடம் உண்டென்றால், அதிலே தாவீது பாடிய முதல் சங்கீதம், 2ம் சங்கீதம் என்று நிச்சயம் இருந்திருக்க வேண்டும்; சங்கீதத்தின் வசன எண்கள் வேண்டுமானால் அந்த காலக்கட்டத்தில் இல்லாதிருக்கலாம். இது உண்மைதான். சனகெரீம் மன்ற புத்தகத்தில் 1,2,3 என்று வரிசைப்படுத்தித் தான் சங்கீதம் இருந்தது. இன்றும் இங்கிலாந்து மியூசியத்தில் உள்ள காபியிலும் அப்படித்தான் உள்ளது. இதைத்தான் பவுல் எழுதி உள்ளார். மற்றப்படி எந்த ஒரு இடைச் சொருகலும் இல்லை.

**14. மல்கியா 3:1ல் "எனக்கு முன்பாக போய் வழியை ஆயத்தம் பண்ணுவான்" என்று உள்ளது. ஆனால் மத். 11:10ல் "உமக்கு முன்னே போய் உமது வழியை ஆயத்தம் பண்ணுவான்" என்று தன்னைப் பற்றிச் சொல்லாதபடிக்கு எழுதப்பட்டுள்ளதே ஏன் இந்த குளறுபடி? குழப்பம்?**

★ மத். 11:10ல் சொல்லப்பட்ட வசனம் மல்கியா 3:1 அல்ல. எப்படியெனில், மல். 3:1ல் சொல்லப்பட்டது 2ம் வருகைக்கு முன் வரும் எலியா பற்றியது (மல். 4:5) ஆனால் மத். 11:10ல் சொல்லப்பட்டது முதலாம் வருகைக்கு முன் வரும் யோவான் ஸ்நானன் பற்றியது. இந்த வசனம் மல்கியாவிலிருந்து எடுக்கப்பட்டதாக கருதி (எழுதப்படாத போது) எப்படி குளறுபடி என்று சொல்ல முடியும். மேலும், இந்த வசனம் எந்த புத்தகத்திலிருந்து quote பண்ணப்பட்டது என்று தெரியவில்லை. எனவே, ஆதாரமின்றி எதையும் இணைத்து, குளறுபடி, குழப்பம் என்று சொல்லக்கூடாது (ஏசாயா 40:3ம், மத். 3:3ம் யோவான் ஸ்நானன் பற்றியது என்றால் சரிதானே) இது ஒருவேளை பரலோகிலேயே பிதாவாகிய தேவன், வார்த்தையானவரிடம் சொன்னதாக நிதானிக்க வாய்ப்புண்டு.

**15. மத். 2:15ல் சொல்லுகிற தீர்க்கரிசனம் இயேசுவை அல்ல; இஸ்ரேல் மக்களை குறிக்கிறது என்று ஓசியா 11:1,2 சொல்கின்றது. இந்த உண்மையை மாற்றி, இந்த தீர்க்கதரிசனம் இயேசுவைப் பற்றித்தான் என்று சொல்வதற்காக ஏன் இடையில் சொருகப்பட்டது?**

★ மத். 2:15 எங்கிருந்து எடுத்த தீர்க்கதரிசனம் என்று மத்தேயு சொல்லாமலிருக்கும்போது, முஸ்லீம்களே, அது ஓசியா 11:1,2 என்றும், அது இயேசுவைப் பற்றியது அல்ல என்று சொல்வதும், குழப்பம்

உண்டாக்கும் செயலல்லவா! அப்படியே அவர்கள் சொன்னபடி ஓசியா 11:1,2ஐ எடுத்துக் கொண்டாலும், அதிலே 1ம் வசனம், இயேசுவைப் பற்றிய காரியத்துக்கு ஒத்து வருகிறது அல்லவா! அது இயேசுவுக் குரியது தான் என்று வேதத்திலே யாரும் சொல்லவில்லையே. எனவே இது பிரச்சனையே இல்லை. மற்றப்படி ஓசியா 11:1,2 இஸ்ரேலரை குறிக்கிறது என்றாலும் தவறில்லை.

**ஒரு சிந்தனைக்கு சொல்கிறேன்.** ஒரு தீர்க்கதரிசனம் எத்தனை முறை வேண்டுமானாலும் நிறைவேறலாம்; அது கொஞ்சம் கொஞ்சமாய் ஒருவருக்கோ, ஒன்றுக்கு மேற்பட்டவருக்கோ நிறைவேறலாம். தவறே இல்லை. இதற்கு ஆதாரங்கள் வேதத்திலே நிறைய உண்டு.

16. **ஏரோது குழந்தைகளை கொல்லும்போது, ராகேல் அழுதாள் என்ற எரேமியா 31:15ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறதாய் மத். 2:17ல் சொல்லப்பட்டுள்ளது. அந்த தீர்க்கதரிசனம் தான் அன்றே முடிந்து போயிற்றே, அதை ஏன் தேவையில்லாமல் இங்கே இடைச் சொருகல் செய்ய வேண்டும்? யோசேப்பு - பெஞ்சமினின் தாய் ராகேல்; அப்படியிருக்க, யூத மக்களுக்காக, யூதர்களின் தாயாகிய லேயாள் தானே அழ வேண்டும்!**

★ ஒரு தீர்க்கதரிசனம் ஒருமுறை தான் நடக்க வேண்டுமென்று கட்டாயமில்லை என்று மறுபடியும் சொல்கிறேன். ராமாவிலே, எரேமியாவும் இஸ்ரேலரும் சிறைப் பிடிக்கப்பட்ட போது நடந்தது போல, மகா உபத்திர காலத்திலும் நடக்கும். அதுபோல காரியம் தான், இஸ்ரேல் பெற்றோர்களின் கூக்குரலாக மத். 2ல் நடந்திருக்கிறது. ராகேல் என்பவள், பெஞ்சமின், மனாசே, எப்பிராயீம் கோத்திரங்களின் தாய். முழு இஸ்ரேல் நாட்டிலும் உள்ள தெற்கு யூதர் ராஜ்யத்தை பெஞ்சமின் குறிப்பதாகவும், வடக்கு இஸ்ரேல் ராஜ்யத்தை எப்பிராயீம் குறிப்பதாகவும் எடுத்துக் கொண்டால், இஸ்ரேலின் தாயாக ராகேலை வைத்து, ராகேல் அழுகிறாள் என்று அந்த தீர்க்கதரிசனத்தை சொல்வதில் தவறில்லை. எரேமியாவால் சொல்லப்பட்ட ராகேல், ராமாவில் அடக்கம் பண்ணப்பட்டாள்; அவளின் கூக்குரல் எரே. 31:16, 17ன்படி, 1000 வருட ஆட்சியின்போது தான் மாறும். மத். 2ல், குழந்தைகளை கொல்லுதல், பெத்லகேமைச் சுற்றி சுமார் 10 மைல் தூரத்திற்கு நடந்திருக்கிறது. அதிலே ராமா என்பது, எருசலேமுக்கு 5

மைல் தூரத்தில் தான் உள்ளது என உணரலாம். எனவே நம் வேதத்திலே இடைச் சொருகலே கிடையாது.

17. **ஏசாயா 7:14ல் சொன்ன அடையாளத்தை சொல்லாமல், இயேசுவின் மரணம் - உயிர்த்தெழுதலை பிரஸ்தாபித்து, அவரை தேவனாக்க வேண்டுமென்று, யோனாவின் அடையாளத்தை மட்டுமே (மத். 12:40) சுவிசேஷத்தில் சொல்லப்பட்டது, திணிக்கப்பட்டதுதானே!**

★ இயேசு பூமிக்கு வந்ததே, இரத்தம் சிந்தி மரித்து, இரட்சிப்பை அருளி, நிழலாட்டமான பலிமுறைகளை நிஜமாக்க மட்டுமே. எனவே தான் இது குறித்த அடையாளமே சொல்லப்பட்டிருக்கிறது. மற்றப்படி, இந்த அடையாளத்தில் சிந்தப்படும் இரத்தம் தேவ இரத்தமென்றும், பிய்க்கப்பட்ட சரீரம் பரலோகில் உருவாக்கப்பட்டது என்றும் காட்டுவதற்காகவே ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறக்காமல் கன்னிக்குப் பிறந்தார் என்று நாமறிவோம். முதலில் இரட்சிப்பை சொல்லி, அது சம்பந்தப்பட்ட இரத்தம் பற்றிய ஆராய்ச்சி வரும்போதுதான், இந்த அடையாளம் தேவைப்படுகின்றது. இப்படிப்பட்ட இரட்சிப்பின் நிலைக்கு இஸ்ரேலர்கள் வரவில்லை; வந்திருந்தால், அவரை சிலுவையில் அறைந்திருக்க மாட்டார்களே. இந்த சூழ்நிலையால் தான், கன்னியின் வயிற்றில் பிறந்ததை சொல்ல தேவையில்லாதிருந்தது.

நியாயப்பிரமாணத்தின் அடிப்படைச் சத்தியமே புரியாத இஸ்ரேலரிடம் ஏசா. 7:14-ன் அடையாளத்தை சொல்லியிருந்தால், அவர்கள் இயேசுவை - இயேசுவின் பிறப்பை - எப்படி கணித்திருப்பார்கள் என்று யோசியுங்கள்.

18. **யோ. 5:37... "என்னை அனுப்பின பிதாதாமே என்னைக் குறித்து சாட்சி கொடுத்திருக்கிறார். நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தை கேட்டதுமில்லை. அவர் ரூபத்தைக் கண்டது மில்லை." இதன்படி ஒருவரும் பிதாவின் சத்தத்தை கேட்கவில்லையென்றால், மத். 3:17; 17:5 போன்ற இடங்களில் பிதா சத்தமிடவில்லையா? ஏன் பொய்யாய் சொல்லப் பட்டுள்ளது?**

★ யோ. 5:37 அன்றைய, வாழும் யூதர்களிடம் சொல்லப்பட்டது. சீனாய் மலையில் சத்தம் கேட்டவர்கள் அன்று இல்லை. மத். 3:17ல் சத்தம் கேட்டவர் யோவான் ஸ்நானன் மட்டுமே. (யோ. 1:32-34) அதுவும்

கூட அவனுக்கு விசுவாசம் வளருவதற்கு வேண்டி... அப்படியே,மத். 17:5ல் கேட்டது சீஷர்கள் மட்டுமே.

மற்றப்படி... இயேசு இங்கு சொன்னது பொய்யோ, இடைச் சொருகலோ அல்ல; உண்மைதான்.

**19. எரே. 36:30 – "யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமைக் குறித்து, தாவீதின் சிங்காசனத்தில் உட்காரும்படி அவன் வம்சத்தில் ஒருவனும் இரான்..."**

**ஆனால், யோயாக்கீமுக்குப் பிறகு, அவன் மகன் யோகாக்கீன் என்பவன், எருசலேமை ஆண்டான் (2 இராஜா. 24:6; 2 நாளாகமம் 36:8) என்று உள்ளதே. வேதத்தில் ஏன் இப்படி பொய்த் தகவல்கள்?**

★ தேவன் சொன்னது: "தாவீதின் சிங்காசனத்தில் உட்காருவதில்லை" என்பது தான். தாவீதின் சிங்காசனம் என்பது, தேவன் ராஜாவாய் அபிஷேகித்து அமரவைப்பது. அதன்படி, யோகாக்கீமுக்குப் பிறகு, தேவனால் அங்கீகரிக்கப்பட்டு, தாவீதின் சிங்காசனத்தில் இதுவரை யாரும் உட்காரவில்லை. 1000 வருட ஆட்சியில்தான், இயேசுவால் அது நடக்கும்.

அப்படியானால் யோயாக்கின் ராஜாவாயிருந்திருக்கிறானே என்ற கேள்வி வரலாம். ராஜாவாய் இருந்தான்; அது தேவனால் ஏற்படுத்தப்படவில்லை; பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரால் ஏற்படுத்தப்பட்டான். (எரே. 37:1).

மட்டுமல்ல... இந்த யோகாக்கின் என்கிற எகோனியா என்பவன் சபிக்கப்பட்டவனென்றும், பிள்ளையில்லாதவன் போன்றவனென்றும், அவன் வித்தில் ஒருவனும் ஆளப்போவதில்லை என்றும் தேவன் சொன்னார். (எரே. 22:28-30). இது இன்று வரை நடந்து கொண்டிருக்கிறது.

நம் தேவன் எப்போதும் சொல்கிறதை செய்கிறவர்; செய்கிறதை மாத்திரமே சொல்கிறவர். எனவே நம் தேவன் சொன்னதிலே பொய்யே இல்லை.

**20. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் சொஸ்தமடையும் ஒரே காரியத்தை மத்தேயு 8-லும் லூக்கா 7-லும் மாறி மாறி எழுதப்பட்டிருக்கிறதே ஏன்? மத்தேயு 8-ல் நூற்றுக்கதிபதியே இயேசுவை சந்தித்ததாகவும், லூக்கா 7ல் யூத மூப்பரும்,**

**வேலைக்காரனும் சந்தித்ததாகவும் உள்ளதே ஏன் இந்த குளறுபடிகள்?**

★ குளறுபடியே இல்லை. இவை இரண்டும் கப்பர்நகூமிலே நடத்திருந்தாலும், இவை இரண்டும் வேறு வேறு நிகழ்ச்சிகள்.

மத். 8-ல் வியாதிப்பட்ட வேலைக்காரனுக்கு திமிர்வாதம்; லூக்கா 7-ல் மரண அவஸ்தியான வியாதி. திமிர்வாதக்காரன் உடனே மரிக்கமாட்டான் என நாமறிவோம். லூக்கா 7ல் வியாதிக்காரன் வீடு நோக்கிப் போகிறார் இயேசு; மத். 8-ல் போகவே இல்லை. இரண்டு நிகழ்ச்சிகளிலும், ஒரு நூற்றுக்கதிபதி நேரிடையாகவும், அடுத்த நூற்றுக்கதிபதி, வேலைக்காரன் மூலமாகவும் சொல்லிய விசுவாசத்தை இயேசு மெச்சுகிறார். மேலும் மத்தேயு 8-ன் காரியம் முடிந்த பின் பேதுருவின் மாமி வீட்டிற்குப் போகிறார். ஆனால், லூக்கா 7-லோ மறுநாளில் அவர் நாயீன் என்னும் ஊருக்குப் போனதாக உள்ளது.

ஒருசிலர் இரண்டும் ஒரே நிகழ்ச்சி தான் என்றும், லூக். 7ல் வந்த வேலைக்காரன் சிறிய நூற்றுக்கதிபதி என்றும், இந்த வேலைக்கார - நூற்றுக்கதிபதி தான் மத்யே 8-ல் இயேசுவிடம் பேசினான் என்றும், சொல்கிறார்கள். ஆனால் இதற்கு ஆதாரமில்லை.

எனவே இரண்டு வேறு வேறு காரியங்களை உண்மையாய், குளறுபடி ஏதுமின்றி நம் வேதம் சொல்கின்றது.

**21. ஊழியத்திற்கு தடி கொண்டு போக வேண்டும் என்று மாற்கு 6:8ம், கொண்டு போக வேண்டாமென்று மத். 10:10ம் ஏன் மாறி மாறிச் சொல்கின்றது?**

★ மத். 10:10ல் மட்டுமல்ல. லூக். 9:3-லும் கூட தடி வேண்டாம் என்றும் உள்ளது. மாற்கு 6:8ல் மாத்திரமே தடி வேண்டும் என்று உள்ளது. இதை உணர்ந்தாலே போதும். நமது வேதம் ஆவியானவரால் டிக்டேட் பண்ணி எழுதப்படவில்லை என்பதற்கு சான்று என்று. நமது வேதத்திலே உள்ளதை மாற்றியோ, மூடிமறைத்தோ, இஷ்டப்பட்டதை எழுதவோ நினைத்திருந்தால் இந்த மாற்கு 6:8-யும் மாற்றியிருக்கலா மல்லவா! இருப்பதை அப்படியே விட்டு விடுகின்றோம் என்பதற்கும் இது சான்று.

மேலும் மூல பிரதியிலிருந்து, காபி பண்ணி வரும்போது இப்படியாய் மாற்கில் மட்டும் மாறியிருக்கலாம் என்று நிதானிக்கலாம். அதனால் நாம் மெஜாரிட்டி கருத்தை எடுத்துக் கொள்ளலாம்;

தவறில்லை. எப்படியோ, தடி கொண்டு போவதோ, போகாததோ சத்தியத்திற்கும், விசுவாசத்திற்கும் எதிரானதல்ல.

**22. இயேசுவை அறிந்தவர் போல மத். 3:13லும், அறியாதவர் போல மத்தேயு 11:2,3 லும் யோவான் ஸ்நானன் எப்படி கூற முடியும்? "வருகிறவர் நீர்தானா அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா?"**

★ இவர் தான் மேசியா என உணர்ந்து, ஞானஸ்நானம் கொடுத்த யோவான் ஸ்நானன், ஜெயிலில் விடுதலையில்லாமல், ஜெயிலிலேயே இருக்கிறார். மத். 11:10-ன் படியான "வழியை ஆயத்தம் பண்ணும் பணி" முடிந்தவிட்டதென்றால், அவர் ஜெயிலிலேயே மரிக்கலாம். தவறில்லை. அஃதில்லாமல், இன்னும் அவரது பணி தொடர வேண்டுமானால் அவர் விடுதலையாகி, வெளியே வந்தாக வேண்டும். யோவான் ஸ்நானன் வெளியே வர தருணமே இல்லாத சூழ்நிலை இருந்ததால், அதை உறுதிப்படுத்த இப்படி கேள்வி கேட்டு அனுப்பினார். அவ்வளவுதான்.

To know the length of his life, ministry etc... இப்படிக் கேட்டார். மற்றப்படி முரண் ஏதுமில்லை. என்ன இருந்தாலும் அவர் மனிதன்தானே.

**23. ஒரே நிகழ்ச்சியில் ஒரு குருடர் என்று மாற்கு 10:46ம், இரு குருடர்கள் என்று மத். 20:29, 30-ம் ஏன் மாற்றி எழுதப்பட்டுள்ளது?**

★ இது இரண்டும் ஒரே நிகழ்ச்சி அல்ல. லூக்கா 18:35-43-யும் சேர்த்து கொண்டால், மூன்று வித்தியாசமான நிகழ்வுகளாகும். அந்தப் பகுதியிலே ஐந்து மனிதனுக்கு ஒருவர் குருடர் என்று சரித்திரம் சொல்கின்றது.

a. லூக். 18:35-43:- "As he was come nigh into Jerico" (see also லூக். 19:1)
b. மாற்கு 10:46-52:- "As he went out of Jerico"
c. மத். 20:29-34:- "As they departed from Jerico"

எனவே இதிலே எதுவும் மாற்றி எழுதப்படவில்லை. உள்ளதை உள்ளபடியே எழுதப்பட்டுள்ளது.

**24. மத். 26:48-50ல் யூதாஸ் முத்தம் கொடுத்து காட்டிக் கொடுத்தான். ஆனால், இயேசு தாமாகவே முன் வந்து தம்மைக் காட்டினார் என்று யோ.18:4 சொல்கின்றது. ஏனிந்த முரண்?**

★ “இயேசு தமக்கு நேரிடப் போகிற எல்லாவற்றையும் அறிந்து, எதிர் கொண்டு போய், அவர்களை நோக்கி, யாரைத் தேடுகிறீர்கள்? என்றார்” (யோவான் 18:4).

இயேசு கைது செய்யப்பட்ட நிகழ்வை, 4 சுவிசேஷகரும் வெவ்வேறு கோணங்களில் எழுதி உள்ளனர். யூதாஸ் இயேசுவை முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்து, தம் செயலை முடித்தானென்று மத்தேயு-வில் உள்ளது. அதே நேரம், யோ. 18:4ல் “யாரைத் தேடுகிறீர்கள்?” என்று இயேசு கேட்ட கேள்விக்கு, யூதர்கள் இயேசுவைத் தேடுகிறோம் என்றபோது, “நான் தான்” என்று இயேசு சொன்னார். அப்போது யோ. 18:5ல் உள்ள வசனத்தைப் பாருங்கள். “அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசும் அவர்களுடனே நின்றான்.” (யோ. 18:5). எப்படிக் காட்டிக் கொடுத்தான்? முத்தமிட்டு காட்டிக் கொடுத்தான். அவன் முத்தமிட்ட உடனேயே இயேசு கேட்ட கேள்வி தான் “யாரைத் தேடுகிறீர்கள்” என்று. எனவே இங்கே எந்த ஒரு முரண்பாடும் இல்லை.

25. **இரண்டு கள்ளர்களும் இயேசுவை நிந்தித்தார்கள் என்று மத்தேயு 27:44, மாற்கு 15:32 சொல்கின்றது. ஆனால் லூக்கா 23:39-43 சொல்கின்றது ஒருவன் தான் நிந்தித்தான் என்று. ஏனிந்த முரண்பாடு?**

★ யோவான் இதுபற்றி எழுதவே இல்லை. மற்ற மூவரும் தங்கள் தங்கள் பார்வையில் - கோணங்களில் எழுதுகின்றனர். இரு கள்ளர்களும், சிலுவைக்கு முன்னிருந்து பலர் நிந்தித்தபடியே (“உன்னை இரட்சித்துக் கொள்”) நிந்தித்தனர். இது உண்மையே! லூக்கா எழுதியது :- “ஒருவன் இயேசுவை, நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள் என்று இகழ்ந்தான். மற்றவன் அதே நேரத்தில், மனம்மாறி அவனைக் கடிந்து கொள்கிறான்.”

உன்னையும் **எங்களையும்** இரட்சித்துக் கொள் என்ற வசனத்திலிருந்து நாமறிவது, இருவருமே முதலில் நிந்தித்திருக் கின்றனர். பிற்பாடு ஒருவன்மட்டும் மனம் மாறியிருக்கிறான் என்பதாகும். இல்லையென்றால் “எங்களையும்” என்று சொல்ல வாய்ப்பில்லை.

மத்தேயும், மாற்கும் எழுதியபடியே லூக்காவும் எழுத வேண்டுமென்று காட்டாயமில்லை. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், சிலுவையில் மரிக்கும்போது இயேசு சொன்ன 7

வாக்கியங்களையும் எந்த சுவிசேஷகனும் மொத்தமாய் எழுதவில்லையே.

**26. இயேசுவின் கல்லறைக்கு ஒரு மரியாள் வந்ததாக யோவானும் இரண்டு மரியாள் வந்ததாக, லூக்காவும், மத்தேயும், 2 மரியாளும் சலேமும் ஆக 3 பேர் வந்ததாக மாற்கும் எழுதியிருக்கிறார்கள். இப்படி முரண்பாடாய் எழுதுவதா கர்த்தரின் வார்த்தை? (மத். 28:1-3) மாற்கு 16:1-5; லூக்கா 24:1-5; யோ. 20:1)**

★ நால்வரும் தங்களுக்கு முக்கியமாய் தெரிந்த பெயர்களை எழுதியிருக்கிறார்கள். யோவான் சொன்னதும் பன்மைதான். யோ. 20:2-ல் மரியாள் சொல்வதைப் பாருங்கள். "எங்களுக்கு தெரியவில்லை."

யாரும், இன்னின்னார் மட்டும் தான் வந்தார் என்று திட்டமாய் எழுதவில்லை. This is not the dictation of Holy Spirit.

**27. இயேசு சமாதானம் கொடுக்க வந்தாரா? எடுக்க வந்தாரா? எது சரி (மத். 5:9; 10 : 34)? "பூமியின் மேல் சமாதானத்தை அனுப்ப வந்தேன் என்று எண்ணாதிருங்கள். சமாதானத்தை அல்ல; பட்டயத்தையே அனுப்ப வந்தேன்." (மத். 10:34)**

★ சமாதானத்தை கொடுக்கவே இயேசு வந்தார். (யோ. 14:27; ஏசாயா 9:6) இயேசுவை ஒருவன் ஏற்றுக்கொள்ளும்போது, குடும்பத்தில் அதனால், பிரச்சனைகள் வர வாய்ப்புண்டு; இது இயேசுவாலே தானே! அது தான் மத். 10:34-ல் சொல்லப்பட்டது. அப்படியே சமாதானமின்மை வந்தாலும் "First God; Next others - முதலாவது இடம் கடவுளுக்கு; அடுத்த நிலைதான் மற்றவைகளுக்கு" என்று தேவனுடைய பிள்ளைகள் இருக்க வேண்டும் என்பதே தேவ சித்தம்.

**28. பரிமளதைலம் லூக்கா 7:36-ல் பாதத்தில் ஊற்றப்பட்டது; மத். 26:6, 7; மாற்கு 14:3-ல் தலையில் ஊற்றப்பட்டது. இப்படி முரணானது கடவுள் வார்த்தையா?**

★ இரண்டும் வெவ்வேறு நிகழ்ச்சிகள். லூக். 7:36 பரிசேயன் வீட்டில் பாவ ஸ்திரி ஊற்றுகிறாள். மத்தேயு, மாற்கில், சுகமான குஷ்டரோகி வீட்டில் நல்ல ஸ்திரி ஊற்றுகிறாள். எந்த ஒரு முரண்பாடும் இல்லை.

**29. சீமோனும் அந்திரேயாவும் சீடர்களானதில் பைபிள் தடுமாறுகிறது. ஏன்?**

★ ரோ. 8:28-30ஐ தியானித்தால் சீடர்களானதில் தடுமாற்றம் என்ற பேச்சே வராது. "தேவனின் தெரிந்து கொள்ளுதல்" என்பது வேறு. "அழைப்பு" என்பது வேறு. இயேசுவின் முதல் சந்திப்பு அந்திரேயாவுக்கும், இன்னொரு சீஷனுக்கும் கிடைத்து, அதைத் தொடர்ந்து அந்திரேயா மூலம் பேதுருவுக்கு முதல் சந்திப்பு. இதுதான் யோ. 1:35-42ல் உள்ளது. இது அவர்களை அழைத்தது அல்ல; இதை தேவனின் தெரிந்து கொள்ளுதல் என்று சொல்லலாம். மாற்கு 1:16; மத். 4:18ல் தான் அழைத்திருக்கிறார்; சீடர்களாக்கியிருக்கிறார். எனவே இதில் பைபிள் தடுமாற்றமே இல்லை.

**30. இயேசு, கழுதை மேலும், கழுதை குட்டிமேலும் எப்படி சவாரி செய்வது? அவிழ்த்து வந்தது ஒன்று என்று லூக்கா 19:30 சொல்ல, இரண்டு என்று மத். 21:1-7 என்று சொல்கிறதே ஏன்?**

★ மத்தேயு எழுதியது ஒரு நிகழ்ச்சி; அது சக. 9:9-ன் தீர்க்கதரிசனப்படி நடந்தது. "சீயோன் குமாரத்தியே மிகவும் களிகூரு. எருசலேம் குமாரத்தியே கெம்பீரி. இதோ உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார். அவர் நீதியுள்ளவரும், இரட்சிக்கிறவரும், தாழ்மையுள்ளவரும், கழுதையின் மேலும், கழுதைக் குட்டியாகிய மறியின் மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்." (சகரியா 9:9)

ஒரே நேரத்தில் கழுதையின் மேலும் கழுதைக்குட்டியின் மேலும் போக முடியாது என்பது உண்மைதான். ஆனால், மாறி, மாறி சவாரி செய்திருக்கலாமல்லவா?

மற்ற மூன்று சுவிசேஷத்திலும் எழுதியது இன்னொரு நிகழ்ச்சி. இவைகளில் கழுதைக் குட்டியை மட்டுமே அவிழ்த்துவரச் சொன்னார்; அந்த ஒன்றின் மேல் தான் ஏறிப்போனார். இந்த நிகழ்ச்சி,

"அல்லாமலும், சீயோன் குமாரத்தியே பயப்படாதே. உன் ராஜா கழுதைக்குட்டியின் மேல் ஏறி வருகிறார் என்று எழுதியிருக்கிற பிரகாரமாக" (யோ. 12:4) நடந்திருக்கிறது. இந்த தீர்க்கதரிசன வார்த்தை ஏசாயா 40:9, 10 -செப்டுவாஜிந்ல் உள்ளதாகும். அது வேதத்தில் சரியாகத்தான் எழுதப்பட்டிருக்கிறது.

**31. இயேசுவை சோதிக்க பிசாசு முதலில் கொண்டு சென்றது தேவாலயத்துக்கா? மலை உச்சிக்கா? மத். 4:1-12லும், லூக்கா 4:1-14லும், மாறி, மாறி இருக்கிறது.**

★ பிசாசு, இயேசுவை இரண்டு இடத்துக்கும் கொண்டு போனது உண்மைதான். எங்கே முதலில் கொண்டு போனான் என்று யாரும்

தீர்க்கமாய் எழுதவில்லை. கேள்விப்பட்ட நிகழ்ச்சிகளை எழுதுகிறார்கள்; பொய்யல்ல.

"அப்பாலே போ சாத்தானே" (மத். 4:10) என்று லூக்காவிலே இயேசு சொல்லாததால் இரண்டும் வெவ்வேறு நிகழ்வுகளா யிருக்கலாம் என்றும் ஒரு சில வேத வல்லுநர்கள் கணிக்கிறார்கள்.

**32. ஏரோது யோவான் ஸ்நானனுக்கு பயந்தது உண்மையா? பொய்யா? ஏன் லூக். 3:19லும், மாற்கு 6:20-லும் மாறி மாறி எழுதப்பட்டுள்ளது?**

★ யோவானை காவலில் போடும்போது, ஏரோதுக்கு பயமில்லை (மாற்கு 16:17, 18; லூக்கா 3:19, 20) ஆனால், ஏரோதியாள் அவனைக் கொல்ல நினைத்த போதுதான் பயந்தான். (மாற்கு 6:19, 20) நீதியும் பரிசுத்தமுமுள்ளவரென்று அறிந்த ஏரோது, அவனைக் கொல்லப் பயந்தான். அதனாலே அவனைப் பாதுகாத்தான். ஆனாலும், அவள் மகள் மூலம், யோவான் ஸ்நானன் தலையை கேட்ட போதுதான் மிகுந்த துக்கமடைந்தான் (மாற்கு 6:26). இந்த நிகழ்வுகள் லூக்காவில் எழுதவில்லை. எழுதியிருந்தால் "பயந்தான்" என்ற வார்த்தை அங்கே இருந்திருக்கும். "ஜெயிலிலே தான் போடுகிறேன்; விடுதலையாக்கி விடலாமே" என்ற எண்ணத்தில். தான் சிறையில் போடும்போது, ஏரோது பயப்படவில்லை.

**33. லூக்கா 20:15,16ல் தோட்டக்காரரை அழிக்கலாகாது என்றும், மத். 21:40ல் அழிக்கலாம் என்றும், யூதர்கள் சொல்வது, முன்னுக்குபின் முரணாக உள்ளதே.**

★ இயேசு சொன்னது உவமானம். அதைக் கேட்டவர்கள் பிரதான ஆசாரியர்கள், பரிசேயர்கள் மற்றும் யூத ஜனங்கள். இந்த உவமானம் முக்கியமாய் இயேசுவை கொல்லப் போகும் பிரதான ஆசாரியர்களுக்குத்தான். பிரதான ஆசாரியர்களுக்கு இந்த உவமானம் தங்களைத் தாக்குவதாய் இருப்பதால், அவரைப் பிடிக்க வகை தேடினார்கள் என்றுதான் மத். 21:45, 46; லூக்கா 20:19 சொல்கின்றது. மற்றப்படி அந்த கூட்டத்தில் இருந்த யூத ஜனங்கள், இரண்டு விதமான கருத்துக்களை எதிர்மறையாய் சொல்லி யிருக்கிறார்கள். மக்கள் ஒரே கருத்தை சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவைகளிலே ஒரு கருத்தை லூக்காவும், ஒரு கருத்தை மத்தேயும் எழுதியிருக்கிறார்கள். இரண்டு கருத்துக்களையும் எழுத்தாளன் எழுதித்தான் ஆக வேண்டுமென்ற கட்டாயமில்லை.

முக்கியமாய், பிரதான ஆசாரியர்கள் - பரிசேயர்களின் கணிப்பை - திட்டத்தை - இருவருமே ஒட்டுமொத்தமாய் சொல்லியிருப்பதால், எது தேவையோ அது சொல்லப்பட்டிருக்கிறது. மற்றப்படி முரண்பாடாய் எதுவும் எழுதப்படவில்லை.

**34. யோ. 1:21ல், “நீர் தீர்க்கதரிசியானவரா?” என்று கேட்டபோது, இல்லை என்று பதிலளித்த யோவான் ஸ்நானன், இயேசுவைப் பற்றி தீர்க்கதரிசனங்கள் சொல்லியிருக்கிறாரே. அப்படியிருக்க ஏன் தான் தீர்க்கதரிசி இல்லை என பொய் சொன்னான்?**

★ பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிக்கும், புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. புதிய ஏற்பாட்டில் உள்ள 5 விதமான ஊழியத்தில் ஒரு ஊழியம் தான் தீர்க்கதரிசன ஊழியம் (எபே. 4:13). அந்த ஊழியமும் சம்பவிக்கப் போகிறவைகளை சொல்லி எச்சரிப்பதாகும். ஆனாலும் பழைய ஏற்பாட்டிலோ, இந்த 5 விதமான ஊழியத்தையும் ஒருவரே செய்வார்; வெறுமனே தீர்க்கதரிசனம் சொல்வது மட்டுமல்ல. ஆபிரகாம், மோசே போன்றோரெல்லாம், இப்படித்தான் தீர்க்கதரிசிகளாய் அழைக்கப்பட்டார்கள். யோவான் ஸ்நானன், பழைய ஏற்பாட்டில் வாழ்ந்தவன். மோசேயைப் போல் தலைவனாகவோ, போதிப்பவனாகவோ, அப்போஸ்தலனாகவோ, நற்செய்தி சொல்லி நடத்துபவனாகவோ (மேய்ப்பன்) இல்லை. கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணுகிற பணி மட்டுமே செய்தான். எனவே தான், “இல்லை” என்று பதிலளித்தான்.

**35. ஒருவரின் பாவத்தை நான்கு சந்ததி வரை சுமக்க வேண்டும் என்று யாத். 34:7ம், ஆயிரமாயிரம் ஆண்டுகள் சுமக்க வேண்டும் என்று லூக்கா 11:50, 51ம் சொல்வது முரண் பாடில்லையா? ஆதாம் - ஏவாள் பாவத்தை மட்டும், இன்று வரை அனுபவிக்கிறோம் என்கிறார்களே எப்படி?**

★ ஒருவன் தான் செய்த பாவங்களை, சரி என்று வாதிட்டானானால், அது ஆயிரமாயிரம் ஆண்டுகள் தொடரும் (லூக்கா 11:50, 51). பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்று, பரிகார பலி செலுத்தும் போது அது மாறும்; மறையும். அப்படியே, தேவனுக்கு மட்டுமே தெரிய செய்த பாவங்கள் 3ம், 4ம் தலைமுறை வரையே தான் தொடரும். சமுதாயத்திற்கு, ஆசாரியனுக்கு தெரியும்படியான பாவங்களில் பிடிபடும்போது, அது 10ம் தலைமுறை வரை இருப்பதால் அவர்கள் மூலமாய் வந்த சாபமும், தண்டனைகளும், அவைகள் மாறும்வரை

தொடரும். ஆதாமின் ஜென்ம பாவ சாபம், இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளும் போதும், தண்டனைகள் இயேசுவின் வருகையிலும் மாறும். (கலா. 3:13; 1 கொரி. 15:57). மேலே சொன்ன மற்றவைகளோ கர்மப்பாவம்.

**36. எகிப்திலிருந்த யாக்கோபின் குடும்பத்தார் ஆதி. 46:27-ன்படி 70 பேரா? அல்லது அப். 7:14ன்படி 75 பேரா? ஏனிந்த குளறுபடிகள்?**

★ ஆதி. 46:20-ன் எபிரெய பாஷையில், "யோசேப்புக்கு எகிப்து தேசத்திலே, மனாசேயும், எப்பிராயீமும் பிறந்தார்கள்" என்று மட்டுமே உள்ளது. ஆனால், செப்டுவாஜிந்-ல் மனாசே, எப்பிராயீம் இருவர்களின் 5 மகன்களும் எழுதப்பட்டிருக்கிறது. எபிரெய பாஷையில் எழுதிய மோசே, இந்த மகன்களை சேர்க்காமல், 70 என்று எழுதியிருக்கிறார். ஸ்தேவானோ, செப்டுவாஜிந்-ல் உள்ள அந்த 5 மகன்களையும் சேர்த்து சொல்லியிருக்கிறார். இதிலே எந்த குளறுபடிகளும் இல்லை. (யூதர்கள் பெரும்பான்மையாய் கிரேக்க - செப்டுவாஜிந் - பழைய ஏற்பாட்டைத்தான் படிக்கும் பழக்கம் உள்ளவர்கள் என்பதை அறிய வேண்டும்).

**37. எகிப்தில் இஸ்ரேல் மக்கள் அடிமையாயிருந்தது ஆதி. 15:13-ன்படி 400 வருஷமா? அல்லது கலா. 3:17-ன்படி 430 வருஷமா? ஏனிந்த குளறுபடிகள்?**

★ இந்த வருஷங்கள் அடிமையாயிருந்த வருஷங்களல்ல; பல அந்நிய தேசங்களில், ஆபிரகாமின் சந்ததி பரதேசிகளாயிருந்த மொத்த வருஷங்களாகும். இந்த சந்ததி கணக்கு, ஆபிரகாம் கர்த்தரின் அழைப்பை ஏற்று வந்த ஆபிரகாமின் 75 வயதிலிருந்து ஆரம்பமாகிறது. 25 வயது கழித்து 100 வயதில் தான் ஈசாக்கு பிறக்கிறான். இஸ்மவேல் வெளியேற்றப்பட்ட பின்பு தான் ஆணித்தரமான சந்ததியாய் தன் 5 வயதில் ஈசாக்கு மாறுகிறான். இந்த 30 வருஷத்தையும் சேர்த்துக் கணக்கிடும்போது 430 வருஷம் வரும். ஆணித்தரமான சந்ததியாய் மாறியதிலிருந்து கணக்குப் பார்த்தால் 400 வருடம் ஆகிறது. எனவே எந்த குளறுபடிகளும் இல்லை.

75 வயது ஆபிரகாம் முதல் ஈசாக்கு பிறக்கும் வரை 25 வருஷம்.

ஈசாக்கு பிறப்பு முதல் யாக்கோபு பிறக்கும் வரை 60 வருஷம் (ஆதி. 25:26).

யாக்கோபு பிறப்பு முதல் மரணம் வரை ... 147 வருஷம் (ஆதி. 47:28).

யாக்கோபு மரண முதல் யோசேப்பு வரை ... 54 வருஷம்
யோசேப்பு மரண முதல், யாத்திராகமம் ஆரம்பிக்கும் வரை 144 வருஷம் (யாத். 12:40; கலா. 3:14-17).
மொத்தம் : 430 வருஷம்.

**38. பெஞ்சமின் குமாரர் 1 நாளா. 7:6-ன்படி 3 பேர் என்றும், 1 நாளா. 8:1,2ன்படி 5 பேர் என்றும் ஆதி. 46:21-ன்படி 10 பேர் என்றும் சொல்லப்படுகிறதே. எது உண்மை?**

★ மூன்றுமே உண்மைதான். எப்படி? ஆதி. 46:4-ன்படி 10 பேர் என்பது உண்மையான பிறப்புக் கணக்கு. நாமறிந்தபடி நாளாகமம் என்பது சரித்திரப் புத்தகம். அதனால், இதிலே வாழ்ந்து சந்ததி பெருக்குபவரைத் தான் எழுதுவார்கள். எனவே, இந்த 10-ல், மரித்த 5 பேர் போக, சந்ததி பெருக்கம் வாழும் 5 பேரை 1 நாளா. 8:1,2 சொல்கின்றது. 1 நாளா. 7:6-ல் குறிப்பிடப்பட்டுள்ளது:- "the greatest branches of Benjamine is mentioned as 3." எனவே no difference at all.

**39. 1 இராஜா. 15:33-ன்படி இஸ்ரவேல் ராஜா பாஷா, யூத ராஜா ஆசாவின் 27 வருஷ ஆட்சிக் காலத்திலேயே மரித்துப் போய்விட்டான். அப்படியிருக்க, 2 நாளா. 16:1-ல் சொல்கிறபடி, அவன் எப்படி ஆசாவின் 36ம் வருஷ ஆட்சிக்காலத்தில், ராமாவைக் கட்ட முடியும்? இது பொய்தானே?**

★ 2 நாளா. 16:1-ல் இருக்க வேண்டியது. "ஆசா அரசாண்ட 36ம் வருஷத்திலே" என்று அல்ல; "இஸ்ரேலர் அரசாண்ட 36ம் வருஷத்திலே..." என்று இருக்க வேண்டும். இஸ்ரேல் ராஜ்யம் வந்த 36ம் வருஷம் தான் பாஷா, ராமாவைக் கட்டினான் என்பது தான் உண்மை. இந்த mistake - தவறு - maybe by the copier. வருஷ எண் சரியே. பெயர்தான் மாறி உள்ளது. வேதத்தின் அடிப்படை சத்தியம் இதனால் மாறவில்லை. பலதரப்பட்ட எழுத்தாளர்கள், பலகால கட்டத்தில் எழுதியிருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும். ஆனாலும், அதை நாங்கள் மறைக்கவில்லையே!

**40. 2 நாளா. 2:2; 1 இராஜா. 5:16 போன்ற வசனங்களில், சாலமோன் கட்டிய ஆலயத்திற்கான servants கணக்கு why different?**

★ Servants கணக்கு அல்ல; கண்காணி கணக்கு தான். 3300 என்று 1 இராஜா. 5:15, 16-லும் 3600 என்று 2 நாளாகமம் 2:2 லும் உள்ளது. இது காபி மிஸ்டேக் தான். எண்கள் மாறலாம் வாய்ப்புண்டு; எண்ணங்கள், கருத்துக்கள் மாறவில்லை. வேதத்தின் அடிப்படை

சத்தியம் மாறவில்லை. பலதரப்பட்ட எழுத்தாளர்கள் பலகால கட்டங்களில் எழுதியிருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும். ஆனாலும் அதை நாங்கள் மறைக்கவில்லையே!

**41. சாலமோனின் கடல் தொட்டி கொள்ளளவு 2000 குடமென்று 1 இராஜா. 7:26-லும், 3000 குடமென்று 2 நாளாகமம் 4:5-லும் உள்ளதே, ஏனிந்த மாறுபாடு?**

★ கடல் தொட்டியின் மொத்தக் கொள்ளளவு என்பது வேறு. தொட்டியில் இருக்கக்கூடிய தண்ணீரின் கொள்ளளவு என்பது வேறு. 2 நாளா. 4:5ல் சொல்லப்பட்டது அந்த தொட்டியின் கொள்ளளவு. மற்றப்படி, 1 இராஜா. 7:26-ல் சொல்லப்பட்டிருந்தது அப்போது, அதிலிருந்த தண்ணீரின் அளவு. It contained 2000 குடம் தண்ணீர். இதிலே மாறுபாடு ஏதுமில்லை.

**42. நேபுகாத்நேச்சாரால் சிறைபிடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எஸ்றா 2ல், 200 என்றும் நெகே. 7-ல் 245 என்றும் உள்ளதே. ஏன் பெரும் வித்தியாசம்? இது தேவனின் வேதமா?**

★ எஸ்றா எழுதி வைத்ததை, நெகேமியா காபி பண்ணுகிறார் (எஸ்றா 2:64, 65; நெகெமியா 7:66, 67) இதிலே சபையார் எண்ணிக்கை, அவர்களின் வேலைக்காரர், வேலைக்காரிகள் எண்ணிக்கை எல்லாம் சரியாயிருக்கிறது. இந்த 200, 245 என்பது பாடகரின் எண்ணிக்கை தான். காபி பண்ணும்போது எண்கள் தான் வித்தியாசமாயிருக்கிறது. இது தேவன் டிக்டேட் பண்ணியிருந்தால் இப்படி நடக்காது. எண்கள் மாறியிருக்கிறது; எழுதிய எண்ணங்கள் மாறவில்லை; வேதத்தின் அடிப்படைச் சத்தியம் இதனால் மாறவில்லை. ஆனாலும் இதை நாங்கள் மறைத்து எழுதவில்லையே; மாற்றியும் எழுதவில்லையே! அப்படியேதானே வைத்திருக்கிறோம்!

**43. 36 வயதில் ஆகாஸ் ராஜா மரித்தான். அப்போது அவன் மகன் எசேக்கியாவுக்கு 25 வயதாம். இப்படிச் சொல்வதா வேதம்? (2 இராஜா. 16:2, 20; 18:2; 2 நாளா. 28:1; 29:1)**

★ வயது எண்கள், காபி பண்ணப்பட்டதால் மாறியிருக்கிறதே ஒழிய, ஆகாஸ் மரித்தபின், அவன் மகன் எசேக்கியா தான் ஆண்டான். எண்கள் மாறியிருக்கிறது; எண்ணங்கள் மாறவில்லை.

**44. சாலமோனின் படைபலத்தின் எண்ணிக்கை, 2 நாளா. 9:25லும், 1 இராஜா. 10:26-லும் ஏன் வேறுபடுகிறது? இதுவா வேதம்?**

★ 1 இராஜா. 10:26-ல், சாலமோனின் ரதங்கள் மட்டும் 1400 என்று உள்ளது. ஆனால், 2 நாளா. 9:25-ல் ரதங்களும், லாயங்களும் சேர்த்து 4000 என்று போடப்பட்டுள்ளது. எனவே வேறுபாடு ஏதுமில்லை.

**45. தாவீதிடம் யோவாப் சொன்ன ஜனக்கணக்கெடுப்பு ஏன் வித்தியாசமாயிருக்கிறது? (2 சாமு. 24:9; 1 நாளா. 21:5)**

★ எண்களில் கொஞ்சம் மாற்றம் உள்ளது. அது காபி பண்ணியதால் இருக்கலாம்.

**46. 2 சாமு. 23:8; 1 நாளா. 11:11-ன்படி, தாவீதின் வீரன் வெட்டியது 800 பேரா? 300 பேரா? எது கர்த்தருடைய வார்த்தை?**

★ எண்கள் கொஞ்சம் மாற்றம். அது காபி பண்ணியதால்; மற்றபடி கருத்துக்கள் ஏதும் மாறவில்லை.

**47. காத் தீர்க்கதரிசி மூலம் வந்த தேவ வார்த்தையில், 2 சாமு. 24:11 -13ல் பஞ்சம் 7 வருஷம் என்றும் 1 நாளா. 21:11, 12ல் 3 வருஷம் என்றும் உள்ளதே ஏன்?**

★ 3 நாள் கொள்ளை, 3 மாதம் சத்துருவால் மோசம் என்று மூன்று. மூன்று என்று வருவதால் பஞ்சமும் 3 வருஷமாய்த்தான் இருக்க வேண்டும் என்று சிலர் கணிக்கின்றனர். எப்படியோ, எண்கள் விஷயத்தில் சாமுவேல், ராஜாக்கள், நாளாகமம் போன்ற புத்தகங்களில் அதிகம் காட்டப்பட்டிருப்பதால், அவைகளுக்குள்ளே இப்படி மாற்றங்கள் காணப்படுகின்றது. இவைகள் எல்லாமே, ஏற்கெனவே, ஆரம்பத்தில் சொன்னபடி, பலகாலங்களில், பல நபர்களால், காபி பண்ணப்பட்ட தன் விளைவுதான் என அறிகிறோம். இவைகள் எண்களில் தானே ஒழிய, எண்ணங்கள் - கருத்துக்களில் - அல்ல.

**48. யோயாக்கின் ராஜாவானது 8 வயதிலா? 18 வயதிலா? அவன் அரசாண்டது 3 மாதமா? 3 மாதம் 10 நாளா? எது கர்த்தருடைய வார்த்தை? (2 இராஜா. 24:8; 2 நாளா. 36:9)**

★ இங்கேயும் எண்கள் மாறியிருக்கின்றன; கருத்துக்கள் மாறவில்லை.

**49. ஆதி. 6:19,20-ல், நோவா கப்பலில் ஏற்றி சென்றது ஜோடி ஜோடியாய் போடப்பட்டுள்ளது. ஆனால், ஆதி. 7:2,3ல் "எவ்வேழு ஜோடியாய்" என்று உள்ளது? எது உண்மை?**

★ பலுகிப் பெருக வேண்டிய சட்டம் நிறைவேற எல்லா ஜீவராசிகளிலும், நோவாவின் ஜலப்பிரளயத்திற்குப்பின் ஜோடி தேவை. அதைத்தான்

ஆதி. 6:19, 20ல் சொல்லப்பட்டுள்ளது. நம்முடைய வேதம் இரட்சிப்பின் மேல் தான் - பாவமன்னிப்பின் - மேல் தான் அக்கறை கொண்டுள்ளது. எனவே பலிபொருட்கள் - அதுவும் சுத்தமான மிருகங்கள் விஷயத்தில் கவனம் வைத்துள்ளது. அதன்படி, சுத்தமான மிருகங்களிலும் ஜோடி ஜோடியாய் பாதுகாக்கும்போது, அவைகள் அழிந்துபோய்- பெருக்கம் கொள்ளாமல் போனால், இரட்சிப்பின் திட்டத்தில் பழுது வந்துவிடுமே என்பதால்தான். ஆதி. 7:2ல் எவ்வேழு ஜோடிகள் பாதுகாக்கப்படுகிறது. எனவே, இவைகளில், இரண்டுமே உண்மைதான்; சத்தியத்திற்காகத்தான்.

**50. மீதியானிய வம்ச பச்சிளம் குழந்தைகளையும், பெண்களையும் மோசே கொல்லச் சொன்னாரா? அப்படி கொன்று, எண். 31:7-18ன்படியே மீதியானியரே அழிந்தபின், நியாயதிபதி 6:1-ல் மறுபடியும் மீதியானியர்கள் எங்கிருந்து வந்தனர்?**

★ ஆண் குழந்தைகள் மற்றும் புருஷசம் யோகம் அறியாத பெண்களை மட்டுந்தான் கொல்லச் சொன்னானே ஒழிய, எல்லா குழந்தை களையும், எல்லா பெண்களையும் அழிக்கச் சொல்லவில்லை. காரணம், மீதியானியரின் சந்ததி அழிய வேண்டும் என்பதற்காக. "பிலேயாமின் ஆலோசனையினால், இஸ்ரேல் புத்திரர், கர்த்தருக்கு விரோமாய் துரோகம் பண்ண காரணமாயிருந்தவர்கள் இவர்கள் தானே." (எண். 31:16). தேசீய லெவலில் மீதியானியர் அன்று அழிக்கப்பட்டனர். உண்மைதான். ஆனாலும், ஆங்காங்கு மறைந்து - ஒளிந்து - தப்பிய மீதியானியர்கள் இருக்க வாய்ப்பு உண்டே. உதாரணத்திற்கு நாம் அறிந்தபடி, சிலோன் போர்ப்படுகொலைப்படி, எல்.டி.டி.இ. அழிக்கப்பட்டாயிற்று. ஆனாலும், இன்னும் கூட சில எல்.டி.டி.இ. களை கைது பண்ணியிருக்கிறதாய் கேள்விப் படுகிறோமே. அப்படியாயிருந்த மீதியானியர்கள், கிட்டத்தட்ட 200 ஆண்டுகளில் பெருகி, நியாயாதிபதி காலத்தில் மீண்டும் விரோதிகளாய் மாற வாய்ப்பு உண்டு!

**51. அபியா ராஜாவுக்கு, இரண்டு தாயா? (2 நாளா. 13:2, 11:19, 20) அவர்கள் அப்சலோமின் மகள்களா? 2 சாமு. 14:27ல் சொல்லப்பட்டபடி அப்சலோமுக்கு, தாமார் என்ற ஒரே மகள்தானே! ஏன் இப்படி தவறாய் - குழப்பத்தோடு - வேதம் எழுதப்பட்டுள்ளது?**

★ 2 சாமு. 14:27ல் உள்ள தாமாரும், 1 நாளா. 11:20ல் உள்ள மாகாளும், 2 நாளா. 13:2ல் உள்ள மீகாயாளும் ஒரே ஆள்தான். பெயர் தான் மூன்றாயிருக்கிறது; இவள், அப்சலோமின் மகள்தான் என்று சரித்திரம் சொல்கின்றது. ஒரு நபருக்கு, பல பெயர்கள் இருப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை. இந்த மூன்று பெயரும் உள்ள அப்சலோமின் மகள்தான் அபியா ராஜாவின் ஒரே தாய். எனவே இதிலே குழப்பமோ தவறோ ஏதுமில்லை.

**52. மத். 16:27, 28ல் சொல்லப்பட்டபடி இயேசுவின் வருகை இதுவரை இல்லாததால் அந்த அப்போஸ்தலர்கள் எல்லோரும் உயிரோடு உள்ளனரா?**

★ அந்த வருகையைக் காணுமுன் அவர்கள் மரிக்கமாட்டார்கள் என்று உள்ளதால் அந்த வருகையை, 6 நாளுக்குப்பின் மறுரூபமலையில் சீஷர்களுக்கு இயேசு காட்டுகிறார். (மத்.17) இதைத்தான் வருகையை கண்ணாரக் கண்டோம் என்று 2 பேதுரு 1:16-19ல் சாட்சியாய் பேதுரு எழுதுகிறான்.

எனவே, அவர்கள் இயேசு சொன்னபடியே, வருகையை கண்டுவிட்டனர் என்று அறியலாம். மற்றப்படி, அவர்கள் actual ஆக பார்த்தபின் தான் மரித்தார்கள் என்றால் பயன் என்ன? தரிசனத்தில் கண்டதால் தான், தைரியமாய் அவர்கள் உலகமெங்கும் வருகை பற்றி சொல்ல முடிகிறது; சொன்னவர்கள் மரித்துப் போய்விட்டார்கள்; வருகையிலே எலியா, மோசே போல வருவார்கள், ஆமென்.

**53. எலியாவும் ஏனோக்கும் பரலோகம் போனதாக, 2 இராஜா. 2:11, எபி. 11:6ல் உள்ளது. ஆனால் யோ. 3:13ல் இயேசு மட்டுமே பரலோகம் போனார் என்று உள்ளது. ஏனிந்த குளறுபடி? "பரலோகத்திலிருந்திறங்கினவரும், பரலோகத்திலிருக்கிற வருமான, மனுஷகுமாரனே அல்லாமல், பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை." (யோ. 3:13).**

★ ஏனோக்கும் எலியாவும் தேவனால் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். ஆனால் இயேசுவோ தானே பரலோகம் போனார்; அங்கே பிதாவின் வலது பாரிசத்திலிருந்து நமக்காய்ப் பரிந்துபேசிக் கொண்டிருக்கிறார். (எபி. 8:1; 1 யோ. 2:1). பரலோகத்திலிருந்து வந்தது இவர் மட்டுமே. அப்படியே தானே பரலோகம் போனதும் இவர் மட்டுமே. மட்டுமல்ல, இயேசு பரலோகில் பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கிறார். ஆனால் ஏனோக்கும் எலியாவும் எங்கே உள்ளனர் என்று விளக்கமே இல்லை. பரலோகம் -

Heaven - வானம் என்பது, பவுல் எபி.12:22-24ல் சொல்லுகிறபடி பலதரப்பட்ட பகுதிகளாகும். அவர்கள் இருவரும் சீயோனுக்கு - சொர்க்கத்திற்கு - போகவில்லை என்பது மட்டும் உறுதி. எப்படியெனில் யோ. 14:1-3ன்படி, இயேசு வந்து தான், எல்லாரும் சொர்க்கத்திற்கு கொண்டு சொல்லப்படுவோம். Hence there is no குளறுபடி.

**54. மத். 16:14ல் பதினோரு சீஷர்களுக்கு தரிசனம் என்றும், 1 கொரி. 15:5ல் 12 சீஷர்களுக்கு தரிசனம் என்றும் உள்ளதே. எது உண்மை?**

★ இரண்டும் உண்மைதான். யூதாஸ் மரித்தபிறகு, 40 நாளளவும், 11 சீஷர்கள்தான் இருந்தனர். ஆனால், 40 நாளுக்குப் பிறகு, அப். 1:26ல் சீஷனாய் அபிஷேகம் பண்ணப்பட்ட மத்தியாஸூம், அந்த 40 நாளளவும் அவர்களோடு இருந்திருக்கிறார். அப்போது அவரும் காட்சியை கண்டிருக்கிறார். அதைத்தான், அவர் அப்போஸ்தலனான பிறகு, ஊழியப்பாதையில் இருக்கும் போது எழுதும் பவுல், 1 கொரி. 15:5ல் 12 என்று எழுதியிருக்கிறார். இதிலே தவறேதும் இல்லை. அந்த மத்தியாஸ் அவர்களோடு கூடவே இல்லாமல், திடீரென்று 40 நாளுக்குப்பிறகு வந்திருந்தால், அவரை எப்படி அப்போஸ்தலனாக ஆக்க முடியும்? சிந்தியுங்கள்.

**55. ஜலப்பிரளயத்துக்கு முன்பு மனித ஆயுட்காலம் 120 என்று எழுத உதவிய ஆவியானவர் (ஆதி. 6:3) ஆதி. 11:11-32ல் ஆயுட்காலம் 148 முதல் 600 ஆண்டுகள் இருந்தன என்று எழுத உந்துவானேன்? சங். 90ல், மனிதனின் ஆயுசு நாள் 70 என்றும், பெலத்தின் மிகுதியால் 80 என்றும் சொல்வானேன்?**

★ 3 இடங்களிலும் உண்மைதான் எழுதப்பட்டிருக்கிறது. ஆதி. 6:3ல் சொல்லப்பட்டது ஆதாம் பற்றி (மனுஷன் = man = Adam in Heb) அவன் அன்று முதல் இன்னும் வாழப் போவது 120 வருஷமாம். இது உலக மொத்த மனிதர்களுக்கு அல்ல. இந்த காலம் அவன் மனந்திரும்புவதற்காய் கொடுக்கப்பட்டது. மற்றப்படி, ஆதி. 11:32 என்பது மற்ற மனிதர்கள் பற்றியது. அந்த ஆயுட்காலம் fix பண்ணப்பட்டது அல்ல.

90ம் சங்கீதத்தில் மோசே, வனாந்திரத்தில் இருக்கும்போது அவர்கள் வாழ்நாள் பற்றி சொல்கிறான். எகிப்திலிருந்து புறப்பட்ட 20 வயதுக்கு மேற்பட்ட அத்தனை பேரும், 40 வருட வனாந்திர வாழ்க்கையில் மரித்துப் போனார்கள் அல்லவா! ஒருவேளை எகிப்தில்

புறப்பட்ட பெரியவர்கள் கிட்டத்தட்ட 30 அல்லது 40 வயதானால், கானானுக்குள் வரும்போது வனாந்தர வருஷம் சேர்ந்தால், 70, 80 ஆகுமல்லவா! அதைத்தான் மோசே எழுதுகிறான்.

உண்மையிலேயே மனிதனின் வயது சங். 91:16ல் சொல்லப்பட்டுள்ளது. எனவே, இதில் முரண்பாடோ, குளறுபடியோ இல்லை.

**56. யாத். 20:4ல் எந்த சொரூபத்தையும் உண்டாக்க கூடாது என்று கட்டளையிட்ட ஆவியானவர், அதற்கு நேர்மாறாக, வெண்கல சர்ப்பத்தை வணங்கச் சொல்வாரா? கேருபீன்களை செய்யச் சொல்வாரா?**

★ யாத். 20:3, 4 வாசியுங்கள். இவரே தேவன்; இவருக்கு மிஞ்சி வேறே தேவனில்லை; அப்படியிருக்க, இந்த தேவனை, வானம், பூமி, தண்ணீர் இவைகளிலுள்ள எந்த பொருளுக்கும் சமமாய் எதையும் உருவாக்கவோ, நமஸ்கரிக்கவோ, சேவிக்கவோ கூடாது.

கேருபீன்களை செய்யச் சொன்னது, தேவனுக்கு சமமாய் - நிழலாய் - அல்ல. அவைகள் பாதுகாப்பின் தூதர்களாக உருவாக்கப் பட்டவை.

வெண்கல சர்ப்பத்தை தேவனுக்கு சமமாய் - நிழலாய் உருவாக்க சொல்லவில்லை. தேவன் - தெய்வீகம் என்றால் பொன் தான் வேதத்தில் உவமையாயுள்ளது. வெண்கலம் என்பது பிசாசு - பாவம் - மாம்சத்திற்கு உவமையாயுள்ளது.

இது, "சர்ப்பமானது மோசேயினால் வனாந்திரத்திலே உயர்த்தப்பட்டது போல, மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்பட வேண்டும்" (யோ. 3:14,15) என்பதாகும்.

இயேசு கிறிஸ்து நமக்காக பாவமாக்கப்பட்டு (2 கொரி. 5:21), பாவியாய் - பிசாசாய் - வெண்கல சர்ப்பமாய் சிலுவையில் தொங்கினார். இந்த இயேசுவை ஆவிக்குரிய கண்களில் நோக்கிப் பார்த்து (விசுவாசத்தோடு), சுகம் பெறுவதற்கு நிழலாட்டமாய்த்தான் வெண்கல சர்ப்பம் உயர்த்தப்பட்டதே ஒழிய, அதை யாரும் வணங்கச் சொல்லவே இல்லை. அதனால் தான் இன்றைக்கும் சிலுவையோ, சிலுவையில் தொங்கும் இயேசுவோ, உருவாக்கப்படவில்லை

என்றும் அறிகிறோம். இதற்கு எதிராய் செய்வோர் ஒன்றும் அறியாதவர்கள்; அல்லது கீழ்ப்படியாதவர்கள்; பாரம்பரிய - பெயர்க் கிறிஸ்தவர்கள்.

**57. எரே. 22:30ல் எகோனியா சந்தான மற்றவன் என்று உள்ளது? ஆனால் மத். 1:12; 1 நாளா. 3:17, 18ல் அவனுக்குப் பிள்ளைகள் இருந்தன என்று உள்ளது? எது உண்மை?**

★ எரே. 22:30-ஐ முழுமையாக வாசித்தால், இறுதியில் "அவன் வித்தில் ஒருவனாகிலும் வாழ்வடைந்து, தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருப்பதில்லை..." என்று உள்ளது. எகோனியாவின் மேல் கோபம் கொண்டவர், "சந்தானமற்றவன் - வாழ்வடையாதவன் என்றெழுதுங்கள்" என்று சாபங்கள் மிகவும் அதிகமாய் சொல்கிறார். ஆனாலும் உடனடியாகவே, அப்போதே, உலகப் பிரகாரமான கெடுதல் வராதபடிக்கு "சந்தானத்திற்கு தேவ ஆட்சி கிடைக்காது" என்று மட்டும் சொல்கிறார். தேவ ஆட்சியில் உன் வித்து வீற்றிருப்பதில்லை என்றால், வித்து வரும் என்று தானே அர்த்தம்? கோபமாய் சொன்னதற்கு நேரெதிராய் அதே வசனத்தில் தேவன் சொன்னது தான் உண்மை என்று நாமறிகிறோம். இதிலிருந்து தேவனின் குணாதிசயங்களையும் நாமறிய முடிகின்றது. காயீனுக்கு அனுக்கிரகம் செய்தவர் இன்றும் ஜீவிக்கிறார் அல்லவா!

**58. "அம்மோனியனும் மோவாபியனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது" (உபா. 23:13) மற்றும் நெகெ. 13:1-ன்படி மோவாபியன் கர்த்தருடைய சபைக்கு வரக்கூடாது. ஆனால் இயேசுவின் வம்ச அட்டவணையில் மோவாபிய ரூத் வருகிறாளே எப்படி?**

★ மனந்திரும்பி, இஸ்ரேல் தேவனை விசுவாசித்து, மாமியோடு வருகிறாள் ரூத் (ரூத். 1:16). அப்படியிருக்கும்போது சாபம் எப்படி தொடரும்? மேலும், இஸ்ரேலன் போவாசை மணந்ததால், அவளுடைய பிள்ளைகளெல்லாம் நியாயப்பிரமாணப்படி இஸ்ரேல் வம்சந்தான். (எகிப்திய தாய்க்கு மனாசேயும் எப்பிராயீமும் பிறந்தாலும், யோசேப்பின் வம்சந்தானே அவர்கட்கு) இயேசுவும் அந்த போவாஸ் - ரூத் வழியில் தான் வருகிறார்.

மேலும் உபா. 23:3ன்படி 10ம் தலைமுறையிலும் அவர்கள் சபைக்கு உட்படலாகாது, அப்படிப் பார்த்தாலும் கூட ரூத் முதல் இயேசு வரை எத்தனையோ, தலைமுறை ஆகியிருக்கிறதே.

**59. இயேசுவின் கல்லறையினருகே காணப்படும் தூதர்களின் எண்ணிக்கையில் ஏன் முரண்பாடு?**

★ லூக்கா 24:4ல் 2 பேர் என்றும், மத். 28:2ல் ஒருவர் என்றும் உள்ளதே! கல்லறைக்கு உள்ளே 2 தூதர் என்கிறார் லூக்கா; மத்தேயும், மாற்கும் கல்லறைக்கு வெளியே நின்ற ஒரு தூதன் பற்றி சொல்கிறார்கள். வெளியே நின்றிருந்த தூதனே உள்ளே போய், ஏற்கனவே உள்ளே இருக்கும் ஒருவனோடு சேர்ந்து இரண்டாயிருக்கலாம். மட்டுமல்ல... லூக்காவும் மற்றவர்களும் சொல்லும் சம்பவங்கள் வெவ்வேறாய் இருப்பது என்றும் கூட நிதானிக்கலாமே.

**60. அப். 1:15ல் இயேசு பரமேறிய பின்பு 120 சீஷர் இருந்தனர் என்றும், 1 கொரி. 15:6ல் உயிர்த்தெழுந்த பின்பு 500 பேருக்கு தரிசனமானார் என்றும் ஏன் முரண்பாடு?**

★ முரண்பாடு ஏதுமில்லையே. பரமேறும் போது கூடிவந்தவர்கள் எண்ணிக்கை தெரியவில்லை. (அப். 1:6). பரமேறிய பின் மேல் வீட்டில் தங்கியிருந்தோர் தான் 120 பேர். மற்றப்படி உயிர்த்த பின்பு காட்சி தந்தது தான் 500 பேர். எனவே முரண்பாடு ஏதுமில்லை.

**61. உலகை நியாயந்தீர்ப்பவர் இயேசு (யோ. 5:22-27). ஆனால், 1 கொரி. 6:2, 3லும் பரிசுத்தவான்கள் நியாயந்தீர்ப்பார்களாமே எப்படி?**

★ "அதற்கு இயேசு : மறுஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பிற்றின நீங்கள், இஸ்ரவேலின் 12 கோத்திரங்களையும் நியாயந்தீர்க் கிறவர்களாகப் 12 சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்". (மத். 19:28)

இப்படி இயேசு சொன்ன தீர்க்கதரிசன நிறைவேற்றத்தைத்தான் பவுல் 1 கொரி. 6:2,3ல் எழுதுகிறான். இயேசுவுக்கான அதிகாரம் நமக்கும் தரப்படும். (தானி. 7:21, வெளி. 20:4)

**62. மத். 5:17ல் நியாயப் பிரமாணத்தை அழிக்க வரவில்லை; எபி. 7:18ல் நியாயப்பிரமாணம் மாற்றப்பட்டது. ஏன் இந்த முரண்?**

★ இயேசு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவே வந்தார். நிறைவேற்றிய பின், மத். 5:18-ன்படி அது இராது; தானாய் இல்லாமல் போகும்; புதிது வந்துவிடும் (எபே. 2:14, 15; எபி. 8:13; ரோமர் 10:4; ரோமர் 7)

"வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப் பிரமாணத்திலுள்ள தெல்லாம் நிறைவேறுமளவும் அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். 5:18).

**63. பேதுரு வேலைக்காரனுடைய காதை வெட்டும்போது, பார்த்துக் கொண்டிருந்த அதிகாரிகள் ஒன்றும் action எடுக்கவில்லை; இயேசுவை பற்றி சொல்லவே, வேலைக்காரியிடம் பயப்படும் பேதுருவுக்கு, எப்படி இவ்வளவு தைரியம் வரும்? இது பொய்க் கதை தான்.**

★ வேலைக்காரியிடம் பேதுரு பயந்தபோது இருந்த சூழ்நிலையைப் பாருங்கள். கெத்சமனேயிலோ, யோ. 18:4-10ஐ வாசித்தால், "நான் தான்" என்று இயேசு சொன்ன உடனேயே, அவர்கள் பின்னிட்டு விழுந்ததால், அதிகாரிகளுக்கே கலக்கம் உண்டாயிருக்கும். சீஷர்களுக்கு தைரியம் வந்திருக்கும். சீஷர்களை விட்டுவிடுங்கள் என்று இயேசு சொன்னவுடன் தான், பேதுரு காதை வெட்டினான். இதுவெல்லாம், சேவகர்கள் கீழே விழுந்ததை கண்டதாலும், இயேசு தங்களுக்குப் பாதுகாப்பாய் கூடவே இருப்பதாலும் கிடைத்த தைரியம்தான். உடனே இயேசு பேதுருவை கடிந்து கொண்டு, சுகமாக்கினார். இவ்வளவையும் கண்ட அதிகாரிகளுக்கு கோபம் வரவில்லை; வரவும் வாய்ப்பில்லை.

எனவே இந்த நிகழ்ச்சி கதையல்ல. அவர்களுக்கு வராத கோபம் இஸ்லாமியர்களுக்கு ஏன்?

**64. சிலுவையை சீமோன் என்பவர் சுமந்தான் என்று, மத். மாற்கு, லூக்கா சொல்கிறது. இயேசு தான் சுமந்தார் என்று யோவான் சொல்கிறான். ஏன் இந்த முரண்பாடு?**

★ இயேசு சுமந்தார் என்பது உண்மைதான். கொல்கதா போகும் வழியில் வந்த சீமோனையும் சுமக்க வைத்தார்கள் என்று லூக்கா 23:26 சொல்கின்றது.

"அவர்கள் இயேசுவை கொண்டு போகிறபோது, நாட்டிலிருந்து வருகிற சிரேனே ஊரானாகிய சீமோன் என்கிற ஒருவனைப் பிடித்து, சிலுவையை **அவர் பின்னே சுமந்து வரும்படி** அதை அவன்மேல் வைத்தார்கள்" (லூக்கா 23:26).

இயேசுவால் சுமக்க இயலாததால், சீமோன் உதவி செய்தான். இயேசு சிலுவை சுமந்து போகவில்லை என்றால், வெறுமனேயா அவரை இழுத்துப் போனார்கள்? அப்படிப் போயிருந்தால், ஏதோ ஒன்றிரண்டு எடிடனறைசள கூட, நேரேயே மலைக்கு சிலுவையைக் கொண்டு போயிருக்கலாமே! சீமோன் தேவையில்லையே! அப்படி ஏதும் நடக்கவில்லையே! இதிலே முரண்பாடு ஏதுமில்லை; இயேசுவும் சுமந்தார்; இயேசுவும் சீமோனும் சுமந்தனர்; பின்னாலே சீமோன்; முன்னாலே இயேசு.

**65. அப். 9:7ல் வானத்திலிருந்து வந்த சத்தத்தை பவுலோடு வந்தவர்கள் கேட்டார்கள் என்று உள்ளது. அப். 22:9ல் "சத்தத்தையோ" கேட்கவில்லை என்று உள்ளது. இதிலிருந்து தெரிகிறது இந்த சம்பவம் பொய்யென்று.**

★ மேற்போக்காய் பார்த்தால் அப்படித்தான் தோன்றும். ஆனாலும் அப். 22:9ல் "சத்தத்தையோ" என்று இருப்பதால், ஏதோ ஒரு உட்கருத்து மறைந்திருப்பது புரிகிறது. மேலும், அப். 26:14ஐ வாசித்தால், அந்த சத்தம் எபிரெயு பாஷையில் இருந்திருக்கிறது. பவுலோடு வந்தவர்கள் எபிரெயு பாஷை தெரியாதவர்கள் என்பதால், அந்த சத்தம் புரியாது. அப். 22:9ஐ ஆங்கிலத்தில் வாசித்தால், "...but they heard not the voice of him that spoke to me" என்று உள்ளது (voice என்றால் சத்தம் - GK. Phone).

வந்தவர்கள் பவுலிடம் தேவன் பேசியதை கேட்கவில்லை. அதாவது அப். 9:7ன்படி சத்தம் கேட்டது; ஆனால் எபிரெய பாஷையில் பவுலுடன் பேசியதை கேட்கவில்லை; அறியவில்லை என்று பொருள். எனவே இந்தச் சம்பவம் பொய்யல்ல. பொய்யானதை மெய்யாக்க ஒருவன் பேசினால் சரியாய்ப் பேசுவான்; அப்படியே அவன் சரியாய்ப் பேசவில்லை என்றால், எழுதுகிறவன் (லூக்கா) அதை மெய்யாக்கி எழுதுவான். இப்படியாய், தவறுகளிருந்தால் மறைத்து எழுதுவதல்ல நம் வேதம். இங்கே உண்மையும், உள்ளதை அப்படியே எழுதப்பட்டிருக்கிறது. ஞானமுள்ளவனின் மனம் இதிலே விளங்கும்.

**66. மத். 21:19, 20ம், மாற்கு 11:14, 20ம் ஏன் வித்தியாசமாய் உள்ளது? இதுவா வேதம்?**

★ அத்திமரத்தை இயேசு சபித்தார். சபித்த அன்றே அது பட்டுப் போய்விட்டது. ஆனால் அதை சீஷர்கள் அடுத்த நாள் கண்டதாக மாற்கு

சொல்கிறார். அப்போது "விசுவாசம்" தேவை என்று இயேசு போதிக்கிறார். ஆனால் மத்தேயு அதை தொடர்ச்சியாக எழுதி உள்ளான். அதிலும் மத். 21:20ல், "சீஷர்கள் அதைக் கண்டு..." என்று உள்ளது. "அப்போதே கண்டார்கள்" என்று இல்லையே! மறுநாள் கண்டதை, தொடர்ச்சியாக எழுதுகிறான், அவ்வளவுதான். இதிலே எந்தவித வித்தியாசமும் இல்லை. ஆனாலும் அவை இரண்டும் வெவ்வேறு நிகழ்ச்சிகள் என்று கூறுவோரும் உண்டு.

**67. 1 கொரி. 7:36 (in English)ன்படி கன்னிகைப் பருவம் கடந்து போகும் நிலையிலுள்ள தன் மகளை, தகப்பன் திருமணம் செய்யலாம் என்று கூறும் பவுல் தேவ மனுஷனா? இது வேதமா?**

★ 1 கொரி. 7:38ஐ வாசித்தால், தகப்பன், வேறொருவனுக்கு மணம் முடித்து கொடுக்கிறான் என்றும், இவர்கள் சொல்லுவதுபோல் அல்ல என்றும் அறியலாம். தகப்பன்-மகள் சேரக்கூடாது என்ற நியாயப்பிரமாணத்தை அறிந்த, சனகெரீம் மன்ற உறுப்பினன் பவுல், அதற்கு விரோதமாய் எப்படி எழுதுவான்?

**68. மேசியா கொலை செய்யப்படமாட்டார் என்று சங். 34:19; ஏசா. 53:10ல் சொல்லியிருக்க, இயேசு மரித்தார் என்று சொல்வது, இறைவனின் திட்டத்திற்கு எதிரல்லவா? யூதர்கள் இவரைக் கொல்வதில் ஜெயித்துவிட்டார்கள் அல்லவா!**

★ "நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும். கர்த்தர் அவைகளெல்லாவற்றிலிருந்தும் நின்று விடுவிப்பார்" (சங். 34:19) என்ற வசனம் மேசியாவை குறிப்பதான தீர்க்கதரிசனமல்ல; பொதுவான எல்லா விசுவாசிகளுக்கும் உரியது இது. "அவருடைய ஆத்துமா தன்னைக் குற்ற நிவாரண பலியாக ஒப்புக் கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு நீடித்த நாளாயிருப்பார்" (ஏசா. 53:10) என்ற வசனத்தில், இயேசு தன்னை குற்ற நிவாரண பலியாக ஒப்புக்கொடுத்து விட்டார் என்றாலே மரணம்தானே! அவர் அப்படி பலியானதினாலேதான், அவர் மரணத்தை ஜெயித்து, சதாகாலமும் உயிரோடிக்கிறார்; (வெளி. 1:18); தமது கிறிஸ்தவ சந்ததியை காண்கிறார். ஆதியிலிருந்தே இயேசு - மேசியா - மரிப்பார் என்று வசனம் உண்டு (தானி. 9:26; சங். 118 : 22-24; ஏசா 25:8; சக. 12:10; வெளி. 1:7; சகரி. 13: 6,7; லேவி. 1 : 4; யாத்.12 with லேவி. 23). எனவே தேவனின் திட்டத்திற்கு எதிராய் எதுவுமே நடக்கவே இல்லை.

**69. ஒரு சீஷன் காட்டிக் கொடுப்பான் என்று இயேசு அறிந்தும், தனது 12 சீடர்களும், 12 சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள் என்று பொய் ஏன் கூறினார்? (மத். 19:28)**

★ 12 சிங்காசனம் என்பதும் உண்மை; 12 சீடர்கள் என்பதும் உண்மை. யார் யாரென்பதுதான் கேள்வி? வசனம் என்ன சொல்கின்றது? “என்னைப் பின்பற்றின நீங்களும்....” அப்போஸ்தலர்களில் 11 பேர்தான் தங்கள் மரணபரியந்தம் இயேசுவை பின்பற்றினார்கள். யூதாஸின் மரணத்திற்குப்பின், 12வதாய் மத்தியாஸ் என்பவன் நியமிக்கப்பட்டான் (அப்.1). அவனும் இயேசுவைப் பின்தொடர்ந்தான். அவனையும் சேர்த்து 12 அப்போஸ்தலர்கள். இந்த 12 பேரும் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள். இது உண்மை; பொய்யல்ல.

**70. தாம் மரணமடையப் போவதை அறிந்திருந்தும், இயேசு ஏன் கெத்சமனே தோட்டத்தில், தன்மை விடுவிக்குமாறு வேண்டினார்? (மத். 26:39). இது முன்னுக்குப்பின் முரணல்லவா?**

★ சிலுவை மரணத்துக்கு இயேசு தயாராகித்தான் பரலோகிலிருந்தே வந்தார் (மத். 20:19; 26:2). பிசாசானவன் 3 முறை கல்லால் எறிந்து சாகடிக்கவும், ஒருமுறை கோபுரத்திலிருந்து குதித்து மரிக்கவும் திட்டமிட்டான். அதிலிருந்து ஜெயித்தார். சிலுவை மரணத்திற்குப் போகாமல், கெத்சமனேயிலேயே, இரத்த வியர்வை வரவழைத்து, சாகடிக்க எத்தணித்தான் பிசாசு. அப்போதுதான், “இந்தப் பாத்திரம் நீங்கக்கூடுமானால் நீங்கச் செய்யும்” என்று கேட்டாரே அல்லாமல், சிலுவை மரணத்தை எதிர்கொண்டு நின்றவர் இயேசு. ஆமென். சிலுவை மரணத்திலிருந்து விடுதலை கேட்கவில்லை.

**71. மனிதர்களின் பிராத்தனைகள் நிறைவேற்றப்படும் என்று போதித்த இயேசுவின் (மத். 21:22) கெத்சமனே தோட்டப் பிராத்தனையே நிறைவேறவில்லையே! இது முரண்பாடான போதனைதானே!**

★ இயேசுவின் கெத்சமனே தோட்ட பிராத்தனை உண்மையிலேயே நிறைவேறியது. வானத்திலிருந்து ஒரு தூதன் வந்து அவரை பலப்படுத்தினான். அதினாலேயே அவர் கொல்கதா வரை சென்று சிலுவையிலேயே மரித்தார் (லூக். 22: 41-44). எனவே வேதம் முரண்டான போதனையைத் தராது.

**72. மத். 26:39; மாற். 14:36; லூக். 22:42ல், தமக்கு தரப்பட்ட மரணப் பாத்திரத்தை அகற்றுமாறு இயேசு வேண்டுகிறார். யோ.**

**18:11ல் மட்டும் பிதா கொடுத்த பாத்திரத்தில் பானம் பண்ணுவேன் என்கிறார். ஏன் மாறி மாறி பேசுகிறார்?**

★ மத்., மாற்., லூக். இம்முன்றிலும், கெத்சமனேயில் பிசாசு கொண்டு வந்த மரணத்தைத்தான் அகற்ற வேண்டினார்; சிலுவை மரணத்தை அல்ல. யோவானில் சிலுவை மரணத்தை ஏற்பதாகவே கூறுகிறார். எனவே இயேசுவின் வார்த்தையில் மாற்றங்கள் - முரண்பாடுகள் இல்லை.

**73. இயேசுவின் வருகையின் நோக்கமே சிலுவையில் மரண மடைதல். அப்படியிருக்க, தேவன், பிலாத்துவின் மனைவிக்கு கனவிலே, இயேசுவை விட்டுவிடும்படி சொன்னாரென்றால், இது இறைவனின் திட்டத்திற்கே எதிரானது அல்லவா? (மத். 27:19).**

★ தேவனால் மட்டுமல்ல... நினைவுகளின் திரட்சியினாலும், பிசாசினாலும் கனவுகள் வருமென்று நீதிமொழிகள் சொல்கிறது. மத். 27:19ஐ வாசித்தால் இந்தக் கனவு தேவன் தந்தது என்று நிதானிக்க வழியில்லை. வசனத்தைப் படிப்போம்:- "அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆள் அனுப்பி: நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்; அவர்நிமித்தம் இன்றைக்கு சொப்பனத்தில் வெகுபாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள்." தேவனின் கனவால் பாடுகள் வருமா? இவளின் உள்ளத்தில் இயேசு நீதிமான் என்ற உணர்வு ஆழமாய்ப் பதிந்திருந்ததால் ஏற்பட்டதன் நினைவுகளின் திரட்சி இந்தக் கனவு. தேவன் விடுதலை செய்ய சொல்லவே மாட்டார். எப்படியோ, இந்த சகோதரியால் பிலாத்துவும் நீதிமான் என்று உறுதியிட்டே இயேசுவை சிலுவையிலறைய ஒப்புக் கொடுத்தான். இவளின் நினைவுகளின் திரட்சியால் வந்த கனவு ஒருவகைக்கு நன்மைக்கேதுவாய் இருக்கிறது. நம் தேவன் சொல்லுகிறதை செய்கிறவர்; செய்கிறதை மாத்திரமே சொல்லுகிறவர். மாறுகிறவர் - மாற்றுகிறவர் அல்ல.

**74. உயிரற்ற சடலத்திலிருந்து இரத்தமோ நீரோ வெளிவருதில்லை. இயேசுவுக்கு எப்படி வந்தது? இது பொய்த்தகவல் தானே! இரத்தமும் தண்ணீரும் வந்தால் அவர் சாகவில்லை என்று பொருள்.**

★ கேள்வி கேட்கும் முஸ்லீம் சகோதரர்களுக்கு மருத்துவ ஞானம் இல்லை. மாரடைப்பினால் ஒருவன் மரிக்கிறான் என்றால், அவனது இருதயம் வெடித்து, இரத்தமும் தண்ணீரும் தான் வெளிப்படும் என்று

அமெரிக்க மாசசூஸட்ஸ் பொது மருத்துவமனையில் ஆராய்ச்சிமூலம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. சங். 69:20ன்படி அவருக்கு ஏற்பட்ட அவமானம், நிந்தை, நம் பாவ அழுத்தம் எல்லாம் சேர்ந்து அவரது இருதயத்தையே பிளந்து அவர் மரித்தார் என அறியலாம்.

**75. இரு கள்வர்களின் கால்கள் முறிக்கப்பட்டிருந்தும் அவர்களைவிட முன்னதாகவே மிக விரைவில் இயேசு ஏன் இறந்தார்? என்ன மாயம் இதிலே?**

★ இயேசு பூமிக்கு முதலாம் முறை வந்த காரியங்கள் முடிந்தபின் "எல்லாம் முடிந்தது" என்று சொல்லி, தானே ஜீவனை விட்டார். Normal மனிதர்களின் சாவைப் போல சாக அவர் காத்திருக்கவில்லை. எனவே இதிலே மாயமில்லை; மந்திரமில்லை.

**76. சேவகர்கள் தூங்கிக் கொண்டிருக்கையில், இயேசுவின் உடலை சீடர்கள் கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்வதற்காக லஞ்சம் கொடுத்தது ஏன்? (மத். 28:12, 13). தூங்கிக் கொண்டிருக்கும் போது, சீடர்கள் திருடிக் கொண்டு போனார்கள் என்று, சேவகர் களுக்கு எப்படி தெரியும்? இந்தக் கதையை யார் நம்புவார்கள்?**

★ உண்மையிலேயே உயிர்த்தெழுந்ததை மறைத்து பொய் சொல்ல கொடுக்கப்பட்ட லஞ்சம் இது. யூதாசுக்கே லஞ்சம் கொடுத்த யூதர்களல்லவா! கல்லறையை சீல் வைக்க வேண்டும் என்று பிலாத்துவிடம் யூதர்கள் சொல்லும்போதே, "சீஷர்கள் இராத்திரியிலே வந்து களவாடுவார்கள்" (மத். 27:64) என்றுதான் சொன்னார்கள். அதே கருத்தை வைத்துதான், அப்படியே சொல்லும்படி லஞ்சம் கொடுத்தார்கள். தூங்கும்போது சீடர்கள் திருடியது எப்படி தெரியும் என்பது நல்ல கேள்விதான். இயேசுவின் சரீரம் திருடப்படுகிறது என்றால், அந்த வேலையை அவரின் சீஷரைத் தவிர வேறு யாரும் செய்யமாட்டார்கள் என்று ஊருக்கும் உலகுக்கும் தெரியும். எனவே எதிர் கேள்வி வர வாய்ப்பில்லை. அதனால்தான் "இந்தப் பேச்சு இந்நாள்வரைக்கும் பிரசித்தமாய் இருக்கிறது" என்று கி.பி. 50ல், மத். 28:15ல் சொல்லப்பட்டுள்ளது. அப். நடபடிகைகளில் எங்காவது யூதர்கள் "இயேசு உயிர்த்தெழவில்லை - மரிக்கவில்லை" என்று சொன்னதாக உண்டா? சரித்திர ஆதாரமாவது உண்டா? கி.பி. 6ம் நூற்றாண்டு குரானில் தான் அப்படி எழுதியிருப்பதாக கணிக்கப்படுகிறது. எனவே என்ன கதை சொன்னாலும், உண்மை உண்மையே! சரித்திரம் சாட்சியே!

**77. இயேசு இயற்கையை மிஞ்சிய அற்புதமான முறையில், ஆவி ரூபமாய் உயிர்த்தெழுந்தார் என்றால் கல்லறையின் மேலுள்ள கல்லை புரட்டித் தள்ள வேண்டியது ஏன்? (மத். 28:2)**

★ நீங்கள் சொல்லுகிறபடி அவர் ஆவி ரூபமாய்த்தான் உயிர்த்தெழுந்தார். எனவே அதற்கு கல்மூடி, தள்ளப்படவில்லை. கல்லறையைப் பார்க்க வந்த ஸ்திரிகளுக்கு (மத். 28:1) திறந்து காட்டவே கர்த்தருடைய தூதன் கல்லைப் புரட்டிப் போட்டான். அதைத்தான் காவலாளர்கள் கண்டு பயந்தனர். தூதன் சொன்னதைப் பாருங்கள்:- "அவர் இங்கே இல்லை. தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்" (மத். 28:6). ஆக, இப்போது கல் புரட்டப்பட்டபோது அல்ல; அதற்கு முன்பே அவர் ஆவியாய் - சரீரம் மறுரூபமாகி உயிர்த்தெழுந்துவிட்டார். அல்லேலூயா.

**78. தோட்டக்காரனின் உடையில் மகதலேனா மரியாளுக்கு காட்சித் தந்தாரே ஏன்? அந்த உடை எப்படிக் கிடைத்தது?**

★ மரித்துயிர்த்த இயேசு தெய்வீக நிலையில் இருக்கிறார். அந்த நிலையில் மனிதக் கண்களால் யாரும் பார்க்க முடியாது. எனவே தோட்டக்காரன், வழிப்போக்கன், மனித இயேசு போன்ற பல ரூபங்களில் வெளிப்படுகிறார். அதுவும் தம்மை விசுவாசிப்பவர்களுக்கு விசுவாசம் பெருக வேண்டியே! அவர் தேவனென்பதால் அவரால் எந்த உடையும் போட்டுக் கொள்ள முடியும். கல்லறை தோட்டத்தில், இயேசுவாகவே நின்றிருந்தால், உயிர்த்தவர் என்ற எண்ணம் வராமல் முஸ்லீம் சகோதரர்கள் சிந்திப்பதுபோல, "இவர் மரிக்கவுமில்லை" என்ற சிந்தனைகூட வந்துவிடும்; விசுவாசம் இல்லாமல் போய்விடும். எனவே, கல்லறை தோட்டத்தில், தோட்டக்காரன் ரூபத்தில் இருந்து, தான் உயிர்த்தெழுந்த இயேசு என்று காட்டும்போது, "அவர் மரித்தார்- உயிர்த்தார் - தேவனாய் ஜீவிக்கிறார்" என்ற விசுவாசம் அவளுக்கு வளர்கிறது. அவர் மனித இயேசு என்ற நிலையில் அவள் கண்டிருந்தால், சீஷர்கள் இருக்குமிடத்திற்கு கூட்டிக் கொண்டு போயிருப்பாள். அதனால் தானோ என்னவோ, தெய்வீக நிலையிலுள்ளவர் என்பதைக் காட்ட பரலோகம் போகப் போகிறேன் என்று சொல்லியிருப்பாரோ! (யோ. 20:17). அல்லேலூயா! மேலும் மனித இயேசுவாகவே நின்றிருந்தால், உயிர்த்தெழுவார் என்பதை விசுவாசிக்காமல் அழுது கொண்டிருக்கிற ஸ்திரி பார்த்த உடனே, ஏதோ ஆவியென்று என்று எண்ணி கதிகலங்கி

மரித்துக்கூட போகலாம் என்றும் நம் தேவன் நினைத்திருக்க வாய்ப்புண்டு.

**79. இயேசு எத்தனை முறை பரலோகத்திற்கு ஏறிச் சென்றார்? லூக். 23:42ல் ஒருமுறை; யோ. 20:17ல் ஒருமுறை; அப்.1ல் ஒருமுறை. இது உண்மையா? பொய்த்தகவலா?**

★ லூக். 23:42ல் போனது பரலோகமல்ல; தேவ பிரசன்னம் இருக்கும் பரதீசு. இது ஆவி-ஆத்மாவோடு மட்டும்தான்; அங்கிருந்து அவர் தேவனால், நம் பாவங்களினிமித்தம் பாதாளம் தள்ளப்பட்டார். சரீரம் கல்லறையிலே இருந்தது. உயிர்த்தெழுந்தபின், பிரதான ஆசாரியராக, தமது விலையேறப் பெற்ற இரத்தத்தோடு, பிதாவாகிய தேவன் இருக்கும் மகா பரிசுத்த ஸ்தலம் போய், நமக்கு பாவ நிவாரணம் முடித்துவிட்டு திரும்பி வந்ததுதான் யோ. 20:17ல். 40ம் நாள் ஒரேயடியாக, உயிர்த்தெழுந்த இயேசு மனித ரூபத்தில் பரலோகம் போய் நமக்காய் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். இதுதான் அப். 1. இவைகளெல்லாம் உண்மைகள், தேவையானவைகள். பொய்யல்ல.

**80. இயேசு பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தேவனின் வலது பாரிசத்தில் உட்கார்ந்ததாக மாற்கு எழுதி உள்ளரே, அவருக்கு எப்படி தெரியும்? அவர்போய் பார்த்துவிட்டு வந்தாரா? இப்படியொரு வாக்குமூலம் இயேசு கொடுத்தால்கூட பரவாயில்லை! ஏன் இப்படி?**

★ நோவா பேழை கட்டும்போது மோசே கூட இருந்தாரா? எப்படி நீளம் அகலமெல்லாம் தெரியும்? ஆபேல் - காயீன் பலி முறைகளையும், கொலையையும் மோசே கண்டாரா? ஏதேன் தோட்ட விவரங்கள் எல்லாம் மோசேக்கு எப்படித் தெரியும்? படைப்பை எப்படி எழுத முடியும்? படைப்பின்போது கூட இருந்தாரா? இப்படி ஏராளமான கேள்விகளை கேட்கலாம். எல்லாவற்றிற்கும் ஒரே பதில் 2 தீமோ. 3:16, 17 தான். தேவ ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டவைகள் எல்லாமே, எழுதியவர் கண்டு, அறிந்து, புரிந்து எழுத வேண்டுமென்று கட்டாயமில்லை. தானியேல் தான் கண்ட தரிசனங்கள் தனக்கே புரியாமல் வியாதிப்பட்டிருந்தான் (தானி. 8:26, 27). தேவனும் அவைகளை முத்திரை போட சொன்னார் (தானி. 12:14).

**81. ஒரு நட்சத்திரம் 3 சாஸ்திரிகளை வழிகாட்டி கூட்டிச் சென்றது என்று எழுதப்பட்டுள்ளது, இயற்கை சட்டங்களுக்கு எதிரானது இல்லையா? தற்கால வானவியல் ஆராய்ச்சி ஏற்றுக் கொள்ளுமா?**

★ தற்கால வானவியல் ஆராய்ச்சிக்கும் முதலாம் நூற்றாண்டு ஆராய்ச்சிக்கும் பலதரப்பட்ட வித்தியாசங்கள் உண்டு. அறிவு பெருகிப் போன காலம் தற்காலம். இங்கு குறிப்பிட்ட நட்சத்திரம், இயேசு பிறக்கும்போது படைக்கப்பட்டது அல்ல என்றும், ஆதியிலேயே (Dateless past) படைக்கப்பட்ட தன் ஒளி, பூமிக்கு அன்றைக்கு வந்ததை அந்த சாஸ்திரிகள் கண்டிருக்கலாமென்றும் யூகிக்கலாம். தினந்தோறும் புதுப்புது நட்சத்திர ஒளிகள் வானில் தோன்றுகின்றன என்பது உண்மை. இப்படியாய்த் தோன்றியது அவர்களுக்கு வழிகாட்டியது என்பதை, அந்த ஞானிகளின் அனுபவத்தை வைத்துதான் மத்தேயு எழுதியிருக்கிறாரே ஒழிய, அவர் கண்டதாக எழுதவில்லை. "... இதோ, அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்கு மேல் வந்து நிற்கும்வரைக்கும் அவர்களுக்கு முன்சென்றது. அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டபோது, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்" (மத். 2: 9, 10) என்ற வசனத்தை தியானித்தால் எல்லாம் புரியும்.

**82. இயேசுவின் போதனையின் மையக் கருத்து, பழைய ஏற்பாட்டு கொள்கைக்கு எதிரான முக்கடவுள் கொள்கை என்றால், அதைப்பற்றி இயேசு ஏன் விளக்கவில்லை? அதனை பவுல் விளக்கும்படி விட்டு வைத்தது ஏன்?**

★ பழைய ஏற்பாடோ, புதிய ஏற்பாடோ, இயேசுவின் போதனையோ எதுவானாலும், முக்கடவுள் கொள்கையுடையது அல்ல. கிறிஸ்தவத்தின் கொள்கை ஓரிறைக் கொள்கைதான். 3 கடவுள் என்று பவுல் எங்குமே விளக்கவில்லை. கருப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டு பார்த்தால் அப்படித்தான் தெரியும். "பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு" (1 கொரி. 8:6); "அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய்..." (1 தீமோ. 6: 6,17) என்றெல்லாம் எழுதியவர்தானே பவுலே ஒழிய, முக்கடவுள் கொள்கையை யாருமே போதிக்கவுமில்லை; விளக்குவுமில்லை.

**83. இயேசு மரித்து 3 தினங்கள் நரகத்திலிருந்தார் என்பது கிறிஸ்தவர்கள் நம்பிக்கை. ஆனால் லூக். 23:43ன்படி பரதீசில் அன்று இருப்பதாக சொல்கிறார். உண்மையில் இயேசு எங்கு சென்றார்? ஏன் இந்த குளறுபடி?**

★ மரித்து 3 தினங்கள் நரகத்திலல்ல; பாதாளத்தில் இருந்தார் என்பதே கிறிஸ்தவர்கள் நம்பிக்கை (see அப். 2:30,31; சங். 16:10). ஒவ்வொரு

மனிதனும் மரித்தபின் அவனது ஆவி, பிர. 12:7ன்படி தேவனிடம் போகும். தேவபிரசன்னம் இருக்குமிடமே பரதீசு. அப்போது அவர், அந்த ஆவி-ஆத்மாவாகிய உள்ளான மனுஷனை பரதீசில் இளைப்பாறப் பண்ணவோ, பாதாளத்தில் வேதனைப்படவோ நியாயந்தீர்ப்பார். அப்படித்தான் நம் பாவங்களை சுமந்து மரித்த இயேசுவின் ஆவி-ஆத்மா, பரதீசுக்குப் போய், நம் பாவங்களினிமித்தம் அங்கிருந்து பாதாளம் தள்ளப்பட்டது; இரட்சிக்கப்பட்ட கள்ளனோ பரதீசிலே இருந்தான். இங்கே குளறுபடி ஏதுமில்லை.

**84. எல்லாக் குழந்தைகளும் பாவிகளாகவே பிறக்கின்றன என்ற கொள்கையில் இயேசுவுக்கு நம்பிக்கை இருந்தால், ஒரு மனிதன் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவன் அதில் நுழைவதில்லை என்று ஏன் கூறினார்? (மாற். 10:14-15)**

★ மாற். 10:15ல் கூறப்படுவது, சிறுபிள்ளைகளின் கள்ளங்கபடமில்லாத, தூய்மையான, பரிசுத்த மனநிலையைத்தான் சொல்லப்படுகிறதே ஒழிய அவர்களுடைய பிறப்பின் நிலை - status - பற்றி சொல்லப்படவில்லை. சிறு பிள்ளைகளின் உள்ளம் போல வசனத்தை ஏற்றுக் கொண்டால், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கலாம் என்பதுதான் போதனை. மற்றப்படி, சிறு பிள்ளைகள், பாவி ஆதாமின் ஜாதியில் பிறந்த பாவிகள்தான் என்பதில் மாற்றுக் கருத்தே இல்லை. இந்த நிலை பிள்ளைகளுக்கும் தெரியாது. Age of accountability வரும்போதுதான் பாவ ஜாதி என்ற உணர்வோடு, பாவ மன்னிப்பு பெற்று இரட்சிக்கப்படுவார்கள். அதுவரை மரிக்கும் எந்த பிள்ளையும் அறியாப்பிள்ளைதான் (அப். 17:30); பரலோகம் நிச்சயம் உண்டு.

**85. பவுல் கூற்றுப்படி இரட்சிப்புப் பெற மனிதன் தாமாகவே எதையும் செய்ய வேண்டியதில்லை என்றால், கற்பனைகளைக் கைக்கொண்டு நடக்க வேண்டியதன் அவசியமென்ன? (ரோ. 3:24, 28; 9:11; மத். 19:16-20; மாற். 10 : 17-19)**

★ ரோ. 10 :9, 10 மற்றும் யோ. 3:3,5ன்படி இரட்சிப்புக்குள் வருபவன், இயேசுவின் இரத்தத்தால் என் பாவம் மன்னிக்கப்பட்டது என்ற விசுவாசம் மட்டும் இருந்தால் போதும் இரட்சிக்கப்படுகிறான்; கிறிஸ்தவனாகிறான் (எபே. 2:8). இப்படி பெற்ற இரட்சிப்பில் நிலைத்திருந்தால்தான் இறுதி இரட்சிப்பு; அதாவது வருகையிலே எடுத்துக் கொள்ளப்படுதல் (மத். 24:13). அப்படியாய், பெற்ற ஆரம்ப

இரட்சிப்பில் நிலைத்திருக்க தேவைதான் தேவனுடைய வார்த்தைகள்; கற்பனைகள். அதன்படி நடந்து நமது இரட்சிப்பை தக்கவைத்துக் கொள்ள வேண்டும். அவனவனுடைய கிரியைகளுக்கேற்ற பலன்தான் நியாயத்தீர்ப்பில் உண்டு (வெளி. 22:12; 2 கொரி. 5:10).

86. **பாவங்களில் மன்னிக்கக்கூடிய பாவங்கள், மன்னிக்கக்கூடாத பாவங்கள் என்று வேறுபாடு உண்டா? அதை எப்படி பிரித்தறிவது? ஆவியானவருக்கு எதிரான பாவம் மன்னிக்கப்படாது என்றால், பாவப் பரிகாரம் எல்லாப் பாவங்களையும் மன்னித்துவிடும் என்பது பொய்யா?**

★ 1 யோ 5:16ன்படி நரகத்திற்கு போகும் பாவங்கள் உண்டு. உலகிலுள்ள எல்லாப் பாவமும் பாவப் பரிகாரத்தால் மன்னிப்பு உண்டு; நரகம் கிடையாது. எந்த பாவம் நரகம் கொண்டு போகும்? யோ. 16:8,9ஐ வாசித்தால், இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள் என்று ஆவியானவர் சொல்லியும், மனம் மாறாமல், இரட்சிக்கப்படாமல் இருக்கும் - இயேசுவை ஏற்றுக் கொள்ளாத பாவத்தை கடைசிவரை செய்யும் - மனிதனுக்கு மன்னிப்பே இல்லை; அவன் இயேசுவை ஏற்றுக் கொண்டால் மாத்திரமே, ஏற்றுக் கொள்ளாமல் இருந்த பாவத்திற்கான மன்னிப்பு உண்டு. இந்தப் பாவம்தான் மன்னிக்கக் கூடாத பாவம். மற்ற எல்லா பாவங்களும் மனதிலே ஒரு சிறு மாற்றம் வந்து மனதுருகி இயேசுவை நோக்கினாலே, பேதுருவைப்போல, அவருடைய இரத்தத்தினாலே கழுவப்படுகின்றன. ஆக, உலகத்திலே பெரிய பாவம், மன்னிக்கக் கூடாத பாவம், ஆவியானவருக்கு விரோதமான பாவம், இயேசுவை ஏற்றக் கொள்ளாததுதான். இந்தப் பாவம் செய்தவன் எவ்வளவு பெரிய சன்மார்க்கனாயிருந்தாலும், அதனால், இவன் பாவம் மன்னிக்கப்படாது; அவன் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக் கொண்டாலொழிய!

87. **இயேசுவின் மரண பாவ விமோசனம், அவரது காலம் வரையிலான மனிதர்களின் பாவங்களுக்கு மட்டுமே! இல்லை... இல்லை... அவரது காலத்துக்குப் பிந்திய பாவங்களுக்கு மன்னிக்கத்தக்கது என்றால், எபி. 10:26ல் ஏன் முரண்பாடாய் இருக்கிறது? அதாவது, இயேசுவின் இரத்தம் சிந்துதல் முந்திய காலப் பாவங்களுக்கே என்றும், அவரை 2ம் முறை சிலுவையில் அறைய முடியாது என்றும் சொல்கிறதே!**

★ இயேசுவின் இரத்தம் சிந்துதல் சகல பாவங்களுக்காகவும்தான். (1 யோ. 1:7; மத். 26:28; யோ. 1:29). இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய முக்கால பாவங்களுக்காகத்தான். சத்தியத்தை அறிந்தவன், பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்று இரட்சிக்கப்பட்டவன், மனப்பூர்வமாய் தொடர்ந்து பாவம் செய்து கொண்டே இருந்தால், அவன் தன் பாவங்களுக்காய் சிந்தப்பட்ட பலியை உதாசீனப்படுத்துகிறான். அப்படிப்பட்டவனுக்காக இன்னொரு பலி உலகில் இல்லை என்று தான் பவுல் எழுதுகிறாரே ஒழிய வேறல்ல.

**88. இயேசு சீடர்களை பிராத்தனை பண்ண சொல்கிறார் (மத். 6:9-15). இயேசுவின் பாவ பரிகாரம், எல்லா பாவங்களிலிருந்தும் விமோசனம் தருமானால், மேலும் பிராத்திக்க வேண்டிய தேவை என்ன?**

★ பிராத்தனை என்பது பாவ மன்னிப்பிற்காக மட்டும் ஜெபிப்பது அல்ல. ஜெபம் என்றால் தேவனோடு பேசுவது. அவர் அப்பா; நாம் பிள்ளை. அவரைப் புகழலாம்; துதிக்கலாம்; நமது தேவைகளை கேட்கலாம்; நமது குறைகளை நிறைவாக்க வேண்டலாம்; மற்றவர்களுக்காய் ஜெபிக்கலாம்; பிசாசை எதிர்க்க வல்லமையை அதிகமதிகமாய் பெற்றுக் கொள்ளலாம்; வசன வெளிச்சங்களைப் பெறலாம். இப்படி பல காரியங்களுக்காகப் பிராத்தனை. அதிலே ஒன்றுதான் பாவ மன்னிப்புக்காய், பாவ அறிக்கை செய்து, இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படுதல். எல்லாமே நமக்கு தேவைதான்; இவைகள் அவரோடு பேசினால்தான்; ஜெபித்தால்தான் கிடைக்கும். பாவ பரிகாரம் விசுவாச ஜெபத்தால்தான் கிடைக்கும்.

**89. இயேசுவின் மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் விசுவாசித்தால் மட்டுமே இரட்சிப்பு கிடைக்குமென்றால் இயேசுவின் மலைப்பிரசங்கம், அவரது பிராத்தனை போன்றவற்றில் இதைக் குறித்து ஏதுமில்லையே ஏன்?**

★ மறுபடியும் பிறக்க - இரட்சிக்கப்பட - கிறிஸ்தவனாக மாற இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் அடிப்படை. அவரது மலைப் பிரசங்கம், ஜெபம் எல்லாமே, மேற்கொண்டு கிறிஸ்தவனாய் வளர கொடுக்கும் ஊக்கமும் ஆக்கமுமாகும். அதிலே பின்மாற்றமாகிவிட்டால், பாவத்தில் வீழ்ந்துவிட்டால் பாவ நிவாரணம் இயேசுவின் இரத்தம்தான். "எங்கள் பாவங்களை மன்னியும்" என்று ஜெபிக்கும்போதே, இயேசுவின் இரத்தத்தின் விசுவாசம்தான் வெளிப்படுகிறது.

**90. பாவப் பரிகாரக் கொள்கைமூலமே இரட்சிப்பு என்றால், சுவிசேஷங்களில் இயேசு கிறிஸ்துவின் நற்பணிகள்தான் அதிகம் இருக்கின்றனவே, அவைகள் தேவையல்ல அல்லவா?**

★ இயேசுவின் போதனை, பிரித்தெடுக்கப்பட்ட - இரட்சிக்கப்பட்ட - விருத்தசேதனம் பண்ணப்பட்ட - யேகோவாவின் பிள்ளைகளுக்கு என்பதால், அவர்கள் பெற்ற இரட்சிப்பில் நிலைத்திருந்து, வளர்ந்து, இறுதி இரட்சிப்பை பெற (மத். 23:13) இயேசுவின் நற்பணி உபதேசங்கள் நிச்சயம் தேவைதானே! ஆரம்ப இரட்சிப்புக்கு பாவப்பரிகாரக் கொள்கை மிக முக்கியம். இறுதிவரை நம்மை விழுந்துவிடாமல் பாதுகாக்க இந்த கொள்கை மிக மிக மிக முக்கியம். இதுவே கிருபையாய் நம்மை, நற்காரியங்களில் வழிநடத்தும்.

**91. எலியா தீர்க்கதரிசியின் 2ம் வருகை, யோவான் ஸ்நானனால் நிறைவேற்றப்படுமானால், மேசியா என்ற இயேசுவின் 2ம் வருகையும் மற்றொருவரால் நிறைவேற்ற முடியாதா? வானம் சென்ற எலியா திரும்பி வந்ததாக ஏதாவது சான்று உண்டா?**

★ யோவான் ஸ்நானனால் ஆயத்தம் பண்ணப்பட்டது இயேசுவின் முதலாம் வருகை. பிரசங்கிக்கப்பட்ட பரலோக ராஜ்யத்தை இஸ்ரவேலர் ஏற்றுக் கொண்டிருந்தால், எலியா, யோவான் ஸ்நானன்தான் (மத். 11:14). இஸ்ரவேலர் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே எலியா வரவில்லை. யோவான் ஸ்நானன் பெயரில் எலியா வந்திருந்தால், இயேசு மரிக்கமாட்டார்; உலகை ஆளுகை செய்வார்; நியாயத்தீர்ப்பு நடக்கும் (மல். 4:5,6). தான் எலியா அல்ல என்று அவனே சொல்கிறான் (யோ. 1:21). எலியாவின் வல்லமை அவனிடம் இருந்தது என்பது உண்மை (மத். 17:10-13). எனவே, இயேசுவின் 2ம் வருகை நீங்கள் நினைத்திருப்பதுபோல, உங்களின் ஒரு முஸ்லீம் பிரிவின் தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் மூலம் நடக்காது; நடக்கவும் இல்லை. இயேசு வருவேன் என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்; நிச்சயம் வருவார். அவரால்தான் நடக்கும்; அதுவும் மல். 4:5ன்படி எலியாவின் ஆயத்தத்தால்தான்.

**92. மாற். 11:14-20ல் முதல் நாள் சபிக்கப்பட்ட அத்திமரம் மறுநாள் காலையிலே பட்டுப் போனதாய் சீஷர்கள் கண்டார்கள். ஆனால், மத். 21:19,20ல் அன்றைக்கே பட்டுப் போனதாய் சீஷர்கள் கண்டார்கள். ஏன் இந்த குளறுபடி?**

★ இரண்டும் வெவ்வேறு நிகழ்ச்சிகள் என்று வியாக்கியானம் பண்ணுவோரும் உண்டு. "இல்லை ஒரே நிகழ்ச்சிதான். மத்தேயு அதை தொடர்ச்சியாய் எழுதுகிறார்" என்று சிலர் சொல்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரை, மாற்கில் அத்திமரத்தை சபித்தபின், எருசலேம் தேவாலயம் போய்விட்டு, மறுநாள் காலையில் வரும்போது பட்டுப்போனதைக் கண்டதாக உள்ளது; மத்தேயுவில் பட்டுப்போனபின் தான் தேவாலயம் போனதாக உள்ளது. ஆனாலும் மத். 21:19,20,21 ஆகிய மூன்று வசனங்களையும் தொடர்ச்சியாகவும் எடுத்துக் கொள்ள தேவையில்லை. மேலும் மத்தேயுவில் சீஷர்கள் பட்டுப் போனதை சொல்கிறார்கள். மாற்கில் பேதுரு சொல்கிறார். எனவே இரண்டும் வெவ்வேறு நிகழ்ச்சிகள் என்றும் எடுத்துக் கொள்ளலாம். கருத்தில், நிகழ்ச்சியில் குளறுபடி ஏதுமில்லை. விசுவாசத்தை வளர்க்கவே இந்த நிகழ்ச்சி பயன்படுகிறது.

❖ ❖ ❖

**"End Time Deliverence Ministry Trust"**

Savings Bank Account no : 10372388517

State Bank of India, Chennai - 600 054.

(IFS Code : SBIN0004675)

(வங்கியில் அனுப்பிய உடனே எங்களுக்குத் தெரிவியுங்கள்)

# 8. குரானில் குளறுபடிகள், முரண்பாடுகள், பொய்த்தகவல்கள்

குரான் 4:82 சொல்கின்றது... **"இது அல்லா அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் இதில் ஏராளமான முரண்பாடுகளை கண்டிருப்பார்கள்."**

முரண்பாடுகள், தவறுகள், குளறுபடிகள் போன்றவை இருப்பதை சுட்டிக்காட்டி இந்த செய்தியை நான் எழுதவில்லை.

40 எழுத்தாளர்களால், பலதரப்பட்ட காலக்கட்டங்களில், பல்வேறு நாகரீகம், பண்பாடு, ஞானம், அறிவு கொண்டு, ஆவியானவரின் உந்துதலோடு எழுதப்பட்ட வேதத்திலே முரண்பாடுகள் உண்டு என்று முஸ்லீம் சகோதரர்கள் சொல்லி, அந்த 66 புத்தகங்களும் தேவன் தந்த வேதமல்ல என்று வாதிடுவதால்தான் இதை எழுதுகிறேன்.

குரான் என்பது ஒரே புத்தகம்; முகமது தான் ஆசிரியர். அவர் சொல்ல அவரது சீஷர்கள் மனப்பாடம் பண்ணி பின் எழுதிய, அல்லது அப்போதே எழுதிய வார்த்தைகள். பேரீச்சைப்பட்டை, வெண்மையான கல்பலகை, பதனிடப்பட்ட தோல், கால்நடைகளின் அகலமான எலும்பு ஆகியவற்றில் இருந்தன என்றும், அவைகள் தான் தொகுக்கப்பட்டு குரான் என்று வந்தது என்றும் ஆரம்பத்திலேயே பார்த்தோம்.

குரானின் சத்தியம் சரியோ தவறோ, அதிலுள்ள வார்த்தைகள், கருத்துகள் முரண்பாடாய், குளறுபடியாய், தவறுதலாய் உள்ளது என்பதையே முக்கியப்படுத்துகிறேன். கருத்துக்களே மாறினால், என்ன சொல்வது? காபி பண்ணும்போது, பைபிளில் சில எண்கள் மாறியது போல குரானிலும் இருக்கலாம்; ஆனால் எண்ணங்கள் - சித்தங்கள் - மாறக் கூடாதல்லவா?

## குரானிலுள்ள ஒரு சிலவற்றை மட்டும் பார்ப்போம்:

1. **<u>குடிப்பழக்கம் பற்றி</u> : மது உற்பத்தி செய்வதற்கு குரான் அனுமதிக்கிறது; நல்ல காரியங்களுக்கு மதுவை பயன்படுத்தலாமாம். (குரா. 16:64-69)**

   மது குடிக்கலாமாம்; ஆனால் குடித்துவிட்டு தொழக்கூடாதாம் (குரா. 4:43). மதுவிலே கேடும் உண்டாம்; பயனும் உண்டாம்

(குரா. 2:219). திடீரென்று மது அருவருப்பானது என்றும் நல்ல வேடம் போடுகிறது குரான். (குரா. 5:90).

2. **அவிசுவாசிகளை தவறான வழிக்கு கொண்டு போவது அல்லா என்று குரா. 2:6; 17:97; 18:57 சொல்கின்றது.**

"அநீதி இழைத்தவர்களின் உள்ளங்கள் புரிந்து கொள்ளாதவாறு அவற்றின் மீது மூடிகளையும், செவிகளில் அடைப்பையும் நாம் ஏற்படுத்தினோம்" (குரா. 18:57).

அதே நேரம், தவறான வழிக்கு கொண்டு போவது பிசாசு என்றும் சொல்கின்றது. (குரா. 7:16-18; 15:39; 19:83). ஏன் இந்த முரண்பாடு?

3. **விருத்தசேதனம் பண்ண வேண்டுமென்று அல்லா கட்டளையிட்டதாக வசனமே இல்லை.**

மனிதனை அல்லா படைத்தாராம் (குரா. 40:64; 64:3); பிசாசுதான் அல்லா வடிவமைத்ததை மாற்றினானாம்.

"மனிதனை மிக அழகான வடிவமைப்பில் திட்டமாக படைத்தோம்" (குரா. 95:4).

"இன்னும் அவர்களைத் திண்ணமாக அவர்கள் மாற்றிக் கொள்வார்கள் என்றும் சைத்தான் கூறினான் (குரா. 4:119). ("I will order cutting work/ to slit)

"நேரான வழியைச் சார்ந்தவரான இப்ராஹீமுடைய மார்க்கத்தைப் பின்பற்றுங்கள்" என்று (குரா. 3:95) அல்லா இப்படிச் சொன்னதால், இப்ராஹீம் செய்தது போல் விருத்தசேதனம் செய்கின்றோம் என்கிறார்கள் முஸ்லீம்கள். என்னே அவர்களின் சிந்தனைகள்! ஆபிரகாமே, பிசாசு சொல்லியபடிதான், அல்லா படைத்த அழகான வடிவமைப்பை விருத்தசேதனம் மூலம் கெடுத்தானா? பதிலுண்டா உங்களிடம்... ஆபிரகாம் செய்த எல்லாக் காரியத்தையும் செய்வீர்களா? ஆபிரகாம் விருத்தசேதனம் பண்ணினான் என்று குரானில் வசனம் உண்டா?

4. **பாவம் செய்த ஆதாம் மன்னிக்கப்பட்டான் என்று குரா. 20:122 சொல்கின்றது. ஆனால் சொர்க்கத்தை விட்டு விரட்டப்பட்டான் என்று குரா. 20:123 சொல்கின்றது. முரண்பாடு ஏன்?**

மன்னிக்கப்பட்டவன் ஏன் விரட்டப்பட வேண்டும்?

5. **அல்லா மனிதனை எப்படிப் படைத்தார்?**
இரத்தக் கட்டியிலிருந்து (குரா. 96:2) ("கருவுள்ள சினைமுட்டை" - தமிழில்) களிமண்ணிலிருந்து (குரா. 15:26).

தூசிலிருந்து (குரா. 3:59)
விந்துத் துளியிலிருந்து (குரா. 16:4; 80:19)
ஒன்றுமில்லாமையிலிருந்து (குரா. 19:67; 52:35)
கலப்பு விந்துத் துளியிலிருந்து (குரா. 76:1)

**- ஏனிந்த குளறுபடிகள்?**

6. **மரியாள் கருவுறும் போது பேசிய தூதர் எத்தனை பேர்?**
ஒருவர் (குரா. 19:16-19); பலர் (குரா. 3:42, 45), ஏனிந்த முரண்பாடு.

7. **அல்லாவின் ஒருநாள்**
1000 வருஷத்துக்கு சமம் (குரா. 22:47; 32:5); 50,000 வருஷம் (குரா. 70:4) ஏன் இந்த குளறுபடி?

8. **செங்கடலிலே பார்வோன் அழிக்கப்பட்டானா?**
ஆம் என்று குரா. 17:102, 103; 28:40; 43:55ம், இல்லை என்று குரா. 10:90-92ம் சொல்கிறது. "அவனையும் அவனுடைய படையினரையும் நாம் தண்டித்தோம். பிறகு அவர்களைக் கடலில் நாம் எறிந்தோம்." (குரா. 28:40)

"மூழ்குதல் வந்தடைந்த போது... நான் முஸ்லீம் என்று கூறினான். எனவே இன்று உன் உடலை உனக்குப் பின் வருவோருக்கு படிப்பினையாய் இருப்பதற்காக நாம் பாதுகாப்போம்." (குரா. 10:90, 92) **இது என்ன கதையா? புராணமா?**

9. **முதலில் படைத்தது எது?**
வானம் என்று குரா. 79: 27-30ம், பூமி என்று குரா. 2:29; 41 : 9-12ம் சொல்கின்றது. இதுவா வேதம்?

10. **புனித மாதங்கள் எத்தனை?**
நான்கு (குரா. 9:36, 5); ஒன்று (குரா. 5:2, 97; 2: 194, 217). எது உண்மை? ஏன் இந்த குளறுபடி?

11. **பார்வோன் எகிப்தில் சிறுவர்களை கொன்றது எப்போது?**
மோசஸ் குழந்தையாயிருக்கும்போது (குரா. 20:39); மோசஸ் பார்வோனுக்கு முன், தீர்க்கதரிசியாக நிற்கும் போது (குரா. 40 : 24, 25) முன்னுக்கு பின் முரணாயிருப்பது வேதமா?

**12. முகமதுக்கு வேதத்தை இறக்கியது யார்?**

தேவதூதன் (குரா. 2:97); ரூஹுல் குதூஸ் - பரிசுத்த ஆவி (குரா. 16:102). இதுகூட சரியாய்த் தெரியவில்லையே.

**13. சொர்க்கம் யாருக்கு உண்டு?**

முஸ்லீம்களுக்கு மட்டுமே. (குரா. 3:85, 19). ஆனால் கிறிஸ்தவர்கள், யூதர்கள் தேவனையும் நியாயத்தீர்ப்பையும் நம்பி நல்லறம் செய்தால் சொர்க்கம் உண்டாம் (குரா. 5:69; 2 : 62). எது சரி?

**14. முகமதுடன் போரில் உதவியவர்கள்**

3000 பேர் (குரா. 3:124); 1000 பேர் (குரா. 8:9, 10). ஏன் இந்த வித்தியாசம்? இரண்டு போருமே ஒரே பத்ரு போர் தான் (see குரா. 3:123 & P. 268 of Coimbatore Tamil Publication)

**15. அல்லா எல்லோரையும் மன்னிப்பாரா?**

ஆம் என்கிறது குரா. 14:110; 39:153. ஆனால் சிலரை மன்னிக்கவே மாட்டாராம். (குரா. 4:48, 116, 137) இவர் எப்படி கடவுளாவார்?

**16. வானமும் பூமியும் எத்தனை நாளில் சிருஷ்டிக்கப்பட்டது?**

6 நாளில் (குரா. 7:54; 10:3); 8 நாளில் (குரா. 41: 9-12); ஏனிந்த குளறுபடி?

**17. முதல் முஸ்லீம் யார்?**

ஆபிரகாம் (குரா. 2:132); மோசே (குரா. 7:143); முகமது (குரா. 39:12); ஆதாம் (குரா. 3:33); எகிப்தியர் (குரா. 26:51). ஏன் தெளிவில்லை?

**18. நோவாவின் ஒரு மகன் பாதுகாக்கப்படவில்லையா?**

**ஆம்.** (குரா. 11:42, 43) - அவன் வெள்ளத்தில் மரித்தான்.

**இல்லை.** குடும்பத்திலுள்ள அனைவரும் பாதுகாக்கப்பட்டனர் (குரா. 21:76; 37:75-77). எது உண்மை?

**19. பார்வோனின் ஆட்கள் மூசாவை நம்பினார்களா?**

நம்பினார்கள் (குரா. 7 : 121, 122)

ஒரு சிறு பகுதியினரைத்தவிர, மற்றவர்கள் நம்பவில்லை (குரா. 10:83) ஏனிந்த வேறுபாடு?

**20. யாரை வணங்க வேண்டும்?**

அல்லாவை மட்டுமே (குரா. 41:37)

அல்லா படைத்த ஆதாமையும் வணங்க வேண்டும் (குரா. 2:34; 15:28-31)

இப்படிப்பட்ட காரியத்தால் அல்லாவும், ஆதாமும் சமமாகலாமா? (குரா. 4:48, 116; 31:13)

**21. பலி செலுத்துதல், பலிபீடம் எல்லாம் யாருக்கு?**

அல்லாவுக்காக (குரா. 2:173, 196; 5:3; 6:145; 16:115)

"ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாவுக்காக நீங்கள் பூர்த்தி செய்யுங்கள்; பூர்த்தி செய்ய முடியவில்லை என்றால், ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற பலிப் பிராணிகளில் உங்களுக்கு சாத்தியமானது அதற்குப் பகரமாகும். பலிப்பிராணி தன் இடத்தை அடைந்து பலி கொடுக்கப்படும் வரை நீங்கள் உங்கள் தலைமுடிகளை மழிக்காதீர்கள்." (குரா. 2:196). ஆனால், பலி செலுத்துதல் சாத்தான் செயல் என்று குரா. 5:90 சொல்கின்றது. பலி செலுத்துவதிலே சரியான தெளிவை சொல்லாத குரான் வேதமாகுமா?

**22. மனைவிகளை கணவன் நேர்மையாய் நடத்த முடியுமா?**

முடியாதாம். குரா. 4:129 சொல்கின்றது.

நேர்மையாய் நடத்த வேண்டுமென்றால் 4 மனைவிகள் இருக்க வேண்டுமாம் (குரா. 4:3). இது விபரீதமான கருத்து அல்லவா! இதுவா வேதம்?

**23. யோசேப்பு - போர்த்திபார் விஷயத்தில்,**

மோசமான செயலைக் காட்டி (சட்டையின் பின்புறம் கிழிப்பு - குரா. 12:26, 27) குற்றமில்லை என்று முடிவாகியும், யோசேப்புக்கு ஜெயில் ஏன்? (குரா. 12:35). குற்றவாளி என்று சொல்லி ஜெயிலில் போட்டால் கூட பரவாயில்லையே!

**24. பழிவாங்குவதும், நன்மை செய்வதும்**

இரண்டுமே அனுமதிக்கிறது என்று சொல்வது குரான். (குரா. 2:177, 178). ஐயகோ!

**25. யாருக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்?**

அல்லாவின் வார்த்தைக்கும் கீழ்ப்படிய வேண்டுமாம்; முகமதுவின் வார்த்தைக்கும் கீழ்ப்படிய வேண்டுமாம் (குரா. 3:31, 132; 4:80) (முகமதுவின் வார்த்தை ஹத்தீஸில் தானே உண்டு). அப்படியானால், முகமதுவின் வார்த்தை, அல்லாவின் வார்த்தைக்கு சமமானதா?

**26. எத்தனை பெண்களை மணக்கலாம்?**

Maximum நான்கு. (குரான் 4:3). ஆனால் முகமதுக்கு மட்டும் 11 (Sahib Buhari Vol. I/Book 5). ஏன் இந்த வேறுபாடு? அவரும்

மனிதன் தானே. அது சரியென்றால் தற்கால எல்லா முஸ்லீம் குருக்களும் 11 மனைவிகளை வைத்துக் கொள்ளலாமா? இல்லையென்றால், குரான், முகமதுவால், முகமதுக்காகவே எழுதப்பட்டது என்று கூறலாமா?

27. **அல்லாவுக்கு மனைவியில்லை. எனவே அவருக்கு மகனுமில்லை.** (குரா. 6:101; 39:4)

அப்படியானால், அதே அல்லா, எப்படி, புருஷனின்றி, ஈசாவை மரியாளிடம் உண்டாக்கினார்? (குரா. 9:20). மனைவியில்லாமலே பிள்ளையை - மகனை - உருவாக்க முடியுமல்லவா! சிந்தியுங்கள்.

28. **அண்டசராசரங்களையும் படைத்த சிருஷ்டிகர் அல்லா, சிருஷ்டிகளின் மேல் ஆணையிட்டாரானால், அவர் சிருஷ்டி களுக்கும் கீழானவராய் ஆகிவிடுகிறார் அல்லவா.** (குரா. 93, 103, 92, 91, 89, 86, 85)

நம் தேவன், ஆபிரகாமுக்கு யார்மீது ஆணையிட்டார் தெரியுமா? "ஆபிரகாமுக்கு தேவன் வாக்குப் பண்ணின போது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாத படியினாலே, தமது பேரிலே தானே ஆணையிட்டு." (எபி. 6:13).

29. **மறுரூபமாவது குரானில் இல்லை. அப்படியானால், இந்த அழிந்து போகும் சரீரம் எப்படி மேலே போக முடியும்?**

(எபி. 12:1; ரோமர் 12:1,2; 1 யோ. 3:2; 1 கொரி. 15:51)

30. **ஆதாமை வணங்காததால், சொர்க்கத்திலிருந்து விரட்டப்பட்ட சாத்தான் (இப்லீஸ்) (குரா. 15:34) எப்படி சொர்க்கத்திலிருந்த ஆதாம்-ஏவாளை கெடுக்க முடியும்?**

"இங்கிருந்து நீ வெளியேறிவிடு. நிச்சயமாய் நீ விரட்டப்பட்டவனாய் இருக்கிறாய் என்று அல்லா கூறுகிறான்." (குரா. 15:34)

"சைத்தான் அவர்கள் இருவரையும் அதிலிருந்து பிறழச் செய்து." (குரா. 2:36)

31. **ஆதாமையும் ஏவாளையும் அப்புறப்படுத்தியது சாத்தானா? அல்லாவா?**

(குரா. 2:36) (குரா. 20:123). ஏன் குரான் குழப்புகிறது?

32. **ஆதாம் படைக்கப்பட்டது சொர்க்கத்தில் (குரா. 2:35); இல்லை பூமியில் (குரா. 2:30)**

ஏன் குரான் குழப்புகிறது?

**33. விபச்சாரம் செய்தாலே 100 கசையடி என்று அல்லாவே சொல்லியிருக்க, (குரா. 24:2) அதை முகமது மாற்றினால், முகமது அல்லாவைவிட பெரியவரா?**

(புகாரி, முஸ்லீம் ஹதீஸ்களில், மணமுடித்தவர்களுக்கு மரண தண்டனையாம்; மற்றவர்களுக்கு 100 கசையடியாம்) (குரா. 4:15)

**34. அல்லாவை வணங்க திசையா?**

யூதர்களுக்கு கிப்லாவாக இருந்த எருசலேமில் பைத்துல் முகத்துஸ் ஆலயத்தை நோக்கி 17 மாதமாக தொழுத முகமதுக்கு, மக்காவிலுள்ள கிப்லாவை நோக்கி வணங்க அல்லா கட்டளையிட்டாரா? (குரா. 2:142-150) ஏன்? எருசலேம் திசையை நோக்கி தொழ கட்டளை யார் ஏற்பாடு? அதை அல்லா சொன்னாரென்பது உண்மையா அல்லது இப்போ காட்டிய மெக்கா திசையை அல்லா சொன்னாரென்பது உண்மையா? ஏனிந்த மாற்றம்? இந்த திசை வழிபாடு மூடப்பழக்கத்தின் காரியமல்லவா?

**35. குரா. 14:64-ன்படி, பாவம் செய்தவன் மட்டும் அல்லாவிடம் மன்னிப்பு கேட்டு பயனில்லை;**

முகமதுவும் சேர்ந்து கேட்டால் தான் மன்னிப்பாம். அப்படியானால், முகமது இல்லாத இன்றைய தேதியில் மன்னிப்புக்கு என்ன வழி? யாருக்கும் மன்னிப்பே இல்லையா?

**36. மனிதர்கள் எல்லோருமே நரகம் போக வேண்டுமாமே** (குரா. 19:71).

அப்படியானால், நீதிமான் - நல்லவன் - யாருமில்லையா? பாவமன்னிப்பே இல்லையா? அப்படியானால் குரான் எதற்கு?

**37. அல்லா நன்மை செய்பவரானால், ஒரேயடியாக பாவிகளை, சாத்தான் தூண்டிவிட வேண்டுமென்று அல்லா ஏவுவது ஏன்? எப்படி?**

(குரா. 19:83)

**38. வேதமுடையோர் ஜிஸ்யாவரி கொடுத்துவிட்டால்,**

அவர்களோடு போராட வேண்டாமாம். (குரா. 9:29). கொள்கை - சத்தியம் - முக்கியமல்ல; பணம் தான் முக்கியம் என்று குரான் சொல்லுகிறதா?

**39. குரான் அல்லாமல் வேறே தூது செய்திகள் - ஹதீஸ்கள் உண்டாம். அவைகள் எவை? எவை?**

அவைகளுக்குள்ளேயே குளறுபடிகள் உண்டே! அவைகள் பற்றி திட்டமும் தெளிவும் முஸ்லீம்களிடம் இல்லையே. அவைகளை குரானே ஏற்கவில்லையே (குரா. 45:6)

**40. இரட்சிப்பு பற்றி குரானில் இல்லவே இல்லை.**
(எபே. 4:14-22).

**41. தேவனுக்கும் மனிதனுக்குமுள்ள உறவுமுறை பற்றி குரான் சொல்லவே இல்லை.**
அப்பா - பிள்ளை உறவு என்பதை நம்புவதே இல்லையே (ரோ. 8:15; கலா. 4:6) உறவு இல்லாத இடத்தில் அன்பு எப்படியிருக்கும்? அன்பு இல்லையேல் அவர் ஆண்டவர் அல்லவே?

**42. இஸ்மவேல் தான் பலியிடக் கொண்டு போகப்பட்டான் என்று குரானில் ஆதாரம் உண்டா?**
இல்லையே. பின்பு எப்படி பொய்யைப் பரப்பலாமா?

**43. குரா. 33:4-ன்படி தத்துப்பிள்ளைக்கு மகன் அந்தஸ்து இல்லை.**
அப்படியானால் முகமதுவின் தத்துப்பிள்ளை சையத், எப்படி மகனாவார்? குரான் சொல்வது பொய்யா?

**44. நியா, 7:5-7ல் கிதியோன் காலத்தில் நடந்த சரித்திர சம்பவத்தை, சவுல்-தாவூத் காலத்தில் நடந்ததாக ஏன் பொய்த் தகவல்?**
(குரா. 2:249)

**45. குரான் வேதந்தானா? சிந்தியுங்கள்.**

1. சொர்க்கத்தில் மது ஆறுகளாம் (குரா. 47:15); மது நிறைந்த கிண்ணங்களாம் (குரா. 78:33). முத்திரையிடப்பட்ட மதுவாம் (குரா. 83:25).
2. அங்கே ஆண்களுக்கு மதுவும் மாதுவும்; அப்படியே பெண்களுக்கும் மதுவும் ஆணும். (குரா. 37:44-50; 38:51, 52; 52:20, 23; 55:56, 70, 72, 74; 56:8-40; 78:33; 40:40; 16:97; 4:124)
3. அவர்கள் உலகில் நன்மை செய்து கொண்டிருந்தவற்றிற்குப் பிரதி பலனாக... இது (மது, மாது) அல்லாவுடைய கொடை (குரா. 56:24, 38:54)
4. சொர்க்கத்தில், மாதுகள் சமவயதுள்ள கட்டழகிகள் (குரா. 56:37); கன்னியர்கள் (குரா. 56:36) எல்லாம் உண்டு.

5. பார்வை தாழ்த்திய கண்ணழகிகள் (குரா. 37:48) மறைக்கப்பட்ட முட்டைகள் போல் (குரா. 37:49) ஒருவருக்கொருவர் முன்னோக்கிய வர்களாக கட்டிலின் மேல் சாய்ந்திருப்பார்கள். (குரா. 37:44)

6. அந்த மாதுகளை எந்த மனிதனும், எந்த ஜின்னும் இவர்களுக்கு முன் தீண்டியதில்லை. (குரா. 55:56)

7. அந்தப் பெண்கள் சிவந்த மாணிக்கத்தைப் போன்றும், பவளத்தைப் போன்றும் இருப்பார்கள். (குரா. 55:58)

8. அந்த துணைகளுடன் கட்டில்களில் சயனிப்பு நடக்கும். (குரா. 36:56; 52:20; 83:23)

9. ஆண்களுக்கு கிடைப்பதுபோல, பெண்களுக்கும் கிடைக்கும். (குரா. 3:195; 4:124; 16:97; 33:35; 40:40)

10. தூய்மையான துணைகள் உண்டு. (குரா. 2:25)

11. மறுவாழ்வு தான் மனிதனுக்கு வாழ்வு. (குரா. 29:64)

## 46. குரானில் வெட்கக்கேடு

"மரியம்மை எத்தகையவரென்றால், தம் வெட்கத்தலத்தை பாதுகாத்துக் கொண்டார். எனவே அதில் நம்முடைய ரூஹில் இருந்து நாம் ஊதினோம்" (குரா. 66:12) **அல்லா எதிலே ஊதியிருக்கிறார், பாருங்கள்.**

## 47. சிறப்பாக சூழ்ச்சி செய்பவர் தேவனா?

"ஈசாவைக் கொன்றுவிட அவர்கள் சூழ்ச்சி செய்தனர். அல்லாவும் சூழ்ச்சி செய்தான். சூழ்ச்சி செய்கிறவர்களில் அல்லா மிகச் சிறந்தவன்." (குரா. 3:54) "நிச்சயமாக என்னுடைய சூழ்ச்சி உறுதியானது." (குரா. 68:45)

## 48. மரியாளின் சகோதரனா ஆரோன்?

குரா. 19:22,, 28-ன்படி ஆரோன் மரியாளின் சகோதரனாம். ஏன் இந்த அறியாமை? இது வேதமா?

## 49. அல்லா சர்வாதிகாரியா?

சிருஷ்டிகள் விரும்பியோ விரும்பாமலோ அல்லாவுக்கு பணிகின்றன என்றால் அவர் சர்வாதிகாரியா? அவர் தரும் குரான் தேவை தானா?

"வானங்களிலும் பூமியிலும் உள்ளவை, விரும்பியோ விரும்பாமலோ அவனுக்கே பணிகின்றன; அவற்றின் நிழல்களும் காலையிலும், மாலையிலும் பணிகின்றன." (குரா. 13:15)

**50. பெண்கள் ஆண்களுக்கு கீழானவர்களா?**

பெண்கள் விளை நிலங்கள் போன்றவர்கள்; ஆண்கள் இஷ்டப்படி அங்கே செல்லலாம். உங்கள் மனைவியர் உங்களின் விளை நிலங்கள்; உங்களின் விளை நிலங்களுக்கு விரும்பியவாறு செல்லுங்கள்." (குரா. 2:223; 2:228; 24:31; 33:59)

**51. சுயநன்மைக்காய் பொய் சொல்லலாம்**

(குரா. 16:106; 3:28) என்று சொல்வது வேதமல்லவே.

**52. அந்நியரிடம் அன்பு காட்டாதே**

(குரா. 9) என்று சொல்லும் தேவன் எதற்கு?

**53. தீவிரவாதத்திற்கு வழிகாட்டலாமா?**

"நம்பிக்கையை நிராகரிப்போர் பிடரிகளின் மீது வெட்டுங்கள்; அவர்களிலிருந்து விரல்கள் ஒவ்வொன்றையும் வெட்டி விடுங்கள்." (குரா. 8:12)

**(இன்னொரு மொழி பெயர்ப்பு)** "மறுப்போரின் கழுத்துகளுக்கு மேலே வெட்டுங்கள்; அவர்களின் ஒவ்வொரு இணைப்பையும் வெட்டுங்கள்."

**54. தற்கொலைப் படைக்கு வித்திடலாமா?**

"இவ்வுலக வாழ்வை விற்று மறுமையை வாங்குவோர் அல்லாவின் பாதையில் போரிடட்டும்." (குரா. 4:74)

"அல்லாவின் திருப்தியை விரும்பி தம்மையே அர்ப்பணிப்பவர்கள் மீது அல்லா இரக்கமுடையோன்." (குரா. 2:207)

**55. அல்லாவுக்கு துரோகம் செய்வோரை கொல்வதா? அன்பு காட்டுவதா?**

(see குரா. 4:89; 9:11, 12; 9:73, 74)

"அல்லாவை அவர்கள் புறக்கணித்தால் அவர்களைக் கைதிகளாகப் பிடியுங்கள்; அவர்கள் தப்பி ஓடினால் அவர்களை நீங்கள் காணும் இடத்தில் கொல்லுங்கள். அவர்களை நண்பர்களாகவும் உதவியாளராகவும் ஆக்கிக் கொள்ளாதீர்கள்." (குரா. 4:89)

**56. மனைவிகளை அடிக்க அதிகாரமுண்டாம்:**

"மனைவிகளுக்கு அறிவுரை கூறுங்கள்; படுக்கைகளில் விலக்குங்கள்; அவர்களை அடியுங்கள்." (குரா. 4:34)

"உமது கையால், புல்லில் ஒரு பிடியை எடுத்து அதன் மூலம் அடிப்பீராக." (குரா. 38:44). துடைப்பத்தால் மனைவியை அடிக்க தேவன் கட்டளை தரலாமா? முகமது, தனது மனைவி ஆயிஷாவை அடித்தார் என்று ஹதீஸ் முஸ்லீம் 4:2127 சொல்கிறது.

**57. அடிமைகளாய் பிடித்து வந்த பெண்களிடம் செக்ஸ் வைக்கலாமாம்:**

(see குரா. 33:50; 23:6; 70:29, 30)

முகமதுவை அடிமைப் பெண்களின் வியாபாரி என்று ஹதீஸ், புகாரி 34:35; முஸ்லீம் 390 அபுதாவூத் 38:44, 58-ம் கூறுகின்றன. இது மனச்சாட்சி இல்லாதத் தன்மை. எண். 31:18; உபா. 21:10-14ல் இப்படி இல்லையா என்று முஸ்லீம்கள் கேட்பார்கள். இருந்தாலும், உபா. 21:14-ஐ வாசித்தால், "அவள் மேல் உனக்குப் பிரியமில்லாமல் போனால் நீ அவளை பணத்திற்கு விற்காமல்...!" **முகமதுவின் நிலையை யோசியுங்கள்.** இந்த நியாயப்பிரமாண நிலையும் இயேசுவால் மாற்றப்பட்டது (கலா. 3:27). அல்லேலூயா! குரானில் இந்த தவறான காரியம் யாராலும் மாற்றப்பட்டதாக இல்லையே.

**58. மருமகளை திருமணம் முடிக்க, முகமதுக்காகவே அல்லாவே அனுமதி தந்தாராம்.** (குரா. 33:37).

இது முகமதாலே, தனக்காக சுயநலத்திற்காக எழுதப்பட்டது என்று சொல்லலாமா? இல்லையென்றால், முஸ்லீம் சகோதரர்கள் யூதா-தாமார் விஷயம் பற்றி பேசக் கூடாதல்லவா! எல்லாருக்கும் ஒரே நியாயம்தான்.

**59. குரான் அல்லவால் இறக்கப்பட்ட வேதமா? முகமதுவின் சொந்த சரக்கா?**

முகமது 11 மனைவியோடு உறவு. (Sahib Buhari Vol. I, Book 5/ 268) 9 வயது ஆயிஷாவுடன் உடலுறவு (முஸ்லீம் Book no. 8). அவருக்கு மட்டும் மனைவிகளுக்கு கட்டுப்பாடு இல்லையா? (குரா. 33:50). இந்த வேதம், தேவனால் எல்லாருக்கும் தந்ததா? அல்லது முகமதுவே எழுதிக் கொண்டதா?

**60. குரா. 4:11, 12-ன்படி முஸ்லீம்கள் தங்கள் சொத்துக்களை பரிவர்த்தனம் செய்ய வேண்டும்.**

**முகமதுவோ அப்படிச் செய்யாமல்,** தரும காரியங்களுக்கு கொடுத்துவிட்டுப் போனாரென்று ஹதீஸ்கள் சொல்கின்றன. தன் மனைவிக்குகூட கொடுக்கவில்லையாம். இதனால் குரா. 4:13,

14-ன்படி சொர்க்கம் அவருக்குக் கிடைக்குமா? ஊருக்கு மட்டும் தான் முகமதுவின் உபதேசமா? இது தேவனுடைய உபதேசம் தானா?

**61. தீமையான காரியமும் அல்லாவிடமிருந்தே வருகிறதாமே?**

"ஏதேனும் நன்மை ஏற்பட்டால் இது அல்லாவிடமிருந்து வந்தது என்று கூறுகின்றனர். அவர்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் இது உங்களால் தான் ஏற்பட்டது என்று கூறுகின்றனர். அனைத்தும் அல்லாவிடமிருந்தே என்று கூறுவீராக." (குரா. 4:78) மற்றும் 6:39; 91:8. தீமை செய்கிறவர் கொடுப்பது வேதமாகுமா?

**62. முகமது பாவம் செய்தவர் என்று குரான் கூறுகிறது.**

"முகமதே பொறுமையை கடைப்பிடிப்பீராக... உமது பாவத்துக்கு மன்னிப்பு கேட்பீராக." (குரா. 40:55).

"அல்லாவிடம் பாவ மன்னிப்பு தேடுவீராக." (குரா. 4:106)

"உமது பாவத்திற்காகவும், நம்பிக்கை கொண்ட ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் நீர் மன்னிப்பு கேட்பீராக." (குரா. 49:19). "மனிதருக்கு அஞ்சினீர்." (குரா. 33:37)

"உம்முடைய பாவத்தில் முந்தியதையும், பிந்தியதையும் அல்லா உமக்கு மன்னிப்பதற்காகவும்." (குரா. 48:2). **இப்படிப்பட்ட முகமது சொல்ல எழுதப்பட்ட குரான் வேதமாகுமா?**

**63. குரானும் மனிதன் எழுதியதுதான்**

அல்லவால் இறக்கப்பட்டது என்று கூறுவோர், குரான் 1ம் அதிகாரம் முழுவதும் வாசித்தால், குரான் மனிதனால் தான் எழுதப்பட்டது என்று அறியலாம்.

**64. மனைவியின் திருப்திக்காக அல்லாவின் காரியங்களை விலக்குகிற முகமது எப்படி தீர்க்கதரிசியாவார்?**

(குரா. 66:1)

**65. குரானில் இன்னொரு அசிங்கம்:-**

உடலுறவு கொள்ளாமல், விவாகரத்து செய்யப்படுகின்ற தன் மனைவியின் புதல்விகளை மணமுடிக்கலாமாம். (குரா. 4:23). அவள் யாருக்குப் பிறந்திருந்தாலும், மகள் ஸ்தானத்திற்கு வந்துவிட்ட பிறகு, மகளையே திருமணம் முடிப்பது அசிங்கமில்லையா? இப்படிப்பட்ட கொள்கையுடைய குரானின் சொந்தக்காரர்கள், அர்த்தம் புரியாமல் - ஆராயாமல் கண்டதே காட்சி - கொண்டதே கோலம் என்பது போல 1 கொரி. 7:36-ஐ வைத்து, பவுல், தகப்பனும் மகளும்

திருமணம் செய்யலாம் என்று சொல்கிறாரே என்று துர்ச்செய்தியை பரப்ப யோக்கியதை உண்டா?

**66. நபிக்கு சூனியம் செய்யப்பட்டதாம்.**

எண். 23:23-ன்படி, "யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாத மில்லை; இஸ்ரேலுக்கு விரோதமான குறிசொல்லுதலுமில்லை" என்கிற போது, முகமதுக்கு சூனியம் செய்யப்பட்டதாமே. அவர் தீர்க்கதரிசியா? அவருக்கு சூனியம் செய்யப்பட்டது என்று ஹத்தீஸ் புகாரியில் உள்ளதே! அதற்கு ஆதாரமாய் குரா. 17:47; 25:8 ஐ வாசியுங்கள். சூனியம் செய்ததால் தான், முகமது அதிலிருந்து விடுதலை தேடுவதாக குரா. 113, 114 சொல்கின்றதே.

**67. "நபிகளும் பாவம் செய்பவர்களாம்" - குரான் சொல்கின்றது. பாவம் செய்தவர்கள் பாவமன்னிப்பை பெற்றார்களா என்பது தான் முக்கியம்.**

குரானில் வரும் நபிகள் பாவம் செய்தார்கள் என்று சொல்லும்போது, பைபிளிலே சொல்வதில் மட்டும் தவறா?

**உதாரணம்** : ஆதாம் (குரா. 20:119; 2:33, 34; 72:24); நோவா (குரா. 71:29); ஆபிரகாம் (குரா. 6:76-78; 4:51, 116; 2:262; 21:64; 14:42); மோசே (குரா. 28:14, 15; 26:19; 7:150); தாவீது (குரா. 38:23, 24); சாலமோன் (குரா. 38:34); யோனா (குரா. 37:139-144).

**68. இப்படிப்பட்ட முகமது கொடுத்ததா குரான்?**

1. நம்மைப் போல் ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறந்தவர்.
2. அற்புதம் ஏதுமே செய்யாதவர்.
3. தேவ இரகசியம் ஒன்றுமே இவருக்கு தெரியாது. ("என்னிடம் அல்லாவுடைய பொக்கிஷங்கள் இருக்கின்றன என்று உங்களுக்கு நான் சொல்லவில்லை. இன்னும் மறைவானவற்றை நான் அறியவும் மாட்டேன். இன்னும் நிச்சயமாகவே நான் வானவர் என்று உங்களிடம் சொல்லவுமில்லை - குரா. 6:50).
4. இவர் ஒரு அரசியல் தலைவர்.
5. நிறைய போர் புரிந்திருக்கிறார். எதிரிகளை கொல்லச் சொல்வார். (குரா. 2:191; 4:89; 9:5)
6. போரிடச் சொல்வார் (குரா. 4:95, 96; 25:25)
7. யூத அடிமைப் பெண்ணால் விஷம் கொடுக்கப்பட்டு மரித்தார்.

**69. எழுத்துப் பிழைகள் குரானில் உண்டு என தமிழ் குரான் - Moon Publications - பக்கம் 925ல் சொல்லப்பட்டிருக்க, பைபிளில் உள்ள எழுத்துப் பிழைகள் மட்டும் உறுத்துகிறதா?**

"நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?" - மத்தேயு 7:3.

**70. விதியை நம்புவது பரிசுத்த குரானா?**

எந்த மரணமும் அல்லாவின் விருப்பத்தோடு என்றால், ஆக்சிடெண்ட், தற்கொலை, கொலை, கொடிய வியாதி போன்ற அகால - பொல்லாத மரணங்களும் அல்லாவின் விருப்பத்தாலா? எப்படி அவர் தேவனாக முடியும்? **"அல்லாவின் விருப்பமின்றி எவரும் மரணிக்க முடியாது. இது நேரம் நிர்ணயிக்கப்பட்ட விதி."** (குரா. 3:145)

**71. அல்லாவுக்கும் முகமதுக்கும் கட்டுப்பட்டால் தான் ஆசீர்வாதமா? (குரா. 3:132)**

முகமதுவை பின்பற்றினால் தான் அல்லா, மக்களை விரும்புவானா? பாவங்களை மன்னிப்பானா? (குரா. 3:31) **அப்படியானால் அல்லாவும் முகமதுவும் சமமா?** அல்லது அல்லாவிற்கு மேற்பட்டவர் முகமதா? அல்லது முகமதுவே போதுமா?

**72. "ஈசா மரணிப்பதற்கு முன்" என்று உள்ள உண்மையை, "ஈசா (மீண்டும் வந்து) மரணிப்பதற்கு முன்" என்று "மீண்டும் வந்து" என்ற இடைச் சொருகலை ஏன் திணித்தீர்கள்?** (குரா. 4:159).

முதல்முறை வந்த போதே மரித்தார் என்ற உண்மையை மறைக்க இப்படியாய் பொய்க் காரியங்களை பரப்பலாமா? பொய்களை சொல்வது வேதமா?

**73. கியாமத் நாளில் நியாயத்தீர்ப்பு ஈசா செய்வாரென்றால் (குரா. 4:159) அதற்கு முன் அவர் பூமிக்கு வந்து குடும்பம் கோத்திரத்தோடு வாழ்ந்து மரிப்பார் என்று முஸ்லீம்கள் சொல்கிறார்களே, அதற்கு ஆதாரம் குரானில் உண்டா?**

குரா. 13:38-ன்படி, ஏற்கெனவே ஈசா திருமணம் செய்துவிட்டார் என்று வாதிடுகிறீர்களே அது எப்படி? அவருக்கு திருமணமாகியிருந்தால் அவரது மனைவி யார்? பிள்ளைகள் யார்? எங்கே? ஏன் இப்படி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி குழப்ப வேண்டும்?

**74. பலிமுறைகளை ஏற்காதவர்கள் - இரத்தம் சிந்துதலினால் பாவமன்னிப்பு உண்டு என்பதை நம்பாதவர்கள் - முஸ்லீம்கள்.**

**அவர்களின் குரானில், ஆபேலும், காயீனும் பலி செலுத்தினார்கள் என்று உள்ளதே** (குரா. 5:27).

ஏன் பலி செலுத்த வேண்டும் என்று யோசித்தார்களா? பலி செலுத்துவது எதைக் குறிக்கிறது என்று சிந்தித்தார்களா? ஆபேலுடைய பலி தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றால் அது எப்படி? ஏன்? அல்லா பலியை ஏற்றுக் கொள்கிறார் என்று குரானே சொல்லும்போது அதன் உட்பொருளை முஸ்லீம் சகோதரர்கள் சிந்திக்க வேண்டாமா?

முஸ்லீம்களின் இரண்டு பெருநாட்களில் ஆடு, மாடு அல்லது ஒட்டகம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்று அறுத்துப் பலியிடும் "குர்பானி" உண்டே ஏன்? **முகமது, பலியை புரிந்து குரானில் நுழைத்திருக்கிறார்; இடையிலே வந்தவர்களோ அறிந்தோ, அறியாமலோ மறுக்கிறார்கள்.**

**75. முகமது தான் கடைசி நபியா?**

அப்படியானால் அவருக்கு முன் வந்த நபிகள் யார்? அவர்களெல்லாம் (மோசே, தாவீது, ஈசா) ஈசாக்கின் வழி வந்த இஸ்ரேலர்கள் தானே! இஸ்மவேல் வழிவந்த நபிகள் யார்? இஸ்ரவேல் வழிவந்த நபிகளின் வேதத்தை, எந்த இஸ்மவேல் கோத்திரத்தானாவது கைக்கொண்ட தாகவோ, எருசலேமுக்கு வந்து பலியிட்டு ஆராதித்ததாகவோ சரித்திர ஆதாரமோ, குரான் ஆதாரமோ உண்டா? இல்லையே. வீணே ஏன் இஸ்ரேலர் வழி வந்த நபிகளை குரானில் எழுதி குழப்புகிறீர்கள்?

இப்படிப் பார்த்தால் முகமது கடைசி நபி அல்ல; உங்கள் இஸ்மவேல் கோத்திரத்தில் வந்த முதல் நபி தான் அவர். உங்கள் கருத்துபடி "ஈசா நபி, நியாயத்தீர்ப்பு நாளில் வருவார்; வந்து வாழ்ந்து மரிப்பார்" என்றால், அவர் தானே பூமிக்கு வரும் கடைசி நபி. உண்மை இப்படியிருக்க ஏன் மாறுபாடாய் பேசுகிறீர்கள்?

**76. இயேசு மரிக்கவில்லை என்று சொல்கிறீர்கள், ஆனால் ஒரு பிரிவினரோ, குரா. 3:54, 55-ன்படி மரித்தார் என்கின்றனரே ஏன் இந்த தடுமாற்றங்கள்?**

"O Jesus! I will cause you to die & exalt you to my presence and clear you of those who disbelieve and make those who follow you above those who disbelieve till the day of judgment (குரான்: 3:54, 55- Edited Zahid Aziz English Translation of original Mohammed Alis)

மேலும் குரான் 5:117ல் ஈசா சொல்கிறார்:- “But when thou did cause to die.” குரான் 21:134; 13:30; 46:18; 33:38; 5:75; 3:143, 144 வசனங்களின்படி, முகமதுக்கு முன் வந்த நபிகளெல்லாம் மரித்தனர் என்பதால், ஈசாவும் மரித்தார் என்று தானே பொருள். ஈசாவை மரிக்காமலே அல்லா எடுத்துக் கொண்டாரென்றால் அதற்குரிய காரணம் என்ன? குரான் ஏன் அதுபற்றி சொல்லவில்லை? அல்லாவிடம் போயிருக்கும் ஈசா அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று குரான் சொல்லவில்லையே! மறுபடியும் வரப்போகிறவர் மரித்து, உயிர்த்து பரலோகம் போய் மீண்டும் வரமுடியாதா? இரட்சிப்புக்கு - பாவ நிவாரணத்திற்கு இணையான இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதலை ஏன் மறைக்கப் பார்க்கிறீர்கள்?

77. **தத்தெடுத்த பிள்ளைகள் நம் பிள்ளைகள் அல்ல என்று அல்லா சொல்வாரானால், அந்த வேதம் மனிதநேயத்தைப் போதிக்கும் வேதமா? (குரா. 33:4)**

78. **அல்லா தரும் பணியை (அமானிதம்) மனிதன் அல்லாத மற்ற ஜீவராசிகள் சுமக்க மறுத்துவிட்டன என்றால், அவைகள் அல்லாவால் படைக்கப்பட்டவையா? (குரா. 33:72)**

கீழ்ப்படியாத அவைகள் மேல் அல்லாவால் நடவடிக்கை எடுக்க முடியவில்லையே ஏன்? குரா. 3:15, 16-ல் சகல ஜீவராசிகளும் விரும்பியோ விரும்பாமலோ பணிகின்றன என்று சொல்லப் பட்டுள்ளதே ஏன் இப்படியான முரண்பாடு? அல்லா தேவனில்லையா?

79. **குரான் 5:3, 4-ன்படி தானே அசைவ உணவுகளை சாப்பிட வேண்டும்.**

ஆனால், முஸ்லீம்கள் கடலிலேயே மடிந்து போன மீன்களையும் சாப்பிடுகிறார்களே அது குரானுக்கு விரோதமல்லவா?

80. **அல்லா செய்த சூழ்ச்சிப்படி தான் (குரா. 3:54) ஆள்மாறாட்டம் செய்யப்பட்டு இயேசு தன்னளவில் அல்லாவால் உயர்த்தப்பட்டு, அவருக்குப் பதிலாக இன்னொருவர் சிலுவையிலறையப் பட்டாரா? (குரா. 4:157). இயேசுவை காப்பாற்ற, இன்னொருவரை சாவுக்குள் ஆக்குவது, அன்புள்ள தேவனின் செயலா? அவர் நினைத்திருந்தால் இயேசுவை எப்படி வேண்டுமானாலும் கைப்பற்றியிருக்கலாமே!**

இதை தியானிக்கும் போது, சூழ்ச்சி, ஆள்மாறாட்டம், கைப்பற்றுதல் என்பதெல்லாம் ஒரு சாதாரண உலக மனிதனின் செயல் போல தோன்றுகிறது அல்லவா!

இயேசுவை மரிக்க வைத்தால் அல்லாவுக்கு என்ன நஷ்டம்? மரித்தவரை உயிரோடெழுப்பி கைப்பற்றினால் அல்லாவுக்கு என்ன குறைவு வரும்? மகிமை தானே வெளிப்படும். 6ம் நூற்றாண்டு வரை ஒருவரும் இப்படி சொல்லவில்லை; சிலுவையிலறைந்தவர்களும்கூட இப்படிப்பட்ட செய்தியை சொல்லவே இல்லையே! ஏன் திடீரென்று இப்படி ஒரு வேத வார்த்தை? இது எப்படி உண்மையாகும்?

81. **"Allah best deceiver" - "அல்லா சிறப்பான ஏமாற்றுக்காரன்" - "அல்லா சிறப்பாக சூழ்ச்சி செய்பவன்" (குரா. 3:54; 7:99; 8:30; 10:21; 13:42) என்று குரான் சொல்கிறதே இந்த அல்லா எப்படி தேவனாவார்?**

82. **அல்லாவை யாரும் பார்த்ததில்லையாம். அப்படியானால், அவரை ஆண் மகனாக - மனிதனாக - (man) - ஒருமையில் ஏன் குரானில் அழைக்கப்படுகிறது? (குரா. 6 : 102, 13).**

83. **இறைவனை மறுப்போருக்கு தீய சக்திகளே உதவியாளர்கள் என்று குரா. 2:257ம், அநீதி இழைத்தோருக்கு எந்த உதவியாளரும் இல்லை என்று குரா. 2:270ம் கூறுகிறதே. ஏன் இந்த முரண்பாடு?**

84. **இஸ்லாம்தான் மார்க்கம் என்று குரா. 3:19 சொல்கிறது. குரா. 2:120ல் யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் மார்க்கம் உண்டு என்கிறது. எது உண்மை?**

85. **பொல்லாத காரியங்களால் மனிதர்களை சோதிக்கும் அல்லா கடவுளா? (குரா. 29:2; 2:155; 8:28)**

❖ ❖ ❖

# 9. முஸ்லீம்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்

1. அல்லா கொடுத்த தவ்ரத், சபூர், இஞ்சில் போன்ற புத்தகங்கள் எங்கே? அவைகளை எடுத்துவிட்டு, அல்லா குரானைக் கொடுத்தாரென்றால், அவைகளின் காபியாவது எங்கே?
2. குரானின் வார்த்தைகளை உரைத்துப் பார்க்க, தவ்ரத்தும், இஞ்சிலும் உண்டு என்று அல்லாவே குரா. 10:94-ல் சொல்லியிருக்க, அந்த வேதங்கள் இல்லையென்றால் குரானை எப்படி உரைத்துப் பார்ப்பது?
3. அந்த வேதங்களை அல்லா எடுத்துக் கொண்டார் என்றால், இப்போது நாங்கள் வைத்திருப்பது என்ன? இந்த எங்கள் வேதத்திலிருந்து, உங்களுக்கு சாதகமான வசனங்களை மாத்திரம் எடுத்துக் கொண்டு வாதிடுகிறீர்கள்; மற்றவைகள் இடைச் சொருகல் - கூட்டியவை குறைத்தவை என்றெல்லாம் சொல்கிறீர்களே ஏன்?
4. தவ்ரத், இஞ்சில் போன்ற வேதங்களை முஸ்லீம்கள் நம்ப வேண்டும் என்று குரா. 4:136, 60 சொல்லியிருக்க, அந்த வேதமே தற்போது இல்லை என்று சொல்லும் நீங்கள் எப்படி நம்ப முடியும்? அல்லாவின் வார்த்தைப்படி, அவைகளை நம்பாதிருந்தால் உங்களுக்குப் பரலோகம் உண்டா?
5. அவைகளிலே சொல்லப்பட்ட பலிமுறைகள், பண்டிகைகள் எல்லாம் என்ன ஆயிற்று? குரானில் ஏன் அவைகளைப் பற்றி விரிவாய்ச் சொல்லவுமில்லை; நீங்கள் விசுவாசித்து செயல்படுவதுமில்லை? தடுத்தது - தடை செய்தது யார்?
6. குரானில் அவைகள் எல்லாம் இல்லையென்பதால், அவைகள் எதற்கு நிழல்? நிஜம் வந்துவிட்டதா?
7. இயேசு கன்னியின் வயிற்றில் ஏன் பிறக்க வேண்டும்? ஏன் மரித்து உயிர்க்க வேண்டும்? ஏன் மீண்டும் வர வேண்டும்?
8. இயேசு மனிதனானால், இன்னும் எப்படி உயிரோடிருக்கிறார்? ஏன்?

9. அல்லாவின் வார்த்தைதான் இயேசுவாய்ப் பிறந்ததென்றால், இயேசு தெய்வந்தானே.

10. குமாரன் என்பது, இயேசுவுக்கு காரணப் பெயர்தானே அல்லாமல், அப்பா-மகன் என்ற உறவுப் பெயரல்ல. எப்படியெனில் பூமிக்கு அவர் இயேசுவாய் பிறந்து வருமுன்னேயே, பரலோகிலேயே அவருக்கு சொல்லப்பட்ட பெயர் இது.

11. குரானில் சுன்னத் பண்ண வேண்டுமென்று சட்டமே இல்லாதபோது, அதை முஸ்லீம்க்குள் நுழைத்தது யார்? அதை ஏன் பின்பற்றுகிறார்கள்?

12. எல்லா மத வரலாற்றிலும், நபிமார்கள் வந்தார்கள் என்று சொல்கின்றீர்கள். அப்படியானால் எல்லா மதத்திலும் அல்லா தெய்வமாக இல்லையே ஏன்? அந்த நபிகள் போதித்த தெய்வம் யார்? வணங்கிய தெய்வம் யார்? அந்த நபிமார்கள் பெயர்கள் ஒன்றுகூட குரானில் இல்லையே! ஏன்?

13. அல்லாவை அவன், இவன் என்று ஒருமையிலே சொல்லும் குரான், அவர் பேசும்போது மட்டும், "வந்தோம்; இருந்தோம்; செய்தோம்" என்று பன்மையில் பேசுகிறாரே ஏன்? அந்த ஒருவருக்குள் இன்னும் யாரும் இருக்கிறார்களோ? பெரியவர்கள் மரியாதையினிமித்தம் இப்படிப் பேசுவது உண்டு என்று சொல்வீர்களானால், அப்படிப்பட்டவரை "அவன் இவன்" என்று சொல்வது மரியாதைக் குறைச்சல் அல்லவா!

14. கொடி மரம் சுற்றுதல், சப்பர ஊர்வலம், சந்தனக்கூடு, தர்காவில் மரித்தோரை வணங்குதல் (நாகூர் ஆண்டவர், காயிதேமில்லத்), தாயத்து கட்டுதல், செய்வினை வைத்தல் - எடுத்தல், விதியை நம்புதல், மரித்தோரின் ஆவிகள் பூமியில் சுற்றுவதாய் நம்புதல், நெருப்பு மிதித்தல், தாடி - மீசை எல்லாம் வைத்தல், தலையிலே முக்காடு போடுதல், லுங்கி கட்டுதல், பெண்கள் பரிதா அணிதல் போன்ற பல செயல்பாடுகள் உங்களிடத்திலே உண்டே இவைகளெல்லாம் குரானில் போதிக்கப்பட்டவையா? போதிக்கப்படாதவைகளை ஏன் கைக்கொள்ள வேண்டும்?

15. அல்லாவால் மனிதனாய் வரமுடியுமா? மனிதனைப்போல் வாழ முடியுமா? முடியாது என்று சொன்னால் அவர் சர்வ வல்லமையுள்ள தேவன் அல்லவே.

16. உங்களுக்குள்ளும் ஜாதி வேறுபாடுகள் இருக்கிறதாமே, ஏன்?

17. உங்களுக்குள்ளும் ஐந்து விதமான முஸ்லீம் கொள்கை பிரிவுகள் இருக்கிறதே, ஏன்?

18. "இஸ்ராயீலின் மக்களை சிறந்த நிலப்பரப்பில் குடியமர்த்தினோம்; தூய்மையானவற்றை அவர்களுக்கு வழங்கினோம்." (குரா. 10:93) என்று அல்லா சொல்லி, இஸ்ரேலருக்குக் கொடுத்த நிலப்பரப்பை (கானான் தேசத்தை) முஸ்லீம்கள் ஏன் ஆக்கிரமித்துக் கொண்டு திருப்பிக் கொடுக்காமலிருக்கிறார்கள்? இது அல்லாவிற்கு விரோதமானதல்லவா?

19. இஸ்மவேலையும் ஆகாரையும் ஏன் ஆபிரகாமோடு வாழாமல் அல்லா பிரித்து வைத்தார் (குரா. 14: 37)?

20. நபிகள் என்று குரானில் நீங்கள் சொல்லும் மூசா, தாவீது, சாலமோன், ஈசா போன்ற எல்லோருடைய நடபடிக்கையும், இஸ்ரேல் - கானான் - தேசத்தையும், எருசலேமையும் சார்ந்துதான் இருந்ததே ஒழிய, மெக்கா - மெதினா (அரபு தேசம்)வைச் சார்ந்து இல்லையே ஏன்?

21. இஸ்மவேலைத்தான் பலியிட இப்ராஹீம் கொண்டு போனார் என்று குரானில் வசனம் உண்டா?

22. ஆபேலின் பலியை (sacrifice) அல்லா ஏன் ஏற்றுக்கொண்டார்? எப்படி ஏற்றுக் கொண்டார்?

23. ஆபேல் ஏன் பலி செலுத்த (sacrifice) வேண்டும்?

24. இந்த பூமியில் மதுவும், மாதுவும் தீய பழக்கமென்றால் பரலோகில் மாத்திரம் அது எப்படி நல்ல பழக்கமாயிற்று?

25. ஆணும் பெண்ணும் சமமாய் வாழ வேண்டும் என்று விரும்பும் மக்களுக்கு பரலோகிலும் விடிவு காலமில்லையா?

26. தான் படைத்த சிருஷ்டிகள் மேலேயே சத்தியம் - ஆணை - இடுபவர் தேவனாயிருப்பாரா?

இன்னும் ஏராளம் கேட்டுக் கொண்டேயிருக்கலாம். தேவன்தாமே உங்களோடு இடைபடுவாராக!

**"சத்தியத்தை அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்."**

**"ஒன்றான மெய்தேவனாகிய அவரையும், அவர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்."**

## விசுவாசம் வெற்றியை தரும்!

**இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!**

❖ ❖ ❖

# ஆசிரியரின் வெளியீடுகள்

## ஆராய்ச்சிப் புத்தகங்கள்

★ கருகலான சத்தியம் (பாகம் I)

★ கருகலான சத்தியம் (பாகம் II)

★ தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் I)

★ தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் II)

★ வியாதியா? மரணமா?

★ விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்! (பாகம் I & பாகம் II)

★ வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்

★ கதைகள் அறுபது

★ சிறுவர் ஊழியம்

★ இஸ்லாமியரின் கேள்விகள்

★ உங்களுக்குத் தெரியுமா?

★ கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்

★ இரத்தம் சிந்தித்தான் பாவமன்னிப்பா?

★ தானியேல் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் விளக்கவுரை

★ வேத பாடம் - குறிப்புகள்

★ அடிப்படை சத்தியங்கள் பாகம் - 1

## பாடல் சி.டி

★ ஆடியோ : ரூ. 50; வீடியோ : ரூ. 75

★ (ஆடியோ சி.டி. Vol. I, II, IV, VI மற்றும் DVD சி.டி. Vol. III, V)

## தீர்க்கதரிசன விளக்கவுரைகள் DVD

★ வெளிப்படுத்தின விசேஷம் (3 சி.டி)

★ தானியேல் (3 சி.டி)

(ஒரு செட் ரூ. 200/-)

## கருத்தரங்கு செய்திகள் DVD (ஒவ்வொன்றும் ரூ. 75/-)

★ இனி சம்பவிக்கப் போகிறவைகள்

★ குரான் சொல்லும் ஈசா தேவனா?

★ இயேசு ஏன் வரவில்லை?

★ வேதம் விஞ்ஞானத்திற்கு ஒத்திருக்கிறதா?

★ ஆவியின் அபிஷேகமும் அக்கினி அபிஷேகமும்

★ கள்ள உபதேசமும் கள்ள தீர்க்கதரிசினமும்

★ மாறுபாடுள்ள சந்ததி எது?

★ வேதம் பற்றி முஸ்லீம்கள் சொல்வது சரியா?
★ குரானில் குளறுபடிகள் உண்டா?
★ வேதத்தில் குளறுபடிகளா? பொய்த்தகவல்களா?
★ இயேசுபற்றி முஸ்லீம்களின் கருத்தென்ன?

**அரை மணிநேர DVD செய்திகள்** (ஒவ்வொன்றும் ரூ. 50/-)

★ இயேசு வருவாரா?
★ அந்தி கிறிஸ்து எப்போது வெளிப்படுவான்?
★ எது தேவசித்தம்?
★ வியாதி தேவனின் சிட்சையா?
★ திரித்துவம் உண்டா?
★ அந்நிய பாஷை
★ எது ஆவிக்குரிய சபை?
★ படைப்பின் இரகசியம்
★ மரணத்திற்குப் பின் நிலை என்ன?
★ தெய்வீக சுகம்
★ எது விசுவாச ஊழியம்? எது விசுவாச வாழ்க்கை?
★ இயேசுவின் இரத்தம்
★ பண்டிகைகள் தேவையா?
★ வரமும், கனியும், வல்லமையும், அதிகாரமும்
★ ஆசீர்வாதமும், சாபமும், வாக்குத்தத்தமும், தண்டனையும்
★ இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானமா?
★ இயேசு சர்வவல்லமையுள்ள தேவனா?
★ சபைக்குள்ளே நிறைவேறுகிற - நிறைவேறப்போகிற தீர்க்கதரிசனங்கள்
★ நியாயப்பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது?
★ நிறைவேற வேண்டிய உடன்படிக்கைகள்
★ யார் அந்த இரண்டு சாட்சிகள்?
★ யார் அந்த 1,44,000 பேர்?
★ 70 வார தீர்க்கதரிசனம்
★ 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம்

❖ ❖ ❖



# ஆசிரியர் பற்றி ...

1951ம் ஆண்டு மே மாதம் 16ம் நாள், தமிழ்நாடு, திருச்சி மாவட்டம் மணப்பாறை அருகே உள்ள சின்ன உடையாபட்டி என்ற குக்கிராமத்தில் ஒரு ஏழை குடும்பத்தில் ரோமன் கத்தோலிக்க சபையை சார்ந்த பெற்றோருக்கு மகனாய் பிறந்தவர்தான் **Rev. Dr.** சேவியர்.

குழந்தை பருவம் முதல் பக்தியோடு வளர்க்கப்பட்டவர். பி.எஸ்.சி., (கணிதவியல்) படிப்பை திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் முடித்து, தொலைபேசி துறையில் பணியில் சேர்ந்து படிப்படியாய் பதவி உயர்ந்து டிவிஷனல் இன்ஜீனியர் ஆக ஆனார்.

கல்லூரியில் படிக்கும் போதே நாத்திகனாய் மாறி இயேசுவுக்கு எதிராளியாய் மாறினார். இந்நிலையில் நெல்லை மாவட்டம் குலசேகரபட்டினத்தை சார்ந்த சி.எஸ்.ஐ. சபை பெற்றோரின் மகள் கஸ்தூரிபாய் என்பவரை 16.6.1976 அன்று மணந்தார். பக்தியுள்ள மனைவியின் நடக்கையாலும், ஜெபத்தாலும் ஆசிரியருக்குள்ளே ஒரு மாற்றம் உருவானது.

1961ல் நடந்த ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் ஏற்பட்ட மூளை சம்பந்தமான நோயிலிருந்து 1985-ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் கிடைத்த விடுதலையால் ஒரு பெருத்த மாற்றம் உண்டாகி 1986 நவம்பரில் இரட்சிக்கப்பட்டு ஆவிக்குரிய கிறிஸ்தவரானார்.

பெந்தகோஸ்தே சபையில் நுழைந்தவர் செவன்த் டே அட்வென்டிஸ்ட் சபையினரால் ஈர்க்கப்பட்டு சபை மாறியதால் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, அந்த சபையிலிருந்து வெளியேறி, ஆவிக்குரிய விசுவாசியாய் மாறினார். விசுவாச விதையை தமிழகத்தில் விதைத்த தேசத்தின் தீர்க்கதரிசி ஜஸ்டின் பிரபாகரனின் போதனையால் விசுவாசத்தில் பெலப்பட்டு, ஊழியத்தில் நுழைந்தார். அநேக குக்கிராமங்களில் சுவிசேஷ ஊழியம் செய்தார். டிராக்ட்ஸ் ஊழியம், தெருப்பிரசங்கம்,

"எப்போதும் வசன விளக்கம்" போன்றவையெல்லாம் இவருக்கு தேவன் தந்த வரம். மிகவும் சிறிய சபைகளுக்கும் சென்று சத்தியத்தை பரப்பினார். "கடைசி கால விடுதலை முழக்கம்" என்ற மாத இதழை ஆரம்பித்து, அதன்பின் "வசன முழக்கம்" என்ற பத்திரிகையை நடத்தினார். "விசுவாசம் வெற்றியை தரும்" என்ற தாரக மந்திரத்தை போதித்தார். வாரந்தோறும், மாதந்தோறும், வருடந்தோறும் வீட்டிலும், சென்னையிலும், மாவட்ட தலைநகரங்களிலும் கருத்தரங்குகள் நடத்தி கிறிஸ்தவ சபைகளில் பெரிய எழுப்புதலை உருவாக்கினார். எந்த ஊழியத்திற்கும் யார் அழைத்தாலும் எதையும் பார்க்காமல் உடனே ஒத்துக்கொள்ளும் சுபாவம் உள்ளவர்.

தேவனின் தரிசனப்படி கஸ்தூரிபாய் ஆசிரமம், சேவியர் இறையியல் பயிலகம், விடுதலை கிறிஸ்துவின் சபை, விசுவாச கருத்தரங்குகள், ஊழியர் கருத்தரங்குகள், "வெப்சைட், Face Book, you Tube, TV" போன்ற பல ஊழியங்களில் இணைந்து பணி செய்து வருகிறார். தற்போது "விசுவாச முழக்கம், என்ற மாத இதழ் கௌரவ ஆசிரியராகி ஒரு வசனப் புரட்சி செய்து வருகிறார். அன்னாரின் ஊழியம் விரிந்து பரவி ஆத்துமாக்களை வருகைக்காய் ஆயத்தமாக்க ஜெபியுங்கள்.


9444979822

facebook.com/
endtimedeliveranceministry

youtube/endtimetrust

revdrxavier@gmail.com